# கொல்லாமை

## உலக அரசியல் அறிவியல்

## அட்டைப்பட விளக்கம்

பிரபஞ்சம் வட்டத்தால் குறிக்கப்படுகிறது. நீலநிறம் ஆக்கமான மடைமாற்ற முயற்சியாகும். வெள்ளைநிறம் மானிடக் கொல்லாமைத் திறன்களைக் குறிக்கும். சிவப்பு நிறம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய மானிடக் கொல்லுதலாகும்.

இது இந்நூலாசிரியரின் ஹவாயில் உள்ள உலக அகிம்சை மையத்தின் (Centre for Global Nonviolence) குறியீடாகும்.

www.global nonviolence.org
cgnv@hawaii.rr.com

# கொல்லாமை

## உலக அரசியல் அறிவியல்


பேராசிரியர் டாக்டர் கிளென் டி.பேஜ்

அணிந்துரை : டாக்டர் என்.இராதாகிருஷ்ணன்
டாக்டர் ஜேம்ஸ் இராபின்சன்

தமிழில் : டாக்டர் ச.செயப்பிரகாசம்





அகிம்சை பென்னிய பெட்சி நிறுவனம் (BINOWS)
காந்தி மியூசிய வளாகம், மதுரை – 625 020.

காந்தி மீடியா செண்டர்
புதுடில்லி, திருவனந்தபுரம், மதுரை

2003

© உரிமைப் பதிப்பு **கிளன் டி.பேஜ்**
முதற்பதிப்பு டிசம்பர் 2003

தனிப்பட்ட மற்றும் கல்விப் பணிகட்கு
இந்நூலின் எப்பகுதியையும் பயன்படுத்துவது
நூலாசிரியரால் மகிழ்வுடன் வரவேற்கப்படுகிறது.

விலை ரூ. 80/-

இந்நூல் வெளிவர ஆதரவளித்த
திரு. **சி.பாலகிருஷ்ணன்** (சேலம்)அவர்களுக்கும்
பெயர் வெளியிட விரும்பாத அன்பர் ஒருவருக்கும்
நன்றி

அச்சிட்டோர் :
**திரு. தே. ஜெயராஜ்**
செல்லம் பிரிண்டர்ஸ், இஸ்மாயில்புரம் 7வது சந்து,
முனிச்சாலை ரோடு, மதுரை-625 009.
✆(0452) - 2625427

---

வெளியிட்டோர் :
**அகிம்சை பெண்ணிய பெட்சி நிறுவனம்** (BINOWS),
காந்தி மியூசிய வளாகம், மதுரை- 625 020.
✆ (0452) - 2530226 e.mail:bak-valli@eth.net

# இந்திய பதிப்பிற்கான அணிந்துரை

ஏற்படுத்தப்பட்டுவிட்ட நம்பிக்கை அல்லது அமைப்பை எதிர்த்து நிற்க அசாதாரணமான தீரமும் உறுதியும் தேவை. அங்ஙனம் செய்ய ஆற்றலைத் திரட்டியவர்கள் அல்லது ஆற்றின் போக்குக்கு எதிராக எதிர் நீச்சல் அடிப்பவர்கள் தரும் விலை மிகவும் பெரிதாகும். "காட்சி உடையவர்கள்", "கனவு காண்பவர்கள்" அல்லது "புரட்சியாளர்கள்" என அவர்கள் நேயமாக அல்லது அங்கதமாக விவரிக்கப் படுகின்றனர்; ஆனால் அவர்கள் தமது "ஆபத்தான பணியிலிருந்து" அஞ்சி ஓடிவிடுவதில்லை. மரணம், தண்டனை, சிறை, சிலுவையில் ஏற்றப்படல் அல்லது சித்திரவதை ஆகிய அச்சுறுத்தல்கள் இருந்த பொழுதிலும் இத்தகு மக்கள் கூட்டம் கூடி வருகிறது.

வரலாற்றில் மிகவும் இரத்தம் தோய்ந்த போர்களில் ஒன்றான கலிங்கப் போரை நடத்திய மாமன்னர் அசோகர் அகிம்சைக்கு மாறிய அசாதாரணமான நிகழ்வைப் பண்டைய இந்திய வரலாறு குறிப்பிடுகிறது. அசோகர் அமைதிப்புறாவாகி, அகிம்சையை அரசாங்கக் – ஒரு வேளை வரலாற்றில் இது முதல் முயற்சியாக இருக்கலாம் – கொள்கையாக ஆக்கினார். 1950களில் இத்தகு மடைமாற்றம் ஒன்று கொரியப் போரில் நிகழ்ந்தது. விமான எதிர்ப்புத் தகவல் அதிகாரியான கிளென் டி.பேஜ், சிக்கல் தீர்வுக்கான மாற்று வழிமுறைகளின் தேவையை அப்போரின் நடுவே உணர்ந்தார். அகிம்சைக்கான அவரது விழிப்புணர்வு மகாத்மா காந்தியின் வாழ்வையும் பரிசோதனைகளையும் தீவிரமாகப் பரிசீலிக்கத் தூண்டியது. பின்னர் பேராசிரியர் பேஜ் இந்தியாவுடன் நெருங்கிய ஆன்மீக பிணைப்புக் கொண்டார்; அது அவர் மீதும், இந்திய காந்திய இயக்கத்தின் மீதும், சாந்தி சேனையின் மீதும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகளாவிய அகிம்சை விழிப்புணர்வுக்கு அவர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். அகிம்சை மீதான அவரது பற்றுறுதி முழுமையானது; உலகின் பல நாடுகளுக்குப் பல முறை சென்று, அமைதிப் பணியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அகிம்சையை

எங்ஙனம் ஆழமாகவும் பல்துறைகளை இணைத்தும் ஆராய்ந்து செயல்படுத்தலாம், கற்பிக்கலாம் என்பதை வழிகாட்டி ஊக்குவித்தார்; இதன் விளைவாக உலகெங்கும் ஆராய்ச்சியாளர்கள், செயல் வீரர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் புதிய குழு உருவாகியுள்ளது. அவரது அகிம்சை முயற்சிகள் உலகளாவிய "புனித வேள்வியாக" ஆயிற்று; அவரது பற்றுறுதி பரவசம் தருவது; ஈடு இணையற்றது; அளவிட முடியாதது. கொல்லாமை சமூகத்திற்கான அவரது அழைப்பு ஆரம்ப கட்டத்தில் சந்தேகத்துடனும் ஏளனமாகவும் நோக்கப்பட்டது; அது இன்றைய அரசியல் – சமூகச் சூழ்லில் கரைந்து மறைந்து விடவில்லை. அரசியல் அறிவியல் துறையாளர்கள் அவரை இன்னும் புரிந்து, பாராட்டி, அவ்வழியில் செல்ல இன்னும் முன் வந்துவிடவில்லையெனினும், பலர் பேராசிரியர் பேஜ்ஜின் தீரமான முயற்சிகளைப் போற்றுகின்றனர்.

ஜோகான் கால்துங் எழுதுகிறார் : "அடிமை முறை இயல்பானது மற்றும் மானிட இயல்பின் ஒரு பகுதி எனக் கருதப்பட்ட காலத்திய சமூகத் தத்துவத்தை கிளன் பேஜ் நினைவுக்குக் கொண்டு வருகிறார். 'அடிமையில்லாச் சமூகம் சாத்தியமா?' என்ற வினா அன்று எள்ளி நகையாடப் பட்டிருக்கும். 'கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?' என்று பேஜ் எழுப்பும் வினாவுக்கு இன்று அத்தகைய பதில் கிடைக்கிறது. நீதியான அடிமை முறை பற்றிக்கூட அன்று சிலர் தத்துவங்களை உருவாக்க முற்பட்டனர்."

"கொல்லாமை உலக அரசியல் அறிவியல்" என்னும் இந்நூல் நாற்பதாண்டு கால ஆராய்ச்சி, தியானம், சேர்ந்து செயல்படல், உலகின் மிகச் சிறந்த அறிஞர்களுடன் தீவிர உரையாடல் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு மகத்தான நூலாகும். "கொல்லாமை" என்பதைத் தலைப்பாகக் கொண்டு ஆங்கிலத்தில் வரும் முதல் நூல் இது தான். கொல்லாமைக்கு நியாயம் கற்பிப்பதுடன், அதில் பெருமையும் காண முற்படும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமயச் சூழலில், 'மானிட நிலையில் கொல்வது தவிர்க்க இயலாத ஒரு பகுதி' என்ற நம்பிக்கைக்குச் சவால் விடும் கிளன்

பேஜ்ஜின் நிலை என்னவாகும்? அவரது உணர்ச்சிப்பூர்வமான அழைப்பு பொய்மை மிகுந்த, மாறுதல் மற்றும் பகுத்தறிவுச் சிந்தனைக்கு சகிப்புத்தன்மை இல்லாத இன்றைய உலகில் விழலுக்கு இரைத்த நீராகுமா? அல்லது அது அதிர்வொலிப் பெருக்கத்தால் ஆரோக்கியமான விவாதங்களைத் தூண்டி, மனப்போக்கில் மாறுதலை உண்டாக்குமா?

"கொல்லாமை உலகச் சமூகம் சாத்தியமே; கல்வி உலகின் அரசியல் அறிவியல் துறை மற்றும் அதன் சமூகப் பங்கில் மாற்றங்கள் அதனைக் கொண்டு வர உதவும். மானிட இயல்பின் மற்றும் சமூக வாழ்வின் மாற்ற முடியாத பண்பு கொல்லுதல் என்ற எடுகோளை அவர் வலுவாக, பிறர் ஏற்கும் வகையில் சவால் விட்டார்.

இதனை காந்தி மீடியா சென்டர் ஆங்கிலத்தில் இந்தியப் பதிப்பாக பூர்ணோதயம் புத்தக டிரஸ்டுடன் சேர்ந்து வெளியிட்டது. அகிம்சை பெண்ணிய பெட்சி நிறுவனத்துடன் இணைந்து தமிழ் மொழி பெயர்ப்பு வெளி வருகிறது. அனைத்து இந்திய மொழிகளிலும் இந்நூலை வெளியிட முயன்று வருகிறோம். கொல்லாமை உலகை உருவாக்கிட இம்முயற்சி வித்திடுகிறது. இதனை எல்லா இதயங்களிலும் விதைக்கும், வளர்க்கும் திருப்பணியில் ஈடுபடுவோம்.

டாக்டர் என். இராதாகிருஷ்ணன்
தலைவர்
இந்திய காந்தியியல் கௌன்சில்

புதுடில்லி
10.11.2003

## அணிந்துரை

# கொல்லாமை கொள்கை அறிவியல்கள்
# (Policy Sciences of Nonkilling)

உங்கள் கரங்களில் உள்ள இந்நூல், பரந்துபட்டுப் பலரால் படிக்கப்பட்டு, தீவிரமாக அது எடுத்துக் கொள்ளப்படுமானால் உலகெங்கும் நிலவும் சில மதிப்பீடுகளும் அம்மதிப்பீடுகள் உருவாக்கும் நிறுவனங்களும் பிரச்சினைக்குள்ளாகும். அத்தகு மதிப்பீடுகள், இலக்குகள், விருப்பங்கள், கோரும் விளைவுகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயல்கள் அத்துடன் தொடர்பான நிறுவனங்கள் ஆகியவற்றில் அதிகாரத்தைப் பெறுவது மற்றும் பயன்படுத்துவது தொடர்பானதாகும். தேவையானால் தன்னையும் பிறரையும் நெருக்கியும் பின்பற்றச் செய்யும்படி கட்டுப்படுத்தும் முடிவுகளை எடுக்கும் படிமுறையில் பங்கு பெறுவதை "அதிகாரம்" முடிவு செய்யும். போர் தொடுப்பவர்கள் மற்றும் பொது ஒழுங்குக்கு இணங்காதவர் மீது மரணம் உள்ளிட்ட கடுமையான தடைகளை விதிப்பவர்களான அரசாங்கங்கள் மற்றும் முடிவுகளை எடுப்பவர்கள் ஆகியோரிலும் அதிகமானவர்களையே அதிகார மதிப்பீடுகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் உள்ளடக்கும். அமைப்பு ரீதியான தொழில் முனைவோரின் பொருளாதாரங்கள் – ஆயுதக் கண்டுபிடிப்பு, உற்பத்தி மற்றும் வணிகம், மேலும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக அச்சுறுத்தல் வழிச் சிலர் செல்வம் சேர்க்கின்றனர். பல்கலைக்கழகங்களில் சில படைப்பாற்றல் மிக்க பேராசிரியர்கள் ஆய்வுகள் நடத்தி வன்முறைக்கான உத்திகளையும், "நெருக்குதலுக்கான இராஜதந்திரத்தையும்" உருவாக்குகின்றனர்; திறன்மிக்க விளையாட்டுக்காரர்களும் கலைஞர்களும் வன்முறை விளையாட்டுகளிலும் பொழுது போக்குகளிலும் வல்லுனராகின்றனர்; கருச்சிதைவுகளிலும் பரிவுக் கொலைகட்கு உதவுவதிலும் ஈடுபடும் புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களின் மருத்துவமனைகள்; பொது அரசுகளை மீறியோ அல்லது அவைகளின் ஒத்துழைப்புடனோ கொல்லும் ஆயுதங்களைக் குவிக்கும் மற்றும் பயன்படுத்தும் நபர்களடங்கிய "தனிப்பட்ட படைகள்" அல்லது அவ்வளவு இரகசியமில்லாமல் செயல்படும் இரகசியச் சமூகங்கள்; தங்களுக்குள் தவறாக அத்துமீறி நடக்கும் அல்லது அத்தகு செயல்களைச் சகித்துக் கொள்ளும்

உறுப்பினர்களை உடைய குடும்பங்கள்; தவறிழைக்கும் துணைவியர், குழந்தைகள், மைத்துனர்களைக் கொல்லும் சில பண்பாடுகள்; மற்றும் ஏற்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து வேறுபடுபவர்களைக் கொல்லவும் முற்படும் சமய விசுவாசிகள் ஆகிய அதிகார மையங்கள் ஒன்றோடொன்று உறவாடுகின்றன.

தமது குழுமங்களின் அதிகாரப் படிமுறைகளால் சமூகத்தின் ஒவ்வொரு முக்கியத் துறையும் தாக்குதலுக்கு உள்ளாகிறது; எனவே ஒவ்வொன்றும் மேற்பார்வை பார்க்கிறது; ஒழுங்குபடுத்துகிறது; பணிக்கு அமர்த்துகிறது; மேலும் சரி செய்கிறது; ஆக்க மற்றும் எதிர்மறை ஊக்கிகளுடன் இது நடைபெறுகிறது; சில வேளைகளில் இது கார்ப்பரேசன்கள், கல்லூரி வளாகங்கள், பொழுது போக்குக் கலைஞர்களிடையில், மருத்துவமனைகள், சிகிட்சை நிலையங்கள், சில வேளைகளில் குடும்ப வளாகங்கள் மற்றும் தேவாலயங்களில் நிகழ்வது போலக் கொல்லுதலும் நடக்கிறது. அதிகார நிறுவனங்கள் மற்றும் பிற சமூக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு உள்ளும் இடையிலும் நிகழும் பரஸ்பரத் தாக்கங்கள் கொல்வது மற்றும் கொல்லுவதற்கான அச்சுறுத்தல்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நவீன மற்றும் புதிய நவீன சமூத்தின் அடிப்படைப் பிரச்சினைகளாக உள்ளன என்பதை தகுதியான பார்வையாளர்களும் விழிப்பான பங்கேற்பாளர்களும் குறிக்கின்றனர்.

மானிட நிகழ்வுகளில் கொல்லுதல் மற்றும் கொல்லுதலுக்கான அச்சுறுத்தலின் தனிநபர், குழும மற்றும் உலக பரிமாணங்களைப் பேராசிரியர் கிளன் பேஜ் முறையாக எதிர்கொள்கிறார் நேரடி அனுபவ மற்றும் அளவையியல் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி அடிப்படைப் பிரச்சினையை அவர் வரையறுக்கிறார். குறைந்தபட்ச பொது மற்றும் கௌரவ ஒழுங்குக்கான பெரிதும் பரந்துபட்ட மானிட கோரிக்கை, குடிமை விருப்பம் மற்றும் உரிமை ஒரு புறம்; ஆனால் இன்னொரு புறம் இந்த அடிப்படை இலக்குகளையும் நோக்கங்களையும் சமூக அமைப்புகளின் ஒவ்வொரு நிலையிலும் – சிறிய குழுக்கள், வட்டாரங்கள், உலக நாடுகள், மற்றும் அரசாங்க, பொருளாதார, கல்வி, திறன், மருத்துவ, சமூக, குடும்ப மற்றும் சமய என மாறுபட்ட அமைப்புகளிலும் முரணாகும், மறுக்கப்படும் நிலை உள்ளது.

கொல்லுதல் என்னும் பிரச்சினையானது புதியதாக சமீபத்தில் தோன்றியது அல்லது திடீரென அவசரமாகப் புரிந்து

கொள்ளப்பட்டது என்பதை இந்நூல் இப்பொழுது வெளியாவது குறிக்காது. இந்நூலாசிரியர் ஒரு சிறந்த அறிஞர். விஞ்ஞானி என்ற முறையில் தமது கற்பனையையும், திறன்களையும் எதிர்பாராத முறையில் தற்செயலாகப் பயன்படுத்தியதன் விளைவு இந்நூல் என்றும் பொருள்படாது. மானிட அமைப்புக்கள் மற்றும் குழுமங்களில் கொல்லுதல் நெடுங்காலமாகப் பங்கு வகிக்கிறது என்பது பெரிதும் உணரப்பட்டு வந்துள்ளது. ஆனால் காலங்காலமாக ஆடவரும் மகளிரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அணுகல் முறைகளையும், அவற்றை ஆராய்வதற்கான கருவிகளையும் கொல்லுவதற்கான சாத்தியங்களை கொல்லாமைக்கான சாத்தியங்களாக – மானிடத்தின் ஒவ்வொரு துறையின் அனைத்து மதிப்பீடுகளையும் பாதிக்கும் வகையில் – திறம்பட மாற்றுவதை இந்நூல் வெளிபானது காட்டுகிறது.

இத்தகு பொக்கிஷமானது கல்வியாளர், அறிவியலார் மற்றும் அறிஞர்களின் குவிந்துள்ள அறிவு மற்றும் திறன்களை உள்ளடக்கும். அவர்களையும் அவர்களது நிறுவனங்களையும் சுற்றி நடக்கும் கொலைகட்கு இடையில் அல்லது அதன் காரணமாக இது நிகழலாம். தத்துவ ஞானிகள் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்ள உதவுகிறார்கள்; நடைமுறையில் குழம்பிவிடும் இலக்குகள், மதிப்பீடுகள், விருப்பத் தேர்வுகள். ஆகியவற்றை இவர்கள் தெளிவுபடுத்துகின்றனர். கொல்லுதல் மற்றும் கொல்லாமை ஆகிய வழிகள் மற்றும் இலக்குகள், விருப்பத் தேர்வுகள் ஆகியவற்றின் வளர்ச்சி, வீழ்ச்சி ஆகியவற்றின் போக்கினை வரலாற்றாசிரியர், மக்கட்தொகை நிபுணர், பொருளியலார் மற்றும் பிறர் வரிசைப்படுத்துவர். அடிப்படையான திரிபுகளை இடையீடு செய்யவும் வாழ்வை அதிகமாகப் போற்றுதலை வளர்க்கவும் சரியான இடத்தையும் காலத்தையும் காணும் நோக்கத்தில் நிலைகளை ஆராய மானிடவியலார், உயிரியலார், உளவியலார் மற்றும் சமூகவியலார் முற்படுகின்றனர். தேவையற்ற போக்குகளை எதிர்க்கவும் விரும்புபவற்றை வலுப்படுத்தவும் வல்ல இடையீடுகள் இல்லாத நிலையில் போக்குகளின் திசைகள் எங்ஙனம் இருக்கும் எனக் கணிக்க அல்லது முன்கூட்டி உரைக்க முற்படுகின்றனர். பொது விவகாரங்களில் அக்கறையுள்ள விழிப்புணர்வும் அனுபவமும் மிக்க ஆடவர், மகளிரில் பயன்படும் சாத்தியமான மாற்றுக் கொள்கைகளை வகுக்கும் திறனாளர்களின் எண்ணிக்கையும் அவர்களின் நுணுக்கத் திறன்களும் அதிகரித்து வருகின்றன.

இத்தகு ஆடவரும் மகளிரும் மேல்தட்டில் இல்லாமல் பெரிதும் இடைத்தட்டில் உள்ளனர்; அவர்கள் கொல்லாமைக்கு ஆதரவாகப் புத்தாக்கம் செய்ய முடியும். மானிடப் போக்குகள், நிலைகள், வாய்ப்புகள் ஆகியன பற்றிய சிறப்பு நிலை அறிஞர்கள் கடந்த நூற்றாண்டை மிகவும் இரத்தம் தோய்ந்த நூற்றாண்டாக்கிய வன்முறை நிபுணர்கட்கு குறிப்பிடத்தக்க வலுவான மாற்றுக்களைத் தருகிறார்கள்; மானிட கௌரவத்திற்கு அதிகச் சாதகமான மாற்று நிலைகளையும் பார்வைகளையும் கொண்டுள்ள அவர்கள் அதிகாரத்தில் ஏற காத்துக் கொண்டிருக்கின்றனர். மானிடவரலாற்றிலேயே மிகவும் இரத்தம் தோய்ந்த இருபதாம் நூற்றாண்டில் கொல்லாமை கொள்கை அறிவியல்கள் தலையெடுப்பதும், அவை நிறுவனமையமாதலும் நிகழ்ந்துள்ளது ஒரு மகத்தான வரவேற்கத்தக்க முரணாகும்.

தனது காலத்துக் கொல்லும் கருவிகளில் மற்றும் திறன்களில் பயிற்சி பெற்ற கிளன் பேஜ் கொரியப் போரில் அவற்றைப் பயன்படுத்தினார். அவர் தமது கல்விப் பணியைத் தொடர்ந்த பொழுது, ஆசிரியர்– ஆய்வறிஞராய் இருப்பதற்கான திட்டமிட்ட தயாரிப்பைச் செய்யலானார். நாடுகளுக்கு இடையேயான உறவுகள் அதிலும் குறிப்பாக வெளிஉறவுக் கொள்கை முடிவுகளை எடுக்கும், விளக்கும் அரசாங்கங்களின் முக்கிய நபர்கள் பற்றியதாக அவரது கவனம் இருந்தது. பல மொழிகளில் வல்லுநரான அவர் சமூக அறிவியலின் பரந்துபட்ட பல்துறைகட்குப் பங்களிப்பு செய்துள்ளார். கொல்லுதல் பிரச்சினைகள், இலக்குகள், போக்குகள், நிலைகள், பார்வைகள் மற்றும் கொல்லுதலைப் போக்குவதற்கான கல்வி மற்றும் பொதுக் கொள்கைகள் பற்றிய மாற்று வழிமுறைகள் பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை அரை நூற்றாண்டாக நேருக்கு நேர் அவர் சந்தித்து வந்துள்ளார். தனது சொந்த வாழ்க்கையின் இலக்குகள் பற்றிய பகுப்பாய்வானது அவரை இதற்கு இட்டுச் சென்றுள்ளது. கொல்லாமைக்கும் மேலாக கொல்லுதலை வற்புறுத்தும் அடிப்படைகளில் அரசு, அரசாங்கம் பற்றிய அறிவியல் ஆய்வுகள்–இதற்கு முரணான சில குரல்கள் சில வேளைகளில் ஒலித்தாலும்–அமைந்துள்ளன. இந்நூலாசிரியர் தமது நீண்ட வாழ்வின் இரண்டாம் பகுதியில் இந்த அடிப்படைகளைத் தாக்கவும் அதற்கு மாற்றுத் தரவும் செய்கிறார்; இதன் விளைவே "கொல்லாமை உலக அரசியல் அறிவியல்" என்னும் இந்நூலாகும்.

விழிப்புணர்வு பெருமளவு அதிகரித்துள்ள மற்றும் கொல்லுதல் அதற்கான அச்சுறுத்தல்களின் அளவும், பரப்பும், கனமும் மிகவும் அதிகரித்துள்ளதைக் கண்டு வருந்தும் கால கட்டமாகிய கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நான் இந்நூலாசிரியரை அறிவேன். கொல்லாமை நடத்தையை வளர்க்க முற்படுவர்களுடன் – அவர்கள் எக்குழுமத்தவர் களாயினும் சரி, அந்த ஜனநாயக குடிமக்களுடன் நான் சேர்ந்து உந்துதல் பெறுதவதற்கான காரணம் இந்நட்புறவும் அவரிடமான மரியாதை மட்டுமன்று – அவை நிறைய உண்டு – என்றாலும்கூட அமைதிக்கான மானிடத்தின் பரந்துபட்ட நலன்கள் பற்றிய பல்வேறு அறிவியல் அறிவுத் துறைகளிலிருந்து இவ்உந்துதல் வருகிறது. மதிப்பீடுகளை உருவாக்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் குறுகிய வன்முறை பங்கேற்பிற்கு இது எதிரானதாகும்.

இது ஓர் அரசியல் அறிவியலாரின் நூல் எனக் கூறுவதே அதனது வலு மற்றும் பலவீனங்களைச் சுட்டுவதாகும். அறிவியலை அதனது நவீனக் கருத்துருவாக்கத்தில் வற்புறுத்தும் கடைசி சமூக அறிவியல் அரசியல் அறிவியலாகும். “அறிவியல்” என்ற விளக்கத்திற்கு அரசியல் துறை பொருத்தமானதாக ஆவதற்கு உள்ள பலவீனங்களை அதன் விரிவான எல்லைகள் வெற்றி கொள்கின்றன. இந்த வசதியால் ஒரு புதிய பிரிவு அல்லது போக்கு ஏற்பட்டுள்ளது. சமூக நிகழ்வுகளை அணுகுவதற்கான பன்மிய மதிப்பீட்டு, பன்மிய வழிமுறையை வற்புறுத்தும் “கொள்கை அறிவியல்கள் (Policy Sciences)” உருவாகியுள்ளது. மானிட மாண்புக்கான கொள்கை அடிப்படையிலான சமூக அறிவியல்களின் செம்மையாக்கத்திற்கு ஆக்கப் பூர்வமாக கிளன் பேஜ்ஜின் முயற்சிகள் பங்களிக்கின்றன.

அமெரிக்கக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் அரை நூற்றாண்டுக்கு மேலாக வாழ்ந்து, படித்து, கற்பித்து மற்றும் நிர்வகித்து வந்தவன் என்ற முறையில் மேலும் அமெரிக்காவின் அடிமட்ட நிலைகளில், மாநில மற்றும் தேசிய நிலைகளிலும் மேலும் வேறு பல நாடுகளில் பலநிலைகளிலும் அதிகாரப் படிமுறைகளை நோக்குவதில் சிறப்பான தேர்ச்சி உடையவன் என்ற முறையில் நான் விழிப்புணர்வான மற்றும் அதிகார அமைப்புகளை நன்கு அறிவேன் என்ற வகையில் எழுதுகிறேன். கொல்லும் கருவிகளும் நபர்களும் கட்டுப்பாடான கல்லூரி வளாகங்களிலும் இருப்பதை நாம் பல வேளைகளில்

கண்டு கொள்ளாமல் விடுகிறோம் என்ற ஒரு பாடத்தை நான் எனது நிர்வாக அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டேன். இத்தகு கொல்லும் மற்றும் கொல்லும் அச்சுறுத்தல்கள் கவனிக்கப்பட்ட பொழுதும் வணிகக் காரணங்களால் வகைப்படுத்தவும், நியாயப்படுத்தவும் படுகின்றன; நமது பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் வணிகத் துறைபோலவே – தழுவிச் செல்வதால் அல்லது முன்மாதிரியாகக் கொண்டு இயங்குவதால் – ஆகி விட்டன; மேலும் வணிகம், வர்த்தகம், நிதி ஆகியவற்றுக்கான முன்னோடிகளை – வழிகாட்டிகளை– உயர்கல்வி நிறுவன நிர்வாக, மேலாண்மை, வணிக, நிறுவன மற்றும் தொழில் நுட்பத் துறைகள் உருவாக்குகின்றன.

பிற சமூகத் துறைகளை விட அரசியல் துறையில் வன்முறையின் மையமான செயல் நன்கு வெளிப்படுகிறது. நாடு பற்றிய வரைவிலக்கணத்தில் இது எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகிறது; தேசிய அரசாங்களின் பொது ஒழுங்கு, உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்புக் கொள்கைக்கான வரவு செலவுத் திட்டங்களில் இது அடிப்படையாக உள்ளது; அரசியல் நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் இயக்கங்கட்கு நிதி வழங்கிடும் படை தொடர்பான தொழில்கள் ஆகியவற்றிலும் இதனைக் காணலாம்; வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் வழிபாட்டு இடங்களில் காவல் துறையினர் தரும் பாதுகாப்பிலும் சுகத்திலும் இதனைக் காணலாம்.

அதிகார நிறுவனங்கள் அவற்றின் பங்கேற்புக்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அரசியல் அறிவியல் கல்வித் துறையானது அதிகாரப் பாத்திரங்கள் மற்றும் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க அரசியல், தேசிய அரசாங்கங்கள் ஒப்பீடு, நாடுகளுக்கிடையேயான உறவு முதலிய பாடத்துறைகளை அறிமுகப்படுத்தும் பாட நூல்களைப் பார்த்தால் நாடுகளுக்கிடையேயான செயல் பாடுகளில் அதிகாரத்தை ஒரு தலைப்பாகக் காண்பர்; வன்முறையானது எப்பொழுதாவது நிகழும் பண்பாட்டு தீவிரப் போக்கேயன்றி அடிப்படை பாடப்படிப்பன்று. இத்தகு நவீன அரசியல் அறிவியலின் கட்டுப்படுத்தப்பட்ட நிலையானது கிளன் பேஜின் குறிப்பிட்டுக் கவனம் செலுத்தும் கருத்துருவாக்கத்தை வரவேற்கிறது. கொல்லும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாறாக கட்டுப்படுத்தப்படாவிடில் அது தொடரக்கூடிய சாத்தியமுள்ள இலக்குகளைத் தெளிவாக்குதல், போக்குகளை சர்வே செய்தல்

மற்றும் அடித்தளமான காரணங்களைப் புரிந்து கொள்ளலுக்கு ஏற்புடைய முக்கியமான அறிவுப் பணிகள் இங்கே இருக்கும்.

உலகக் கொள்கைகளின் தலைகீழ் மாற்றத்தின் தொடக்கம் இங்குள்ளது; இது கொல்லுதலுக்கு மாற்றாக பங்களிக்கக் கூடியதாகும். இது கொல்லாமை மாற்றுக்களின் புதிய பரிணாமத்திற்குரிய முயற்சிகளுக்கான அடித்தளமாகும். "மரபணுக்களின் பரிணாமத்திலிருந்து" (genetic evolution) வேறுபடுத்தப்படும். "பண்பாட்டுப் பரிணாமத்திற்கான" (cultural evolution) அறிவியல்களின் தோற்றத்தில் வேர் கொண்டுள்ள பார்வைகளும் ஆக்கப்பூர்வச் செயல்களும் சந்திக்கும்; இத்தகு முயற்சிகட்கு உதவும். பண்பாட்டு பரிணாமம் அல்லது உடன் பரிணாமம் (co-evolution) என்பது ஆய்வு இதழ்களிலும் நூல்களிலும் இன்று அதிக இடம் பெறுகிறது. ஆனால் இதுபற்றிப் பொதுவாக ஏற்கப்படும் கருத்துருவாக்கம் ஒன்று இன்னும் உருவாகவில்லை. இது தொடர்பான ஆரம்ப காலக் கோட்பாடு மிகவும் சிறந்ததாகவும் எளிதானதாகவும் உள்ளது. கொல்லாமைக் கருத்துக்கள், அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் புதிய பரிணாமத்தால் உருவாக்கும் சாத்தியங்கள் பற்றிக் குறிப்பிட நாம் அதனைச் சார்ந்திடலாம்.

கொல்லாமை என்பது ஒரு (கரு) "மெமி" (meme) – கருத்து, அடையாளம், கரு, நடைமுறை – எனலாம். இது ஏனைய மெமிக்கள் (கருக்கள்) போல உயிர்வாழ்கிறது. அழிகிறது. இதனை ஒரு மரபணு எனச் சில கோட்பாட்டாளர் விளக்குவர். வாழ்வா? சாவா? என்பது போலச் செய்தல் அல்லது மேம்படுத்தலைச் சார்ந்துள்ளது. கருவானது திரும்பத் திரும்ப வருவதால் அல்லது படியெடுத்தலால் நீண்டகாலம் அது இருப்பதை வலுப்படுத்துகிறது; பரிணாம வளர்ச்சியில் இதனால் கொல்லாமைக்குச் சாதகம் ஏற்படுகிறது. அமைதிப் பார்வை, மற்றும் செயல்பாடுகள் பற்றிய வழிபாடுகள், நம்பிக்கைகள், பாடல்கள், கவிதைகள் மற்றும் பிற வெளிப்பாடுகளின் நினைவுகள் மற்றும் நூலகங்களில் இந்த வாய்ப்பு அடங்கியுள்ளது. பண்பாட்டு நினைவுகளில் காக்கப் பட்டுள்ளதுடன் கொல்லாமை நடைமுறைகளை எளிதாக மறுஉருவாக்கம் செய்ய முடியும்; படைகளை விட்டுவிட்ட நாடுகள், மரணத் தண்டனையை நீக்கிவிட்ட சமூகங்கள், அமைதி ஆய்வு நிறுவனங்கள், அமைதி வழிச் சிக்கல் தீர்வுக்கான பணிகள் முதலியவற்றைச் சுட்டலாம்.

எவ்வளவு எளிமையாகக் கொல்லாமை நடைமுறைகளைப் பின்பற்ற முடியும் என்பது கொல்லாமையின் வளத்தை கிளன் பேஜ்க்கு காட்டுகிறது. ஒரு கருத்தைக் காப்பதற்கு அதனை அப்படியே படியாக்கம் போல பின்பற்ற வேண்டும் என்பதல்ல; பண்பாட்டுக்குப் பண்பாடு, வர்க்கத்திற்கு வர்க்கம், நபருக்கு நபர், சூழ்நிலைக்கு சூழ்நிலை, கொல்லாமையும் கொல்லாமை அமைப்பும் மாறுபடுவது கொல்லாமை மாற்றுக்கான திறம்பட்ட நடைமுறைகளைக் காண உதவும் பரிசோதனைகளாகும்.

ஒரு புத்தாக்கக் கருவானது வெற்றிகரமாகவும் தொடர்ச்சியாகவும் பெருகிச் செல்வது அதற்கு ஆதரவான அல்லது ஆதரவில்லாத வளங்களின் சிக்கலான அமைப்பைச் சார்ந்துள்ளது. உலகச் சமுதாயத்தின் பல்வேறு மதிப்பீட்டுத் துறைகளின் நிலைகள் மாறும் சூழலில் கொல்லாமைக்கான ஒரு மறுபுத்தாக்க வலியுறுத்தல் நிகழ்வது எதிர்பாராத நிகழ்வாகும். இருபதாம் நூற்றாண்டில்தான் உண்மையான ஜனநாயக நாடுகள் தோன்றி, நிலைபெற்று உலகெங்கும் ஒரு நூற்றாண்டுக்குள் பரவியுள்ளன. ஜனநாயக முறையில் பின்னடைவுகள் ஏற்படலாம் எனக் கொண்டாலும்கூட, இந்த ஜனநாயகமுறை இன்னும் வலுவடைய வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது. ஜனநாயக நாடுகளின் தலைவர்கள் தமக்குள் சண்டையிடுவதற்கான வாய்ப்பு பிற ஜனநாயகமற்ற நாடுகளுடன் சண்டையிடுவதைவிடக் குறைவாக உள்ளது என்பதற்கும் சான்றுகள் மிகுந்து வருகின்றன. அங்ஙனமே ஜனநாயக நாடுகளை ஆள்பவர்கள் பஞ்சங்களையும் ஜனநாயகமற்ற ஆட்சிமுறையையும் தவிர்ப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் அதிகமாக உள்ளது. அதிகாரம் அல்லது செல்வம் மட்டுமல்ல, அனைத்து மதிப்பீடுகளை உருவாக்குவதிலும், பகிர்வதிலும் பரந்துபட்டுப் பங்கேற்கும் புதிய நவீன கால அக்கறையானது ஜனநாய யுகத்தின் விளைவாகும். மரியாதை, சுயமரியாதை, பிறரை மதித்தல் ஆகியவற்றுக்கான உலகளாவிய ஆர்வம் கொல்லாமைப் புத்தாக்கங்களை ஆதரிக்கின்றன. கொல்லும் அமைப்புக்களில்கூட இத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கலவரங்களையும் எதிர்ப்புக்களையும் அதிகத் திறம்படவும் அமைதியாகவும் கையாளக் காவல்துறையினர் கற்கின்றனர்; வன்முறையின் சக்திக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தொழில்ரீதியான தரங்களை முறையான படையினர் பின்பற்ற முற்படுகின்றனர்.

சமூகத்தின் பிற துறைகளிலும் துஷ்பிரயோகம் மற்றும் கொல்லுதலுக்கு மாற்று உருவாகி வருகிறது. அகிம்சைப் பாடத்திட்டம், விரிவாக்கப்பட்ட மனச்சான்றின்படியான போர் எதிர்ப்பாளர் கோட்பாடு முதலியன சான்றுகளாகும்.

கொல்லாமைக்குச் சாதகமான பரிணாம அடிப்படையிலான ஆதரவை வளர்ப்பது என்பது விருப்பம் மற்றும் விசுவாசம், பொதுமக்களின் நல்லெண்ணம் ஆகியவற்றைவிட அதிகமானவற்றைச் சார்ந்துள்ளது. மாற்றுச் செயல்களை உருவாக்குதல், செயல்படுத்துதல், மதிப்பிட்டு வளர்த்தல் ஆகியவற்றுக்கான அறிவின் உறுதியான அடிப்படையில் அது அமைந்துள்ளது. கொல்லாமை அரசியல் அறிவியலின் மிகுந்த முக்கியத்துவம் இதனால் புலனாகும்.

எனவே, அன்பர்களே, அறிவியலும், கொள்கையும் (policy) சேர்ந்த ஒரு நூலை உங்களுக்கு வழங்குகிறோம். கொல்லாமை உலக அரசியல் அறிவியலுக்கான தேவையைச் சந்திக்கும் வரை எவ்விதமான தீர்ப்புக்கூறாமல் காத்திருக்க வேண்டுகிறேன். உங்களுக்கு திருப்தி ஏற்படவில்லையானால், உங்களது மனம் மாறவில்லையானால் கொல்வது அல்லது கொல்வதற்கான அச்சுறுத்தலை சாசனப் பூர்வமாக– வெளிப் படையாகவோ அல்லது மறைமுகமாகவோ—ஏற்கும் மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து நீங்களும் சுகமான மௌனத்துடன் இருப்பீர்கள். நீங்கள் மனம் மாறி இந்நூலின் கருத்தினை ஏற்றால், இந்நூல் கூறும் பல்வேறு வாய்ப்புகளில் ஒன்றினைப் பற்றிக் கொண்டு நீங்கள் பங்களிப்பு செய்ய முடியும். மாறாக வன்முறையான நெருக்குவித்தலால் உலகக் கூட்டமைப்பின் மானிட கௌரவத்தை ஒவ்வொரு துறையிலும் பாதிக்கும் மதிப்பீடுகளுக்கு மாறாக, எத்தகு சிக்கலிலும் இறுக்கத்திலும் அன்பான இணங்கச் செய்யும் உத்திகளுக்கு ஆதரவாக ஒவ்வொரு பண்பாடு, வர்க்கம், ஆர்வம் மற்றும் ஆளுமை வகை ஆகியவற்றில் ஒத்த கண்ணோட்டம் உடைய ஆடவர் மற்றும் மகளிரின் ஒளியையும் ஆற்றலையும் திரட்டுவதில் இந்நூலில் கூறப்பட்டுள்ள வாய்ப்புக்களில் ஒன்றைப் பற்றிக் கொள்ள இடமுள்ளது.

பெய்ஜிங்
01.01.2000

ஜேம்ஸ் இராபின்சன்

**REFERENCES**


DAWKINS, RICHARD 1989 *The Selfish Gene* Oxford : Oxford University Press.

GOWA, JOANNE, 1999 *Ballots and Bullets: The Elusive Democratic Peace.* Princeton; Princeton University Press.

KARATNYCKY, ADRIAN 2000. The 1999 Freedom House survey; a century of progress, *Journal of Democracy,* 11 (1) 187-200.

LASSWELL, HAROLD D. AND KAPLAN, ABRAHAM 1950. *Power and Society : A Framework for Political Inquiry New Haven, Conn: Yale University Press.*

LASSWELL, HAROLD D. and Mc DOUGAL, MYRES S. 1992 *Jurisprudence for a Free Society; Studies in Law, Science and Policy. New Haven, Conn:* New Haven Press and Dordrecht: Martinus Nijhoff Publishers, 2 vols.

ONEAL, JOHN R. and RUSSETT, BRUCE, 1999. The Kantian peace: the pacific benefits of democracy, interdependence, and international organizations. *World Politics,* 52 (1) : 1-37.

PAIGE, GLENN D. 1977. *The Scientific Study of Political Leadership.* New York: The Free Press.

ROBINSON, JAMES A. 1999. Landmark among decision-making and policy analyses and template for integrating alternative frames of reference: Glenn D. Paige, *The Korean Decision, Policy Sciences* 32:301-14.

SEN, AMARTYA, 1999 *Development as Freedom. New York; Knopf.*

SNYDER, RICHARD C; BRUCK HENRY W; and SAPIN, BURTON, eds. 1962. *Foreign Policy Decision Making : An Approach to the Study of International Politics. New York: The Free Press of Glencoe, Macmillan.*

## முன்னுரை

உலகெங்கிலுமுள்ள அரசியல் அறிவியல் மாணவர்கள் முதல் அத்துறையின் முதுநிலை சிறப்புப் பேராசிரியர்கள் வரையான அனைவரும் பரிசீலிப்பதற்கும் திறனாய்வு நோக்கில் சிந்திப்பதற்கும் இந்நூல் வழங்கப்படுகிறது. மானிட நிலையில் கொல்லுதல் தவிர்க்க முடியாத அம்சம்; அதனை அரசியல் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் ஏற்க வேண்டும்; நடப்பில் உள்ள இந்த எடுகோளைப் பொறுத்தவரையும் வயதோ அல்லது கல்வித்திறனோ எந்த குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் செய்யவில்லை. வாசகர்கள் இந்த எடுகோளைக் கேள்வி கேட்பதில் சேருவார்கள் என்றும் கொல்லாமை உலக எதிர்காலத்திற்கான சிந்தனை மற்றும் செயலுக்கான படிக்கட்டுகளாக அமைவார்கள் என்றும் நம்பப்படுகிறது.

"கொல்லாமை" என்ற சொல்லை தனது தலைப்பாகக் கொண்ட முதல் ஆங்கில நூல் இதுவாக இருக்கலாம். *வழக்கமாக இச்சொல் பயனில் இல்லை. அமைதி மற்றும்* "அகிம்சைக்கும்" அப்பால், மானிட உயிரை நீக்காமையை குறிப்பாக இச்சொல் தெளிவுபடச் சுட்டுகிறது. (தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் "கொல்லாமை" என்ற சொல் சைவ உணவு என்ற குறுகிய பொருளுடன் நிற்கும் அபாயம் உள்ளது – மொழி பெயர்ப்பாளர்) "கொல்லாமை" என்பது எதிர்மறையானது; குறுகியது; பல முக்கிய அம்சங்களை விட்டுவிடுகிறது எனப் பலர் கருதினர். அகிம்சையை (சிந்தனை, சொல் மற்றும் செயல் ஆகியவற்றால் துன்பம் செய்யாமை) கொல்லாமை என வரைவிலக்கணம் தருவது வன்முறைக்கு மேல் அதிக முன்னேற்றம் ஆகாது என மகாத்மா காந்தி கண்டிப்பதை இவர்கள் சுட்டலாம்.

பிற எல்லாவகை வன்முறைகட்கும் வளமும் பாதுகாவலரும், ஊட்டமும் கொல்லுதலே; கொல்லுதலிலிருந்து விடுதலையில் கவனத்தைச் செலுத்துவது அகிம்சை அரசியல் அறிவியலை குறிப்பிடத்தக்க ஒரு படி முன்னே கொண்டு செல்லும் என மகாத்மா காந்தியை ஆராயத் தூண்டி இணக்குவிக்க முடியும். வாழ்வை எடுக்கும் அரசியலிலிருந்து வாழ்வைப் போற்றும் அரசியலுக்குச் செல்லவேண்டும்.

கொல்லாமை உலகச் சமூகம் சாத்தியமானது என்பதே இந்நூலின் முடிவாகும். அரசியல் அறிவியல் கல்வித்

துறையிலும் அதனது சமூகப் பங்களிப்புகளிலும் இவ்வகையில் ஏற்படும் மாற்றங்கள் அதற்கு உதவிடும். மானிட இயல்பிலும் சமூக வாழ்விலும் கொல்லுதல் என்பது தவிர்க்க இயலாத மனப்போக்கு என்ற எடுகோள் அரசியல் அறிவியலின் கல்வியிலும் ஆய்விலும் நடைமுறைப் பயன்பாட்டிலும் உள்ளது என்பதை பின்கண்டவாறு கேள்வி கேட்க வேண்டும். முதலாவதாக, மானிடர் உயிரியல் ரீதியாகவும், கட்டுப்படுத்தும் சூழ்நிலைகளாலும் கொல்லுதல் மற்றும் கொல்லாமை ஆகியவற்றுக்கான திறன்களை உடையவர். இரண்டாவதாக, மானிடருக்குக் கொல்லும் திறன் இருந்தாலும் மிகப் பெரும்பாலனவர்கள் கொல்லாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர், இருக்கின்றனர் என்பது கவனிக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக, கொல்லாமைத் திறன்கள் பலதரப்பட்ட சமூக நிறுவனங்களில் முன்னரே நடத்திக் காட்டப்பட்டிருக்கிறது; அவற்றை ஆக்கமாக இணைத்து, ஏற்ற முறையில் அமைத்தால் கொல்லாமைச் சமூகங்களை உருவாக்குவதற்கான உறுப்புக்களாக அவை பங்களிக்க முடியும். கொல்லுதலின் காரணங்கள், கொல்லாமையின் காரணங்கள் மற்றும் கொல்லுதலிலிருந்து கொல்லாமைக்கு மாறுவதற்கான காரணங்கள்—கொல்லுதலுக்குச் சாதகமான உளவியல் மற்றும் சமூகவியல் அம்சங்கள்—ஆகியவற்றைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்டுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் அறிவியல் முன்னேற்றங்கள் கொல்லாமை மாற்றத்திற்கான, இடையீட்டிற்கான திறன் உள்ளதாக ஆகும். ஐந்தாவதாக, முன்பு கூறியவற்றைக் கொண்டு நோக்குகையில், மானிட இயல்பின் கொல்லும் பங்கினை அடிப்படையாகக் கொண்டு வன்முறையை அரசியல் அறிவியலிலும் அரசியலிலும் ஏற்பதை மிகவும் குறைந்த பட்சமாக ஒரு பிரச்சினையாக அரசியல் அறிவியல் கல்வித் துறை சிந்திக்கத் தொடங்கியுள்ளது. ஆறாவதாக அடிமட்ட மற்றும் உலக வாழ்விலிருந்து கொல்லுதலை நீக்குவதில் முன்னேறுவதற்கு, கொல்லாமை சமூக மாற்றத்திற்கான மானிடத் திறன்களில் நம்பிக்கையில்லா அரசியல் அறிஞர்களை இச்சாத்தியத்தை ஒரு பிரச்சினையாக கோட்பாட்டு ரீதியல் பொதுமையாக்கம் மற்றும் குறிப்பிட்டதைப் பெறுதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய ஆய்வை மேற்கொள்ள அழைக்க வேண்டும். ஐயப்படுபவர்கள், அங்ஙனமே கொல்லாமை மாற்றத்தின் சாத்தியத்தை ஆதரிப்பவர்கள் ஆகியோர் முடிந்த முடிவாக இல்லாத புனைவான (hypothetical analysis) பகுப்பாய்வு மற்றும்

பாத்திரமாதல் (role-playing) ஆகியவற்றால் கொல்லாமை அரசியல் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு உதவிட முடியும். அணு ஆயுத அச்சுறுத்தல் பாதுகாப்பு என்னும் கோட்பாட்டாளரும் மற்றும் அதனை எதிர்ப்பவர் ஆகிய இரு தரப்பினரும் வரம்புக்கு உட்பட்ட மற்றும் முழு அளவிலான அணு ஆயுதப் போரின் அடிமட்ட மற்றும் உலக விளைவுகளை கோட்பாட்டு ரீதியலும் கணினி தூண்டுதல் ஆய்வு மூலமும் ஆராய்வது போல கொல்லாமை மற்றும் வன்முறையை ஏற்கும் அரசியல் அறிஞர்கள் ஆக்கப்பூர்வமாகவும் திறனாய்வு ரீதியிலும் கொல்லாமை உலக நிலையை அடைவதற்கான முன் நிபந்தனைகள், படிமுறைகள் மற்றும் விளைவுகளை ஆராயலாம்.

இந்நூல் அடிப்படையில் அரசியல் அறிவியலைப் படிக்கும் பயன்படுத்தும், ஆராயும் நபர்களுக்கானதாகும். பல்வேறு துறைகள் மற்றும் தொழில்களைச் சேர்ந்தவர்களின் அறிவான ஆராய்ச்சிகள் மற்றும் பங்களிப்புகள் இன்றி கொல்லாமை சமூகங்களை அடைய முடியாது. ஹார்வர்டு பல்கலைக்கழகச் சமுதாயவியல் அறிஞரான பிடிரிம் அ. சொரொக்கினின் (Pitirim A. Sorokin) முன்னோடியான பொது நல அன்பு பற்றிய பயன்பாடு அறிவியலுக்கான பங்களிப்பான *The ways and Power of love* (1954) ஓர் அற்புதமான சான்றாகும். கொல்லாமை இயற்பியல் மற்றும் உயிரியல் அறிவியல்கள், கொல்லாமை சமூக அறிவியல்கள், கொல்லாமை மானிடத் துறைகள், கொல்லாமைத் தொழில்கள், வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் கொல்லாமை மக்கள் முதலியன நமது தேவைகளாகும். மேலும் கடந்த கால மற்றும் நிகழ்கால மானிடத் திறன்களின் முழு வீச்சையும் புரிந்து கொள்ள நாம் வட்டாரச் சூழல்கள் மற்றும் பண்பாடுகளுக்கு அப்பால் உள்ள அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அறவியல் கோட்பாடுகளில் நுண்உணர்வுடனும், பார்வையில் துல்லியமாகவும் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டில் ஏற்றதாகவும் இருக்க கொல்லாமை அரசியல் அறிவியல் அதன் கருத்தாலும் பங்கேற்பாலும் உலகளாவியதாக இருக்க வேண்டும்.

# பொருளடக்கம்

இந்திய பதிப்பிற்கான அணிந்துரை 5
*டாக்டர் என். இராதாகிருஷ்ணன்*

அணிந்துரை 8
*டாக்டர் ஜேம்ஸ் இராபின்சன்*

முன்னுரை 18

அத்தியாயம் 1 26
கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?

அத்தியாயம் 2 54
கொல்லாமைச் சமூகத்தின் திறன்கள்

அத்தியாயம் 3 104
அரசியல் அறிவியலுக்கான விளைவுகள்

அத்தியாயம் 4 136
சிக்கல் தீர்வு விளைவுகள்

அத்தியாயம் 5 167
நிறுவன விளைவுகள்

அத்தியாயம் 6 189
கொல்லாமை உலக அரசியல் அறிவியல்

கருவிநூற்பட்டியல் 214

பெயர், பொருள் அடைவு 241

கொல்லாமைக்காகப்—
போரில்லா உலகம், ஓர் உலக ஆட்சி,
ஒவ்வொருவரையும் ஒரு புதிய பரிணாம நிலைக்கு
உயர்த்தும் பயிற்சிகளும் விழிப்புணர்வும்,
அனைவருக்கும் வளவாழ்வு, பொருளாதார சமநீதி,
பெண் முன்னேற்றம். அகச் சீரமைப்பு,
ஆகியவற்றுக்காகப்—
பல்லாண்டுகளாக அரும்பாடுபட்டுவரும்
அருட்தந்தை தத்துவஞானி
**வேதாத்திரி மகரிஷி சுவாமிகளுக்கு**
இம்மொழியாக்கம் அர்ப்பணிக்கப்படுகிறது.

- ச. செயப்பிரகாசம்
16.12.2003

"எந்த விஞ்ஞானம் (அறிவியல்) தன்னை நிறுவியவரை மறக்கத் தயங்குகிறதோ அது அழிந்து விடும்"

– ஆல்பிரடு நார்த் ஒயிட்கெட்

அத்தியாயம் - 1

# கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?

> "பொதுவான கேள்வி ஒன்றினை ஒருவர் கேட்கும் பொழுது அங்கு தத்துவம் தொடங்குகிறது, அங்ஙனம் அறிவியலுமாகும்."
>
> — *பெட்ரண்டு ரசல்*

> "ஒரு நாடு கேட்கும் கேள்வியானது அந்நாட்டின் அரசியல் வளர்ச்சியை அளக்கும் ஓர் அளவுகோலாகும். தனக்குத் தானே சரியான கேள்வியைக் கேட்டுக் கொள்ளாததே பல நேரங்களில் அந்நாட்டின் தோல்விக்கான காரணமாக இருக்கும்."
>
> — *ஜவஹர்லால் நேரு*

***கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?***
***சாத்தியமில்லையென்றால் ஏன் சாத்தியமில்லை?***
***சாத்தியமாயின், அதற்குக் காரணம் யாது?***

கொல்லாமைச் சமூகம் என்றால் என்ன? சிறியதோ, அல்லது பெரியதோ, உள்ளூரோ அல்லது உலகம் தழுவியதோ, அது எப்படியாயினும் ஆகுக. மானிடரைக் கொல்லாத, மானிடரைக் கொல்லப் போவதாக அச்சுறுத்தாத, மானிடரைக் கொல்ல வடிவமைக்கப்பட்ட ஆயுதங்கள் இல்லாத, அத்தகு ஆயுதங்களைப் பயன்படுத்தத் தேவையில்லாத, தான் நிலைத்திருக்க அல்லது மாற்றமடைய கொலை அல்லது கொலை அச்சுறுத்தலைச் சார்ந்திராத மானிடக் குழுமமே கொல்லாமைச் சமூகமாகும்.

மானிடரைக் கொல்வதும் கொல்லப் போவதாக அச்சுறுத்தலும் அங்கு இல்லை. கொல்லாமை என்பதை மிருகங்கள் மற்றும் பிற உயிரினங்களைக் கொல்லாமை என விரிவுபடுத்தலாம். ஆனால் மானிடரைக் கொல்லாமை என்பது மிகவும் குறைந்தபட்சத் தகுதியாகும். கொல்வது என்ற அச்சுறுத்தல் அங்கு இல்லை. கொல்லாமை என்பது அங்கு அச்சுறுத்தலால் உருவாவது இல்லை.

மானிட வரலாற்றைக் குறிக்கும் மியூசியங்களுக்கு (அருங்காட்சியகங்களுக்கு) வெளியே ஆயுதங்கள் அந்தக்

கொல்லாமைச் சமூகத்தில் இருக்காது; உயிரைப் போக்குவதற்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் அங்கு இல்லை. கொல்வதற்கு ஆயுதங்கள் தேவையில்லை தான் – கைகளும் கால்களுமே அதற்குப் போதும். ஆனால் இந்த ஆற்றலையும் பயன்படுத்தும் உத்தேசமோ அல்லது அதனை தொழில் நுட்ப ரீதியாக விரிவாக்கும் நோக்கமோ அச்சமூகத்தில் இருக்காது. கொல்லுவதைச் சமயங்கள் அங்கு புனிதப்படுத்துவதில்லை; கொல்லும்படியான ஆணைகளும் (கட்டளைகளும்) அங்கு இல்லை. கொல்வதை அரசாங்கங்கள் சட்டப்பூர்வமாக்குவ தில்லை. தேசப்பற்றுக்கு கொல்லுவது தேவையில்லை. கொல்லுமாறு புரட்சியாளர் விதிப்பது இல்லை. அறிஞர்கள் கொல்வதை நியாயப்படுத்துவது இல்லை; கலைஞர்கள் அதனைக் கொண்டாடுவதில்லை. பாமர மக்களின் ஞானம் அதனைப் பரப்புவதில்லை. மக்களின் பொது அறிவு அதனைப் போற்றுவதில்லை. கணினியுகச் சொற்களில் கூறுவதானால் அக்கொல்லாமைச் சமூகத்தில் கொல்வதற்குரிய "வன்பொருளையோ" (hardware) "மென்பொருளையோ" (software) சமூகம் தருவதில்லை.

கொலை நெறியை அச்சமூக அமைப்பு சார்ந்திருக்காது. அங்கு சமூக உறவுகளை நிலைப்படுத்துவது அல்லது மாற்றுவது என்பது கொலை அல்லது கொலை அச்சுறுத்தலைப் பொறுத்ததன்று. ஆதிக்க அல்லது பிறரை ஒதுக்கும் உறவுகள் எதற்கும் – எல்லைகள், அரசாங்க முறைகள், சொத்து, பால், இனம், சாதி, வர்க்கம், ஆன்மீக அல்லது சமயம் சாரா நம்பிக்கை முறைகள் ஆகியன எதற்கும் – ஆதரவாகவோ அல்லது சவாலாகவோ கொலை வழி தேவையன்று. இத்தகு சமூகம் வரம்புகளற்றது, மாறுபாடுகளற்றது, பூசல்களற்றது என்பதன்று; அதனது அமைப்பும் படிமுறைகளும் கொலை நெறியிலிருந்து வருவதன்று; கொலை நெறியைச் சார்ந்ததன்று. கொல்லுவதை நோக்கமாகக் கொண்ட – சட்டப்பூர்வ அல்லது சட்டவிரோத – பணி எதுவும் கொல்லாமைச் சமூகத்தில் இருக்காது.

கொல்லாமைச் சமூகத்தில் வாழ்வு மானிடரைக் கொல்லாமை, கொலை அச்சுறுத்தலின்மை ஆகிய பண்புகளைப் பெற்றிருக்கும்; கொலைக்கான தொழில் நுட்பமோ நியாயப் படுத்துதல்களோ அங்கு இருக்காது. கொலைச் சக்தியைக் காட்டி அச்சுறுத்தும் அல்லது அதனைப் பயன்படுத்தும் நிலையைச் சார்ந்து சமூக நிலை இருக்காது.

*கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?*

நமது தனிப்பட்ட அனுபவம், தொழில்ரீதியான பயிற்சி, பண்பாடு, சூழல் ஆகியவற்றால் நமது விடைகள் கட்டுப்படுத்தப்படும். இக்காரணிகளையே அரசியல் விஞ்ஞானிகள் பிறரின் நடத்தையை விளக்கப் பயன்படுத்துவர். இத்தகு தாக்கங்களிலிருந்து நாமே பாதிக்கப்படாது இல்லை.

அதுமுற்றிலுமாக நினைத்துப் பார்க்கக்கூட முடியாது!

கல்லூரிக் கல்வியின் பயன்படுத்துவதற்கான மேனாட்டு அரசியல் சிந்தனையின் அடிப்படை நூல்களை பரிசிலிப்பதற்காக 1979 கோடை காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடை பெற்ற மானிடப் படிப்புகளுக்கான தேசிய அறக்கட்டளையினர் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட ஏகோபித்த கருத்து இதுதான். அகிம்சை அரசியல், அகிம்சை அரசியல் அறிவியல் சாத்தியமா? என அடுத்து கேள்வி கேட்கப்பட்டது. இக்கருத்தரங்கில் அமெரிக்க அரசியல் அறிவியலின் நான்கு பெரும் பிரிவுகள் சார்பாக சமஎண்ணிக்கைப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அரசியல் கோட்பாடு, அமெரிக்க அரசாங்கம், ஒப்பியல் அரசியல், சர்வதேச உறவுகள் என்பனவே அந்தப் பிரிவுகளாகும். அங்கு கூடியிருந்த அறிஞர்களில் ஒருவர் தவிர ஏனையவர் ஆடவராவர்.

கருத்தரங்கின் இறுதியில் நடைபெற்ற சுருக்கமான கலந்துரையாடலில் மூன்று விரைவான வாதங்கள் இக்கேள்வியைத் திட்டவட்டமாக முடித்து வைத்தன. முதலாவதாக, மானிடர் இயல்பிலேயே கொலைகாரர்கள்; அவர்கள் கொல்வதில் ஈடுபடக் கூடிய சாத்தியமுள்ள மிகவும் ஆபத்தான சமூக விலங்குகள். இரண்டாவதாக, அரிதான வளங்கள் எப்பொழுதும் போட்டியை, பூசலை, கொலையை உண்டாக்கிவிடும். மூன்றாவதாக, கற்பழிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு எப்பொழுதும் இருப்பதால் தமக்கு உறவான பெண்களைக் காக்க ஆடவர் அத்தகையோரைக் கொல்வதற்குத் தயாராக இருக்க வேண்டியுள்ளது. ("யாராவது எனது குழந்தையின் உயிருக்கு அச்சுறுத்தலாய் இருந்தால், அவரை நான் கொல்வேன்" என்ற அமெரிக்க மகளிர் வாதம் கருத்தில் கொள்ளப்படாது போனது "அகிம்சையால் ஹிட்லரையும் பேரழிவையும் எங்ஙனம் நீங்கள் தடுப்பீர்கள்?" என்று கொல்லாமை அரசியலுக்கான சாத்தியக்கூற்றினை

வாயடைக்கச் செய்யும் வழக்கமான கேள்வியையும் கேட்கவில்லை) கொல்லாமை அரசியல் விஞ்ஞானமும் அதன் நடைமுறைப் பயன்பாடும் சிந்தித்துப் பார்க்க முடியாது என்பதற்கு மானிட இயல்பு, பொருளாதார பற்றாக்குறை, பாலியல் தாக்குதல் ஆகிய முக்கிய வாதங்களே போதுமானதாக உள்ளன.

மேலை நாட்டு அரசியல் சிந்தனையில் புதிதாகத் திறனாய்வு செய்யப்பட்ட அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படை செந்நூல்களைக் (Classics) குறிப்பிடுவது கூட இங்கு தேவையில்லை. இவையும், சீன நாட்டின் தண்டனைச் சட்டமுறை, இந்தியாவின் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் முதலானவைகளைப் போல ஒரு முடிவையே கொண்டுள்ளன. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ கொல்வதற்குத் தயாராக உள்ள நிலையே நல்ல சமூகத்தை ஆக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் தேவையாகும் எனக் கொள்ளப்படுகிறது.

பிளேட்டோ (Plato : கி.மு. 427–347) தமது *குடியரசு (Republic)* நூலில் தத்துவஞானியான ஆட்சியாளர்கள் (பாதுகாவலர்கள்) போரிடும் மக்கள் பிரிவிலிருந்து தேர்ந்தெடுத்து பயிற்றுவிக்கப்பட்டு, உற்பத்தியாளரையும் அடிமைகளையும் நிர்பந்திக்க (coercion) அல்லது இணக்குவிக்க (persuasion) வல்லமை உடையவராய் இருப்பர் எனக் கூறுகிறார். போர் என்பது அரசியல் வாழ்வின், உண்மையில் வாழ்வின் எல்லா நிலைகளிலும், அடிப்படையான உண்மையாகக் கருதப்பட வேண்டும். இவ்உண்மையைக் கருத்தில் கொண்டே விளைவுகளை ஏற்படுத்தும் ஒவ்வொரு முடிவும் மேற்கொள்ளப்பட வேண்டும். என பிளேட்டோவின் முக்கிய நூலாகிய *குடியரசு* கருதுவதாகவே ஒரு நடுநிலையான பார்வையாளர் முடிவு கட்டுவார் என லியோன் ஹரால்டு கிரெக் (Leon Harold Craig) குறிப்பிடுகிறார். "ஒருவராலோ, சிலராலோ அல்லது பலராலோ ஆளப்படும் அரசியலில் சொத்துடையவர் ஆயுதம் வைத்துக் கொள்கின்றனர்; அடிமைகளை கீழ்ப்படிதலில் வைத்திருக்கவும் எதிரிகள் நம்மை அடிமைகளாக்கி விடாது தடுக்கவும் படைகள் அவசியமாகும்" என அரிஸ்டாட்டில் (Aristotle : கி.மு. 384–கி.மு 322) *அரசியல் (Politics)* என்னும் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

பெரிதும் புகழப்படும் மக்கியவெல்லி (Machiavelli : 1469–1527) தமது *பிரின்ஸ் (The Prince)* என்னும் நூலில்

தமது அதிகாரத்தைக் காக்கவும், தமது நாடுகளின் புகழ் மற்றும் கௌரவத்தைப் பெருக்கவும் ஆட்சியாளர்கள் கொல்வதை நியாயப்படுத்துகின்றனர். ஒரு நரியின் இராஜதந்திரத்துடன் வாழ்வது மிகவும் நல்லது; ஆனால் தேவைப்படும் பொழுது ஒரு சிங்கத்தின் வலிமையான தாக்கும் திறனிலிருந்து ஆட்சியாளர் பின்வாங்கக் கூடாது. குடியரசின் அதிகாரத்தை வலுப்படுத்த குடிமக்கள் படையினை அவர் கோருகிறார்.

சமூக ஒழுங்கைக் காக்கவும் போரில் வெற்றி பெறவும் அரசாங்கங்கள் கொல்வதை தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes : 1588–1679) தமது *லெவிதன் (Leviathan)* என்னும் நூலில் நியாயப்படுத்துகிறார். மானிடர்கள் கொலைகாரர்களாதலால் ஒழுங்குபடுத்தப்படாத இயற்கையான வாழ்வு கொலை மிகும் குழப்பத்தில் ஆழ்ந்து விடும். ஆனால் மானிடர்கள் உயிர் வாழ முயலுபவர்கள்; எனவே அவர்களின் பாதுகாப்புக்காக கொல்வதற்கு அதிகாரமுள்ள ஒரு மைய அமைப்புக்கு கீழ்ப்படிய அவர்கள் சம்மதிக்க வேண்டும்; தற்காப்புக்காக மாற்ற முடியாத கொல்லும் உரிமையை அவர்கள் தங்களிடம் வைத்துக் கொள்கின்றனர். ஆயுதமேந்திய புரட்சியை நியாயப்படுத்துவது தவிர அனைத்தையும் ஹாப்ஸ் ஏற்கிறார்.

*ஜான் லாக்* (John Locke : 1632–1704) தமது *அரசாங்கம் பற்றிய இரு கோட்பாடுகள் (Two Treatises of Government)* என்னும் நூலில் இதனைச் செய்கிறார். பிளேட்டோ, அரிஸ்டாட்டில், மக்கியவெல்லி, ஹாப்ஸ் ஆகியோருடன்அரசியல் ஆட்சியானது கொல்லத் தயாராக இருக்க வேண்டும் என்பதை லாக்கும் ஏற்கிறார். இதற்கும் மேலாக லாக் புரட்சி வன்முறையை (அழிப்பினை) நியாயப் படுத்துகிறார். ஆளுமை உரிமை உடைய ஆட்சியானது அடக்குமுறை ஆட்சியாகி, உடமை, உரிமை மற்றும் வாழ்வுக்கான மக்களின் இயல்பான உரிமைகளை அது மீறும் பொழுது, அடக்கு முறைக்கு உள்ளாகும் மக்களுக்கு அந்தகு ஆட்சியை அழிக்கும் கடமையும் உரிமையும் உண்டு. ஒரு கொலைகாரரை இயற்கையாகவே கொன்றுவிடலாம் என்பது போலவே, கொடுங்கோல் ஆட்சியாளரைச் சிவில் சமூகம் அழித்து விடலாம்.

ஆளுபவர்–ஆளப்படுபவர் ஆகிய இருதரப்புக்குமே கொல்லும் உரிமையை நியாயப்படுத்தும் ஹாப்ஸ்–லாக்கின் நிலையை காரல் மார்க்ஸ் (Karl Marx 1818-1883) மற்றும்

பிரடரிக் ஏங்கல்ஸ் (Friedrich Engels 1820-1895) தமது *கம்யூனிசப் பிரகடனம் (The Communist Manifesto)* என்னும் நூலில் பொருளாதார வர்க்கப் போராக விரிவுபடுத்துகின்றனர். உடமை வர்க்கங்கள் அழிப்பு சக்தியால் தமது நலன்களைப் பாதுகாக்கவும் விரிவாக்கவும் முற்படும். ஆனால் பொருள் மற்றும் சமூக உறவுகள் பக்குவப்படும் பொழுது சுரண்டப்பட்ட மக்கள், சமூகத்தின் பொருளாதார, அரசியல் கட்டமைப்பை மாற்றிட, வன்முறைப் புரட்சியில் இறங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது. நவீன தேர்தல் முறை ஜனநாயகத்தில் அமைதியான மாற்றம் சாத்தியமாகலாம். ஒருவேளை எதிர்காலத்தில் பொருளாதாரச் சுரண்டல் முடிவடையும் பொழுது வர்க்க அடிப்படையிலான அழிப்பு சக்தி உடைய நாடு மறையும். ஆனால் அத்தகு மாற்றத்திற்கு இடைப்பட்ட காலத்தில் பொருளாதாரக் காரணிகள் கொல்வதற்கான உந்துதலாக இருக்கும்.

லாக், மார்க்ஸ் ஆகியோருக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ரூசோ (Rousseau 1712–1778) ஹாப்ஸை தனது *சமூக ஒப்பந்தம்* என்னும் நூலில் எதிரொலிக்கிறார். நாடுகளின் அரசியல் அமைப்புக்கான அடிப்படையாக *சமூக ஒப்பந்தம் (The Social Contract)* என்னும் கோட்பாட்டை அவர் வழங்குகிறார். நாட்டின் இறையாண்மையையும் பொதுமக்களும், குடிமக்களேயாவர். "*பொது விருப்பத்தின்*" (General will) அடிப்படையில் சட்டத்தை உருவாக்கும் அமல்படுத்தும் ஆளும் அமைப்புக்குத் தாங்கள் கீழ்படிய அவர்கள் பற்றுறுதி கொள்கிறார்கள். இத்தகு ஒப்பந்தத்தின் கீழ் நாடானது போர், வெல்வது, துரோகிகளைத் தூக்கிலிடுவது, குற்றவாளிகளைக் கொல்வது ஆகியவற்றுக்கான தனது உரிமையைக் கோரும். ஆளும் அமைப்பானது நாட்டுக்காகக் குடிமக்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்யும்படி கட்டளையிடலாம்.

> *"ஆளும் அமைப்பானது குடிமக்களிடம் நீங்கள் சாக வேண்டியது நாட்டுக்கு அவசியம் என்றால், அவர்கள் இறந்தாக வேண்டும்... வாழ்வானது இயற்கையின் அருட்பிரசாதம் மட்டுமன்று, நாட்டின் நிபந்தனைக்கு உட்பட்ட பரிசும் ஆகும்."*
>
> – "*சமூக ஒப்பந்தம்*" (The Social Contract),
> *இரண்டாம் புத்தகம், ஐந்தாம் அத்தியாயம்.*

முடிவாக ரூசோவின் ஜனநாயக சமூக ஒப்பந்தமானது அழிப்பு ஆற்றலுடனான ஓர் ஒப்பந்தமாகும்.

இருபதாம் நூற்றாண்டில் செல்வாக்கான ஜெர்மானிய அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் கோட்பாட்டாளரான மாக்ஸ் வீபர் (Max Weber 1864–1920) தமது *Politics as a Vocation* என்னும் நூலில் [இது தொடக்கத்தில் மியூனிச் பல்கலைக்கழகத்தில் (1918) அவர் ஆற்றிய சொற்பொழிவாகும்.] அரசியல் என்பது "கொல்லாமைத் தொழிலாகும்" என்பதைத் திட்ட வட்டமாக நிராகரிக்கிறார். அரசியலில் திட்டவட்டமான வழிமுறை வன்முறையே என்கிறார் மாக்ஸ் வீபர். அதிகாரத்திற்கான வன்முறைப் போராட்டங்கள் வாயிலாகவே வரலாற்று ரீதியில் அனைத்து முக்கிய அரசியல் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் நேரடி வன்முறையை சட்டப் பூர்வமாகப் (வெற்றியுடன்) பயன்படுத்தும் ஏகபோக உரிமையைப் பெற்றுள்ள ஒரு மானிடக் குழுமமே நாடு என மாக்ஸ் வீபர் வரைவிலக்கணம் தருகிறார். எனவே தனது மற்றும் பிறரின் ஆத்மாவின் விடுதலையைத் தேடுபவர்கள் அரசியல் என்ற சாளரம் வழியாகத் தேடக் கூடாது; ஏனெனில் அரசியலின் பல்வேறு மாறுபட்ட பணிகள் வன்முறை வழியாகவே நிகழ முடியும்.

எனவே மாக்ஸ் வீபரின் மரபிலும் அவருக்கு முந்திய தத்துவ முன்னோடிகளிலும் தேர்ச்சி பெற்ற பேராசிரியர்களுக்கு கொல்லாமை அரசியலும் கொல்லாமை அரசியல் விஞ்ஞானமும் "சிந்தித்துக் கூட பார்க்க முடியாத" ஒன்றாக இருப்பது புரிந்து கொள்ளத்தக்கதேயாகும். தான் வாழ்நாள் முழுவதும் படித்து, ஆராய்ந்து, தேர்ச்சி பெற்று வந்த அரசியல் விஞ்ஞானத்தைப் பற்றி ஒரு மூத்த அமெரிக்க விஞ்ஞானியிடம் 1950களில் ஒரு இளையவர் "அரசியல்" என்பதன் வரைவிலக்கணத்தைக் கேட்டார். தமது புகைக் குழலை ஊதியவாறு அவர், "சாவைக் கையாளும் நாட்டின் ஆற்றலை நான் அரசியலில் ஆராய்கிறேன்" என்றார்.

அழிப்புத் தத்துவ மரபானது வன்முறையை ஏற்கும் சமயத்தால் ஆசீர்வதிக்கப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல், பண்பாட்டு வரலாறு முழுவதும் பரவி எதிரொலிக்க, "கொல்லாமைச் சமுதாயம் சாத்தியமற்றது" என்ற குடிமக்கள்—அறிஞர் நம்பிக்கைகளை வலுப்படுத்துகிறது. அமெரிக்க புரட்சியைத் தூண்டிய லெக்ஸிங்டன் குண்டு வெடிப்பு, சுதந்திர

சாசனத்தின் புரட்சி அறிவிப்பை நியாயப்படுத்தும் லாக்கியன் சமாதானங்கள், "சுதந்திரமாக வாழு அல்லது செத்து மடி" என்ற நியுஹேம்ஸைரின் பணியாத குரல் ஆகியவற்றில் அவை கேட்கின்றன. கான்பெடரேட் கிளர்ச்சியை யூனியன் வெற்றி கொள்வதைப் பரவசப்படுத்தும் "குடியரசின் போர்க்கள பாடலிலும்," "டிக்ஸியின்" தொடரும் எதிர்ப்பு மறுப்பிலும், நிலத்திலும் கடலிலும் தூரத்துப் போர்களைக் கொண்டாடும் "கடல் வீரர் பாடல்களிலும்" இவை எதிரொலிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி "படைகளின் தலைவராகப்" பொறுப்பேற்கும் விழாவில் தரப்படும் 21 துப்பாக்கிக் குண்டு மரியாதையில் நாட்டின் கடந்த கால வன்முறையும் இன்றைய படைவலிமையும் கேட்கிறது. கொடி, தேசிய கீதம், ஆயுதமேந்திய அணிவகுப்பு முதலியன விழாக்கால கோலமாக மீண்டும் மீண்டும் ஒன்று சேர்க்கின்றன; தியாகம், சிதைத்–தொழித்தல் ஆகிய உணர்வுகளை அவை தூண்டுகின்றன; "கடவுள் அமெரிக்காவை ஆசிர்வதிக்கட்டும்" என்ற ஜனாதிபதியின் வாசகங்களால் அவை புனிதப்படுத்தப்படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தோற்றம், நாட்டின் விஸ்தரிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக வல்லரசாக தன்னை உயர்த்திக் காண்பிப்பது ஆகிய அனைத்துக்கும் கொல்லுதல் பங்களிப்பு செய்துள்ளது. இறந்த மற்றும் காயமடைந்த, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு, சிவிலியன் மற்றும் இராணுவத்தினரின் எண்ணிக்கை கூட்டிக் கணிக்கப்படாமல் உள்ளது. ஒருவேளை அது கணக்கிடப்பட முடியாததாக இருக்கலாம். ஆனால் அமெரிக்க நாட்டின் அரசாங்க வன்முறை அழிப்பு நிலை என்ற உண்மையை மறுக்க முடியாது. பிற நாடுகளின் அரசியல் விஞ்ஞானிகள் தமது நாடுகளின் அரசியல் அடையாளத்துக்கு கொல்லுதல் எங்ஙனம் பங்களிப்பு செய்துள்ளது என்பதை ஆராய வேண்டும்.

முடியாட்சி முறை காலனி ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திய குடியரசுவாதிகளின் புரட்சியுடன், அடிமைகளை கட்டுக்குள் வைத்தவாறு புதிய தேசம் தொடங்கியது. சுதந்திரக் கொடியின் கீழே அமெரிக்கக் கண்டத்தில் தனது ஆதிக்கத்தை பூர்வீகக் குடிமக்களை இரத்தம் சிந்திய வன்முறையால் அழித்தும், வடக்கும், தெற்கும் அயலவர்களை வலிமையால் வென்றும், சண்டையிடுவதை விட வணிகத்தை விரும்பியவர்களிடமிருந்து பகுதிகளைப் பிரித்து எடுத்தும் அல்லது வாங்கியும் விரிவாக்கினார். உள்நாட்டுச் சண்டையில்

74,542 கான்பெரேட் படையினரைக் கொன்றும் யூனியனைச் சேர்ந்த 1,40,414 பேர்களைத் தியாகம் செய்தும் நாட்டின் ஒருமைப்பாட்டைத் திணித்தது.

ஹவாய் (1898) பியூர்டோ ரிகோ (Puerto Rico), குவாம் (Guam) மற்றும் பிலிப்பைன்ஸ் (1898), கிழக்கு சமோ (Samoa) (1899), பசிபிக் தீவுப் பகுதிகள் (1945) ஆகியவற்றின் மீது கடல் கடந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதிக்கம் பெற்றது. காலனி ஆட்சிக்கு எதிரான கலகத்தை (1898–1902) பிலிப்பைன்ஸில் அமெரிக்கா அடக்கியது. மேலும் அங்கு ஒருமைப்பாட்டை எதிர்த்த மோரோ (Moros) முஸ்லிம்களை அமெரிக்கா கொன்று குவித்தது. தனித்திருக்க விரும்பிய ஜப்பானை கடற்படை அச்சுறுத்தலின் வாயிலாக அமெரிக்கா வெளிநாட்டு வணிகத்திற்குத் (1853–54) திறந்து விட்டது.

போர்கள் மற்றும் இடையீடுகள் மூலம் எழுச்சி பெற்று வந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனது நலன்களை வெளிப் படுத்தவும் காக்கவும் முற்பட்டது. பிரிட்டன் (1812–14), மெக்சிகோ (1846–48), ஸ்பெயின் (1898), ஜெர்மனி, ஆஸ்திரியா–ஹங்கேரி, துருக்கி மற்றும் பல்கேரியா (1916–1918), ஜப்பான், ஜெர்மனி மற்றும் இத்தாலி (1941–45) வடகொரியா மற்றும் சீனா (1950–53), வடக்கு வியட்நாம் (1961–1975), ஈராக் (1991), ஆப்கானிஸ்தான் (2002) ஈராக் (2003) ஆகிய நாடுகளுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரிட்டது. அமெரிக்காவின் இராணுவத் தலையீட்டில் பிகிங் (1900), பனாமா (1903), ரஷியா (1918–19) நிகாருகுவா(1912–1925), ஹைடி (Haiti) (1915–1934) லெபனான் (1958), டொமினிக்கன் குடியரசு (1965–66) சோமாலியா (1992) ஆகியன அடங்கும். படையெடுப்பு மூலம் அமெரிக்கா கிரெனடா (1983) மற்றும் பனாமா (1989) அரசாங்கங்களைத் தூக்கி எறிந்தது. அமெரிக்க படையெடுப்பு அச்சுறுத்தலின் மூலம் ஹைடி அரசாங்கம் (1992) கவிழ்க்கப் பட்டது. படையெடுப்பு அல்லது தாக்குதல் மூலம் கம்போடியா (1970) மற்றும் லாவோஸில் (1971) தடை ஏற்படுத்த அமெரிக்கா முற்பட்டது. லிபியா (1986), ஆப்கானிஸ்தான் (1998) சூடான் (1998), போஸ்னியா (1995) மற்றும் யூகோஸ்லேவியா (1999) ஆகிய தாக்குதல்களிலும் அமெரிக்கா ஈடுபட்டது.

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய ஐம்பது ஆண்டுகளில் முதலாளித்துவ எதிர்ப்பு நாடுகள், புரட்சியாளர்கள் மற்றும் பிற எதிரிகளை உலகம் முழுவதும்

அமெரிக்கா தனது பேரழிப்பு ஆற்றலைப் பயன்படுத்தி வளைத்தது. அமெரிக்க விடுதலைப் போரின் பொழுது ஓராயிரம் என்று இருந்த அமெரிக்கப்படை 1990களில் 15இலட்சம் படையினரையும் 23,000 பெண்டகன் திட்டமிடுபவர்களையும், மிகவும் நவீனமான அறிவியல் அறிஞர்களின் உயர் குழுவையும், உலகின் மிகவும் முன்னேறிய ஆயுதத்தொழிலையும் கொண்டதாக ஆகிவிட்டது. இவையெல்லாம் அமெரிக்க காங்கிரஸாலும் ஜனாதிபதியாலும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர கால் டிரில்லயன் டாலர் வரிப்பணத்திலிருந்து சாத்தியமாகியுள்ளது. 1940–96க்கிடையில் அமெரிக்காவின் அணு ஆயுத திட்டத்திற்கு மட்டும் 5.821 டிரில்லியன் டாலர்கள் செலவாகியுள்ளது என மிதமான மதிப்பீடு கூறுகிறது. உலகில் வேறெந்த நாட்டையும் விட அமெரிக்கா அதிகமான அளவிற்கு வெளிநாடுகளில் தளங்களையும், படைகளையும் வைத்துள்ளது; அதிகளவு இராணுவ உடன்பாடுகளைக் கொண்டுள்ளது; அந்நியப் படைகளுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் வழங்கி வருகிறது (அதனது எதிரிகளைக் கொல்பவர்கள், அதனது நண்பர்களையும் சில வேளைகளில் கொல்பவர்கள், மேலும் அதனது மக்களையும் கூடக் கொல்பவர்கள் இப்படையினராவர்). உலகின் போட்டியான, மிகவும் இலாபகரமான ஆயுதச் சந்தையில் அமெரிக்கா தான் மிகவும் முன்னணியான விற்பனையாளராக உள்ளது. மானிட அழிப்புத் திறன் வகுத்துள்ள மிகவும் பேரழிவு தரும் ஆயுதங்களால் பூமியின் நிலம், கடல், வானம் ஆகிய அனைத்திலும் கொல்லும் ஆற்றலை அமெரிக்கா வளர்த்துள்ளது.

போர்க்களத்தில் 1776இல் பிறந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1990களில் தன்னை "உலகின் படைவலி மிக்க ஒரே வல்லரசு என்றும் உலகின் முன்னணிப் பொருளாதாரம்" என்றும் பறைசாற்றிக் கொண்டது. [1993 பிப்ரவரி 13ஆம் நாள் அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் ஜே. கிளிண்டன் ஆற்றிய தேசியப் (State of Union) பேருரையில்]... அமெரிக்க படைத் தலைமை தளபதி ஜெனரல் ஜான் சலிகஸ்க்விலி (John Shalikashvili) "அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகம் தழுவிய நலன்களைக் கொண்டுள்ள ஓர் உலக நாடாகி விட்டது" எனக் குறிப்பிடுகிறார். ஜப்பான் மீது அணுகுண்டு வீசி வென்றதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஹவாயில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் படையினரிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி "நீங்கள் தான் என்றும் உலகின் மிகச்

சிறப்பான பயிற்சி பெற்ற, சண்டையிடும் சக்தியாக இருப்பீர்கள்'' என உறுதியாகக் குறிப்பிட்டார். "நமது காலத்தின் இருளை வெற்றி கொள்ளும், பூமியில் மிகவும் வலுவான, நாடாக நாம் இருக்க வேண்டும்'' என அவர் மேலும் அறைகூவினார். "பூமியில் நடைபோடும் எதனையும் அடையாளம் கண்டு, உறுதிப்படுத்தி, கையகப்படுத்தி, இலக்காக்குவது நமது நோக்கமாகும்'' என விமானப்படை தலைமை தளபதி ரொனால்டு பொகிகல்மான் (Ronald Fogelman) கூறுவது அந்த உறுதிப்பாட்டையே பிரதிபலிக்கும். அவர் மேலும் சொன்னார். "அதை நாம் இன்று செய்ய முடியும்; ஆனால் தான் அதுவாக நிகழும் பொழுதன்று.''

இருபதாம் நூற்றாண்டு முடிவடையும் வேளையில் அமெரிக்கத் தலைவர்கள் அதனை "அமெரிக்க நூற்றாண்டு'' என அழைக்க முற்பட்டார்கள். மேலும் இருபத்தோராம் நூற்றாண்டை "இரண்டாவது அமெரிக்க நூற்றாண்டு'' என ஆக்க தமது உறுதியை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். வன்முறையின் நற்பயன்களைப் பற்றிய இத்தகு எக்களிப்பான மரபுக்கிடையில் கொல்லாமையான அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சிந்திப்பது சாத்தியமில்லை. கொல்வதும், கொல்வதாக அச்சுறுத்துவதும் தேசிய சுதந்திரத்தை உருவாக்கியது; அடிமை முறையை அழித்தது; நாஸிசம் மற்றும் பாஸிசத்தை தோற்கடித்தது; யூதர் பேரழிவை முடிவுக்குக் கொண்டு வந்தது; அணுகுண்டு வீசப்பட்ட ஜப்பானில் உயிர்களைக் காத்தது; உலகளாவிய கம்யூனிச விஸ்தரிப்பைத் தடுத்தது; சோவியத் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியை சாதித்தது; இப்பொழுது இருபத்தோராம் நூற்றாண்டில் ஜனநாயக சுதந்திரம் மற்றும் முதலாளித்துவ பொருளாதாரத்தை உலகம் முழுவதும் பரவச் செய்வதற்கான தலையாய சக்தி என்ற பெயரைப் பெற்றுத் தந்துள்ளது.

ஆனால் அமெரிக்காவில் அரசியல் விஞ்ஞானத்தைப் படிக்கும் மேல்நிலைப் பேராசிரியர் முதல் தொடக்க நிலை மாணவர்கள் வரை யாருக்கும் கொல்லாமைச் சமுதாயம் சாத்தியமில்லை என்பதை ஏற்க வைக்கத் தத்துவமோ அரசியல் மரபோ தேவையில்லை. ஒவ்வொரு தினமும் அன்றாட வாழ்வில் நடைபெறும் கொலைகள் அதனை உறுதிப் படுத்துகின்றன.

ஒவ்வொரு வருடமும் **15,000** அமெரிக்கர்கள் பிற அமெரிக்கர்களால் கொல்லப்படுகின்றனர். **(1999**இல் **15,533** அமெரிக்கர்கள் கொலையுண்டனர்; இது **1,00,000**க்கு **5.7**

ஆகும். 1900இல் இது 1.2ஆக இருந்து இன்று இங்ஙனம் கூடியுள்ளது). காவல் துறையாலும் தனிப்பட்டவர்களாலும் நியாயப்படுத்தப்படும் கொலைகள் இதில் அடங்காது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் 7,50,000 அமெரிக்கர்கள் கொலையாகியுள்ளனர். இது அமெரிக்காவின் அனைத்துத் தேசியப் போர்களிலும் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கையை விட (6,50,053) அதிகமாகும். மரணத்தை விளைவிக்கக் கூடிய அல்லது கடுமையாகக் காயம் ஏற்படுத்தவல்ல ஆயுதங்களைக் கொண்டு நடக்கும் வெறித்தனமான தாக்குதல்களை இதனுடன் சேர்க்க வேண்டும். (1999இல் 9, 16, 383 பேர் : இது 1,00,000 இல் 336.1 என வருகிறது) அமெரிக்க சிவில் சமூகத்தில் கொலையைவிட உயிரைப் போக்குவதில் தற்கொலை முன்னிலை வகிக்கிறது. (அமெரிக்காவில் 1995இல் 31,284 பேர் தற்கொலை புரிந்தனர். இது 1,00,000இல் 11.9 ஆகும்) வெற்றி பெறாத தற்கொலை முயற்சிகள் இதைப்போல 25 மடங்கு அதிகமாகும். ஒவ்வொராண்டும் சராசரி 10,00,000 கருக்கலைப்புகள் அமெரிக்காவில் நிகழ்கின்றன.

அடித்து, தலையை வெட்டி, குண்டு வீசி, நெருப்பிலிட்டு, மூழ்கடித்து, தூக்கிலிட்டு, தள்ளிவிட்டு, நஞ்சிட்டு, குத்தி, மூச்சுத் திணறடித்து, கழுத்தை நெறித்து, பெரும்பாலும் துப்பாக்கியால் சுட்டு (1999 இல் அமெரிக்காவில் நடைபெற்ற கொலைகளில் 64.5 சதவிகிதம் இங்ஙனம் நடந்தது) அமெரிக்கர்கள் கொல்கிறார்கள். முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை, தற்செயலாக நிகழ்ந்தவை, தொழில் ரீதியானவை, விபத்தாக நடந்தவை எனக் கொலைகளை வகைப்படுத்தலாம். வாழ்க்கைத் துணைவியை, குழந்தையை மற்றும் முதியவரைத் தவறாகப் பயன்படுத்துதல், விவாதங்கள், குடி மயக்கம், போதைப் பொருள் விவகாரம், கோஷ்டிச் சண்டை, சூதாட்டம், பொறாமை, ஆள்கடத்தல், விபச்சாரம், கற்பழிப்பு, வழிப்பறி, சட்டவிரோதச் செயல், கடவுள் அல்லது சாத்தானின் கட்டளைகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு கொலைகள் அமெரிக்காவில் நிகழ்கின்றன. எந்த இடமும் உண்மையில் பாதுகாப்பானதன்று; வீடுகள், பள்ளிகள், தெருக்கள், பெருவழிச்சாலைகள், வேலை இடங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள், சிறைச்சாலைகள், பூங்காக்கள், நகரங்கள், பெருநகரங்கள், திறந்த வெளிகள், நாட்டின் தலைநகரம் ஆகிய எதுவுமே பாதுகாப்பான இடமன்று. தொடர்பற்று அங்கொன்றும் இங்கொன்றுமாகவோ கொல்லப்படுவது நிகழ்கிறது. ஆடவர்

பெரிதும் கொல்லப்படுகின்றனர் (1999இல் கொல்லப் பட்டவர்களில் 76 சதவிகிதம் ஆடவர்). அமெரிக்காவில் வாழ்க்கைத் துணைவர்கள் கொல்லப்பட்டதில் 1976–85களில் மனைவியரே (9,480) கணவன்மார்களைவிட (7,115) அதிகமாகக் கொல்லப் பட்டுள்ளனர். தனிநபர்கள், தம்பதிகள், கும்பல்கள், பிரிவுகள், சிண்டிகேட்டுகள், பயங்கரவாதிகள், அரசாங்கத்தின் அமல்படுத்தும் பிரிவினர் எனக் கொலையாளர்கள் பல வகைப் படுவர். கொலையாளிகளில் ஆடவரே பெரிதும் எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளனர். (1999இல் 9,140 ஆண் கொலையாளிகளும் 1,046 பெண் கொலையாளிகளும் இருந்தனர்) கொலையாளிகள் வயதால் இளையோராகி வரும் போக்கும் உள்ளது. வெள்ளையர்களில் 240 பேர்களில் ஒருவரும் கறுப்பர்களில் 47 பேர்களில் ஒருவரும் கொலைக்கு இலக்காகும் வாய்ப்பு அவர்களது வாழ்நாளில் உள்ளது. "சுதந்திரமான நாடு என்பதிலிருந்து அச்சம் மிகுந்த நாடாக வன்முறைக் குற்றங்களால் அமெரிக்கா மாறி வருகிறது" என்று குடியரசுக் கட்சி செனட் பெரும்பான்மைத் தலைவர் டிரண்ட் லாட் (Trent Lott) ஜனாதிபதி பில் கிளின்டனின் 1998 ஜனவரி 27ஆம் நாள் தேசிய உரைக்குப் பதில் தருகையில் கூறினார்.

அமெரிக்காவின் கொலை வெறிப் போக்கிற்கு ஊடகங்கள் தினமும் சான்று பகர்கின்றன. தனது தாயின் தலையை ஒரு மகள் சீவி, ஒரு காவல் நிலையத்திற்குக் காரில் சென்று, அதன் பக்கச் சுவர் அருகே அவ் உடலை வீசினாள். ஒரு தாய் தனது இரு மகள்களை மூழ்கடிக்கிறாள்; இரு மகன்கள் தமது பெற்றோர்களைக் கொல்கின்றனர். ஒரு தொடர் கொலைகாரன் விபச்சாரிகளை இரையாக்குகிறான்; ஓரினச் சேர்க்கையாளரான அவன் இளைய அவர்களை மயக்கி, வெட்டி, குளிர்பதனப் பெட்டியில் வைத்து உண்கிறான். பதுங்கிக் கொல்லும் கொலைகாரன் ஒருவன் ஒரு பல்கலைக்கழகத்தில் 15 பேர்களைக் கொல்லுகிறான். ஓர் ஊரக நடுநிலைப்பள்ளியில் துப்பாக்கியால் இரு பையன்கள் தமது வகுப்புச் சிறுமிகள் நால்வரையும் ஆசிரியரையும் கொல்கின்றனர்; மேலும் இன்னொரு ஆசிரியரையும் வகுப்பு மாணவர் ஒன்பது பேர்களையும் காயப்படுத்து கின்றனர். கனரக ஆயுதங்கள் ஏந்திய இரண்டு பையன்கள் கொலராடா மாநில லிட்டில்டன்னில் உள்ள கொலம்பைன் உயர்நிலைப் பள்ளியில் சகமாணவர் 13 பேர்களைக் கொன்று, 28 பேர்களைக் காயப்படுத்தி, அவர்களிருவரும் தற்கொலை

புரிந்து கொல்கின்றனர். 1996க்கும் 1999க்கும் இடைப்பட்ட காலத்தில் 11க்கும் 18க்கும் உட்பட்ட வயது பள்ளி மாணவர்கள் 27 சக மாணவர்களையும் இரு ஆசிரியர்களையும் மூன்று பெற்றோர்களையும் கொன்றதுடன் வேறு 65 பேர்களைக் காயப்படுத்தினர். ஒருவன் தனது தானியங்கி ஆயுதத்தால் ஒரு நகரப் பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்த அப்பள்ளிக் குழந்தைகளை வதைத்துக் கொன்றான். வியட்நாம் போரில் ஈடுபட்டு ஓய்வு பெற்றவர், இயந்திரத் துப்பாக்கிகளை பயன்படுத்தும் வல்லுநர், ஒரு துரித உணவகம் ஒன்றில் இருபது பேர்களைக் கொன்று 13 பேர்களைக் காயப்படுத்தினார். இராணுவ உடை அணிந்து களைத்துப் போன ஒருவர் தேவாலயம் ஒன்றில் வழிபாட்டில் இருந்தவர்களைப் படுகொலை செய்து கூறினார் "நான் முன்னர் ஆயிரம் பேர்களைக் கொன்றேன்; இன்னும் ஆயிரம் பேர்களைக் கொல்வேன்."

"சகமானிடரை இரையாக்குபவர் மானிடர்" என்ற ஹாப்ஸின் அச்சந்தரும்கோட்பாடு, வீபரின் நாடு கோட்பாட்டில் லாக்கின் நம்பிக்கையின்மை ஆகியவற்றால் தடுமாற்றமுற்று ஆயுதமேந்திய அமெரிக்க மக்கள் சுமார் இருபது கோடி ஆயுதங்களை உடமை கொண்டுள்ளனர். இதில் ஏழு கோடி துப்பாக்கிகள், ஆறரைக் கோடி கைத்துப்பாக்கிகள், நான்கு கோடியே எழுபது இலட்சம் சிறிய துப்பாக்கிகள், எண்பது இலட்சம் நீண்ட துப்பாக்கிகள் ஆகியவை அடங்கும். துப்பாக்கி உற்பத்தி, விற்பனை, இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவற்றை உள்ளடக்கும் துப்பாக்கி வணிகம் ஒரு பெரும் வணிகமாகும். அதில் சட்டப்பூர்வமான மற்றும் சட்டப் பூர்வமற்ற பல்லாயிரம் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர். சுடும் ஆயுதங்கள் நான்கு கோடியே நாற்பது இலட்சம் அமெரிக்கர்களால் சொந்தம் கொள்ளப்பட்டுள்ளது. மூன்றில் ஓர் அமெரிக்க வீட்டில் இவ்ஆயுதங்கள் உள்ளன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தமது வீட்டில் ஆயுதங்கள் உள்ள இடம் தெரியாது என நினைத்தாலும் பெரும்பாலான குழந்தைகட்கு அந்த ஆயுதங்களை எங்ஙனம் கண்டுபிடிப்பது என்பது தெரியும். குழந்தை பாதுகாப்பு நிதியத்தின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் பள்ளிக்குழந்தைகள் தினமும் துப்பாக்கி மற்றும் இதர ஆயுதங்களுடன் பள்ளி செல்வதாக ஹில்லாரி கிளிண்டன் கூறுகிறார். "சுதந்திர நாட்டின் பாதுகாப்பிற்கு நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட ஆயுதமேந்திய அணி தேவைப்படுகின்றது;

ஆயுதம் வைத்திருக்கவும் ஏற்கவும் மக்களுக்குரிய உரிமையில் தலையிடக் கூடாது" என அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு 1791இல் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது திருத்தம் உத்தரவாதம் தருகிறது. தற்காப்பு, வேட்டையாடல், பொழுதுபோக்கு மற்றும் அரசாங்க கொடுங் கோலாட்சியை எதிர்த்தல் ஆகியவற்றுக்கு துப்பாக்கியை வைத்திருத்தல் மாற்றப்பட முடியாத அரசியல் சாசன உரிமை எனப் பேசப்படுகிறது.

உள்நாட்டு கொலை அச்சுறுத்தல் அபாயங்கள் அமெரிக்காவின் காவல் படையை வலுவாக்கியுள்ளது. மாநில காவல்துறையினரும் பெடரல், அதிகாரிகளும் இதில் அடங்குவர். 1999இல் மொத்தம் 6,41,208 காவல்துறையினர் இருந்தனர். இது 1,00,000 பேருக்கு 250 என்றாகிறது. இவர்களில் நாற்பத்தி இரண்டு பேர்கள் 1999இல் கொல்லப் பட்டனர். தேவைப்படும் பொழுது காவல்துறை அமெரிக்க பெடரல் படை மற்றும் தேசிய காவலர் அணியின் உதவியைப் பெறலாம். இத்துடன் பல்வேறு குற்றம் நிரூபிக்கப்பட்ட 18 இலட்சம் சிறைக் கைதிகளை சிறைக் காவலர்கள் காத்து நிற்கின்றனர். இதில் மரண தண்டனையை எதிர்பார்த்திருக்கும் 3527 கைதிகளும் 1999இல் இருந்தனர். பெடரல் குற்றங்களுக்காகவும் மற்றும் ஐம்பது மாநிலங்களில் 38லும் மரண தண்டனை உள்ளது. 1977க்கும் 99க்கும் இடைப்பட்ட காலத்தில் 598பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. குற்றங்கள் மிகுதியாக, கண்டுபிடிக்க முடியாத வன்முறைகள் அதிகரிக்க மரண தண்டனையை விரிவாக்கவும், மீண்டும் விதிக்கவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன; அதிகக் காவலர்கள் வீதிகளில் வேண்டும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச, நீண்ட தண்டனை வழங்கப்பட வேண்டும் மற்றும் புதிய சிறைகள் கட்டப்பட வேண்டும் என்ற பதற்றமான கூக்குரல்கள் எழுந்தள்ளன.

அமெரிக்காவில் வன்முறை சமூகப்பூர்வமாக கற்கப்பட்டு, பண்பாட்டு ரீதியாக வலுவாக உறுதிப்படுத்தப்படுகிறது. அதிகாரப் பூர்வமாகவோ அல்லது அதிகாரப்பூர்வமற்ற முறையிலோ, சட்டப்பூர்வமாகவோ அல்லது சட்ட விரோதமாகவோ மக்கள் கொலை செய்ய கற்பிக்கப் படுகின்றனர். ஓய்வு பெற்ற படையினர் நாற்பத்து நான்கு இலட்சத்துக்கும் மேலானோர் உள்ளனர். அவர்கள் கொல்வதில் தொழில்ரீதியாக பயிற்சி பெற்றவர்கள். முதிய

ஆடவர் நால்வரில் ஒருவர் ஓய்வு பெற்ற படையாளராவர். பல உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் ஆரம்ப கட்ட படைப்பயிற்சி வழங்கப்படுகிறது. தனிப்பட்ட பாதுகாவலர் பிரிவுகளுக்கு சண்டையிட பயிற்சி தரப்படுகிறது. தெரு கோஷ்டிகள் கொல்வதை சமூகமயமாக்குகின்றன. சிறைச்சாலைகள் கொல்வதற்குரிய கல்லூரிகளாகப் பணியாற்றுகின்றன. சண்டையிடும் உத்திகள், ஆயுத விற்பனை, "கொல்வதற்கு கூலியாட்கள்" விளம்பரம் ஆகியவற்றை கூலிப்படைகளுக்கான இதழ்கள் வெளியிடுகின்றன. தெருச்சண்டைகளிலிருந்து நிலம், ஆகாயம், காற்று, அண்டவெளி ஆகியவற்றில் பல்வேறுபட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டு கொல்லும் சண்டையிடுவது வரையான "போலியான பாவனைப்" பயிற்சி இளையவர்களுக்கு வீடியோ மற்றும் கணினி மூலம் கிடைக்கிறது. கொலைபுரிதல் மற்றும் கொலைக்கு இலக்காகும் பொழுது போக்கு அனுபவங்களை "போலியான பாவனை" வாயிலாகப் பெற கணினி வணிக உலகம் வழிவகுக்கிறது. சகமாணவர்களைக் கொல்லும் போலி விளையாட்டு அமெரிக்க வளாகங்களில் ஒரு கட்டத்தில் செல்வாக்குப் பெற்றது. குழந்தைகள் பொம்மை ஆயுதங்களுடன் விளையாடுவதன் விரிவாக்கமே யதார்த்தமான, "போலி பாவனை விளையாட்டும் உண்மையான கொலை புரிதலுமாகும்".

கொலை வெறிப்போக்கை சாதாரணச் செயலாகக் கற்பிப்பதிலும், மானிட உயிரின் மேன்மையைப் பற்றிய உணர்வுகளை மழுங்கடிக்க வைப்பதிலும் தகவல் தொடர்பு வெகுஜன ஊடகங்கள் ஈடுபட்டுள்ளன. கார்ட்டூன்கள், திரைப் படங்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள், பாடல்கள், நூல்கள், இதழ்கள், வணிக விளம்பரங்கள் ஆகியவற்றை உருவாக்குபவர் ஆசிரியர்களே. கதாநாயகர்களும் வில்லன்களும் நாடகபாணியில் எங்ஙனம் மக்கள், சொத்துக்கள், விலங்குகள், இயற்கை ஆகியவற்றை நாசம் செய்யும் ஆயிரக்கணக்கான வன்முறை படிமங்கள் குழந்தைப் பருவத்திலிருந்து மனதில் படிகின்றன. தொடர்ந்து மிகுதியான பாலியல் காட்சிகளையும் இரத்தம் சிந்துதல் மற்றும் மிருக வெறிக் காட்சிகளையும் மாற்றி மாற்றித் தரும் திரைப்படங்களைப் பற்றிய முன்னோட்டங்கள் கொலை வெறிக்கு உள்ளுணர்வைத் தூண்டும்.

வரலாற்றில் இதுவரை வாழ்ந்த மக்கள் எவரும் இன்று வாழும் மக்கள் போலத் தங்களது மூளையில் வன்முறை கொலை வெறிப் படிமங்களின் பதிவுகளைப் பெற்றவர்கள் இல்லை எனலாம். கொல்லத் தயங்கும் கமாண்டோ பயிற்சியாளர்களைக் கொலை வெறியில் இறக்கிட, மிகவும் மோசமான கொடூரங்களைக் காட்டும் படங்களைக் காட்டுவது என்ற வெற்றி நிரூபிக்கப்பட்ட படைப்பயிற்சி உத்தி கையாளப்படுகிறது. உயிர் மீது மரியாதை மற்றும் பரிவு என்பதிலிருந்து உணர்ச்சிகளற்றுக் கொலையை ஏற்பது என்ற நிலைக்கு நாடே தள்ளப்படுகிறது. இளையோரான கொலைகாரர்கள் மேலும் மேலும் அதிகமாக மானிட உயிருக்கு மரியாதை தராத நிலை உள்ளது என நீதிபதிகள் கூறுகின்றனர். ஆனால் சிவில் சமூகத்திற்கு எவ்வளவு தீமைபயப்பதாக இருந்தாலும் வன்முறை ஊடக சமூகமயமாக்குதலானது (Socialisation) தேசபக்தி மிக்க தொழில் ரீதியான கொலைஞர்களை விரும்பும் அரசுக்கு பயனுள்ளதேயாகும். அமெரிக்காவில் கால்பந்து போட்டிகளுக்கிடையில் காட்டப்படும் படைக்கு ஆள்சேர்க்கும் மில்லியன் டாலர் விளம்பரங்கள் இதனது சுருங்கிய வடிவமாகும். வாளைச் சுழற்றும் இடைக்காலப் போர்ப் படைத்தலைவர் நவீன அமெரிக்க கடற்படை அதிகாரியாக உருமாறும் வீடியோ விளையாட்டுப் போர்க் காட்சியை இலட்சக் கணக்கான மக்கள் காண்கின்றனர்.

பயன்படுத்தப்படும் மொழியும் கொலை வெறிப் போக்கை வலுவாக்குவதுடன், அதனை இயல்பானதாகவும், தவிர்க்க இயலாததாகவும் ஆக்குகிறது. ஊக்கத்துடன் முயலும் சுதந்திர முதலாளித்துவமாக அமெரிக்கப் பொருளாதாரம் உள்ளது. "பங்குச் சந்தையைக் கொல்வது" என அமெரிக்கர்கள் பேசுகின்றனர்; "தெருக்களில் இரத்தம் பாயும் பொழுதே நீங்கள் வாங்கி விடுங்கள்" என அமெரிக்கச் சந்தை வால் தெருவில் ஒரு மொழி உண்டு; "விலைப் போர்களில்" வர்த்தகங்கள் போட்டியிடுகின்றன. அமெரிக்க ஜனநாயகம் சுதந்திரத் தேர்தல் முறையை அடிப்படையாகக் கொண்டது. தேர்தல் கட்சி ஊழியர்கள் "துருப்புக்கள்" அல்லது "பாதப்படையாளர்" என அழைக்கப் படுகின்றனர்; சட்டமன்றத்தில் மசோதாக்கள் "கொல்லப் படுகின்றன"; வறுமை, குற்றங்கள், போதைப் பொருட்கள் மற்றும் பிற பிரச்சினைகளுக்கு எதிராக நாடு "போர் தொடுப்பதாக" பேசப்படுகிறது. அமெரிக்காவின் தேசிய விளையாட்டு பேஸ்

பந்தாட்டம் ஆகும். பந்தாட்ட ரசிகர்கள் எரிச்சலடையும் பொழுது "நடுவரைக் கொல்லுங்கள்" எனத் கத்தும் மரபு உள்ளது. திறமையான பந்தாட்ட அணியை "கொலைஞர்" என்றும், விளையாட்டு வீரர்களை ஆயுதங்கள் என்றும், பந்தைத் தள்ளிக் கொண்டு முன் செல்வது "பெரிய வெடி குண்டுகள்" என்றும், தோல்வியடையும் குழுவினரை "கொலை இயல்பூக்கம் அற்றவர்" என்றும் விமர்சகர்கள் கூறும் போக்கு உள்ளது. சமயச் சுதந்திரம் பற்றிப் பெருமை கொள்ளும் அமெரிக்கர்கள் அமைதி இளவரசனை (இயேசுவை) வழிபடும் பொழுது, சிலுவைப் போர்களையும் கிறித்துவ சீர்திருத்த மோதல்களையும் நினைவுபடுத்துவது போல, "ஜேக்கப்பின் ஏணியில் சிலுவையின் படையினர்" ஏறுவது கூட்டாகப் பாடப்படுகிறது. சோம்பலாகக் கழியும் காலம் "கொல்லப் படும் காலம்" எனப் பேசப்படுகிறது.

இனவாத, ஆணாதிக்க மொழியின் தீய விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வரும் வேளையில், அமெரிக்கர்கள் அக்கறையின்றி கொலை வெறி மொழியைத் தொடர்ந்து பேசி வருகின்றனர். வரலாற்றில் அறியப்பட்ட அனைத்து ஆயுதங்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறை, அவற்றின் விளைவுகள் பற்றிக் குறிப்பிடும் மொழி "ஆயுதங்களை" அமெரிக்க ஆங்கிலம் பயன்படுத்துகிறது. காட்டிக் கொடுப்பது "முதுகில் வாளைப் பாய்ச்சுவது" என்றும், வரவு செலவுக் கணக்குகள் "வெட்டப்பட்டன" என்றும், முயற்சியை "அதில் குண்டைப் போடுங்கள்" எனவும், கருத்துக்களை "நீர் மூழ்கிக்குண்டு தாக்குதல்" எனவும் எதிர்த் தரப்பை "விமான எதிர்ப்பு பீரங்கி வேட்டு" எனவும், செயல்களின் விளைவுகளை "கதிரியக்கத் துகள்" எனவும் பேசுகின்றனர். வழக்கறிஞர்களை "வாடகைத் துப்பாக்கிகள்" என்கின்றனர். ஓர் அழகிய திரை நட்சத்திரத்தை "இளம் பெண் பொன்னிறமான வெடிகுண்டு" என்பர்.

ஆனால் உண்மையான கொலையாளர்களை மங்கல வழக்காகப் பேசுகின்றனர். 1945 ஆகஸ்டு 6 ஆம் நாள் ஹிரோசிமாவில் வீசப்பட்ட அணுகுண்டை "சிறிய பையன்" என்றனர். அந்த அணுகுண்டு கொண்டு செல்லப்பட்ட B-29 குண்டுவீச்சு விமானம் அந்த அணுகுண்டை வீசியவரின் தாயான "எனொலா கய்" (Enola Gay) என அழைக்கப்பட்டது. நாகசாகியில் வீசப்பட்ட புளுட்டோனியம் அணுகுண்டு "தடித்த மனிதன்" என அழைக்கப்பட்டது. அவ்விமானம் "பாக்ஸின்

கார்'' என அழைக்கப்பட்டது. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து பேரளவு நகர மக்களைக் கொல்ல வல்ல அணு ஏவுகணைகள் "அமைதி ஆக்குநர்'' என அழைக்கப்படுகிறது. விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் போர் மொழியைத் தலைகீழாக மாற்றி கொல்லத் தயாராவதற்கான இராணுவப் பயிற்சியை "விளையாட்டுக்கள்'' என்கின்றனர். நமது சிவிலியன்கள் அல்லது நமது படையாளர்கள் போரில் கொல்லப்படுவதானது, "ஒரே கிளை மரபினருக்கான சேதம்'' என அழைக்கப்படுகிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்டு ரீகன் கூறினார், "நவீன வரலாற்றில் அமெரிக்காவே மிகவும் குறைவாகப் போரை நாடும் மிகவும் அமைதியான நாடாகும்.''

அமெரிக்காவில் கொலைவெறிப்போக்கின் அம்சங்கள் அவ்வப்பொழுது குடிமக்களுக்கிடையில் அல்லது குடிமக்களுக்கும் அரசின் ஏஜெண்டுகளுக்கும் இடையிலான கூட்டு வன்முறையாக வெளிப்படுகின்றன. ஒரு கருப்பு குடிமகனுக்கு எதிராக மிருக வன்முறை புரிந்த காவல்துறையை நீதித்துறை அக்குற்றச் சாட்டிலிருந்து விடுவிக்க, 1992இல் தெற்கு மத்திய லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் வன்முறை வெடித்தது. இதில் 52 பேர்கள் கொல்லப்பட்டனர். 2,000 பேர்கள் காயமடைந்தனர்; 8,000 பேர்கள் கைதாயினர். துப்பாக்கிச் சூடும், கொள்ளையிடலும், சூறையாடலும் நடைபெற்றன. இதற்கு அடுத்த இரண்டு மாதத்தில் 70,000 துப்பாக்கிகள் கலவரப் பகுதிகளை சுற்றி அச்சமிகுந்த மக்களிடம் விற்பனையாயிற்று. வாட்ஸ் (1965), நியூயார்க் (1967), டெட்ராய்ட் (1967) ஆகிய இடங்களில் முன்னர் நடைபெற்ற கலவரங்களை இந்த இரத்தம் சிந்தல் நினைவுபடுத்தியது. 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் அடிமைகளின் எழுச்சியின் பொழுது இத்தகு இழப்புகள் நேர்ந்தன. 1967இல் டெட்ராய்டில் அமைதியை நிலைநாட்ட 4,700 துணைப்படைப் பிரிவினரும் 1,800 தேசிய காவலர்களும் 360 மிச்சிகன் மாநிலப் படையினரும் தேவைப்பட்டனர்.

ஹாப்ஸிய–வெபெரிய நாட்டுக் கோட்பாட்டையும் லாக்கின் இரண்டாவது திருத்த மரபையும் இணைப்பதன் விளைவை 1993 டெக்ஸசில் வகொ (Waco) மற்றும் 1995 ஒக்கலகாமாவில் ஒக்கலகாமா நகரில் நடைபெற்ற கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன. வகொவில் ஆயுதம் ஏந்திய அரசு ஏஜெண்டுகள் ஆயுதமேந்திய ஒரு சமயப் பிரிவுக்கு எதிராகச்

சட்டங்களை அமலாக்க முற்படுகின்றனர். இதில் ஏற்பட்ட இரத்தக் கிளறியில் பெடரல் அதிகாரிகளில் நால்வர் கொல்லப்பட ஒரு டஜன் பேர்கள் காயமடைந்தனர். அந்த சமயப் பிரிவின் 89 பேர்கள் (இதில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர்) கொல்லப்பட்டனர். இந்த துயர நிகழ்ச்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவின் பொழுது, பழிவாங்கும் வகையில் அச்சமயப் பிரிவினர் ஒரு டிரக் நிறைய குண்டுகளுடன் ஒக்கலகாமா நகர பெடரல் கட்டிடத்தின் மீது மோதி 168 பேர்களைக் (இதில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர்) கொன்றனர்.

கொல்லாமைச் சமுதாயம் சாத்தியமில்லை என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த ஏராளமான சான்றுகளை அமெரிக்காவின் எல்லைகட்கு அப்பாலும் அமெரிக்கர்களால் காண முடியும். மானிட வரலாற்றின் மிகவும் அதிகமான கொலைகள் நடந்த காலமான இருபதாம் நூற்றாண்டு பேரளவு கொலை புரிய வல்ல மானிடரின் பயங்கர ஆற்றலைக் காட்டும். ரூடால்ப் ஜே. ரம்மெல் (Rudolph J.Rummel) செய்துள்ள ஆராய்ச்சிகள் இரத்தம் சிந்தலை வரலாற்று மற்றும் உலகக் கண்ணோட்டத்தில் காண வழிவகுக்கிறது. போரில் (உலக, வட்டார, சிவில், புரட்சி மற்றும் கொரில்லாப் போரில்) ஏற்படும் மரணங்களையும், நாடுகளே தனது மக்களையே ஒட்டு மொத்தமாக இனப்படுகொலை செய்யும், தூக்கிலிடும், வெகுஜனக் கொலை புரியும் மற்றும் செயற்கையாக பஞ்சத்தை ஏற்படுத்திக் கொல்லும் நிலையையும் (இதனை "டெமோசைடு" 'democide' என்பர்) வேறுபடுத்திக் காண வேண்டும். பின்வரும் அட்டவணையில் உள்ளது வரலாற்றில் நிகழ்ந்துள்ள கொலைகள் பற்றிய ரம்மெலின் மிகவும் நிதானமான மதிப்பீடாகும்.

*அட்டவணை - 1*

**1987வரையான டெமோசைடு மற்றும் போரின் விளைவான மரணங்கள்**

| | 1900க்கு முன் | 1900–1987 | மொத்தம் |
|---|---|---|---|
| டெமோசைடு | 133,147,000 | 169,198,000 | 302,345,000 |
| போர் | 40,457,000 | 34,021,000 | 74,478,000 |
| மொத்தம் | 173,604,000 | 203,219,000 | 376,823,000 |

வரலாற்று ரீதியான அரசியல் கொலைகட்குப் பலியானவர்கள் ஏறக்குறைய நாற்பது கோடிப் பேர்களாக இருக்கலாம் எனக் கணக்கிடப்படுகிறது. இதில் கொலை யுண்டவர் தொகை அடங்கவில்லை. சர்வாதிகார ஆட்சிகளுக்கு அடுத்து கம்யூனிச அரசாங்கங்கள் டெமோசைடுக்கு முக்கியக் காரணம் என்கிறார் ரம்மெல். ஜனநாயக ஆட்சிகள் குறைவாகவே இதற்குக் காரணமாக அமைந்துள்ளன என அவர் கருதுகிறார். ஹிட்லரது பேரழிவுப் படுகொலைகள், ஸ்டாலின் பேயாட்சி, ஜப்பானின் போர் வெறிப் போக்கு மற்றும் மவோயிசப் படுகொலைகள் முதலியன அமெரிக்காவின் நினைவுகளில் இன்றும் பசுமையாக உள்ளன.

வில்லியம் ஜே. எக்கார்டும் (Wiliam J.Eckhardt) அவரது குழுவினரும் 1900க்கும் 1995க்கும் இடைப்பட்ட இருபதாம் நூற்றாண்டில் போர் தொடர்பான கொலைகள் மொத்தம் 106,114,000 எனக் கணக்கிட்டுள்ளனர். இதில் 62,194,000 சிவிலியன்களும் 43,920,000 படையினரும் அடங்குவர். அமைதியான பனிப்போர் (Cold War) காலமான 1945க்கும் 1992க்கும் இடைப்பட்ட காலத்தில் 22,057,000 பேர்கள் 149 போர்களில் கொல்லப்பட்டனர். இதில் 14,505,000 சிவிலியன்களும் 7,552,000 படையினரும் அடங்குவர். 1996இல் மட்டும் குறைந்தபட்சம் 30 போர்கள் நடந்து கொண்டிருந்தன.

உலகம் முழுவதிலுமிருந்து இரத்தம் சிந்தல் பற்றிய படிமங்களைத் தொலைக்காட்சி அவ்வப்பொழுது ஒளிபரப்புகிறது. பழைய பகைமை வேர்களிலிருந்து வருபவை சில; தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத இன்றைய நிலையிலிருந்து வருபவை சில. ஒரு பயங்கரமான பூசலிலிருந்து அடுத்த பூசல் நிகழ்கிறது. ஊடகங்கள் ஒன்றைக் காட்டி விட்டு அடுத்ததற்குச் செல்கின்றன. இரத்தம் சிந்தல்கள் பல வடிவங்களை எடுக்கின்றன; இவை அனைத்தும் கொல்வதற்குத் தயாராக உள்ள நிலையிலிருந்து எழுகின்றன; சர்வதேசப் போர்கள், சிவில் போர்கள், புரட்சிகள், பிரிவினைப் போர்கள், பயங்கரவாத படுபாதகச் செயல்கள், பயங்கரவாதப் பூசல்கள், படைப்புரட்சிகள், இனப்படு கொலைகள், இன–சமய–பழங்குடிப் படுகொலைகள், படுகொலைகள், அயல்நாட்டுத் தலையீடுகள், கொல்வது தொடர்பான சிதைக்கப்படுதலும் இழக்கச் செய்யப்படுதலும் முதலியன இதில் அடங்கும். வெளிநாட்டினரின் பகை சில

சமயங்களில் அமெரிக்கர்கள் சொந்த நாட்டிலேயே கொல்லப் படுவதற்குக் காரணமாகிறது. இஸ்ரேலுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் தரும் ஆதரவை எதிர்ப்பவர்கள் 1993இல் நியூயார்க்கில் உலக வர்த்தக மையத்தில்* குண்டு வீசி அறுவரைக் கொன்றனர். ஆயிரம்பேர் காயமடைந்தனர். 1998இல் அடுத்தடுத்து நைரோபியிலும் தர் எஸ் சலாமிலும் அமெரிக்கத் தூதரங்கள் மீது நடந்த டிரக் குண்டு வெடிப்புக்கள் 12 அமெரிக்கர்களையும் 300 ஆப்பிரிக்கர்களையும் கொன்றதுடன் 5000 பேர்களைக் காயப்படுத்தின.

இருபதாம் நூற்றாண்டின் இரத்தம் தோய்ந்த நிகழ்வுகளைப் பார்க்கும் பொழுது அமெரிக்க அரசியல் தலைவர்கள் ஹறாப்ஸின் எதிரொலியைக் காண்பதற்கான வாய்ப்பு மிகுதியாகும்; "அதோ அங்கே காடு உள்ளது! உங்களுக்கு அமைதி வேண்டுமாயின் போருக்குத் தயாராயிருங்கள்" என்ற ரோமானியக் கூற்றினை அமெரிக்கா போற்றலாம்.

இத்தகு அடிப்படை நம்பிக்கை, தத்துவ மரபு, தேசப் பற்றான சமூகமயமாக்கம், ஊடகங்களின் வலுவேற்றம், பண்பாட்டு நிபந்தனைகள், உலகளாவிய இரத்தம் சிந்தல்.... என்ற சூழலில் "கொல்லாமைச் சமூகம் சாத்தியமில்லை" என அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளும் அவர்களின் மாணவர்களும் வலுவாக நிராகரிக்கக்கூடும்.

இந்தக் கேள்வி பல்கலைக்கழகங்களில் முதல்தரமான கருத்தரங்குகளில், தொடக்க வகுப்புகளில் எழுப்பப்படும் பொழுது "மானிட இயற்கை, பொருளாதாரப் பற்றாக்குறை, பாலியல் மற்றும் பிற தாக்குதல்களிலிருந்து தற்காக்க வேண்டிய அவசியம்" முதலிய அடிப்படையான ஆட்சேபங்கள் எழுப்பப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் புதிய பதில்கள் எழுகின்றன; அவற்றில் பண்பாட்டு அம்சங்களையும் பல்வேறு முடிவற்ற மாறுபாடுகளையும் விரிவாக்கங்களையும் காணலாம்; ஒவ்வொரு முறையும் இவ்வினா கேட்கப்படும் பொழுது ஏதோ புதிய ஒன்றை எதிர்பார்க்கலாம். மானிடர் அதிகாரத்தைத்

---

* இந்நூல் 2001 செப்டம்பருக்கு முன் எழுதப்பட்டது. 2001 செப்டம்பர் 11ஆம் நாள் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் கடும் உயிர்ச் சேதங்களையும், பொருட்சேதங்களையும் ஏற்படுத்தியதுடன் பயங்கரவாதத்தின் திறன்களையும் வலுவையும், ஆபத்துக்களையும் உணர்த்தி விட்டன. — மொழிபெயர்ப்பாளர்

தேடுகின்றனர்; அவர்கள் சுயநலம் மிக்கவர்; பொறாமைப் படுபவர்; கொடியவர்; பித்துப் பிடித்தவர்; தற்காப்புக்குக் கொல்வது உயிரியல் உந்துதலாகும்; அது மாற்றவியலாத மானிட உரிமையாகும். மானிடர் பொருளாதார ரீதியில் பேராசைமிக்கவராகவும் போட்டியிடுபவராகவும் உள்ளனர்; சமூக வேறுபாடுகளும் மோதும் சொந்த நலன்களும் கொல்வதைத் தவிர்க்க இயலாததாக ஆக்குகின்றன. கொல்வதிலும் மிகவும் மோசமானவை உண்டு– உறவியல் ரீதியில் தவறாகப் பயன் படுத்துதலும் பொருளாதார ரீதியில் இழப்புக்குள்ளாக்குதலும் அதில் அடங்கும். கொல்லாமைச் சமுதாயம் ஒரு சர்வாதிகாரச் சமுதாயமாகும்; சுதந்திரம் அங்கு இழக்கப்படும். அது அந்திய ஆக்கிரமிப்பாளர்களால் தாக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படும் கொல்லாமைக் கோட்பாடு அரசியல் ரீதியில் அறமற்றது; குடிமக்களை ஆக்கிரமிப்பிலிருந்து காக்கக் கொல்வது நீதியானது என்றே எப்பொழுதும் கருத வேண்டும். குற்றவாளிகளைக் கொல்வதும் அச்சுறுத்துவதும் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும். ஆயுதங்களை யாரும் இல்லாமல் செய்து விட முடியாது. கொலைக்கான கருவிகள் எப்பொழுதும் இருந்து வரும். கொல்லாமைச் சமூகம் ஒன்று வரலாற்றில் இருந்தற்கான சான்று இல்லை; அத்தகு சமூகத்தை நினைத்தும் பார்க்க முடியாது.

இதன் பொருள் வகுப்பறையில் ஏகோபித்த கருத்து உள்ளது என்பதன்று. மானிடர் ஆக்கத்திறனும் அன்பும் கருணையும் உள்ளவர் என்பதால் கல்வியின் வழி கொல்லாமைச் சமூகத்தை உருவாக்க முடியும் எனச் சில அமெரிக்க மாணவர்கள் கருதுகின்றனர். சிறிய சமூகங்களில் கொல்லாமைச் சூழலை உருவாக்க முடியும் என வேறு சிலர் கருதுகின்றனர்; ஆனால் இது பெரிய சமூகங்களிலோ அல்லது உலக அளவிலோ சாத்தியமில்லை என்று அவர்கள் கருதுகின்றனர். பிற நாடு களிலுள்ள அரசியல் அறிவியல் *பேராசிரியர்கள் மற்றும்* மாணவர்களை விட அமெரி*க்கர்களின்* கருத்து அதிக வன்முறையானது என்பதன்று இதன் பொருள். இதனைக் கண்டுபிடிப்பற்கு முறையான ஒப்பியல் ஆய்வு தேவை. ஆனால் உலகம் முழுவதும் அரசியல் அறிவியல் துறையில் பொதுவாக தோல்வி மற்றும் சோர்வு மனப்போக்கு அதிகமாக உள்ளது எனலாம்.

“கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?” என்ற இதுகாறும் சிந்திக்கப்படாத வினா பிற அரசியல்

பண்பாடுகளில் கேட்கப்படும் பொழுது வியத்தகு மாறுபட்ட விடைகள் வருகின்றன.

நான் இந்தக் கேள்வியைப் பற்றி இதற்கு முன்னர் ஒரு பொழுதும் சிந்தித்ததில்லை...

1980இல் சுவிடன் ஸ்டாக் ஹோமில் அகிம்சை அரசியல் அறிவியல் பற்றி ஆராயக்கூடிய சுவிடன் நாட்டு எதிர்காலவியல் அறிஞர் கூட்டத்தில் ஒரு சுவிடிஷ் அரசியல் விஞ்ஞானி இங்ஙனம் கேட்டார். "நான் இந்தக் கேள்வியைப் பற்றி இதற்கு முன்னர் ஒரு பொழுதும் சிந்தித்ததில்லை. இதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க எனக்குக் கால அவகாசம் தேவை. இதற்கு உடனடி நிராகரிப்பும் இல்லை; ஆதரவும் இல்லை என்பது வியப்புக்கு உரியதாகும். இக் கேள்வியைப் பற்றி மேலும் ஆராயவும் சிந்திக்கவும் வேண்டும் என்று கருதப்பட்டது. இது போன்றே 1997இல் சியோலில் நடைபெற்ற சர்வதேச "இயக்க அறிவியலார்" (Systems Scientists) கூட்டத்தில் நோபல் பரிசு பெற்ற வேதியியல் அறிவியல் அறிஞர் ஒருவர் கூறினார். "எனக்குத் தெரியாது போதுமான அறிவியல் ரீதியான விடைதருவது சாத்தியமில்லாத பொழுது இதுவே ஏற்ற விடையாக இருக்க முடியும். ஆனால் இந்த வினாவைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு ஆராயுமாறு மாநாட்டின் உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்; ஏனென்றால் சாத்தியமற்றது போலத் தோன்றுவதை எடுத்துக் கொண்டு கேள்விகள் கேட்பதாலேயே அறிவியலும் நாகரிகமும் முன்னேறும் என அவர் விளக்கினார்.

### *இது சிந்திக்கத்தக்கது, ஆனால்...*

1979இல் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச அரசியல் அறிவியலின் 19வது மாநாட்டில் "அகிம்சை அரசியல் விஞ்ஞானம்" என்னும் கட்டுரையைப் பற்றி இரு ரஷிய அறிஞர்கள் தமது விளக்கங்களைத் தந்தனர். இவ்வினாவைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலிக்க அவர்கள் நிபந்தனையுடன் கூடிய விருப்பம் தெரிவித்தனர். ஆனால் அரசியல் மற்றும் அரசியல் அறிவியலின் குறிக்கோள் அகிம்சை சமுதாயத்தை அடைவதுதான் என அவர்கள் வியப்பளிக்கும் வகையில் ஒப்புக் கொண்டனர். "ஆனால்", ஒரு ரஷிய அறிஞர் கேட்டார், "அகிம்சை அரசியல் மற்றும் அரசியல் அறிவியலின் பொருளாதார அடிப்படை என்ன?" "ஆனால்", இன்னொரு ரஷிய அறிஞர் கேட்டார், "சிலி(Chile)யில் நிகழ்வது போன்ற

துயரங்களை (ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சோசலிச அரசை இராணுவப்புரட்சி ஒன்று தூக்கி எறிந்தது) நாம் எங்ஙனம் சமாளிக்க முடியும்? இதுவே நிகாரகுவா (வன்முறை அடக்குமுறை மற்றும் புரட்சிக்கான இடம்), கம்பூசியா (நகர வர்க்கத்தை அழிப்பது என்ற பெயரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமானோரா் கொல்லப்பட்டது) போன்ற நாடுகட்கும் இக்கேள்வி பொருந்தும்.

நமது கால முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசம் போலன்றி எத்தகு பொருளாதாரம் கொல்லுதலைச் சார்ந்திராது அல்லது ஆதரிக்காது உள்ளது? கொலை வெறி நிகழ்வுகளின் அழிப்பினையும் அதன் பின் விளைவுகளையும் அகிம்சை அரசியல் எங்ஙனம் தடுக்கும், நிறுத்தும், மேலும் மாற்றும். அகிம்சை சாத்தியமானதே என்ற எடுகோளுடன் கேட்கப்படும் வினாக்களை தீவிரமாக, அறிவியல் ரீதியாகப் பரிசீலிக்க வேண்டும்.

*மானிடர் இயல்பால் வன்முறையாளரன்று*
*என்பதை அறிவோம். ஆனால்...*

**1981** அம்மானில் ஜோர்டான் பல்கலைக்கழகத்தில் அரபு அரசியல் அறிவியலார் மற்றும் பொது நிர்வாக அறிஞர் கூட்டம் நடைபெற்ற பொழுது அகிம்சை அரசியல் அறிவியல் பற்றிய கேள்வி எழுப்பப்பட்ட பொழுது, ஒரு பேராசிரியர் “மானிடர் இயல்பில் வன்முறையாளர் அல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் தற்காப்புக்காக நாம் போராட வேண்டியுள்ளது.” ‘மானிடர் தவிர்க்க இயலாத வகையில் இயல்பான வன்முறையாளர்’ என்ற அடிப்படை வாதத்தைக் கேள்வி கேட்க முடியுமானால் எந்நிலையில் ஒருவரும் கொல்லாதிருக்கும் சாத்தியம் உள்ளது என்பதைக் கண்டறிவது தொடங்கும்.

*அது சாத்தியமல்ல. ஆனால்...*

**1985**இல் ஜப்பானிய ஹிரோசிமா பல்கலைக்கழகத்தின் அமைதி அறிவியல் நிறுவனத்தின் பத்தாம் ஆண்டுக் கருத்தரங்கில் ஜப்பானிய அறிஞர்களே பெரிதும் கலந்து கொண்டனர். ஏற்போர், ஏற்காதவர் எனச் சமமாக அவர்கள் பிரிந்து நின்றனர். அப்பொழுது கல்வித்துறைப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். “அது சாத்தியமல்ல; ஆனால் சாத்தியமாவதற்குரிய சாத்தியம் உள்ளது.” கொல்லாமைச் சமூகம் உடனடியாக உருவாவது சாத்தியமில்லை என்றாலும், அதனது எதிர்காலச் சாத்தியக்கூறை நிராகரிப்பதற்கு இல்லை. அவர்

மேலும் கேட்கிறார். "அகிம்சைக் கல்வி உருவாதற்கு எத்தகு *கல்வி தேவைப்படும்*"? ஆக்கப்பூர்வமான பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் ஆக்கமான அழைப்பு இது.

*அது முற்றிலும் சாத்தியம்...*

1987 டிசம்பரில் கொரிய நாட்டு சமூக அறிவியலார் *சங்கத்தின் தலைவரும், பியாங்காங்கின்* (Pyongyang) *அரசியல்* தலைவரும் தத்துவப் பேராசிரியருமான ஒருவர் "அது முற்றிலும் சாத்தியம்" என்று எவ்விதத் தயக்கமின்றிக் கூறியது வியப்பளித்தது. ஏன்? முதலாவதாக, மானிடர் இயல்பால் கொல்லும்படி கட்டாயப்படுத்தப் படவில்லை; *அவர்களிடம்* கொலை *வெறியை* நிராகரிக்கும் "*விழிப்புணர்வு*", "பகுத்தறியும் காரண அறிவு", "ஆக்கத்தன்மை" முதலியன உள்ளன. இரண்டாவதாக, பொருளாதாரப் பற்றாக்குறையை கொல்வதை நியாயப்படுத்தப் பயன்படுத்தக் கூடாது – மானிடர் பொருளின் அடிமை அன்று; "ஆக்கத்தன்மை", "உற்பத்தி", "மிகவும் முக்கியமாக சம விநியோகம்" ஆகியவற்றால் பற்றாக்குறையைச் சரிசெய்யலாம். மூன்றாவதாக, கற்பழிப்பை கொல்லாமையை நிராகரிப்பதற்கான அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. கற்பழிப்பை, "கல்வியால்" மற்றும் "சரியான சமூகச் சூழலால்" நீக்கலாம்.

2000ஆம் ஆண்டில் கொலம்பியா நாட்டில மனிஸெலஸ் (Manizales) நகரில் கூடிய இருநூறு குழுமத் தலைவர்களின் கூட்டத்தில் "கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?" என்ற கேள்வி எழுப்பப்பட்ட பொழுது வியப்பூட்டும் வகையில் ஒருவர்கூட "இல்லை" எனக் கையை உயர்த்தவில்லை. பின்னர் ஏகமனதாக "ஆம்" என ஆதரவாக அனைவரும் கைகளை உயர்த்தினர்.

வன்முறைச் சூழல் நிலவும் கொரியாவிலும், கொலம்பியாவிலும் கிடைத்த இத்தகு ஆக்கப்பூர்வமான பதில்கள் குறிப்பிடத்தக்கனவாகும். கொரிய ஜனநாயகக் குடியரசின் வன்முறை மரபு ஒருவகையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணையாக உள்ளதாகும்; ஆயுதம் ஏந்தி காலனியாதிக்க எதிர்ப்புப் புரட்சி, ஒற்றுமைக்கான சிவில் போர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிராக "தனது நிலையே சரி" எனக் கருதும் தற்காப்பும், தாக்கும் நிலையும் என்பன அவ்விரு நாடுகளுக்கிடையே இணையாக அமைந்த

தன்மைகளாகும். படைகள், காவல்துறை, துணைப்படை, கொரில்லா படை, கிரிமினல் கொலைஞர்கள் ஆகியோரின் கொலைவெறியால் கொலம்பிய நாடு பல ஆண்டுகளாகச் சீரழிவுக்கு உள்ளாகியுள்ளது.

## மாறுபட்ட சமூகப் பதில்கள்

"கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?" என்ற கேள்வியானது எவ்வித விவாதமுமின்றி பல்வேறு குழுக்களில், பல நாடுகளில், பல பண்பாடுகளில், மாறுபட்ட சமூக நிலைகளைச் சார்ந்தவர்களிடம் கேட்கப்பட்ட பொழுது பல்வேறு குழுக்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவும் மாறுபாடும் இருப்பது வெளிப்பட்டது.

1998 மே மாதம் லித்துவேனியாவில் வில்னியூஸில் (Vilnius, Lithuania) "புதிய அரசியல் அறிவியல்" என்னும் கருத்தரங்கு சோவியத் நாடுகளின் அரசியல் அறிவியலாருக்கு நடைபெற்றது. இதில் எட்டுப்பேர்கள் "இல்லை" என்றும் ஒருவர் "ஆம்" என்றும் பதிலளித்தனர். 1999இல் சியோல் தேசியப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரி மாணவருக்கான அரசியல் அறிவியல் கருத்தரங்கில் 12 பேர்கள் "இல்லை" என்றும் ஐந்து பேர்கள் "ஆம்" என்றும் இருவர் "ஆம்" மற்றும் "இல்லை" என்றும் பதிலளித்தனர். 1998ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஹவாயில் ஹானலுலுவில் (Honolulu) பசிபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் மன்றம் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆதரவு தரும் ஜப்பானிலுள்ள அமைப்பின் ஆதரவுடன் கூடியது. அதில் ஆறு விடைகள் "ஆம்" என்றும் ஐந்து விடைகள் "இல்லை" என்றும் இரண்டு விடைகள் "ஆம்" மற்றும் "இல்லை" என்றும் வந்தன. பார்வையாளராக வந்த ஜப்பானிய மகளிர் குழுவினரில் பன்னிரண்டு பேர்கள் "இல்லை" என்றும் பதினொருவர் "ஆம்" என்றும் ஒருவர் "ஆம்" மற்றும் "இல்லை" என்றும் பதிலளித்தனர்.

1998இல் கொலம்பியாவில் மெடெலினில் (Medellin) "கல்வியின் எதிர்காலம்" பற்றிய தேசியக் கலவியாளர் மாநாட்டில் 275 பேர்கள் "ஆம்" என்றும் 25 பேர்கள் "இல்லை" என்றும் பதிலளித்தனர். மெடெலின் குடும்பச் சமூகப் பணியாளர் குழுவினரில் 36 பேர்கள் "ஆம்" என்றும் 16 பேர்கள் "இல்லை" என்றும் குறிப்பிட்டனர். "சிறிய கத்திகள்"

எனப்படும் "வாடகைக் கொலைஞர்கள்" (hired killers) அடங்கிய இளைய கோஷ்டியில் 16 பேர்கள் "இல்லை" என்றும் ஆறுபேர்கள் "ஆம்" என்றும் பதிலளித்தனர். இதற்கான காரணத்தைப் பற்றி விசாரித்தபொழுது ஒரு கொலைஞர் சொன்னார். "எனது இரண்டு மகள்களை கவனித்துக் கொள்ள நான் கொல்ல வேண்டியுள்ளது. வேறு வேலை எதுவும் கிடைக்கவில்லை?" "ஆம்" எனப் பதில் சொன்ன ஒருவர் விளக்குகிறார், "பணக்காரர் – ஏழைகளுக்கு இடையிலான இடைவெளி குறையும் பொழுது மேலும் கொல்ல வேண்டியது இல்லை."

1997 அக்டோபரில் கனடாவில் எட்மன்டனில் (Edmonton) "இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டுக்கான மதிப்பீடுகள்" என்ற கருத்தரங்குடன் கூட்டப்பட்ட உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடம் கேட்கப்பட்ட பொழுது 48 பேர்கள் "இல்லை" என்றும் 25 பேர்கள் "ஆம்" என்றும் பதிலளித்தனர். உலக அமைதிக்கான மகாத்மா காந்தி கனடா நிறுவனம் இதற்கு ஏற்பாடு செய்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஜார்ஜியா மாநிலத்தில் அட்லாண்டாவில் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற "அகிம்சை சர்வதேச மாநாட்டில்" 41 பேர்கள் "ஆம்" என்றும் 3 பேர்கள் "இல்லை" என்றும் பதிலளித்தனர். இம்மாநாடு மார்ட்டின் லூதர் கிங் அகிம்சை சமூக மாற்ற மையத்தால் நடத்தப்பட்டது. ரஷியாவில் ஓம்ஸக்கில் (Omsk) குடிமக்களிடம் கேட்டபொழுது 121 பேர்கள் "இல்லை" என்றும், 34 பேர்கள் "ஆம்" என்றும், மூவர் "ஆம்" மற்றும் "இல்லை" என்றும் பதிலளித்தனர்.

கொல்லாமைச் சமூகம் சாத்தியமா? உலகளவிலான கொலை மற்றும் கொலை அச்சுறுத்தலுக்கிடையில் வன்முறையான இருபதாம் நூற்றாண்டு வன்முறையுடன் முடிந்திருக்கும் நிலையில் "அது முற்றிலும் நினைத்தும் பார்க்க முடியாது" என அரசியல் அறிவியலார் முடிவுகட்ட நிறையக் காரணங்கள் உள்ளன என்பது புரிந்து கொள்ளத்தக்கதே யாகும். ஆனால் இந்த கேள்விக்குத் தீவிரமான கவனத்தைத் தரவும் விருப்பம் உள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன—அது சிந்திக்கத் தக்கது. ஒருவேளை அது சாத்தியமானது. மானிட வாழ்வுக்கு ஒருபொழுதும் கண்டிராத சவால்கள் இருந்த பொழுதிலும் நமது நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான உலகளாவிய ஆன்மீக, அறிவியல், நிறுவன, அனுபவ வளங்களும் பூத்துக் குலுங்குகின்றன—அது முற்றிலும் சாத்தியமானதே.

அத்தியாயம் – 2

# அகிம்சை சமுதாயத்தின் திறன்கள்

*நாம் பிற மாற்றுவழிகளைத் தேடி நடக்க உறுதி கொண்டால் நமது வன்முறை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வழியை நாம் முன்னறே போதுமான அளவு அறிந்தவராவோம்.*

*– டேவிட் என். டேனியல்ஸ் & மார்ஷல் எப். கிலுவா*
*உளவியல் மருத்துவத்துறை, ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம்*

கொல்லாமைச் சமுதாயம் சாத்தியம் என்பதற்கான அடித்தளங்கள் யாவை? மானிடர் உயிர்களிடத்து மரியாதை கொண்டவர் எனச் சிந்திப்பதற்கான சாத்தியம் ஏன்?

## கொல்லாமை மானிட இயல்பு

நாம் ஆன்மீக அடிப்படையுடன் தொடங்குகிறோம் என்றாலும் முதலில் உலகாயுதமான ஓர் உண்மையை நாம் பரிசீலிக்க வேண்டும். பெரும்பாலான மானிடர்கள் கொல்வதில்லை. இப்பொழுது உயிர்வாழும் மானிடரில்–மற்றும் முன்னர் உயிர் வாழ்ந்தவரில்–ஒரு சிறுபான்மையினரே கொலைகாரர்கள். எந்நாட்டின் கொலை புள்ளி விவரங்களைப் பார்த்தாலும் இதனை உணரலாம்.

போர்களில் ஏற்படும் மரணங்களையும் நோக்கலாம். மானிடத்தின் பாதியான மகளிர் போர்களில் ஈடுபடும் கொலைஞர்களாக இருந்ததற்கான சான்றுகள் உலக இராணுவ மற்றும் மானிட இன ஆய்வு அருங்காட்சிய கங்களிலும் மிகவும் அரிதாகவே காண முடியும். பெண்கள் கொல்கிறார்கள்; அவர்களில் சிலர் போர்களிலும் புரட்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்; சில சமூகங்களில் தோல்வியடைந்த எதிரிகளைச் சடங்காக சித்திரவதை செய்து கொலை செய்வதில் மகளிர் மற்றும் குழந்தைகளும் கூட ஈடுபடுத்தப் பட்டனர்; மேலும் இன்று நவீன படைகளில் கொல்வதற்காக மகளிர் பணியில் சேர்க்கப்படு கின்றனர்; நாம் இங்ஙனம் வைத்துக் கொண்டாலும் பெரும்பாலான மகளிர் படையினரோ, இராணுவக் கொலைஞரோ அன்று. ஆடவரிலும் சிறுபான்மையினரே உண்மையில் போர்களில் சண்டையிடுகின்றனர். அவர்களிலும் ஒரு சிறுபான்மையினரே நேரடியாகக் கொல்கின்றனர். கொலைஞர்களிலும் பெரும்பாலோர் கொலை புரியத் தயக்கம்

காட்டுகின்றனர்; கொலை புரிந்த பின்னர் கடும்கழிவிரக்கம் கொள்கின்றனர். இரண்டு சதவிகிதம் பேரே மீண்டும் மீண்டும், மனச்சான்றின் உறுத்துதலின்றிக் கொல்ல முடியும். போரில் கொல்லத் தயங்கும் ஆடவர் பற்றிய ஒரு பெரிய ஆய்வில் லெப்டினண்ட் கர்னல் தாவே கிராஸ்மன் (Dave Grossman) பின்வருமாறு விளக்குகிறார்: "போரில் நீண்ட காலம் ஈடுபடும் 98 சதவிகிதம் பேர் உளவியல் ரீதியில் தளர்வும் சோர்வும் அடைவர். எஞ்சிய இரண்டு சதவிகிதம் பேர் போரால் வெறிபிடித்தவராக ஆக்கப்படுகின்றனர்; ஆனால் உண்மையில் அவர்கள் போர்களத்திற்கு வருவதற்கு முன்னரே வெறியிக்க மனநோயாளர்களாக இருந்திருப்பர் எனத் தோன்றுகிறது. ஆனால் இது மரபான அரசியல் அறிவியலின் எடுகோளாகிய "மானிடர் பிறப்பிலேயே இயல்பான கொலைகாரர்கள்" என்பதற்கு முரணாக உள்ளது. கொல்வதற்கு சராசரி தனிநபருக்கு உள்ள ஆழமான எதிர்ப்புணர்வை வெற்றி கொள்ள முற்படுவதுவே படைப்பயிற்சியின் முக்கியமான பண்பாகும்.

கொல்லாமைத் திறன்களுக்கு மானிடக் குடும்பம் மேலும் சான்று பகிர்கிறது. மானிடர் இயல்பினால் கொலைகாரர்களாக இருப்பார்களேயாகில், மானிடத்தில் அரைவாசிப் பிரிவினர் மட்டும் கூட கொலைகாரர்களாக இருப்பார்களேயாகில், குடும்பமானது அதனது பல வடிவங்களில் இருந்திருக்காது. தந்தைமார்கள் தாய்மார்களைக் கொல்வர்; தாய்மார்கள் தந்தைமார்களைக் கொல்வர்; பெற்றோர்கள் குழந்தைகளையும், குழந்தைகள் பெற்றோர்களையும் கொல்வர். இவை யாவும் நிகழ்கின்றன. ஆனால் அவை மானிடத்தின் தலைவிதியைக் கட்டுப்படுத்தும் கொலைவெறி இயற்கைச் சட்டமாக அமையவில்லை. அது அங்ஙனம் இருந்திருக்குமாயின் மானிட மக்கட்தொகை நெடுங்காலம் முன்னரே குறைந்து மறைந்திருக்கும். ஆனால் மாறாகப் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் துஷ்பிரயோகங்களால் மிகவும் இக்கட்டான நிலைகள் ஏற்பட்டுள்ள பொழுதிலும், மானிடக் குடும்பம் முன்பொருபொழுதும் இல்லாத வகையில் குழந்தைகளைப் பெற்று வாழ்வைத் தொடர வைத்துள்ளது.

எவ்வளவு மானிடர் வாழ்ந்துள்ளனர். அதில் எவ்வளவு பேர்கள் கொலைகாரர்கள் (கொலைஞர்கள்) எனக் கணக்கிடுவது அகிம்சைக்கான சவால்களுக்கு எதிரான உலகளாவிய புதிராக இருக்கும். கி.மு. 1000லிருந்து

கி.பி 2000 வரை (மொத்தம் மூவாயிரம் ஆண்டுகளில்) 91,10,00,00,000 பேர்கள் வாழ்ந்துள்ளனர் என மதிப்பிடப் படுகிறது. ரம்மெல்லின் போர் மற்றும் டெமாசைடில் (democide) கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கையைத் தாராளமாக நீட்டி 50 கோடிப்பேர்கள் கொல்லப்பட்டதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவராலேயே கொல்லப் பட்டனர் எனத் தவறாகவே வைத்துக் கொள்வோம். இத்துடன் கொலை செய்யப்பட்டவர்களையும் கருத்தில் கொள்ள இதனை ஆறால் தன்னிச்சையாகப் பெருக்குவோம். கி.மு. 1000 முதல் 3,00,00,00,000 கோடி கொலைஞர்கள் வாழ்ந்துள்ளனர் என்றாகிறது. இத்தகு துள்ளியமற்ற, தாராளமான கணக்கீடு கூட குறைந்தபட்சம் 95 சதவிகித மக்கள் கொலை எதுவும் புரியவில்லை எனக் காட்டுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கொலை விகிதம் 1,00,000க்கு 10 என்றால் மக்கள் தொகையில் .01 சதவிகித்தினரே ஆண்டுதோறும் கொல்கின்றனர் என்றாகிறது. வெறித்தாக்குதல் 1,00,000க்கு 500 எனத் தாராளமாக மதிப்பிட்டால், இத்துடன் .5 சதவிகிதத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது நடந்த மற்றும் முயற்சிக்கப்பட்ட கொலைகள் மக்கட் தொகையில் .51 சதவிகிதம் என்றாகிறது. இரண்டு அல்லது ஒரு சதவிகிதத்திற்கும் கூட குறைவான மானிடரே சகோதர மானிடரைக் கொல்லும் கொலைகாரராக உள்ளார். பண்பாடு மற்றும் காலத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட சமூகங்களில் கொலைகாரர்களின் சதவிகிதம் வேறுபடலாம். மானிடர் உயிர் வாழ்வதும் அதன் எண்ணிக்கை பல்கிப் பெருகி வருவதும் கொலை வெறியை விட உயிர் ஆக்க சக்தி வலுவாக உள்ளது என்பதையே காட்டுகிறது.

## ஆன்மீக வேர்கள்

கொல்லாமைச் சமுதாயம் உண்மையாகவே உருவாகிவிடும் என்ற நம்பிக்கைக்கான அடித்தளங்கள் மானிடத்தின் ஆன்மீக மரபுகளில் உள்ளன. கொடூரமான படுகொலையிலிருந்து, மானிட உயிர்ப்பலியிலிருந்து, இனப் படுகொலை மற்றும் அணு ஆயுதப் பேரழிவு வரை கொடூரமான கொலைகளை நியாயப்படுத்த சமயத்தைப் பயன்படுத்துகின்றனர் என்பது உண்மையேயாகும். கடவுள், படைத்தவர், மகோன்னத தமான ஆவி என எவ்வாறு நோக்கினும் அவர் "மானிடரே! எனது வார்த்தையைக் கேளுங்கள்! தேடிச் சென்று இன்னொரு மானிடரைக் கண்டு, அவரைக் கொல்லுங்கள்!" என்று

கூறவில்லை. இதற்கு மாறாக, "உயிரை மதியுங்கள்! கொல்லாதிருங்கள்!" என்றே கூறப்பட்டுள்ளது.

கொல்லாமை அறப்போதனைகள் எல்லா உலகச் சமயங்களிலும் காணப்படுகிறது. எனவேதான் கொல் என்ற அரசியல் கட்டளைக்கும் கொல்லாமை என்ற ஆன்மீகப் பற்றுறுதிக்கும் இடையே தீர்க்க முடியாத முரண் உள்ளது என மாக்ஸ் வீபர் கூறுகிறார். "அகிம்சை பரம தர்மம் (அகிம்சையே வாழ்வின் மிக உயரிய தர்மம்)" என சமண சமயமும் இந்து சமயமும் போதிக்கின்றன. புத்த சமயத்தின் முதலாவது கட்டளை "கொல்வதிலிருந்து விலகியிருங்கள்" என்பதாகும். "கொல்லாதிருங்கள்" என்ற இறைக் கட்டளையை யூத, கிறித்தவ மற்றும் இஸ்லாமிய சமயங்கள் பகிர்ந்து கொள்கின்றன. யூத சமயத்தின் மிகப் பழமையான போதனை வருமாறு: ஒரு நபரின் உயிரை யார் காக்கிறாரோ அவர் பலரின் உயிரைக் காத்தவர் ஆவார். ஆனால் ஒருவரின் உயிரை அழிப்பவர் உலகையே அழிப்பவர் போலாவார். இந்தப் போதனையின் உள்ளீடு, நிபந்தனையுடன், இஸ்லாத்தில் தொடர்கிறது. "யார் ஒரு மானிடரைக் கொல்கிறாரோ– கொலை புரிந்தவருக்கு" மற்றும் நாட்டில் தீமையைப் பரப்புபவருக்குத் தண்டனையாகக் கொல்வது நீங்கலாக–அவர் அனைத்து மானிடத்தையும் கொல்பவராகிறார்; யார் ஓர் உயிரைக் காக்கிறாரோ, அவர் மானிட இனத்தையே காக்கிறார்." யூத, கிறித்தவ, இஸ்லாமிய போதனைகளை உள்ளடக்கிய பகாய் சமயம் பின்வருமாறு கட்டளையிடுகிறது. "கடவுளுக்கு அஞ்சுங்கள், ஓ! மக்களே, எவரொருவரின் இரத்தத்தைச் சிந்துவதிலிருந்து விலகி இருங்கள்."

மானிடநேய மரபுகளும் கொல்லாமைச் சமூகத்தின் அவசியத்தையும் சாத்தியத்தையும் ஆதரிக்கின்றன. ஆட்சியாளரிடம் ஒழுக்கம் நிலவ, மரண தண்டனை தேவையில்லை என்கிறது கன்பூசிய சமயம். மக்கள் எளிமையாகவும் அகமலர்ச்சியுடனும் இயற்கையுடன் இயைபுடனும் வாழும் பொழுது, "போர் ஆயுதங்களை யாரும் பயன்படுத்தவோ பயிற்சி செய்யவோ மாட்டார்கள்." நவீன சோசலிசச் சிந்தனையில் தொழிலாளர்கள் ஒருவரையொருவர் கொல்வதற்கு ஆதரவு தர மறுத்தால் போர்கள் நின்றுவிடும். முதலாம் உலகப்போர் எதிர்ப்புப் பிரகடனம் பின்வருமாறு.

*மார்க்க உணர்வு உடைய உறுப்பினர்களான உலகத் தொழிலாளர்கள் மானிடர்களின் இரத்தத்தைச் சிந்துவதை மனச்சான்றின்படி எதிர்க்கிறோம்."* குவேக்கர்கள் மற்றும் *"நண்பர் சமூகங்களைப் போல இது சமயக் காரணங்களுக்காக அன்று-ஏனெனில் உழைக்கும் வர்க்கத்தின் நலன்கள் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி சமமாக உள்ளன. ஏகாதிபத்திய முதலாளித்துவ ஜெர்மானிய அரசை நாங்கள் கடுமையாக எதிர்க்கும் வேளையில், எந்நாட்டின் தொழிலாளரையும் கொல்வதையும் ஊனப்படுத்துவதையும் நாங்கள் எதிர்க்கிறோம்."*

எல்லாச் சமூகங்களிலும் கொலை நிராகரிக்கப் படுகிறது. உயிரைப் போற்றும் சமயங்களுக்கு இணையாக மானிடநேய மரபுகளும் உயிரைப் போற்றுகின்றன.

கொல்லாமைச் சமூகத்தை உருவாக்குவதில் உலக ஆன்மீக மற்றும் மானிடநேய மரபுகளிலுள்ள கொல்லாமை அறம் என்ன முக்கியத்துவம் பெறுகிறது? மானிட இனத்தின் விழிப்புணர்வில் மானிட உயிர்மீது மகத்தான போற்றுதலை (மரியாதையை) விதைத்து வளர்க்க விரும்பும் தெய்வீக நோக்கத்தை இது ஒருபுறம் வெளிப்படுத்துகிறது. இத்தகு கோட்பாட்டைப் பெற்றிட, வளர்த்திட, படைத்திட மானிடருக்குள்ள திறனை இன்னொருபுறம் அது எடுத்துக் காட்டுகிறது. மானிடர் இயல்பிலேயே குணப்படுத்த முடியாத கொலைஞர் என்றால் கொல்லாமைக் கோட்பாட்டைப் பெறுவதும், பிறருக்குத் தருவதும் ஆக்குவதும் சாத்தியமல்ல. கொல்லாமை ஆன்மீக அறநெறி மேல்மட்டத்தினரால் புரட்சியைப் பலவீனப்படுத்தவும், ஒடுக்கப்பட்டவர்களால் ஒடுக்குவோரைப் பலவீனப்படுத்தவும் அல்லது கொலை காரர்களால் தண்டனைக்குத் தப்புவதற்கும் கண்டுபிடிக்கப் பட்டிருந்தாலும் அதன் பொருள் அது எந்த மானிடருக்குத் தரப்பட்டதோ அவர்களால் அதனை ஆக்கப்பூர்வமாக ஏற்கமுடியும் என்பதேயாகும்.

வரலாற்றின் மிகவும் கொடுமையான இரத்தம் சிந்தல்களின் பொழுது அல்லது அதற்குப் பிறகு கொல்லாமை உணர்வு எழுச்சி பெற்றுள்ளது. அதன் வெளிப்பாடு கொலைகாரர்களால் மானிடத்துக்கு நலம் பயக்க வழங்கப்பட்ட ஆடம்பரமட்டுமன்று. கொல்லாமை உணர்வு நமது காலத்தில் ஒடுக்க இயலாத அளவு உயிர்த்துடிப்புடன் உள்ளது. அது சிலுவைப் போர்களுக்காகப் பிந்திய கிறித்தவம், படை

வெற்றிகளுக்குப் பிந்திய இஸ்லாம், இனப் பேரழிவுக்குப் பிந்திய யூதம், படைபலத்துக்குப் பிந்திய பௌத்தம், காலனி ஆட்சி மரபுக்குப் பிந்திய பாரம்பரிய மக்கள் ஆகியவர்களை கொலை வெறியிலிருந்து சுதந்திரத்துக்குப் பரவசப் படுத்தியுள்ளது. கொலைவெறியிலிருந்த இருபதாம் நூற்றாண்டில் கிறித்தவர் டால்ஸ்டாய் மற்றும் மார்ட்டின் லூதர் கிங், இந்து மகாத்மா காந்தி, இஸ்லாமியர் கான் அப்துல் கபார்கான், யூதர் ஜோசப் அபிலிய (Joseph Abileah), பௌத்தர் தலாய் லாமா, பசுமை இயக்க பெட்ரா கெல்லி மற்றும் கணக்கற்ற பலர்– அவர்களில் புகழ் பெற்றோர் உண்டு. உலகம் அறியாத சாதனையாளர்களும் உண்டு–அகிம்சை வழி உலக மாற்றத்துக்கு வீரமும் தீரமும் நிறைந்த பங்களிப்பு செய்துள்ளனர்.

ஒவ்வொரு சமயத்திலும் கொல்லாமை உணர்வு இருப்பதும் அதற்காகப் பற்றுறுதியுடன் செயல்படுபவர்களின் முன் உதாரணங்கள் இருப்பதும் லட்சக்கணக்கான சக நம்பிக்கையாளர் களை விழிப்புணர்வு பெறச் செய்து ஆக்கமாக செயல்படத் தூண்டுகின்றன. கொல்லாமையின் கட்டாயத் தேவைக்கும் *கொலைபுரிதல் மற்றும் அதன் தீய விளைவுகள்* ஆகியவற்றுக்கும் இடையில் இயைபின்மை இறுக்கம் ஏற்படுகிறது. இது கொல்லாமை வழி தனிப்பட்ட மற்றும் சமூக மாற்றங்களுக்கான ஆக்கப்பூர்வமான ஊக்குதலைத் தருகிறது. கொல்லாமையின் வேர்கள் ஒவ்வொரு மரபிலும் காணப்பட்டாலும் மானிட இனத்தின் ஒட்டு மொத்தமான ஆன்மீக மரபு ஓர் ஆலமரத்தினைக் காக்கும் பல்கூறுகளான வேர்த் தொகுதிபோல் அமைந்துள்ளது. முழு வேர்த் தொகுதியிலுருந்தோ அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியிலிருந்தோ பரவசமும் வாழ்வதற்கான ஊட்டமும் பெறலாம். அனைத்தும் வர்ழும் ஆற்றலைப் பெறுகின்றன. கொல்லாமை உலகச் சமூகம் சாத்தியம் என்ற நம்பிக்கைக்கான வலுவான ஆன்மீக அடிப்படையைச் சமய மற்றும் மானிட நேயப் பற்றுறுதிகளின் "உயிர்களைப் போற்றும்" உண்மையானது தருகிறது.

## அறிவியல் வேர்கள்

"நாம் சமயத்தால் மட்டும் அகிம்சையை அடைய மாட்டோம்" என்கிறார் இந்தியாவின் பழம்பெரும் சமண சமய அகிம்சை மரபின் வாரிசான முன்னணி இந்திய சமயத் தலைவர் ஆச்சாரிய மகாபிரக்ய அடிகள். சமணச் சிந்தனையில் வாழ்வின் எல்லா நிலைகளின் மையம்

அகிம்சையாகும். புனித நூல்களின் (திருமறைகளின்) மையம் அகிம்சையாகும். அனைத்து விரதங்கள், ஒழுக்கங்களின் மையம் அகிம்சையாகும். ஆச்சார்ய மகாபிரக்ய அடிகள் அகிம்சை சமூகத்தை உருவாக்க ஒரு புதுவழியைக் காட்டுகிறார். நவீன நரம்பியல் விஞ்ஞானத்தை (neuro science) ஆன்மீக உண்மைகளுடன் இணைத்து தனிநபர்கள் அகிம்சையை தமக்குள் காணவும் அதனைச் சமூக ரீதியாக வெளிப் படுத்தவும் அவர்களை வலுவூட்ட வேண்டும் என்கிறார் அவர். தமது ஆய்வுகளின் வழி நாளமில்லாச் சுரப்பிகளால் உருவாக்கப்படும் உணர்ச்சிகளால் வன்முறை எழுகிறது; அது பரிவு மற்றும் புறப்பரிவு நரம்பு மண்டலங்களைப் (sympathetic and parasympathetic nervous system) பாதிக்கிறது. நாம் சாப்பிடுவதை ஒட்டி அது அமைகிறது. நரம்பு மண்டலம் பற்றிய அறிவியல் பூர்வமான உண்மைகளின் அடிப்படையில் நமது மூளையின் ஆற்றலை எளிய தியானப் பயிற்சிகள் வழி அகிம்சையை நமக்குள் வளர்க்கவும் அகிம்சை சமூக வாழ்விற்கு நம்மை அர்ப்பணிக்கவும் பயன்படுத்தலாம்.

அகிம்சைக்கான மானிடத் திறன்கள் பற்றிய நம்பிக்கைக்கான அறிவியல் அடித்தளங்கள் யாவை? இங்கு அறிவியல் என்பது ஒன்றின் உண்மையையும் நம்பகத் தன்மையையும் தீர்மானிப்பதற்கான தகவல்கள் (மெய்மைகள்– facts), கோட்பாடுகள், வழிமுறைகள் ஆகியவற்றை கேள்வி கேட்டும், பரிசோதித்தும் பெறும் அனைத்து அறிவு வடிவங்களையும் குறிக்கும். ஏற்கப்பட்ட சிந்தனையைத் தத்துவஞானிகள் கேள்வி கேட்கத் தொடங்கும் பொழுது ஓர் அறிவியல் புரட்சியின் முன்னோடியாக அவர்கள் ஆகின்றனர்.

கற்பழிப்பிலிருந்து பேரழிவு வரை வன்முறையைத் திறம்படக் கையாள ஒரே வழி கொல்லத் தயாராக இருப்பதுவே என்ற மரபான எடுகோளை ரிச்சர்டு ஏ. கொனார்டு (Richard A. Konrad) கேள்வி கேட்டு அகிம்சைக்கு இதனைச் செய்தார். பூசல் தீர்வுக்கு வன்முறையே ஒரே வழி என்ற கோட்பாடு மூன்று எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது என கொனார்டு வாதிடுகிறார்; எல்லா அகிம்சை மாற்றுக்களும் இனம் கண்டு கொள்ளப்பட்டுள்ளன; அவை அனைத்தும் முயன்று பார்க்கப்பட்டுள்ளன; மேலும் அவை அனைத்தும் தோல்வி அடைந்து விட்டன. ஆனால் இவ் எடுகோள்கள் அனைத்தும் ஏற்புடையன அன்று: அகிம்சைவழி சிக்கல் தீர்வு

மாற்றுக்கள் சித்தாந்த ரீதியில் எல்லையற்றவை; காலம், வளங்கள் ஆகியவற்றின் தட்டுப்பாடு மற்றும் இதர காரணிகள் முதலியன. ஏற்கனவே இனங்காணப்பட்டவைகளையே பரிசோதிப்பதற்குத் தடையாக உள்ளன. எனவே வன்முறை மாற்று ஒன்றே வெற்றி பெறும் என நாம் முடிவு கட்ட முடியாது. தத்துவ ரீதியாக முன்கூட்டியே வன்முறையை ஏற்கும் நிலையிலிருந்து மாறி அகிம்சை மாற்றுக்களை உருவாக்கிப் பரிசோதிக்கும் தேடலை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய அணுகல் முறை "மானிடக் கொலை வெறியைத் தவிர்க்க இயலாது" என்பதைக் கேள்வி கேட்கும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

மானிடர்கள் தமது மிருக இயற்கையால், தவிர்க்க இயலாத வகையில் கொலைகாரர்களாக இருப்பர் என்ற எடுகோள் இன்று கேள்வி கேட்கப்படுகிறது. எலியைக் கொல்லும் பூனையும், பூனைக்கு உணவாகும் எலியும் ஒரே தட்டிலிருந்து ஒன்றாக உணவு உட்கொள்ளுமாறு கற்பிக்கப்பட முடியும் என்பதை துலேன் பல்கலைக்கழக (Tulane University) உளவியல் அறிஞர் லொ டசெங் டசை (Loh Tseng Tsai) நிருபித்துக் காட்டியுள்ளார். அவர் "ஆபரெண்ட் கன்டிஷனிங்" (Operant Conditioning) மற்றும் "சமூகக் கற்றல்" (Social learning) ஆகிய இருமுறைகளையும் இணைத்து ஒரு வழிமுறை மூலம் இதனைச் சாதித்தார். ஒரு கண்ணாடித் தடுப்பால் பிரிக்கப்பட்ட கூண்டில் இவை இரண்டும் தனித்தனியே விடப் பட்டன. அவை உணவு பெற இரண்டும் சேர்ந்து ஒன்றாக ஒரே நேரத்தில் இணையாக (கண்ணாடித் தடுப்பால் பாதி பிரிக்கப்பட்டு) அமைக்கப்பட்ட விசை மேடையை அழுத்த வேண்டும். 700 பயிற்சி வகுப்புகளுக்குப் பிறகு இடையே யிருந்த கண்ணாடித் தடுப்பு நீக்கப்பட்டது. ஆனால் எவ்வித இரத்தம் சிந்தலும் நிகழவில்லை.

லொ டசெங் டசை பின்வருமாறு முடிவு கட்டுகிறார் :

> *"இயல்பான எதிரிகள் என்று சொல்லப்படும் பூனையும் எலியும் கூட்டுறவாக வாழ முடியும் என்பதை அறிவியலில் வரலாற்றில் முதல் முறையாக பரிசோதனை வாயிலாகக் காட்டியுள்ளோம். மிருக இயற்கையின் மாற்றமில்லாத கொலைவெறி போரைத் தவிர்க்க இயலாததாக ஆக்குகிறது என்ற மரபான உளவியல் கோட்பாட்டை இக்கண்டுபிடிப்பு தாக்கி எறிகிறது."*

"எங்களது ஆய்வு கோட்பாட்டு ரீதியாக உலக

அமைதிக்கான சாத்தியத்திற்கான உயிரியல் அடிப்படையை உருவாக்கித் தந்துள்ளது" எனக் கூறும் லொ டசெங் டசை, தப்பிக்க இயலாத கொலைவெறிப் போட்டி தொடர்கிறது என்பதற்கு மாற்றாக கூட்டுறவு வழியாக வாழ்வு, என்ற புதிய அறிவியல் அடிப்படையிலான தத்துவம் தேவை என்கிறார். பௌதிவியல் அறிஞரும் அறிவியல் வரலாற்றாசிரியருமான அந்தோனியோ டிரகோ (Antonino Drago) நியூட்டனிய இயந்திரவியல் கோட்பாட்டிற்கு மாறாக முழுமை அணுகல் முறையானது "சிக்கல் தீர்வுக்கு" ஏற்படுத்தும் தாக்கத்தைக் கொண்டு "கடந்தநிலை ஒத்துழைப்பு" என்ற அறிவியல் அடிப்படையிலான பரிந்துரையைச் சிக்கல் தீர்வுக்கு வழங்குகிறார். மிகவும் ஆபத்தான பகைமையை மாற்ற பரஸ்பர இலாபமாக இருக்கும் பொதுவான இலக்குகளை நோக்கிய ஒத்துழைப்பை உளவியல் சிகிட்சையாளர் ஜெரொம் டிபிரங்க் (Jerome D. Frank) பரிந்துரைக்கிறார்.

மானிடரின் கொலைவெறி "கொல்லும் குரங்கிலிருந்து" பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது என்ற எடுகோளுக்கு மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள கொல்லாமை பொனொபொ (bonobo) என்னும் மானிடரை ஒத்த குரங்குகளைப் பற்றிய புதிய மரபணு ஆய்வுகள் இன்று சவால் விடுகின்றன. காங்கோவின் மங்கந்து (Mangandu) பழங்குடி மக்கள் பொனொபொ குரங்குகளுடன் சேர்ந்து வெப்ப மண்டலக் காடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் அவற்றைக் கொல்வது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அப்பழங்குடி மக்களும் அக்குரங்கு இனமும் முன்னொரு காலத்தில் ஒரு தாய்மக்களாகக் கூடி வாழ்ந்ததாகப் புராணக் கதைகள் உள்ளன. கொரில்லா, சிம்பன்சி மற்றும் பிற குரங்கு இனங்களுடன் ஒப்பு நோக்குகையில் பொனொபொ ஒன்றையொன்று கொல்வது என்பதற்கு ஆதாரமே கவனிக்கப்படவில்லை. மானிடருக்கு முந்திய குரங்கு இனங்களில் கொல்லக் கூடியவைகளிலும் "அமைதி ஆக்க" மற்றும் "திருப்பித்தரும் பொதுநலம்" இருப்பதை புதிய ஆய்வுகள் காட்டியுள்ளன. மானிட பரிணாம வளர்ச்சி இயற்கையில் கொலை வெறித்தன்மையை மட்டும் காட்டி அகிம்சைக்கான உள்ளார்ந்த ஆற்றல்களை காட்டாத போக்குக்கு இது சவால் விடுகிறது. மிருக இயற்கையிலும் கூட்டுறவான, பொதுநலமான மற்றும் "ஒளிமயமான" பக்கம் ஒன்று உண்டு என்பதை கிரபொட்கின், (Kropotkin),

சொறொக்கின், (Sorokin), அல்பியி கொகன் (Alfie Kshn) ஆகியோர் காட்டியுள்ளனர்.

மிருகங்களிலும் மானிடரிலும் சண்டையிடும் பண்பு பற்றிய ஒப்பியல் ஆய்வினை இரினாஸ் எபி–எபெஸ்பெல்ட் (Irenaus Eibi-Eibesfeldt) என்னும் மானிடலியல் அறிஞர் மேற்கொண்டார். "கொல்லாதிருங்கள்" என்னும் ஆன்மீகக் கட்டளைக்கு உயிரியல் அடிப்படை ஒன்று உண்டு என அவர் கண்டார். பல மிருகங்களில் அந்தந்த இனத்துக்குள்ளான வன்முறை மோதல் உடலில் காயம் ஏற்படுத்தாத அளவிற்கு சடங்காக மாற்றப்பட்டுள்ளதை அவர் கண்டார். மானிடரிலும் இரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பதற்கு இது போன்ற மிகவும் விரிவான மானிட உத்திகளை அவர் காண்கிறார். ஓரளவுக்கு ஓர் உயிரியல் அற வடிகட்டி(biological norm filter) "கொல்லாதிருங்கள்" என்னும் கட்டளையை இடுகிறது என அவர் கருதுகிறார். ஆனால் பிறரை "முழு மானிடர்" இல்லை எனக் கருதும் போக்கு பண்பாட்டு அம்சங்களால் சுமத்தப் படுகிறது; "முழு மானிடராக" இல்லாத அவர்களைக் கொல்லலாம் என்றாகிறது. "கொல்லாதிருங்கள்" என்ற உயிரியல் அற வடிகட்டியின் மீது அமையும் கட்டளையை "முழுமானிடரல்ல" (அவர்கள் எதிரிகள்; பாபிகள்; அரக்கர்கள்; தீயவர்கள்; அநீதிக்காரர்கள்) எனவே அவர்களைக் "கொல்லுங்கள்" என பண்பாட்டு அற வடிகட்டி கொல்ல வழிவகுக்கிறது. இது அறக் கட்டளைகளுக்கிடையேயான மோதலுக்கு வழிவகுக்கிறது; எதிரியைக் கைப்பற்றி அவரை மானிடராக எதிர்கொள்ளும் பொழுது மானிடரின் மனச்சான்று குத்துகிறது. கொல்லுதல் மிகுந்த போருக்குப்பின்னர் படையினர் தம்மைத் தூய்மையாக்கிக் கொள்ளவும் சமூக அங்கீகாரம் பெறவும் வேண்டியுள்ளமை இதனைக் காட்டும்.

"வரலாறு முழுவதிலும் போர்க்களத்தில் பெரும் பான்மையினர் எதிரியைக் கொல்ல முற்படுவதில்லை; தமது வாழ்வையும் அல்லது நண்பர்களையும் காப்பாற்றக்கூட அங்ஙனம் செய்ய முற்படுவதில்லை" என் கிராஸ்மான் (Grossman) கண்டுள்ளார். கொல்லாத படையினரைவிட நேரடியாகக் கொன்ற படையினரிடமே அதிகமான உளவியல் மனநோய் தாக்கம் உள்ளது. இவ்விரு அறிஞர்களிடமும் தங்கள் கண்டுபிடிப்புகளின் விளைவான கொள்கை முடிவுகள் பற்றியே கருத்துமாறுபாடு உள்ளது. எபல்–எபிஸ்பெல்ட்

(Eibl-Eibesfeldt) கொல்வதற்குரிய தடைகளைச் சரிசெய்ய எத்தகு பயிற்சி தேவை எனச் சிந்திக்கிறார். கிராஸ்மன் கொல்லாமை உயிரியலுடன் பண்பாட்டு அம்சத்தையும் இணைக்க முயல்கிறார். எபி–எபிஸ்பெல்ட் பின்வருமாறு முடிவு கூறுகிறார்:

> *"மானிடர் தமது உயிரியல் மற்றும் பண்பாட்டு வடிகட்டிகளை* (biological and cultural norm filter) *இயைபாக்கிடுவதில் அவர்களது உலக அமைதிக்கான ஆர்வத்தின் வேர் உள்ளது. நமது மனச்சான்றே நமது நம்பிக்கையாக உள்ளது. அதன் அடிப்படையில் பகுத்தறிவினால் வழிநடத்தப்படும் பரிணாமம் அமைதிக்கு இட்டுச் செல்ல முடியும். போர் செய்து வரும் பணிகளைச் செய்வதற்கு இரத்தம் சிந்தாத வேறொரு வழி தேவைப்படுகிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும்."*

மானிடரின் கொல்லாமை உள்ளார்ந்த ஆற்றலுக்கான புதிய நம்பிக்கையையும் ஆதரவையும் மூளை அறிவியல் (Brain Science) தருகிறது. புருஸ் மார்ட்டன்(Bruce E.Morton) என்னும் முன்னோடி நரம்பு விஞ்ஞானி தனது அணுகல் முறையை "நரம்பு யதார்த்தம்" (Neuro realism) என்கிறார். கொல்லாமை மற்றும் கொல்லுதலின் நரம்பு உயிரியல் அடிப்படையை அவர் விவரிக்கிறார். நான்கு பகுதிகளாக மூளை இரண்டு முறைகளாகச் செயல்படுகிறது. இயல்பூக்கங்கள்(instincts) மூளையின் அடிப்படையான உள்ளீடான அமைப்பாகும். பக்க உறுப்பாக உணர்ச்சிகளும் வலதுபுறம் கற்பனையும் இடதுபுறம் பகுத்தறிவும் அமைந்துள்ளன. சிறுமூளையில் (neocerebellar) அமைப்பு உள்உணர்வுக்கு (intuition) இடமாக உள்ளது. ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வுக்கான மையமாக இது அமைந்துள்ளதாக மார்ட்டன் கருதுகிறார். இந்த "உயிர்ம வளம் என்பது உண்மை, ஆக்கத்தன்மை, சுயகட்டுப்பாடு, பொதுநலம், கூட்டுறவு, பரிவு மற்றும் அகிம்சை" ஆகியவனவாகும். குழுவின் நீண்டகால உயிர் வாழ்வை இது சாத்தியமாக்குகிறது. இது நிச்சயம் மூளையைச் சார்ந்துள்ள, அனைவருக்கும் கிடைக்கக்கூடிய ஒன்றாகும். இந்த "வளம்" தோன்றுவதை விழிப்புணர்வாக்க மூன்று வழிகள் உள்ளன. அவை, 1) ஏறக்குறைய மரண நிலை (near-death trauma) புற அதிர்ச்சி (துயர்) அனுபவம் 2) ஆழ் மயக்க நிலையை உண்டாக்கும் சிலவகை போதைப் பொருட்கள் 3) மிகவும் முக்கியமானது, சில தியான

முறைகளாகும். நமது அன்றாட சமூக வாழ்வில், இந்த "வளமானது," "அகிம்சைக் குழுமம்" உருவாவதை நோக்கி கூட்டுச் சக்தியால் மிகுதியான நலன்களைச் சாத்தியமாக்குகிறது. உயிர் வாழ்வுக்கான கொலை அச்சுறுத்தல் இன்மையால் வரும் நன்மையுடன் அந்த அச்சுறுத்தல் மேலும் நீங்கவும் உதவுகிறது.

கொல்லாமை ஆன்மீகம் மற்றும் கொல்வதற்கு உயிரியல் ரீதியான தயக்கம் ஆகியவற்றுடன் முழுவதும் இயைபுடைய, சுயமாக ஆக்கம், பெற்ற அகிம்சை மீதான பற்றுறுதி மற்றும் சமூக மாற்றத்துக்கு நரம்பு யதார்த்த மூளை (neuro'realist brain) விஞ்ஞானம் ஓர் அடிப்படையைத் தருகிறது. "கடவுளைப் புறத்திலிருந்து கொண்டுவருவதற்கு உதவுவதல்ல; ஒவ்வொருவருக்குள்ளும் அகமாக உள்ள கடவுள் *தன்மையை அவரவர்* உணர உதவுவதே *மாபெரும்* சமயத் தலைவர்களின் பணியாகும்" என்ற இந்து சுவாமி விவேகானந்தரின் ஆழ்ந்த கருத்துடன் இது இயைபுடையதாகும்."கடவுளின் ராஜ்ஜியம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது" என்ற கிறித்துவ ஞானி லியோ டால்ஸ்டாயின் கருத்தை இது எதிரொலிக்கிறது. 15 ஆம் நூற்றாண்டு இந்திய இஸ்லாமிய இறைஞானி கபீரின் ஆழ்ந்த காட்சியையும் இத்துடன் ஒப்பிடலாம்.

*"இருகண்களுக்கு நடுவே எஜமானர்,*
*கடவுளின் தூதர்*
*கடவுள் உங்களது உடம்புக்குள்ளேயே உறைகிறார்,*
*ஏன் அவரைக் காண புறக்கண்களைத் திறக்கிறீர்கள்"*

ஆனால் உயிரியல் அடிப்படையில் மூளையின் தவறான செயல்பாட்டால் சிலர் கட்டாயமான கொலைகாரர்களாக மாறும் அபாயம் உள்ளதா? இத்தகு கொலைவெறித்தனம் உயிரியல் ரீதியாக உந்தப்பட்டாலும்கூட—அது சூழல் மற்றும் பண்பாட்டால் உருவாகவில்லையாயினும்—அதனைச் சரிசெய்ய அறிவியல் முயலும்; அங்ஙனம் செய்யும் பொழுது பிறமானிடப் பண்புகளைப் பாதிக்காமல் செய்யப்படும் எனக் கூறப்படுகிறது. நவீன நரம்பியல் அறிவியல், மரபணுவியல் மற்றும் பிற உயிரியல் அறிவியல்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சியுடன்— "மானிட இயல்பின்" கொலை வெறித்தனம் தவிர்க்க முடியாத உயிரியல் குறைபாடாக இருந்தாலும் கூட—கொலைவெறித்தனம் மானிட இயல்பு என்று கூறிவிட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

நரம்பு வளர்ச்சி உளவியல் அறிஞர். ஜேம்ஸ் (developmental neuropsychologist) டபிள்யூ பிரஸ்காட் (James W. Prescott) மற்றும் நரம்பு உளவியல் மருத்துவர் (neuropsychiatrist) ராபர்ட் ஜி.ஹீத் (Robert G.Heath) ஆகியோர் தமது அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆய்வின் வழி ஒரு முன்னோடியான சான்றினைத் தந்துள்ளனர். சிலரின் கொலைகார உணர்வு "மகிழ்ச்சிப் பாதைகள்" என்று சொல்லப் படும். மின்சாரச் சுற்றுக்கள் சீர்கெட அவை மூளையில் சேர்க்கும் உணர்வு மற்றும் உடலின் இயக்க மண்டலங்கள் (Limbic system & cerebellum) பாதிக்க எழுகின்றன என்று கோட்பாட்டை அவர்கள் உருவாக்கி உள்ளனர். குழந்தைப் பருவ வளர்ச்சியில் உடம்பின் வட்டவடிவிலான இயக்கத்தை ஒட்டி இந்த சுற்றுக்களின் வளர்ச்சியும் சீர்கேடும் அமைந்துள்ளது என அவர்கள் முன் முடிவினைக் கொண்டுள்ளனர். ஒரு சிம்பன்சி குட்டியைத் தனது தலையை அசைக்க முடியாதவாறு செய்து, வளர்த்து பின்னர் பரிசோதித்த பொழுது அது அதிக கொலைவெறி மிக்கதாக இருந்தது. நன்கு அசைந்து வளர்ந்த சிம்பன்சி சமூகப் பான்மையுடன் நடந்து கொண்டது. இதனை மானிட நிலைக்குப் பயன்படுத்த, நிறுவனக் கொலைகாரர்களின் வறண்ட மூளையில் ஒரு சிறிய எலக்ரொடை (electrode) பதித்து அதனைத் தானே சுயமாக இயக்க பாக்கெட் பேஸ்மேக்கரைத் (செரிபெல்லர் ஸ்டிமுலெட்டர் அல்லது பேஸ்மேக்கரைத்–cerebellar stimulator or pacemaker-) தோலில் பதித்தனர். ஒருவருக்கு நம்பிக்கையற்ற, சோர்வான, கொலையுணர்வு தோன்றுகையில், அவர் தமது மூளையில் மகிழ்வுப் பாதைகளை தீவிரமாக இயங்கச் செய்து, அவ் எதிர்மறை உணர்வுகளைப் போக்கலாம். குற்றவியல் பைத்தியங்கள் என முடிவு கட்டப்பட்டு தனிமைச் சிறையில் வைக்கப்பட்டவர்களுக்கு இம்முறை உடனடிப் பலனைத் தந்தது. பிறர் கொலை, தற்கொலை உந்துதல்கள் மெல்ல மறைவதை உணர்ந்தனர். இதில் தோல்விகளும் ஏற்பட்டன. ஒரு பரிசோதனையில் செரிபெல்லர் வயர் உடைய, அந்த நபர் உடனடியாகச் செவிலியைக் கொன்றான். இந்த புதுமையான முன்னோடியான நடைமுறையின் வெற்றி மானிடத்தை விடுவிக்கவும் உயிரியல் எதிர்மறைப் போக்கை மாற்றவும் பயன்படும்.

கொல்லாமை பற்றிய நம்பிக்கைக்கான அடித்தளங்கள்– அரசியல் அறிவியலின் ஆழமான எதிர்மறைப்

போக்கோடு இது ஒப்புநோக்கத்தக்கது–ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 23 உளவியல் மருத்துவர்களின் முடிவுகளில் உள்ளன. மார்ட்டின் லூதர் கிங், செனட்டர் இராபர்ட் கென்னடி ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட பொழுது அமெரிக்காவில் வன்முறைச் சிக்கல் பற்றி ஆராய அவர்கள் ஓர் ஆய்வுக் குழுவை அமைத்தனர். வன்முறை மற்றும் ஆக்கிரமிப்பு வெறிப்போக்கு ஆகியன உயிரியல், உளவியல் இயக்கம், சுற்றுச்சூழல், கோபம், குழு மோதல், வெகு ஜன ஊடகம், வெடி ஆயுதங்கள், மனநோய், போதைப் பொருள் பயன்பாடு மற்றும் காரணிகளுடன் கொண்ட உறவை அவர்கள் ஆராய்ந்தனர். இவ் ஆய்வின் ஒரு பகுதியாக டேனியல்ஸ் மற்றும் கிலுல (Daniels and Gilula) பின்வருமாறு முடிவு கட்டினார். மானிடர் வன்முறைக்கு மாற்றை உறுதிபடத் தேடினால், அவர்கள் வன்முறை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி நாம் நிறைய இப்பொழுது அறிந்துள்ளோம்.

கொலைகள் பற்றிய உளவியல் மருத்துவர் ஜார்ஜ் எட் சாலமனின் (George F. Solomon) நிகழ்ச்சி ஆய்வுகள் கொலைகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றைத் தடுக்கும் சாத்தியங்களை அறியவும் உதவுகின்றன. தவிர்க்க முடியாத "மானிட இயற்கை" கொலைப்போக்கு என்ற பழைய நிலைக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். தோற்றத்தில் உணர்ச்சியற்ற வரான அவர் எப்பொழுதாவது பெண்களை பதுங்கியிருந்து கொல்லும் நபராவார். அவர் பெற்றோர்களால் புறக்கணிக்கப் பட்டவர்; அவரின் தந்தை சூதாடி குடிகாரியான ஒழுங்கற்ற தாயால் தீய நெறியில் பழக்கப்படல், துப்பாக்கிகள் மீது பேரார்வம், முறைதகா புணர்ச்சியால் ஏற்பட்ட குற்ற உணர்வைப் பற்றிய பயங்கரமான சித்திரங்களைத் தொலைக்க போதைப் பொருளைப் பயன்படுத்தல் முதலியன. மற்றொரு நிகழ்வில் ஒரு கொலைகாரர் தனது மாஜி மனைவியின் புதிய கணவரைக் கொன்றவராவார். அவரது சூழல் வருமாறு: வறுமை, தாய்க்கு எதிரான வன்முறையால் தந்தையின் மீது வெறுப்பு, தலை மீது பெற்றோரால் அடிக்கப்பட்டு ஏற்பட்ட உடல் நடுக்கம், தாய்வழியில் எள்ளி நகையாடப்படல், அமெரிக்கக் கடற்படையில் முதலாம் சார்ஜண்ட் ஆதல், விபச்சார விடுதியில் சந்தித்த விபச்சாரியை மணந்து இரு பிள்ளைகளைப் பெறல், கடல்கடந்து பணியில் இருக்கும் பொழுது மனைவி தவறி நடந்ததை அறிந்து அவளைத் தாக்கியதுடன் தனது மணிக்கட்டை தானே முறித்துக்

கொள்ளல், 38 கலிபர் கைத்துப்பாக்கியால் மனைவியால் அச்சுறுத்தப்படல், தனது கடற்படை பிஸ்டலைக் கொண்டு தனது மனைவியின் புதிய கணவனுடன், குழந்தைக்கான ஆதரவு, குழந்தையைப் பார்க்க உரிமை பற்றிச் சண்டையிட்டு அவரைக் கொல்லல். சாலமன் எழுதுகிறார் :

*"நான் உளவியல் மருத்துவர் என்ற முறையில் மானிட நடத்தையை மாற்றியமைக்க முடியும் எனப் பற்றுறுதி கொண்டுள்ளேன். தடுத்தல் மற்றும் குணப்படுத்தல் ஆகியவற்றில் நமது தோல்விகள் நமது அறியாமையை அடிப்படையாகக் கொண்டது; அதனை மேலும் ஆராய்ச்சியால் சீர்படுத்த முடியும்; ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை அமல்படுத்தாமை, புத்தாக்கமாகச் செயல்படத் தயக்கம், சமூகத்திலிருந்து விலகிச் செல்பவர் மீது பழிவாங்கும் இயல்பு ஆகியவையே வன்முறையாளரைக் குணப்படுத்தவே முடியாது என்ற உள்ளார்ந்த நிலையைவிட முக்கியமாகும். மானிடரின் வளர்ச்சி மற்றும் குணப்படுத்தவதற்கான செயல் ஆற்றல் மிகுதியாகும். மானிடரது வன்முறை மீதான நாட்டத்தை நிறுத்த முடியும் என நம்பலாம்".*

கொல்லாமைச் சமூகம் சாத்தியமில்லை என்ற நம்பிக்கையைக் கேள்வி கேட்கும் வகையில், மானிடவியலில் (anthrotology) மானிடரின் அகிம்சை மற்றும் அமைதிக்கான திறன்களைப் புரிந்து கொள்வதில் புதிய ஆர்வம் காட்டப் படுகிறது. இது மரபான வன்முறை மற்றும் கொலை வெறிப் போக்கு மீதான வற்புறுத்தலை மாற்றுகிறது. "அகிம்சை மற்றும் அமைதிச் சமூகங்கள் அரிதாக உள்ளன போலத் தோன்றுகின்றன; ஆனால் அவை உண்மையில் அரிதானவை அன்று; மாறாக ஆராய்ச்சியில், ஊடகங்களில் மற்றும் பிறவற்றில் அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை" என லெஸ்லி இ. ஸ்பொன்செல் (Leslie E. Sponsel) கூறுகிறார். அவர் மேலும் கூறுகிறார். "வன்முறை, போர் பற்றிப் புரிந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அகிம்சை மற்றும் அமைதியின் பண்புகள், நிபந்தனைகள், காரணங்கள், செயல்கள், படிமுறைகள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றையும் புரிந்து கொள்வதுமாகும்."

ஆரம்பகால மக்களிடம் எங்கும், அனைவரிடமும் கொலை வெறிப் போக்கு இருந்தது என்ற ஹாப்சின் (Hobbesian) எடுகோளை அறிவியல் பூர்வமாக பியரொ கி

ஓர்கி (Piero Giorgi) மற்றும் ஜே.எம்.ஜி. வான் டெர் டென்னென் (J.M.G. Van der Dennen) கேள்விகள் கேட்டுள்ளனர்: ஒரு நூற்றாண்டு காலமாக மானிடவியல் ஆய்வுகளில் சுமார் 50,000 பழஞ்சமூகங்களின் ஆவணங்கள் பதிவாகியுள்ளன. இதில் 2,000 சமூகங்களுக்கே போர், சண்டையிடல் பற்றிய சான்று உள்ளன. சண்டையிடுதல் பற்றிய செய்திகள் இன்மையே எஞ்சிய 48,000 சமூகங்களும் அமைதியானவை என்பதை நிரூபிப்பதாகாது; ஆனால் பண்டைக்கால மக்கள் கொலை வெறியர்கள் என்ற கோட்பாட்டைக் கண்மூடித் தனமாக நம்பக் கூடாது என வான் டெர் டென்னென் எச்சரிக்கிறார். போரில் ஈடுபடாத 395 பழஞ்சமூகங்களின் சான்றுகளையும் அவர் தருகிறார்.

"அமைதிக்கான" திறன்களைப் பெற்ற 72 பழஞ் சமூகங்களை புருஸ் டி. பொண்டா (Bruce D. Bonta) விரிவான ஆய்வுகள் செய்து அடையாளம் காட்டியுள்ளார்.

*"மக்கள் பரஸ்பர அதிகபட்ச இயைபுடன் வாழ்வது வயது வந்தவர்களுக்கிடையிலும், வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையிலும், இரு பாலர்க்கும் இடையிலும் எவ்வித நேரடி வன்முறையி மின்றி இருப்பது; பூசல்களைத் தீர்ப்பதற்கும் வன்முறையைத் தவிர்ப்பதற்கும் நடைமுறை சாத்தியமான வழிகளை வளர்ப்பது; போர் போன்ற வன்முறையைத் தவிர்க்கப் பற்றுறுதி கொண்டு பாடுபடுவது; அமைதி வழிகளைக் கையாளுமாறு குழந்தைகளை வளர்ப்பது, தாம் அமைதியானவர் என்ற வலுவான விழிப்புணர்வைப் பெறுவது... இவையே 'அமைதியான சமூகம்' என்பதற்கான வரைவிலக்கணம் எனலாம்.*

இவற்றில் 24 பழங்சமூகங்களின் "சிக்கல் தீர்வு" பற்றிய ஆய்வினை பொண்டா மேற்கொண்டார்.

*இச்சமூகங்கள் சிக்கல்களை அமைதிவழியில் தீர்ப்பதில் பெற்றுள்ள வெற்றிகளைக் கொண்டு பார்க்கையில், சிக்கல் மற்றும் சிக்கல் தீர்வு தொடர்பான மேனாட்டு அறிஞர்களின் பல பொதுவான கருத்துக்களைக் கேள்வி கேட்க வேண்டியுள்ளது, அவை வருமாறு: எல்லாச் சமூகங்களிலும் வன்முறைச் சிக்கல் தவிர்க்க இயலாதது; தண்டனையும் ஆயுதமேந்திய படைகளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வன்முறையைத் தவிர்க்கின்றன; சிக்கல்களைத் தவிர்கக அரசியல் அமைப்புக்கள் தேவை; சிக்கலைத் தேவையானதாகவும் ஆக்கமானதாகவும் கருத வேண்டும்: அமைதிச் சமூகங்களில் பாதிக்கும் மேற்பட்டவற்றில் பதிவான வன்முறை இல்லை; வயது*

*வந்தோரை அவை தண்டிப்பது அரிதிலும் அரிது ('ஒதுக்கி வைக்கப்படுவீர்கள்' என்ற அச்சுறுத்தல் நீங்கலாக); தமது சமூகத்திற்குள்ள சிக்கல்களை எங்ஙனம் அமைதி வழியில் தீர்க்கிறார்களோ அங்ஙனமே வெளிச் சமூகங் களுடனான சிக்கல்களையும் கையாள்கிறார்கள். உள் பிரச்சினைகட்கு வெளி அரசாங்க உதவிகளை அவர்கள் நாடுவதில்லை. சிக்கல்களைப் பற்றிய மிகவும் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்"*

பழஞ்சமூகங்களின் வன்முறையின் அதிகமான அல்லது குறைந்த அளவு என்பதை வேறுபடுத்தும் அம்சமாக குழந்தை சமூகமயமாக ஆக்கப்படல் மற்றும் குழும தன் சமன்பாடு ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தில் உள்ளது என மானிடவியல் ஆய்வுகள் மீண்டும், மீண்டும் காட்டுகின்றன. மெக்சிக்கோவின் இரு சபொடெக் கிராமங்களைப் பற்றி டக்ளஸ் பி. பிரை (Dougles P. Fry) ஆய்வு நடத்தினார். அவை இரண்டும் ஒரே மாதிரியான சமூகப் பொருளாதாரப் பண்புகளைப் பெற்றிருந்தன; ஆனால் அவற்றில் வன்முறை நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் இருந்தன. அதில் லா பஸ் (La Paz) என்னும் கிராமத்தில் கொலை அரிதாகவே நடைபெற்றது. அக்கிராம மக்கள் தங்களை "கௌரவமும், அமைதியும், கூட்டுறவும், பொறாமையற்ற தன்மையும் உடையவர்களாய்" நோக்கினார்கள். அதனருகிலுள்ள சன் அன்ட்ரியஸ் (San Andres) கிராமம் வன்முறையானது; அங்கு வன்முறையைப் போற்றும் மதிப்பீடும் நம்பிக்கையும் நிலவியது. "மகளிரை மதிக்காத நிலை, மனைவியை அடித்தல், குழந்தைகளுக்கு வன்முறையான தண்டனை, கீழ்ப்படிதலற்ற குழந்தைகள், சூளுரைக்கும் போக்கு ('சவடால் பேச்சு'), குடித்துவிட்டு சண்டையிடல், காமப் பகையில் கொல்லுதல், குழுச் சண்டைகள், பழி வாங்குதல்" முதலிய அம்சங்கள் அக்கிராமத்தில் அதிகமாக இருந்தன. பொருள் மற்றும் அமைப்பு நிலைகள் சமமாக இருக்க சன்அன்ட்ரியஸ் கிராமத்தில் 1,00,000க்கு 18.1 என்ற விகிதத்திலும் லா பஸ் கிராமத்தில் 1,00,000க்கு 3.4 என்ற விகிதத்திலும் கொலை அளவு உள்ளது. மானிட இயற்கையைப் பற்றிய எதிர்மறை உணர்வு, வன்முறையை ஏற்கும் குழும அறச் சட்டம் முதலியன வன்முறையை அதிகரிக்க வழிவகுக்கின்றன எனப் புரிந்து கொள்ள முடிகிறது; அகிம்சை நம்பிக்கைகளும், மதிப்பீடுகளும் கொல்லாமைச் சமூகத்திற்கான முன் நிபந்தனைகளாக (தயாரிப்புகளாக) உள்ளன.

விலங்கு நடத்தையியல், நடத்தை மரபணுவியல், உயிரியல் மானுடவியல், இனவியல், நரம்பு உடற்கூறியல், உடல் மானுடவியல், அரசியல் உளவியல், உளவியல் மருத்துவம், உளவியல் உயிரியல், சமூக உளவியல், சமூகவியல் முதலிய பல துறை அறிஞர்கள் ஒன்று கூறி 1986 ஆம் ஆண்டு மே 16ஆம் நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த "செவில்லி வன்முறை பற்றிய பிரகடனம்" (Seville Statement on Violence) என்பதை வெளியிட்டனர். கொல்லாமை மானிடத் திறன்கள் பற்றிய நம்பிக்கையைக் கூட்டுவதற்கு இந்த மாபெரும் அறிக்கை ஆதரவு தருகிறது. அப்பிரகடனம் கூறுகிறது.

*நமது மிருக முன்னோர்களிடமிருந்து போரிடும் போக்கை நாம் பெற்றுள்ளோம் எனக் கூறுவது அறிவியல் பூர்வமாகத் தவறாகும்... போரோ அல்லது ஏனைய வன்முறை நடத்தை முறையோ நமது மரபணுக்கள் வாயிலாக மானிட இயற்கையில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதும் அறிவியல் பூர்வமாகத் தவறாகும். உண்மையான பரிணாம வளர்ச்சியில் வேறெந்த நடத்தையையும் விட கொலைவெறி நடத்தையே மானிடரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதும் அறிவியல் பூர்வமாகத் தவறாகும்... மானிடருக்கு வன்முறை மூளை உள்ளது என்பது அறிவியல் பூர்வமாகத் தவறாகும்... போர் என்பது இயல்பூக்கம் அல்லது ஒரு தனி உந்துதலால் உருவாகிறது என்பது அறிவியல் பூர்வமாக உண்மையன்று.*

ஸ்டான்போர்டு பல்கலைக்கழக உளவியல் மருத்துவப் பேராசிரியர்களின் கொல்லாமைக்கான நம்பிக்கை ஒளிக்கு இணையாக செவில்லி பல்துறை அறிவியல் அறிஞர்களின் உணர்வுகள் உள்ளன. அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள்:

*மானிடரைப் போர் புரியுமாறு உயிரியல் சபிக்கவில்லை என்று நாங்கள் முடிவு கட்டுகிறோம். மானிடத்தை உயிரியல் எதிர்மறைச் சிந்தனை அடிமைப் போக்கிலிருந்து விடுவிக்க முடியும்... தேவையான மாறுதலுக்குரிய செயல்களை நம்பிக்கையுடன் செய்ய மானிடரை வலுவாக்க (வளமையாக்க) வேண்டும். இப்பணிகள் நிறுவன மற்றும் கூட்டுப் பணிகள் ஆயினும், பங்கேற்கும் தனிநபர்களின் விழிப்புணர்வும் அவர்களின் ஆக்க அல்லது எதிர்மறை உணர்வுகளும் மிகவும் முக்கியமாகும். போர்கள் மானிட மனத்தில் தோன்றுவது போல, அமைதியும் மானிட மனதிலேயே தோன்ற வேண்டும். போரைக் கண்டுபிடித்த அதே இனம் அமைதியையும் கண்டுபிடிக்க வேண்டும். இந்தப் பொறுப்பு நம் ஒவ்வொருவர் மீதும் உள்ளது.*

'மிகவும் சக்தி வாய்ந்த புதுவகையான குண்டுகளைத் தயாரிக்கும் அளவுக்கு அணுவிஞ்ஞானம் வளர்ச்சியைக் கண்டுள்ளது' என அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட்க்கு ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு 2ஆம் நாள் கடிதம் எழுதினார். இத்தகவலின் விளைவாக அமெரிக்க அரசின் ஆறாயிரம் டாலர்கள் முதலீட்டில் ஓர் ஆலோசனைக் குழு நிறுவப்பட்டது; பல பில்லியன் டாலர் மான்ஹட்டன் திட்டம் உருவாயிற்று; ஆறாண்டுகட்கு பின்னால் உபயோகிக்கப்பட்ட உலகின் முதலாவது யுரேனியம் மற்றும் புளுடோனியம் குண்டுகள் தயாரிக்கப்பட்டன. அறுபதாண்டு களுக்குப் பிறகு அகிம்சைக்கான மானிடரின் திறன்கள் பற்றிய அறிவியல் ஆதாரங்கள் உருவாகியுள்ளன. அவற்றை முறையாக இணைத்து மேலே வளர்த்தால் கொல்லாமைக்கான மானிட சுய மடைமாற்றத்துக்கு அது இட்டுச் செல்லும். 1963க்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் ஒருநூறு டாக்டர் (Ph.D.) பட்ட ஆய்வு ஏடுகளுக்கும் அதிகமாக அகிம்சை பற்றிய ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. இவை மானுடவியல், வரலாறு, மொழி மற்றும் இலக்கியம், தத்துவம், உளவியல், அரசியல் அறிவியல், சமயம், சமூகவியல், இறையியல் முதலிய பல்துறைகளைச் சேர்ந்தவை.

இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகள், ஆங்கிலம் தவிர பிற மொழிகளில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகள், ஆய்வு மாநாடுகளில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள், நூல்கள், பல்துறை கருத்தரங்குகள், புதிய ஆய்விதழ்கள், அகிம்சைப் போராட்டங்கள் பற்றிய சர்வேக்கள், மற்றும் இன்ன பிற என அகிம்சை அறிவு குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது; அமைதி மற்றும் சிக்கல் தீர்வு பற்றிய இலக்கியங்கள் பெருகியுள்ளன. இன்றைய அகிம்சை பற்றிய அறிவு 1939இல் அணு பௌதிகவியல் (atomic physics) அறிவின் வளர்ச்சி நிலையோடு ஒப்பிடத்தக்கதாக உள்ளது.

## கொல்லாமைத் திறனின் முக்கிய வெளிப்பாடுகள்

நவீன சமூகவியலின் நிறுவனரான எமிலி டர்ஹேம் (Emile Durkheim,1858-1917) சமூக வாழ்வு பற்றிய குறிப்பிடத்தக்க வெளிப்பாடுகளைப் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். இதனடிப்படையில் சமூகவியல் சித்தாந்தம் பற்றி அறிய முடியும். ''இயல்பாக

நிகழும் சமூகப் பரிசோதனை களை" சோதனைச் சாலைகளில் முயன்று கண்டுபிடிப்பது போன்று கூர்ந்து நோக்க வேண்டும் என அமெரிக்க சமூக உளவியல் அறிஞர் டொனால்டு டி.கேம்பல் (Donald T. Campbell) குறிப்பிடுகிறார். மக்கியவெல்லி தமது *பிரின்ஸ்* என்னும் நூலில் கொடுமையான ஈவு இரக்கமற்ற ஆட்சியாளர் சிசரி பொர்ஜியாவின் (Cesare Borgia) உத்திகளைக் கோட்பாட்டு ரீதியாக விரிவாக்குவது போல நடைமுறைகளைக் கூர்ந்து நோக்கி கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் உருவாக்குவது அரசியல் அறிவியலின் இயல்பாகும். வரலாற்று அனுபவங்களையும் மற்றும் நமது காலத்தில் இயல்பாக எழும் கொல்லாமை நடத்தை உதாரணங்களையும் இனங்கண்டு அகிம்சை ,சமூக மாற்றத்திற்கான சாத்தியங்களைக் காண்பது அவசியமாகும்.

பொதுக் கொள்கைகள், (public policies) நிறுவனங்கள், பண்பாட்டு வெளிப்பாடுகள், அகிம்சை அரசியல் போராட்டங்கள், வரலாற்றுச் சான்றுகள், பற்றுறுதியான தனிநபர்கள் முதலியன கொல்லாமைத் திறன்களின் குறிப்பிடத்தக்க வெளிப் பாடுகளாகும்.

## பொதுக் கொள்கைகள் (Public Policies)

மரண தண்டனையை நீக்கி விட்ட நாடுகள், படைகளை விட்டு விட்ட நாடுகள் மனச்சாட்சிப்படி, கொல்லுதலை எதிர்த்துப் படைகளில் பணியாற்ற மறுப்பவர்களை அங்கீகரிக்கும் நாடுகள் முதலியன இன்றைய உலகில் உள்ளன. கொல்லாமை சமூகத்தை உணர்வதற்கான அரசியல் முடிவுகளுக்கு இவை குறிப்பிடத்தக்க சான்றுகளாகும்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் வரை உலகின் 195 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 73 மரண தண்டனையை நீக்கியுள்ளன. அவை வருமாறு :

**மரண தண்டனையை நீக்கிய நாடுகள், பிரதேசங்கள் (73)**

| | | |
|---|---|---|
| அண்டொர்ரா | கிரீஸ் | நார்வே |
| அங்கோலா | கினியா பிஸ்சு | பாலா |
| ஆஸ்திரேலியா | ஹைடி | பனாமா |
| ஆஸ்திரியா | ஹோண்டுரஸ் | பராகுவே |
| அஸர்பெஜான் | ஹங்கேரி | போர்ச்சுக்கல் |
| பெல்ஜியம் | ஐஸ்லாந்து | ருமேனியா |
| பல்கேரியா | அயர்லாந்து | சான் மரினே |
| கம்போடியா | இத்தாலி | சென தோமி & |
| கனடா | கிரிபட்டி | பிரின்சிபி |
| கேப் வெர்டி | லெச்சன்ஸ்டைன் | ஸெயிசெல்லயிஸ் |
| கொலம்பியா | லித்துவேனியா | சுலவாக் குடியரசு |
| கோஸ்டரிகா | லக்ஸம்பர்க் | சுலேவேனியா |
| குரோஷியா | மாசிடோனியா | சாலமன் தீவுகள் |
| செக் குடியரசு | மார்ஷல் தீவுகள் | தென்னாப்பிரிக்கா |
| டென்மார்க் | மொரிஷஸ் | ஸ்பெயின் |
| துஜிபௌடி | மைக்ரோனிஷியா | சுவீடன் |
| டொமினிகள்குடியரசு | மோல்டாவா | சுவிட்சர்லாந்து |
| கிழக்கு தைமூர் | மோனாகோ | துர்க்மேனிஸ்தான் |
| ஈக்குவேடார் | மொசாம்பிக் | துவலு |
| எஸ்தோனியா | நமிபியா | உக்ரெய்ன் |
| பின்லாந்து | நேப்பாளம் | இங்கிலாந்து |
| பிரான்ஸ் | நெதர்லாந்து | உருகுவே |
| ஜார்ஜியா | நியூசிலாந்து | வனுஅது |
| ஜெர்மனி | நிகாரகுலா | வத்திகான் |
| | | வெனிசுலா |

மரண தண்டனையை முற்றிலும் நீக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அறிவியல் மற்றும் பொதுக் கொள்கை ரீதியில் மிகவும் முக்கியமானதாகும். ஏன், எவ்வாறு, எப்படி ஒவ்வொரு அரசாங்கமும் கொல்ல வேண்டாம் என முடிவு செய்கின்றன? ஏன் இதில் சில நாடுகள், பண்பாடுகள், பிரதேசங்கள் இடம்பெற பிற இடம்பெறாமல் உள்ளன? என்ன புதுமையான மற்றும் பரவல் முறை வரலாற்றுப் படிமுறையால் இவ் உலகப்போக்கு

ஏற்பட்டுள்ளது? கொலை இல்லாத சமுதாயங்கள் எங்கும் எதிர்காலத்தில் உருவாவதற்கு இந்த அகிம்சை மாற்று உதாரணங்களின் விளைவுகள் என்ன?

மரண தண்டனையை முழுவதுமாக நீக்கிவிட்ட நாடுகள் நீங்கலாக 14 நாடுகள் (அர்ஜென்டினா, பிரேசில், மெக்சிகோ, முதலிய நாடுகள் இதில் அடங்கும்) சாதாரண குற்றங்களுக்கு மரண தண்டனையை நீக்கியுள்ளன; ஆனால் படை மற்றும் போர் தொடர்பான சட்டங்களில் மரண தண்டனையைக் கொண்டுள்ளன. மேலும் 23 நாடுகள் மரண தண்டனையை நீக்கவில்லை என்றாலும் பத்தாண்டுகளும் அதற்கு மேலும் அதனைப் பயன்படுத்தாமல் உள்ளன. 91 நாடுகளில் மரண தண்டனைக்கான சட்டங்கள் உள்ளன; அவை பயன்படுத்தப் பட்டு வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெடரால் குற்றங்களுக்கு மரண தண்டனையை வைத்துள்ள பொழுதிலும், அதன் ஐம்பது மாநிலங்களில் 12 மாநிலங்களில் மரண தண்டனை நீக்கப்பட்டு விட்டது. கொலம்பியா மாவட்டத்திலும் மரண தண்டனை நீக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனையை நீக்குவது மற்றும் விதிப்பது என்ற ஊசலாட்டத்துக்கு இடையில், மரண தண்டனையை அரசாங்கங்கள் நீக்குவதை நோக்கி உலகப் போக்கு உள்ளது. இது கொல்லாமைச் சமுதாயத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையை உறுதி செய்கிறது. ரூசோவின் "சமூக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக குடிமக்களைக் கொல்வது இருக்க வேண்டிய தேவை இல்லை". அங்ஙனமே மாக்ஸ் வீபரின் தவிர்க்க முடியாத அரசியல் அம்சமாக அது இருக்க வேண்டியது இல்லை.

2001இல் உலகில் 27 நாடுகள் படைகளின்றி இருந்தன. இவற்றில் குக் தீவுகள், வத்திகான் மற்றும் நியுஇ தவிர பிற ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராவர். படைகள் இல்லாத அந்நாடுகள் பின்வருமாறு :

| படைகள் இல்லாத நாடுகள், பிரதேசங்கள் (27) | |
|---|---|
| படைகள் இல்லாதவை (19) | படைகள் இல்லாதவை ஆனால் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் உள்ளவை (8) |
| கோஸ்டரிகா | அண்டொர்ரா (ஸ்பெயின்) |
| டொமினிகா | குக் தீவுகள் (நியூசிலாந்து) |
| கிரெனடா | ஐஸ்லாந்து (அமெரிக்கா) |
| ஹைடி | மார்ஷல் தீவுகள் (அமெரிக்கா) |
| கிரிபடி | மைக்ரொனிஷியா (அமெரிக்கா) |
| லெச்சன்ஸ்டென் | மொனாகொ (பிரான்ஸ்) |
| மாலத்தீவுகள் | நியுஇ (நியூசிலாந்து) |
| மொரிஷஸ் | பாலவ் (அமெரிக்கா) |
| மொனகோ | |
| நெளரு | |
| பனாமா | |
| செயிண்ட் கிட்டஸ் & நெவிஸ் | |
| செயிண்ட் லுசிய | |
| செயிண்ட் வின்செண்ட் & கரெநனடியிஸ் | |
| சமொ | |
| சன் சன்மாரினோ | |
| சாலமன் தீவுகள் | |
| துவலு | |
| வனஅது | |
| வத்திகான் | |

இவற்றோடு பதினெட்டு சார்பு பிரதேசங்கள் அவை சார்ந்துள்ள நாடுகளுடனான ஒப்பந்தங்களின் அடிப்படையில் படைவிலக்குப் பகுதிகளாக உள்ளன. (சான்று அலன்டு தீவுகள் (Aland Islands) – பின்லாந்து). அன்டார்டிகாவும் சந்திரனும் சர்வதேச ஒப்பந்தங்களின் வழி படைகளற்ற பிராந்தியங்களாகும்.

தேசிய அடையாளம், சமூகக் கட்டுப்பாடு, பாதுகாப்பு, தாக்குதல் ஆகியவற்றுக்கு படைகள் இருப்பது தவிர்க்க இயலாதது எனக் கருதப்பட்ட பொழுதிலும், படைகள் இல்லாத இந்நாடுகள் அனைத்தும் சிறிய நாடுகளாக இருந்த பொழுதிலும் – அவற்றில் சில படைபலம் மிக்க நாடுகளைச் சார்ந்துள்ளன அல்லது துணைப்படைகளைக் கொண்டுள்ளன

என்ற பொழுதிலும் – அவை படையில்லாத நாடு அரசு சாத்தியமே என்பதை நிருபித்துக் காட்டுகின்றன.

படைகள் உள்ள நாடுகளில் மனச்சாட்சியின் படி படைகளில் கட்டாய பயிற்சியில் சேர மறுப்பவர்களுக்கு விலக்களிக்கபடுவது (மாற்று அளிக்கப்படுவது) கொல்லாமை அரசியலுக்கான சாத்தியத்தையும் உள்ளார்ந்த வளங்களையும் காட்டுகிறது. படைப்பணியில் கொல்வதற்கு கோட்பாட்டின்படி குடிமக்கள் மறுப்பதை சட்டப்பூர்வமாக 47 நாடுகள் 1998இல் அங்கீகரித்துள்ளன.

மனச்சாற்றின்படி படைகளில் பணியாற்ற மறுப்பதை அங்கீகரிக்கும் 47 நாடுகளும் பிரதேசங்களும் (1998) வருமாறு:

**படைப்பணிகளுக்கு மனச்சான்றின் படி மறுப்பதை ஏற்கும் நாடுகளும் பிரதேசங்களும் (47)**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியா | போர்ச்சுக்கல் |
| ஆஸ்திரியா | கனடா |
| அஜர்பெஜான் | குரேசியா |
| பெல்ஜியம் | சைப்பிரஸ் (கிரேக்க சைபிரஸ்) |
| பெர்முடா | செக் குடியரசு |
| பிரேசில் | டென்மார்க் |
| பல்கேரியா | எஸ்தோனியா |
| பிரான்ஸ் | பின்லாந்து |
| ஜெர்மனி | ருமேனியா |
| கிரிஸ் | ரஷியா |
| கயானா | சுலோவாக்கியா |
| ஹங்கேரி | சுலோவேனியா |
| இஸ்ரேல் | தென்னாப்பிரிக்கா |
| இத்தாலி | ஸ்பெயின் |
| கிரிகிஸ்தான் | சுரினாம் |
| லாட்வியா | சுவிடன் |
| லித்துவேனியா | சுவிட்சர்லாந்து |
| மால்டா | உக்ரைன் |
| மொல்டொவா | இங்கிலாந்து |
| நெதர்லாந்து | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| நார்வே | உருகுவே |
| பிராகுவே | உஸ்பெகிஸ்தான் |
| போலந்து | யூகோஸ்லேவியா |
| | சிம்பாவே |

படைகளில் சேர/ பணி புரிய மறுப்பதை ஏற்கும் சட்டப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைகள் குறுகிய சமயத் தேவையிலிருந்து பரந்துபட்ட ஆன்மீக, தத்துவ, அறவியல், மானிட நேய அல்லது அரசியல் காரணங்கள் என மாறுபட்டு உள்ளன. இராணுவப் பணிக்கு மாற்றுப் பணிக்கான தேவைகள் பணியில் உள்ள படையினர் மனச்சான்றின் அடிப்படையிலான எதிர்ப்பாளர் அந்தஸ்து பெறத்திறன் மற்றும் இச்சட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள நம்பகத் தன்மை முதலியன பெரிதும் மாறுபடுகின்றன. இப்பொழுதுள்ள மிகவும் தாராளமான கொல்லாமை உரிமை ஜெர்மன் பெடரல் குடியரசின் 1949ஆம் வருட அடிப்படைச் சட்டம் 4வது அம்சத்தில் உள்ளது. அது வருமாறு: “எவர் ஒருவரும் தமது மனச்சான்றுக்கு விரோதமாக ஆயுதம் ஏந்திப் போரிடக் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள்.” மரண தண்டனையை நீக்குவது, படைகள் இல்லா நாடுகள் உருவாவது போல படையில் கொல்பவர்களாகப் பணியாற்ற மறுப்பதன் தோற்றம், படிமுறைகள், உலகளாவிய மேல்வரிச் சட்டம் மற்றும் அரசியல் அங்கீகாரம் ஆகியன அளவற்ற அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்

## சமூக நிறுவனங்கள்

வருங்கால கொல்லாமைச் சமுதாயம் மலர்வதற்கு ஏற்ற அல்லது உதவக்கூடிய நிறுவனங்கள் ஏற்கனவே உலகின் பல பாகங்களில் தோன்றிவிட்டன. கொல்லாதிருப்பதில் பற்றுறுதிக்கான மானுடத் திறன்களுக்கு அவை மேலும் சான்று பகர்கின்றன. சிதறிக்கிடக்கும் இத்தகு நிறுவனங்களை ஆக்கப்பூர்வமாக இணைத்து, ஒரு சமூகத்தின் தேவைகட்கு ஏற்ப அவற்றை உரிய வகையில் மாற்றியமைத்தால் ஒரு கொல்லாமைச் சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியம் என்பதை அனுமானத்தினால் அன்று, அனுபவ அடிப்படையில் நிரூபிக்க முடியும். அத்தகு பலவற்றில் சிலவற்றைப் பற்றிச் சுருக்கமாக இங்கு குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றும் முழுமையாக விவரிக்கப்பட வேண்டிய வரலாறுகளாகும்.

## ஆன்மீக நிறுவனங்கள்

கொல்லாமை பற்றுறுதியால் பரவசப்படுத்தப்பட்டுள்ள சமய நிறுவனங்களை உலகம் முழுவதும் காணலாம். கிழக்கில் சமணர்கள், மேற்கில் குவேக்கர்கள், ஜப்பானிய அனைத்துலக அமைதி மற்றும் சகோதரத்துவ சங்கம்,

பிரான்ஸ் நாட்டின் பௌத்த பிளம் கிராமக் குழுமம், ஆப்பிரிக்காவில் சைமன் கிம்பன்கு திருச்சபை (Simon Kimbangu Church) ரஷியா மற்றும் கனடாவின் டௌக்கொபொர் போர் எதிர்ப்பாளர்கள் (Doukhobor pacifists) மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் யூத அமைதி நட்புறவுக்குழு ஆகியோரைக் குறிப்பிடலாம். 1919இல் நிறுவப்பட்ட சர்வதேச இணக்குவித்தல் நட்புறவுக் கழகம் (International Fellowship of Reconciliation) உலகளாவிய அளவில் எல்லாச் சமயங்களையும் சேர்ந்த ஆடவரையும் பெண்டிரையும் ஒன்று சேர்த்து "அன்பு மற்றும் உண்மையின் ஆற்றலின் மீது கொள்ளும் பற்றுறுதி அடிப்படையில் நீதியை உருவாக்கி மற்றும் ,குழுமத்தை மறுநிர்மாணம் செய்து, தனிநபர், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மடைமாற்றத்திற்கான வழியாகவும், ஒரு வாழ்க்கை முறையாகவும் செயல்நிலை அகிம்சையில் தம்மை நிலைபடுத்திக் கொள்ளச் செய்கிறது."

## அரசியல் நிறுவனங்கள்

ரொனால்டு மல்லொன் (Ronald Mallone), ஜான் லவர்சிடு (John Lover Seed) பிற கிறித்தவ போர் எதிர்ப்பாளர்கள் மற்றும் இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டு ஓய்வு பெற்ற படையினர் 1955இல் இங்கிலாந்தில் பிரிட்டனின் நட்புறவுக் கட்சியைத் தொடங்கினர். இக்கட்சி அகிம்சைக் கோட்பாட்டில் பற்றுறுதி கொண்டுள்ளது. போருக்கு ஆதரவான அனைத்துத் தயாரிப்புகளுக்கும் எதிராக இக்கட்சி இயக்கம் நடத்துகிறது. பொருளாதார மற்றும் சமூக நீதிக்கும் பாடுபடுகிறது. கலைகளையும் விளையாட்டுக்களையும் கொண்டாடுகிறது. பெட்ரா கே. கெல்லி (Petra K.Kelly) மற்றும் முப்பது பேர்களும் ஜெர்மனியில் 1979இல் தொடங்கிய சுற்றுச்சூழல் பசுமைக் கட்சியானது (Green Party) அகிம்சையை மிகவும் அடிப்படையான மதிப்பீடாக வற்புறுத்துகிறது. மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோருடன் தொடர்புடைய அகிம்சை இயக்கங்கள் இக்கட்சியைப் பரவசப்படுத்திய வளங்களில் முக்கியமானவையாகும். பசுமைக் கட்சிகள் உலகெங்கும் அகிம்சை மதிப்பீடு களைத் தேர்தல் அரசியல் வாயிலாக பரவச் செய்கின்றன. 1983ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போர் எதிர்ப்பாளர் கட்சியை ஆன்மீக, அறிவியல், மானிட நேயக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிராட்போர்டு லித்தலே (Bradford Lyttle)

தொடங்கினார். அவர் 1996, 2000 ஆண்டுகளில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களில் வேட்பாளரானார். அமெரிக்க சமூகத்தை அகிம்சைக்கு மடைமாற்றம் (transformation) செய்வதையும் உலகில் அதனது பங்கையும் பற்றி அவர் பேசுகிறார். டி.கே.என். உன்னித்தானும் (T.K.N. Unnithan) பிறரும் சர்வோதயக் கட்சி (Sarvodaya Party) ஒன்றினை நிறுவியுள்ளனர். அனைவரின் நலனுக்கான காந்திய வழி சமூக வளர்ச்சிக்குப் பாடுபட இக்கட்சியை அமைப்பதாக கூறினார்கள். காந்திய மரபுக்கு மாறாக தேர்தல் அரசியலில் இக்கட்சி இறங்கியது. "அதிகாரம் என்பது நல்லதோ, கெட்டதோ அன்று; அது இழிந்தவர்கள் (ஊழல்வாதிகள்) கைகளில் சிக்கும் பொழுது இழிவுபடுகிறது" என சர்வோதயக் கட்சி விளக்குகிறது. காந்திய அகிம்சையால் பரவசமுற்ற டிரான்ஸ்நேசனல் ரேடிகல் கட்சி (Transnational Radical Party), என்பது 1987இல் இத்தாலிய பார்ட்டியொ ரெடிகலே என்பதிலிருந்து உலகளாவிய கட்சியாக வளரத் தொடங்கியது. இக்கட்சியின் நோக்கம் சர்வதேச அளவில் மட்டும் செயல்பட்டு ஐக்கிய நாடுகள் சபை முதலானவற்றை அகிம்சை வழியில் நடக்கத் தூண்டுவதாகும். சான்றாக உலகம் முழுவதும் மரண தண்டனையைக் கைவிடல், படைப்பணிக்கு மனச்சான்றின் அடிப்படையில் எழுப்பப்படும் ஆட்சேபனையை ஏற்றல், போர்க் குற்றவாளிகளைத் தண்டித்தலில் நெறிமுறை ஆகிய பிரச்சினைகளில் இக்கட்சி பணியாற்றி வருகிறது. இக்கட்சி தேர்தலில் போட்டியிடுவது இல்லை. இதில் உறுப்பினராக இருப்பவர் வேறொரு கட்சியிலும் உறுப்பினராக இருக்கலாம். உறுப்பினர்களின் நாட்டின் சராசரி வருமானத்தின் ஒரு சதவிகிதம் உறுப்பினர் கட்டணமாகும். மகாத்மா காந்தியின் நிழலில் இக்கட்சியானது பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறது: புதிய சிறந்த உலகை உருவாக்க "நாடுகளைத் தாண்டிச் செல்லும் சட்டங்களும் அகிம்சையும் மிகவும் திறம்பட்ட வழிமுறைகளாகும்".

### பொருளாதார நிறுவனங்கள்

போர் தொடர்பான தொழில்களில் முதலீடு செய்யாத "பாக்ஸ் வேர்ல்டு நிதி" (Pax World Fund) என்னும் பரஸ்பர முதல் நிதியம், மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங்கைப் பின்பற்றும் சீசர் சாவஸ், டொலொரஸ் கெடர்தா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட "அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பண்ணைத் தொழிலாளர்கள் அமைப்பு" மற்றும் டாக்டர்

ஏ.டி. அரியரத்னேவின் தலைமையில் இலங்கையில் நடைபெறும் புத்த–காந்திய அகிம்சை நெறியிலான சர்வோதய சிரமதான சங்கமய இயக்கம் ஆகியன கொல்லாமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கும் அகிம்சைப் பொருளாதார இயக்கங்களாகும். காந்திய அறங்காவலர் நெறியின் அடிப்படையில் வினோபா பாவே மற்றும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் நடத்திய பூமிதான இயக்கம் இவ்வகையில் அடங்கும். நிலமற்றவர்களுக்கு அகிம்சை வழியில் நிலம் பெற்றுத்தரும் முயற்சி இது. பல அறக்கட்டளைகள் அகிம்சைப் பணிகளை ஆதரிக்கின்றன. இலண்டன் காந்தி பவுண்டேஷன், பெங்களூர் சர்வோதய சர்வதேச அறக்கட்டளை, நியூயார்க் ஏ.ஜே. முஷ்டே நிறுவனம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

## கல்வி நிறுவனங்கள்

காந்தியால் நேரிடையாகப் பரவசமடைந்த காந்தியக் கல்வியாளர் டாக்டர் ஜி. ராமச்சந்திரன் தமிழகத்தில் காந்தி கிராமத்தையும், காந்தி கிராம நிகழ்நிலைப் பல்கலைக் கழகத்தையும், தமது மனைவி டாக்டர் சௌந்தரத்துடன் இணைந்து நிறுவினார். காந்தியப் பரிசோதனைக்கான கல்வி நிறுவனமாக காந்தி கிராம நிகழ்நிலைப் பல்கலைக் கழகத்தை டாக்டர் ஜி. ராமச்சந்திரன் ஆக்கினார். சுற்றியுள்ள 63 கிராமங்களில் இக்கல்வி நிறுவனம் விரிவாக்கப் பணி செய்கிறது. இந்நிகழ் நிலைப் பல்கலைக் கழகத்தின் அமைப்பிலேயே இடம் பெற்ற முக்கியமான அம்சங்கள் வருமாறு : 1. பல்வேறு துறைப் படிப்பை கிராம குழும வாழ்வுடன் இணைப்பது; அரசியல் விஞ்ஞானமும் கிராமத்தின் முடிவுகள் எடுக்கும் படிமுறையும், பௌதீகமும் வானொலி ரிப்பேரும், உயிரியலும் கிணறைத் தூய்மையாக்கலும், கலைகளும் ஆக்கப்பூர்வக் குழந்தை வளர்ப்பும் 2) பட்டம் பெறுகின்ற ஒவ்வொரு மாணவரும் சிக்கல் தீர்வில் அனுபவம் பெறல் 3) மும்மொழிகளைப் கற்றல் தமிழ் வட்டாரத் தேவைகளுக்கு, இந்தி தேசியத் தேவைகளுக்கு ஆங்கிலம் உலகிற்கான ஜன்னல் 4) அனைவரும் உடலுழைப்பில் ஈடுபடல் – வளாகத்தைப் பேணுதல் மற்றும் தொண்டுப பணிகள்.

இவ்உயர் கல்வி நிறுவனத்தில் படைப்பயிற்சிக்கான அகிம்சை மாற்றாக சாந்திசேனைப் பயிற்சியை டாக்டர் ஜி. ராமச் சந்திரன் அறிமுகப்படுத்தினார். இப்பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் டாக்டர் என். இராதாகிருஷ்ணன்

இப்பணிக்கான ஆக்கப்பூர்வமான சிறந்த தலைமையைத் தந்தார். 1958க்கும் 1988க்கும் இடையில் 5000 தன்னார்வ சாந்தி சேனைப் பயிற்சியாளர்கள் உருவாயினர். இவர்கள் சீருடை அணிந்து, அமைதிக்குப் பாடுபடுவதாகவும், தேவையானால் அதற்காகத் தங்கள் வாழ்வையும் தருவதாகவும் உறுதி எடுத்துக் கொண்டனர். ஆன்மீக, உடல், அறிவு மற்றும் நிறுவனப் பயிற்சி வழங்கப்பட்டது. தேவைப்படும் பொழுது சிக்கல் தீர்வு, பாதுகாப்புப் பணிகள், சீரழிவுகள் மற்றும் விபத்துகளின் பொழுது நிவாரணப் பணி மற்றும் கூட்டுறவு பணி ஆகியவற்றி ஈடுபட சாந்தி சேனை மாணவர்களைத் தயார் செய்தது. எப்பொழுதும் கிராம மக்களுடன் சேர்ந்து, குழந்தை நலன், சுகாதாரம், குடியிருப்பு, பாரம்பரியக் கலைகள் ஆகியவற்றை மேம்படுத்த பணியாற்றுவதும் இவ்அணுகல் முறையாகும். 1970களில் இந்தியாவின் சில நகரப் பல்கலைக் கழகங்களில் அடக்குமுறைக்கான கருவிகள் எனக் குண்டுகள் வீசப்பட, காந்திகிராம ஊரகக்கழகம் நிகழ்நிலைப் பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் கொண்டாடினார்கள். வளாகப் பாதுகாப்புக்கு சாந்தி சேனையே பொறுப்பேற்றது. இந்தியப் பிரதமர்கள் நேரு, இந்திரா காந்தி மற்றும் பெரிய பிரமுகர்கள் அங்கு வந்த பொழுது ஆயுதமேந்திய காவலர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதிக்கப்படவில்லை.

## பயிற்சி நிறுவனங்கள்

அகிம்சை வழி சமூக மாற்றம், பூசல்களில் இடையீடு செய்தல், சமூகப்பாதுகாப்பு மற்றும் இன்ன பிற நோக்கங்களுக்குப் பயிற்சி தர நிறுவனங்கள் பல தோன்றி வருகின்றன. அனுபவம் மிக்க பயிற்சியாளர்களுக்கு உள்நாட்டிலும் எல்லைகள் கடந்தும் தேவை இருக்கிறது. வன்முறைக்குப் பதில் அகிம்சை வழியில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மானிடருக்கு உள்ள திறனில் நம்பிக்கை வளர்ந்து வருகிறது. முக்கியமான சில பயிற்சி நிறுவனங்களையும் பயிற்சியாளர்களையும் இங்கு பட்டியலிடுவோம்: ஜி. ராமச் சந்திரன் அகிம்சைப் பள்ளி (டாக்டர் என். இராதா கிருஷ்ணன்), பீஸ் பிரிகேட்ஸ் இண்டர்நேசனல் (Peace Brigades International-நாராயன தேசாய்), அகிம்சைக்கான பிளாரிடா மார்டின் லூதர் கிங் நிறுவனம் மற்றும் லாஃபெயெட்டே கூட்டாளிகள் (பெர்னார்டு லாஃபெயட்டே, சார்லஸ் எல் ஆல்பின் மற்றும் டேவிட் ஜெக்ன்சென்), பயிற்சிமைய பணிப்பயிலரங்குகள்

(Training Centre Workshops –ஜார்ஜ் லேகி) சர்வதேச போர் எதிர்ப்பாளர்கள் (War Resisters International - ஹோவர்டு கிளார்க்) அகிம்சை ஆய்வுக்கான பாலஸ்தீன மன்றம் (Palestinian Centre for the Study of Nonviolence - முபாரக் அவத் Mubarak Awad) அகிம்சை சர்வதேசம் (Nonviolence International–மைக்கேல் பீர்) சர்வீஸோ பஸ் ய ஜஸ்டிகா (Sevicio Puz y Justica –அடால்பொ பெரஸ் எஸ்கியுவெல்), சர்வதேச சமூக விழிப்புணர்வு செயல்நிலை பௌத்தர்களின் ஒருங்கிணைப்பு (The International Network of Engaged Buddhists - எஸ்குவா மொசர் புஅங்சுவ Yeshua Moser-Puangsuwan) மற்றும் "டிரான்ஸ்சென்ட்" (TRANSCEND) ஜோகான் கால்துங்).

அகிம்சை வழித் தனிநபர் தற்சார்பு, ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றில் பயிற்சிக்கு ஜப்பானின் ஆக்கப்பூர்வ கொல்லாமைப் படைக்கலையான அய்கிடொ (Aikido) ஒரு முக்கியமான வளமாகும். இதனைத் தோற்றுவித்த மொரிஹெய் உய்ஸ்ஹிபா (Morihei Ueshiba) கூறுகிறார், "வீழ்த்துவது, காயப்படுத்துவது, அல்லது அழிப்பது என்பது மானிடர் இழைக்கக்கூடிய மிகவும் மோசமான குற்றமாகும்" அய்கிடொவின் நோக்கம் பிரபஞ்ச உயிர்ச்சக்தியுடன் இயைபு காண்பதாகும். அய்கிடொ அன்பின் வெளிப்பாடாகும்.

### பாதுகாப்பு நிறுவனங்கள்

வன்முறையில்லாத வழிகளால் சமூகப் பாதுகாப்பைத் தேடும் ஆற்றல் உள்ள நிறுவனங்கள் பல உலகில் உள்ளன. ஜப்பானில் ஆயுதமேந்தாத குடிமக்கள் பெரிதும் மிகுந்துள்ளனர்; இங்கிலாந்தில் ஆயுதமேந்தாத போலிசார் மிகுதி; பின்லாந்தில் ஆயுதமேந்திய காவலர் இல்லாத சிறை உள்ளது. பிலிப்பைன்சில் சிடிஒ கென்டொமன்யொக் (Sitio Cantomanyog) பகுதி ஆயுதமேந்தாத அமைதி வட்டாரங்களாகும். ஆயுதம் இல்லாத சிவிலியன் பாதுகாப்புக்கான அமைப்பு ஒன்று ஜெர்மனியில் உள்ளது. போர் நிகழும் பகுதிகளில் அமைதி ஆக்க இடையீடு செய்யும் நிறுவனங்கள் உள்ளன. இத்துடன் ஆயுதம் இல்லாத உலகத்திற்கான அரசாங்கங்களின் இயக்கங்கயையும் குடிமக்களின் அமைப்புக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அணு ஆயுதங்கள், உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் ஆகியவற்றை முற்றிலும் அழித்தல் மற்றும் கைத்துப்பாக்கிகள், தாக்குதல் ஆயுதங்கள், கன்னி

வெடிகள் முதலானவற்றைக் கைவிடல் ஆகியவற்றுக்கான அரசு இயக்கங்கள் மற்றும் குடிமக்கள் நிறுவனங்கள் உள்ளன. ஒருதலைப் பட்சமாகப் படைகளை கலைத்துவிட்ட கோஸ்டரிகாவின் நோபல் பரிசு பெற்ற முன்னாள் ஜனாதிபதி ஆஸ்கர் அரியஸ் சஞ்சேயஸ் (Oscar Arias Sanchez) படைமய நீக்கம் மற்றும் சிக்கல் தீர்வுக்காக அமைதி மற்றும் சமரசம் காணலுக்கான மையம் ஒன்றை நிறுவியுள்ளார். ஆயுத வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவர முயலும் இயக்கம் அடிமை வணிகத்தை நிறுத்திய அனுபவத்தை முன் மாதிரியாக எடுத்துக் கொள்கிறது. ரெய்நல்டொ பசெய்கொ மற்றும் ஹய்ட் ஒய். யொரக் (Reynaldo Pacheco and Haydee y. Yorac) ஆகியோர் பிலிப்பைன்ஸ் நாட்டில் நிறுவியுள்ள "இயற்கை/ துப்பாக்கியில்லா உலகம்" மானிடரை "அழிந்து வரும் உயிரினமாகக்" கருதி காக்க முயல்கிறது.

## ஆய்வு நிறுவனங்கள்

கேம்பிரிஜ் மாசசூசெட்ஸில் ஜீன் சார்ப் (Gene Sharp) நிறுவியுள்ள ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் நிறுவனம் உலகெங்கும் ஜனநாயகம், பாதுகாப்பு, நீதி, சுதந்திரத்திற்கான அகிம்சைப் போராட்டங்களைப் பற்றிய ஆய்வுகளை நடத்தி வருகிறது. இந்தியாவில் வாரணாசியில் ஜெயப்பிரகாஷ் நாராயணன் நிறுவிய "காந்திய ஆய்வு நிறுவனம்" (Gandhian Institute of Studies) அகிம்சை சமூக மாற்றத்திற்கு ஆதரவாக சமூக அறிவியல் ஆய்வுகளை நடத்தி வருகிறது. தியோடர் எல். ஹேர்மனால் (Theodore L.Herman) நிறுவப்பட்ட சர்வதேச அமைதி ஆய்வு மன்றம் (International Association of Peace Research) மற்றும் அதன் அகிம்சை கமிசன் உள்ளிட்ட பல்வேறு கமிசன்கள் உலகளாவிய ஆய்வு முடிவுகள், கல்வி, செயல் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

## சிக்கல் தீர்வு நிறுவனங்கள்

கொல்லாமைக் கோட்பாட்டின் அடிப்படையில் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனங்களில் மானிட உரிமைகளைக் காக்கவும் மரண தண்டனையை நீக்கவும் பாடுபடும் "அனைத்துலக மன்னிப்பு மன்றம்" (Amnesty International), சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கும் பாடுபடும் "சர்வதேச பசுமை அமைதி" (Greenpeace International), கட்டாயப் படைப் பணிக்கு சேர்ப்பதை மனச் சான்றின் படி

எதிர்ப்பதை பாதுகாக்கவும் போர்த் தயாரிப்பை எதிர்க்கவும் பாடுபடும் "சர்வதேச போர் எதிர்ப்பாளர் அமைப்பு" (War Resisters International), மற்றும் வன்முறையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மானிட நேய மருத்துவ உதவி புரியும் "எல்லைகளற்ற மருத்துவர் சங்கம்" (Medicins Sans Frontieres) ஆகியன குறிப்பிடத்தக்கன.

## தகவல் தொடர்பு ஊடகம்

வட்டார, உலக நிலைகளைக் கொல்லாமைக் கண்ணோட்டத்தில் வழங்கும், விமர்சிக்கும் தகவல் தொடர்பு ஊடகப் பயன்பாட்டுக்கு பத்திரிகையாசிரியர் கால்மான் மக்கார்த்தியின் (Colman Mc Carthy) பணிகள் குறிக்கத் தக்கவை யாகும். உலகெங்கும் பல அகிம்சை இதழ்கள் வெளியாகின்றன. இவற்றில் முக்கியமானவை *Day by Day* (இலண்டன்), *Seeds of Peace* (பெங்காக்), *Peace News : for Nonviolent Revolution* (இலண்டன்), *Nonviolence Actualite* (மொண்டர்கிஸ்—பிரஞ்சு), *Azione Nonviolenta* (வெரொனா—இத்தாலியன்), *Graswurtzel revolution* (ஒல்டன்பர்க்—ஜெர்மனி), *Fellowship* (நியூயார்க்) மற்றும் *Nonviolent Activist* (நியுயார்க்) முதலியனவாகும். பிற இதழ்களில் *Social Alternatives* (பிரிஸ்பேன், ஆஸ்திரேலியா), *International Journal of Nonviolence* (வாஷிங்டன்), மற்றும் *Gandhi Marg* (புது டில்லி) பல்வேறு சமூகப் பிரச்சினைகளின் அகிம்சைப் பரிமாணத்தை எடுத்து விளக்குகின்றன. நவஜீவன் வெளியீட்டகம் (அகமதாபாத்) நியூ சொசைட்டி பப்ளிஷர்ஸ் (வாஷிங்டன்), அகிம்சை அக்டுலைட் (மொன்டர்கிஸ், பிரான்ஸ்), அர்பிஸ் புக்ஸ் (நியூயார்க்) முதலிய புத்தக வெளியீட்டாளர்கள் அகிம்சை சமூக மாற்றம் பற்றிய நூல்களையே சிறப்பாக வெளியிடுகிறார்கள்.

## பண்பாட்டு வளங்கள்

அகிம்சைப் பண்பாட்டு வளங்கள் என்பன கலை, பண்பாட்டு ஆக்கப் படைப்புகளாகும். அவை மானிட உணர்வை உயர்த்தி, கொல்லாமைச் சமூகம் மலர்வதை நோக்கி முன்னேற பரவசப்படுத்துகின்றன. அவற்றில் வாய்மொழி நாடோடிப் பாடல்கள் ("வெற்றி பெறுவோம்" என்ற பாடல்), இசை (பிளப் கிலாஸின் "சத்தியாகிரகம்"), நாவல்கள் (பெர்தா வான் சட்னர், *உங்கள் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்-Lay down your arms*); கவிதைகள் (ஸ்டிவ் மாசன்,

*ஜோஹேனன்னியின் பாடல்)*, கலை (கதே கொல்விட்ஸ், *Seed for the Planting must not be ground);* மற்றும் திரைப்படங்கள் (ரிச்சர்டு அட்டன் பரோவின் *காந்தி*) முதலியன குறிப்பிடத் தக்கன. அகமதாபாத்தில் 1995இல் நிறுவப்பட்ட கலைவழி அகிம்சை மையம் (Centre for Nonviolence through arts) காட்சி, நிகழ்வு மற்றும் இலக்கியக் கலைகள் வழி கொல்லாமையின் ஆக்க ஆற்றலை சமூக மாற்றத்திற்குப் பயன்படுத்த முற்படுகிறது. மல்லிகா சாராபாய் இதனைச் செய்து வருகிறார்.

## அகிம்சை அரசியல் போராட்டங்கள்

அகிம்சைப் போராட்டங்கள் வரலாற்றுக்குப் புதியது இல்லை எனினும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடைபெற்றுள்ள அகிம்சைப் போராட்டங்கள் கொல்லாமைக்கான மானிடத்தின் உள்ளார்ந்த ஆற்றலை அதிகமாக வெளிப்படுத்தி யுள்ளன. "1980இல் கூட," ஜீன் சார்ப் எழுதுகிறார், "அகிம்சைப் போராட்டம் – மக்கள் சக்தி – இன்னும் பத்தாண்டுகளில் உலகம் முழுவதும் அரசியல் போக்கை உருவாக்கும் பெரிய சக்தியாக அங்கீகரிக்கப்படும் என்பது பெரும்பாலான மக்களால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது." 1970க்கும் 1989க்கும் இடையில் குறிப்பிடத்தக்க அகிம்சைப் போராட்டங்கள் பின்கண்ட நாடுகளில் நடைபெற்றன: ஆப்பிரிக்கா–அல்ஜீரியா, மொராக்கோ, தென் ஆப்பிரிக்கா, சூடான்; ஆசியா–பர்மா, சீனா, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், திபெத்; அமெரிக்கக் கண்டங்கள் அர்ஜெண்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, ஹைடி, மெக்சிக்கோ, நிகாரகுவா, பனாமா, அமெரிக்க ஐக்கிய நாடுகள்; ஐரோப்பா – எஸ்தோனியா, பிரான்ஸ், கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனி, ஹங்கேரி, அயர்லாந்து, லாட்டுவியா, யூகோஸ்லேவியா; மத்திய கிழக்கு – இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் உள்ள பாலஸ்தீனம்; பசிபிக் பிராந்தியம் – ஆஸ்திரேலியா மற்றும் நியூகலிடோனியா. 1989களுக்குப் பிறகு அகிம்சை மக்கள் சக்தி கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கட்சி ஆட்சியை சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா, பால்டிக் குடியரசுகள், மங்கோலியா ஆகிய இடங்களில் முடிவுக்குக் கொண்டு வந்தன; ஜெர்மனி அமைதியாக ஒருங்கிணைக்கப்பட்டது; தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல் ஆட்சி முடிவுக்கு வந்தது.

எல்லா அகிம்சைப் போராட்டங்களிலும் முற்றிலுமாக வன்முறை இல்லாதிருக்கவில்லை என்ற பொழுதிலும், 1988இல்

பர்மாவில் 1989இல் மற்றும் சீனாவில் போல சில அகிம்சைப் போராட்டங்கள் மிகவும் கொடூரமாக ஒடுக்கப்பட்ட பொழுதிலும், அகிம்சைப் போராட்டங்களின் வெற்றிக்குப் பின்னா கொலை அச்சுறுத்தல் உள்ளது என்று சில விமர்சகர்கள் விமர்சித்த பொழுதிலும், இவை இரத்த மரபான அமெரிக்க, பிரஞ்சு, ரஷிய, சீன மற்றும் பிற புரட்சிகளிலிருந்து குறிப்பிடத்தக்க வகைகளில் மாறுபடுகின்றன. உலக காலனி ஆதிக்கம் வீழ்ச்சியுறுவதற்குப் பங்களிப்பு செய்த இந்திய காந்திய விடுதலை இயக்கத்திலிருந்து கற்றுக் கொண்ட மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடத்திய இனசிவில் உரிமை அகிம்சை இயக்கம், பிலிப்பைன்ஸில் ஜனநாயகத்திற்கான அகிம்சை மக்கள் சக்தி இயக்கம், அணு ஆயுத எதிர்ப்பு இயக்கம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் மற்றும் பிற அனுபவங்கள் முதலியன நடைமுறை அனுபவத்திலிருந்து, உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது உட்பட, அகிம்சை உத்தி மற்றும் உபாயங்கள் பற்றிய ஆற்றல் வாய்ந்த அறிவு சேர்ந்துள்ளது. அமைதி, சுதந்திரம், நீதிக்கான குடிமக்களின் அகிம்சை ரீதியான கோரிக்கைகளைக் கையாள்வதில் கொல்லும் தன்மையில்லாத சுய கட்டுப்பாடுகளை அதிகாரத்திலுள்ள சில ஆட்சிகள் இப்பொழுது கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன.

ஆட்சிகளையும், அமைப்பியல் மாற்றங்களையும் பாதிக்கவல்ல ஆற்றல் மிக்க பரந்துபட்ட போராட்டங்களுடன் பல சமூக இயக்கங்கள் கொல்லாமைச் சமூகத்தை உருவாக்குவதற்காக குறிப்பிட்ட மாற்றங்களைக் கோருகின்றன. மரண தண்டனையை நீக்கக் கோரும் இயக்கம், கருக்கலைப்புக்கு மாற்றுக்கள், படைப் பணிக்கு மனச்சான்றின் படியான எதிர்ப்பை அங்கீகரித்தல், படைகளைக் கலைத்தல், அகிம்சை சிவிலியன் பாதுகாப்பை நிறுவுதல், சண்டை நடக்கும் ஊரக, நகரப் பகுதிகளில் அகிம்சைப் பாதுகாப்பைத் தேடுதல், போர் வரிகளை முடிவுக்குக் கொண்டு வரல், அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை நீக்குதல், கன்னிவெடிகள், தானியங்கி ஆயுதங்கள் மற்றும் கைத்துப்பாக்கிகளைக் கைவிடல், கொலை வழிக்கான பொருளாதார ஆதரவைக் கைவிடல், தனிநபர், சிறுபான்மையினர் மற்றும் பாரம்பரிய மக்களின் மானிட உரிமைகளைக் காத்தல், மாசுபடாமல் சுற்றுச் சூழலைக் காத்தல் மற்றும் பிற அரசியல், இராணுவ, பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்களை அடைதல் ஆகியன இவ்வகையில் முக்கியமானவைகளாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் வரலாற்றில் தானாக எழும் அகிம்சைப் போராட்டங்களுக்கு அப்பால் ஜீன் சார்ப், ஜோகான் கால்துங், ஜெகுயிஸ் செமலின் (Jacques semelin) மற்றும் மைக்கேல் ராண்ட்லெ (Micheal Randle) போன்ற முன்னோடியான ஆராய்ச்சியாளரின் கண்டுபிடிப்புகளையும் கருத்தில் கொண்டு, திட்டமிட்ட, அதிக ஆக்கப்பூர்வமான உலகளாவிய தகவல் தொடர்பால் அதிகம் பரவி பரந்துபட்ட அகிம்சைப் போராட்டங்கள் நிகழ்கின்றன. உலகமயமாகும் இக்காலக் கட்டத்தின் தொடரும் இரத்தம் சிந்துதல்களுக்கு இடையில், அகிம்சை இயக்கங்கள் அதிகமாகத் தோன்றி உலகம் முழுவதும் பரவுகின்றன. நாடுகள் மற்றும் சமூகங்களின் வன்முறையையும் அநீதியையும் சந்திக்க புத்தாக்கமான, முன் மாதிரியான முறைகளில் அகிம்சைப் போராட்ட முறை பரவுகிறது.

## வரலாற்று வேர்கள்

பெரிதும் வன்முறையான காலங்களில், கொல்லாமைத் திறன்கள் ததும்பி வழிவதை வரலாறு அடிக்கடி காட்டுகிறது. கொல்லாமையின் வெளிப்பாடுகளை உலகளவில் கூட்டிப்பார்த்தால், மானிடத்தின் கொல்லாமை வரலாற்றை எழுதிடலாம். அவற்றின் அடிப்படை அம்சங்களைப் பற்றிய கண்ணோட்டத்தை இங்கு காண்போம்.

கொல்லாமையில் நம்பிக்கையும் பற்றுறுதியும் நசுக்க முடியாதவைகளாகும். ஈராயிரம் ஆண்டு யூத–கிறிஸ்துவ வரலாற்றில் ஆறாவது கட்டளையான "கொல்லாதிருப்பாயாக" என்பதும், மலைப்பிரசங்கமும், இயேசு சிலுவையில் செய்த அகிம்சை தியாக முன்மாதிரியும் வாய்மொழி மற்றும் எழுத்து மரபுகள் வாயிலாகப் பரவி நின்று, கொல்லப்பட்டாலும், உயிர்த் தியாகம் புரிய நேரிட்டாலும்–சாதாரண கல்வியறிவற்ற விவசாயி முதல் உயர்நிலையில் உள்ளோர் வரை – சிலர் ஊக்கமாக, தீரத்துடன் கொலை வெறியை எதிர்த்து நின்றுள்ளனர். ரஷியாவில் 1895 சூன் 29ஆம் நாள் போர் எதிர்ப்பு டௌக்குபொர் விவசாயிகள் 7000 பேர்கள் மூன்று இடங்களில் ஏராளமான ஆயுதங்களை ஒட்டுமொத்தமாக எரித்தனர். இதனைத் தொடர்ந்து அவர்கள் கொல்லப்படல் நிகழ்ந்தது. 7500 பேர்கள் கனடாவுக்கு இடம் பெயர்ந்தனர். டால்ஸ்டாய் இதற்கு உதவினார். கொல்லாமைக்கான வரலாற்று வேர்களை பிற பண்பாட்டு மரபுகளிலும்– சான்றாக பௌத்தத்தில்–காணலாம்

படைப்பணிக்கான மனச்சான்றின் அடிப்படையிலான எதிர்ப்பு பற்றி ஒப்பீட்டு வரலாற்று ரீதியில் மொஸ்கொஸ் மற்றும் செம்பர்ஸ் (Moskos and Chambers) ஆய்வு செய்துள்ளனர். நவீன ஜனநாயகங்களில் ஒரு பிரிவுடன் மட்டும் சேர்ந்திராது மானிட நேய மற்றும் அரசியல் அடிப்படையில் போரில் கொல்ல மறுப்பது அதிகரித்து வருகிறது. கொல்லாமையைச் சமயம் சாராத நிலையில் ஏற்கும் படிமுறையும் உள்ளது. ஆன்மீக வாதிகள், சமயம் சாரா உலகவியலார், கோட்பாட்டாளர், நடைமுறைச் செயல்பாட்டாளர்கள் ஆகிய அனைவரும் கொல்லுதலை மறுப்பதில் ஒன்றுபடுகின்றனர்.

பொதுவாக வன்முறையை ஏற்கும் அரசியல் வாதிகளும் கொல்லாமையில் உண்மையாகவும் மரணத்தைக் கண்டு அஞ்சாமல் பற்றுறுதியுடன் செயல்படுவது வியப்பூட்டுகின்றது. சான்றாக 1713இல் பிரஷ்ய அரசர் பிரடெரிக்I என்பவர் போர் எதிர்ப்பு மேனனைட்டுகளுக்கு (Mennonites) படைகளில் சேருவதிலிருந்து விலக்களித்தார். இங்ஙனமே ரஷ்யாவில் கேதரின்II மற்றும் அலெக்சாண்டர்II ஆகியோரும் மேனனைட்டுகளுக்கு படைகளில் சேருவதிலிருந்து விலக்களித்தனர். டால்ஸ்டாயின் நண்பரான வி.ஜி செர்ட்கோவின் (V.G. Chertkov) வேண்டுதலின்படி போல்ஸ்விக் வி.சி. பொஞ்ச் ப்ருஎவிச் (V.C.Bonch Bruevich) ஆலோசனையின்படி டால்ஸ்டாயினருக்கு சிவப்புப் படையில் சேருவதற்கு லெனின் விலக்குத் தந்தார். போல்ஸ்விக்குகளில் ஒரு முதலாவது முடிவு படைக்குள் மரணதண்டனையை நீக்கியதாகும். இத்தகு முடிவுகள் நிலைத்து நிற்கவில்லை என்பதானது குறிப்பிடத்தக்க கொல்லாமைக் கண்டுபிடிப்பிற்கான வாய்ப்புகளை நிறுத்திவிடுவதில்லை. ஆணையுரிமையைப் பின்பற்றுவது மக்களின் மனப்பாங்காக இருக்கும் வேளையில், அரசியல் தலைவர்களின் செயல்பாட்டை மாற்றுவது அமைதிக்கான மிகவும் திறம்பட்ட பங்களிப்பாக இருக்கும் என ஜெரொமெ டி.பிராங்க் (Jerome D.Frank) கருதுகிறார். ஆனால் தலைவர்கள் வழிகாட்டினாலும் பின்பற்றுபவர்கள் பின் தங்கிவிடக் கூடும். மேனாட்டு ஜனநாயக நாடுகளில் மரணதண்டனையை நீக்குவது தொடர்பான ஓர் ஆய்வில் ஸிம்ரிங் மற்றும் ஹாக்கின்ஸ் (Zimiring and Hawkins) பின்வருமாறு கூறுகின்றனர்.

*ஜனநாயக நாடுகளில் பெரும்பாலோரின் எதிர்ப்புகளுக்கு இடையிலேயே மரணதண்டனை எப்பொழுதும் முடிவுக்குக்*

*கொண்டு வரப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் தவிர ஒவ்வொரு மேலை ஜனநாயக நாடும் மரணதண்டனையை நீக்கியுள்ளது. ஆனால் இந்த ஜனநாயக நாடுகள் ஒவ்வொன்றிலும் மரண தண்டனை நிறுத்தப்பட்ட பொழுது அதற்கு ஏகோபித்த ஆதரவு கிட்டவில்லை. பொதுமக்களின் எதிர்ப்பு நீண்ட காலம் இருந்த பொழுதிலும் மரணதண்டனை நீக்கப்பட்டது தொடர்கிறது.*

எவ்வாறாயினும் அகிம்சைக்கு அரசியல் தலைமையின் முக்கியத்துவத்தை உணரும் வேளையில் வெகுஜன அகிம்சை மக்கள் சக்தியின் அதிகரித்துவரும் ஆற்றலை கவனிக்காமல் அதனைப் பின்னுக்குத் தள்ளிவிடக் கூடாது.

கொல்லாமைக்கான பற்றுறுதியுடன் பிறவகைத் துன்பங்களைப் போக்குவதற்கான முயற்சியும் வாழ்வைப் போற்றும் மாற்றங்களைச் சமுதாயத்தில் கொண்டு வருவதும் தொடர்ந்து வருகிறது என்பது வரலாற்றுக் கண்ணோட்டம் தரும் மூன்றாவது அம்சமாகும். கொல்லாமை என்பது அக்கறையற்று இருப்பதோ செயலற்று இருப்பதோ அன்று. சான்றாக சமண அகிம்சைக் கோட்பாடானது மிருகங்கள், பறவைகள் மற்றும் பிற உயிரினங்களைக் காக்கும் முயற்சியையும் உள்ளடக்கும். இந்திய காந்திய இயக்கத்தில் கொல்லாமைச் செயல்பாடு மூலம் குறிப்பிடத்தக்க அமைப்பியல் மாற்றங்களை அடைவதற்கான முயற்சியைக் காணலாம். அது அரசியல் சுதந்திரத்தை அடைய முயல்வதுடன் மட்டுமல்லாமல் ஏழைகள், பெண்கள், சிறுபான்மையினர், சாதி மற்றும் சமயங்களுக்கிடையேயான உறவுகள் ஆகியவற்றை உயர்த்தும் குறிப்பிடத்தக்க பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்களைக் காண முற்படுகிறது. இங்ஙனமே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மார்ட்டின் லூதர் கிங்கின் அகிம்சை இயக்கம் சுதந்திரம் மற்றும் இன சமத்துவத்திற்கான தேடலில் வறுமை முதல் போர் வரையான அமெரிக்க சமுதாயத்தின் அமைப்பிலும் செயல்பாட்டிலும் நீதிக்கு உள்ள இடையூறுகளைப் போக்கவும் முயற்சியில் ஈடுபட்டது.

வன்முறையான நவீன நாடுகளின் வரலாற்றிலும் கொல்லாமைத் திறன்களுக்கான சான்றுகள் உண்டு. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதற்குச் சான்று பகரும். மேலாதிக்கம் செலுத்தும் வன்முறை மரபுடன் ஒப்பு நோக்குகையில் அதிகமாக வெளியில் சொல்லப்படாத அமெரிக்கக் கொல்லாமை அனுபவம் அரசியல்

அறிவியலாருக்குத் தெரியாமலிருப்பது புரிந்து கொள்ளத் தக்கதேயாகும். ஆனால் இதனைப் பற்றிய முன்னோடியான ஆய்வுகள் கொல்லாமைத் திறன்கள் இருப்பதைத் திட்டவட்டமாகக் காட்டுகின்றன.

## அமெரிக்க ஐக்கிய நாட்டில் கொல்லாமை

அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்ட பொழுது கொல்லாமை அங்கு இருந்தது. பாரம்பரிய மக்களுக்கும் போர் எதிர்ப்பாளரான குடியேற்றக்காரர்களுக்கும் இடையேயான அமைதியான நட்புறவில் அது தொடங்குகிறது. 1682க்கும் 1756க்கும் இடைப்பட்ட வருடங்களில் போர் எதிர்ப்பு குவேக்கர்கள் பென்சில்வேனியாவில் படைகளற்ற காலனியாக டெலவார இந்தியர்களுடன் அமைதியாகக் கூடி வாழ்ந்தனர். அவர்களுக்கிடையில் நட்பான விஜயங்களுக்கு கதவுகளைத் திறந்து வைத்தல் மற்றும் விரோதமான நோக்கம் பற்றிய வதந்திகளைப் பற்றி ஆலோசித்தல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் இருந்தன. படைப்பணியில் கொல்வதற்கு மனச்சான்றின்படியான சமய எதிர்ப்பிற்கு இடந்தரும் அம்சங்கள் புரட்சிக்கு முந்திய 13 மாநிலங்களில் 12 மாநிலங்களின் சட்டங்களில் இடம் பெற்றன. இவற்றில் மிகவும் தாராளமானது ரொடு ஐலாண்டின் (Rhode Island) 1673 ஆம் ஆண்டு சட்டமாகும். "பயிற்சிக்கு, ஆயுதத்துக்கு, அணிவகுப்பதற்கு, சண்டையிடுவதற்கு, கொல்வதற்கு" ஒருவரது நம்பிக்கை அவரைத் தடை செய்யுமானால், அந்த நபர் எந்தவிதமான "தண்டனை, அபராதம், பறிமுதல், சிறைவாசம்" ஆகிய துன்பங்கட்கு ஆளாகக் கூடாது என்பது அச்சட்டமாகும்.

புதிதாக உருவாகி வந்த நாட்டின் சட்டசபை விவாதங்களில் கொல்லாமை இடம் பெற்றது. 1775 இல் காண்டினென்டல் காங்கிரஸ் நிறைவேற்றிய முதலாவது சட்டம் கொல்லாமை சமய மனச்சான்றுக்கு எவ்வித வன்முறையும் கூடாது என்பதாகும். அமெரிக்காவில் அரசியல் சாசனத்துடன் சேர்க்கப்பட "உரிமைகள் மசோதா" மீதான விவாதத்தில் ஜேம்ஸ் மாடிசன் "குடிமக்களின் கொல்ல மறுக்கும் உரிமையை" அங்கீகரிப்பதை 2வது ஷரத்தாக சேர்க்கும்படி முன்மொழிந்தார். "சமயப்பூர்வமாக ஒருவர் ஆயுதம் ஏந்துவது தடைப்பட்டால், அந்நபர் படைப்பணி செய்ய வேண்டும் என வற்புறுத்தக்கூடாது" என்ற மாடிசனின் ஆலோசனை பிரதிநிதிகள் சபையில் ஏற்கப்

பட்டாலும் செனட் சபையில் மாநில உரிமைப் பாதுகாப்புக் கமிட்டியால் நிராகரிக்கப்பட்டது. பெடரல் கட்டுப்பாடுகளை மாநிலப்படைகள் விசயத்தில் விரிவாக்கக்கூடாது என்ற வாதத்தின் அடிப்படையில் இது முடிவாயிற்று.

1775–1783 அமெரிக்கப் புரட்சியில் பல்வேறு இன மற்றும் சமயப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இருதரப்பிலும் கொல்ல மறுத்தனர். விவிலிய வாசகரான ஆங்கிலேய படைஞரான தாமஸ் வாட்சன் கொல்லுதலைக் கைவிட்டுப் பின்னர் மாசசூட்ஸ் குவேக்கர் மூத்த சகோதரரானர். ஆங்கிலேயக் கடல் முற்றுகை மற்றும் பாஸ்டனை அமெரிக்கர்கள் எடுத்துக் கொண்டபொழுது, போர் எதிர்ப்புக் குவேக்கர்கள் போராடும் படைத்தளபதிகளான வாஷிங்டன் (Washington) மற்றும் ஹொவியிடம் (Howe) எடுத்துரைத்து அனுமதி பெற்று, குடிமக்களுக்கும் அகதிகளுக்கும் மானிடநேய உதவியை கொண்டு சென்று கொடுத்தனர். கொல்லாமை மனச் சான்றுக்கு, துன்பங்கட்கு இடையில், உதவப்பட்டது; அது போற்றப்பட்டது.

அகிம்சைப் போராட்டம் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்திருக்கும் என்பதை சிந்திக்காமல் இருக்க முடியாது. சார்லஸ் கே. விப்பலே (Charles K. Whipple) புரட்சிப் போரின் தீமைகள் என்ற தமது நூலில் (1839) "நாம் சுதந்திரத்தைத் திறம்பட, விரைவாக, கௌரவமாக, மிகவும் சாதகமான சூழ்நிலையில் ஆயுதமேந்தாமல் பெற்றிருக்க முடியும் என்கிறார். அந்தப் போராட்ட முறை வருமாறு: 1) அநீதியான பணிகளில் ஈடுபடத் தெளிவாக மறுத்துவிடல் 2) தமக்குரிய குறைகளைப் பொதுவாக அறிவித்து, அவற்றைச் சரிசெய்யும்படி கோருதல் 3) பணியவைக்க எத்தகு வன்முறை பயன்படுத்தப்பட்டாலும் அதனைப் பொறுமையுடன் ஏற்றல். விப்பலேயின் அகிம்சைப் போராட்ட இயக்க ஆய்வு மகாத்மா காந்தி மற்றும் ஜீன் சார்பின் அடிப்படை அம்சங்களை முன்கூட்டியே எதிர்பார்க்கிறது. அகிம்சைப் புரட்சியின் தன்மைகளை ஆராய்கையில் விப்பலே குறைந்தவர்களே கொல்லப்பட்டிருப்பார்கள் என்கிறார். எட்டாண்டு நடைபெற்ற அமெரிக்க விடுதலைப் போரில் 1,00,000 பேர்கள் கொல்லப்பட்டனர். அகிம்சை வழியில் இது நடந்திருந்தால் உயிர்சேதம் 1,000 தலைவர்கள், 10,000 மக்கள் என்ற சுருங்கிய அளவில் இருந்திருக்கும் என்கிறார் அவர். அத்துடன் போருக்கான பொருளாதாரச் செலவான 135 மில்லியன் டாலர்கள், போருக்குப் பிந்திய படைமயமாக்கத்திற்கான 300

மில்லியன் டாலர்கள் செலவு தவிர்க்கப்பட்டிருக்கும். புதிய நாட்டின் அறவியல் அடிப்படை மிகவும் உயர்வான நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். அகிம்சை வழியிலான அமெரிக்கப் புரட்சியாளர்கள் அடிமை முறையைத் தொடர்ந்திருக்க முடியாது; அங்ஙனமே "நாட்டின் பூர்வீகக் குடிமக்களை மோசடி செய்து, ஏமாற்றி, அழித்திருக்க முடியாது". அங்ஙனமே "அரசாங்கத்தின் ஒரு பகுதியாக வன்முறையையும் பழிவாங்குதலையும் ஆக்கியிருக்க முடியாது." (இதில் மரண தண்டனையும் அடங்கும்)

அமெரிக்க சிவில் போருக்கு முன்னர் கொல்லாமை இருந்தது. தேசப்பற்றாளர்கள் துன்பத்தையும் தியாகத்தையும் ஏற்றுக்கொண்டு இங்கிலாந்துக்கு எதிரான போரிலும் (1812), மெக்சிக்கோ போரிலும் அமைதிக்காகப் பாடுபட்டனர். மகளிர் உரிமைக்காகவும் மற்றும் சிறப்பாக அடிமைமுறையை ஒழிக்கவும் அவர்கள் பாடுபட்டனர். இம்முறையில் ஈடுபட்டவர்களில் ஆடவரும், பெண்டிரும், வெள்ளையரும், கருப்பரும் மற்றும் சமய நம்பிக்கையாளரும், சமயம் சாராதவரும் அடங்குவர். அடிமைமுறை எதிர்ப்பாளர்களின் முயற்சிகளால் வட மாநிலச் சட்டமன்றங்களில் அடிமைமுறை ஒழிப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தென்மாநிலங்களில் சில அடிமை முதலாளிகள் ஆன்மீக மற்றும் பொருளாதார அடிப்படைகளில் தங்களிடமுள்ள அடிமைகளை விடுவிக்குமாறு இணக்குவிக்கப்பட்டனர். ஜான் உல்மன் (John Woolman - 1720–1772) என்றும் குவேக்கரின் தீர்க்கதரிசனமான அடிமை விடுவிப்புப் பணியின் தொடர்ச்சி இவை எனலாம். கொல்லாமை வழியில் அடிமை விடுதலை என்பது சிந்தித்துப் பார்க்க முடியாததன்று. இங்கிலாந்து 1777இல் அடிமை முறையை தனது நாட்டில் ஒழித்தது. 1807இல் அடிமை வர்த்தகமும், 1833 இல் பிரிட்டிஸ் பேரரசில் அடிமைகளை வைத்திருப்பதும் தடை செய்யப்பட்டது. கனடா போலத் தாய்நாட்டுடன் (இங்கிலாந்துடன்) தொடர்ந்து ஏதாவது உறவினைக் கொண்டிருந்திருந்தால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் அமைதியாக அடிமை முறையை ஒழித்திருக்க முடியும்.

சிவில் போரின்பொழுது (1861–65), போர் எதிர்ப்பாளர்கள் சித்திரவதை, சிறையிடப்படல், தூக்கிலிடப்படல், படுகொலை செய்யப்படல் முதலிய கொடுமைகளுக்கு ஆளாயினர். கான்பெடரேசன் (1862) மற்றும் யூனியன் (1865) சட்டமுன் வரைவுகளில் மனச்சான்றின்படி கொல்லாமைக்கு எதிர்ப்புத்

தெரிவிப்பதை ஏற்கும் விதிகள் இடம் பெற்றன. இச்சட்டங்கள் ஒரே மாதிரியாக இல்லாமல் மாறி மாறி பயன்படுத்தப்பட்டன. அடிமட்டங்களில் பழிவாங்கும் போக்குடன் கையாளப்பட்டது உள்பட இச்சட்டங்கள் முன்னுக்குப் பின் முரணாக அமல் படுத்தப்பட்டன. ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன், போர் செயலர் எட்வின் ஸ்டன்டன், கான்பெடரேஷனின் போர் உதவிச் செயலர் ஜான் ஏ. கேம்பெல் ஆகியோர் தனிப்பட்டவர்களின் போரில் கலந்திட விதிவிலக்குக் கோரலைப் பரிவுடன் கையாண்டனர். இரத்தம் சிந்திய சிவில் (உள்நாட்டுப்) போருக்கு மத்தியில் கொல்லாமை மனச்சான்று உறுதிபட நின்று செயல் பட்டது; இருதரப்பிலும் மாறுபட்ட அளவில் அது ஏற்கப்பட்டது.

தொழில்மயமாதல், ஏகாதிபத்திய விரிவாக்கம் மற்றும் இரு உலகப் போர்கள் மற்றும் பல போர்களுக்கு அப்பாலும் இருபதாம் நூற்றாண்டில் கொல்லாமை மரபு தொடர்ந்து வருகிறது. முதலாளி, காவல்துறை, அரசு ஆகியவற்றின் அச்சுறுத்தல்கள் இருந்தாலும், சிலவேளைகளில் தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டபொழுதிலும், சங்கம் வைப்பதற்குரிய உரிமையையும் தமது நிலையை உயர்த்துவதையும் தொழிலாளர் பெரிதும் அகிம்சை முறையிலேயே சாதித்தனர். ஆயுதம் ஏந்தாத தொழிலாளர் புரட்சி அது. மகளிர் வாக்குரிமைக்கும் சம உரிமைகளுக்கும் அகிம்சை வழியில் போராடினர். 1916இல் முதலாவது பெண் உறுப்பினர் அமெரிக்க காங்கிரசில் இடம்பெற்றார். இம்முதல் உறுப்பினரான மொண்டானாவைச் சேர்ந்த குடியரசுக்கட்சி ஜென்னட் ரங்கின் (Jeannette Rankin) வேறு 49 பேர்களுடன் சேர்ந்து முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபடுவதற்கு எதிராக வாக்களித்தார். மீண்டும் 1940 இல் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 1941 இல் இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபடுவதற்கு எதிராகத் தனி நபராக வாக்களித்தார். அவர் தமது 88வது வயதில் வியட்நாமில் அமெரிக்காவின் கொல்லுதலுக்கு எதிராக 5,000 பெண்களை அணிதிரட்டி வாஷிங்டனுக்குக் கூட்டிச் சென்றார்.

முதல் உலகப்போரில் கட்டாயப் படைப்பணிக்கு புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களில் 4,000 பேர்கள் கொல்ல மறுத்தனர். 1,300 பேர்கள் சண்டையிடாத பிற பணிகளை, குறிப்பாக மருத்துவப் பணிகளை ஏற்றுக் கொண்டனர். 1,500 பேர்கள் விவசாயப் பணிக்கு அனுப்பப்பட்டனர்; 940 பேர்களை படைபயிற்சிப் பிரிவுகளில் ஒதுக்கி வைத்தனர்; கொல்வதற்கு

எவ்வகையிலும் ஒத்துழைக்க மறுத்த 450 பேர்கள் வழக்கு மன்றங்கட்கு கொண்டு செல்லப்பட்டு படைச் சிறைகளில் வைக்கப்பட்டனர். அவர்களில் 17 பேர்கள் கடுமையாக நடத்தப் பட்டதாலும் நோய்களாலும் இறந்தனர்.

இரண்டாவது உலகப்போரின் பொழுது (1940–47) கட்டாயமாகப் படைகளில் சேர்க்கப்பட்டபொழுது 72,354 ஆடவர்கள் கொல்வதற்கு ஆட்சேபம் தெரிவித்தனர். அவர்களில் 25,000 பேர்கள் சண்டையிடாத பணிகளில் ஈடுபட்டனர். 213 சமயப் பிரிவுகளைச் சேர்த்து 11,996 பேர்கள் 151 பொதுமக்கள் சேவை மையங்களில் வேலை பார்க்க ஒப்புக் கொண்டனர். எல்லாவிதமான போரிடுதலின் வடிவங்களுடனும் ஒத்துழைக்க மறுத்த 6,086 பேர்கள் சிறை சென்றனர். சிறை சென்றவர்களில் 3/4 பங்கினர் ஜெஹொவாவின் சாட்சிகளாவர்.

அணுயுக பனிப்போர் (Cold War 1945–1991) காலத்திலும் அமெரிக்காவின் கொல்லாமைக்கான புதைந்து கிடக்கும் வளங்கள் வெளிப்பட்டன. கொரியப்போர் (1950–53), வியட்நாம் போர் (1964–75) முதலியன அமெரிக்காவின் வரலாற்றில் நடந்த இரத்தம் தோய்ந்த போர்களாகும். அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான பனிப்போரில் குறைந்தது இரண்டு கோடி மக்கள் புரட்சி, எதிர் புரட்சி மற்றும் நாடுகளின் கொல்லை வெறிக்குத் தியாகம் செய்யப்பட்டனர். கொரியப் போரின் பொழுது 22,500 பேர்கள் கட்டாயப் படைப்பணியில் சேர மறுத்தனர். வியட்நாம் போரின் பொழுது முன் ஒரு பொழுதும் காணாத அளவு அதிகம் பேர்கள் கொல்ல மறுத்தனர். இங்ஙனம் செய்தவர்களில் பலர் சமயம் சாராதவர்கள். 1972இல் கட்டாயப் படைகளில் சேர்ந்தோரை விட மனச்சான்றின்படி மறுத்தவர் எண்ணிக்கை கூடியது. வியட்நாம் போர் எதிர்ப்பாளர்கள் அங்ஙனம் சேர பலர் படைக்குப் பதிவினை எதிர்த்துச் சிறை சென்றனர்; அல்லது தப்பிக்க பிற நாடு சென்றனர். தமது நாடுகளில் கட்டாய படைச் சேர்க்கையைத் தவிர்க்க சுதந்திரத்தை நாடி போர் எதிர்ப்பாளர் அமெரிக்கா வந்த வரலாற்றுப் போக்கை இது மாற்றியது. வியட்நாமில் மானிட வேட்டையாடல் களுக்கிடையில், ஆயுதம் ஏந்தாமல் படைகளுக்கு மாற்றாக போர் முனையில் மருத்துவப்பணி போன்றவற்றில் ஈடுபட்டவர்கள், உறுதியான போர் எதிர்ப்பாளர்களாக மாறினர்.

இராக்குக்கு எதிரான பெர்சிய வளைகுடாப் போரின் (1991) பொழுது கொல்லாமையின் மீதான உறுதிப்பாடு

மீண்டும் வளர்ந்தது. அப்பொழுது கட்டாய படைப்பணிக்கு ஆள்திரட்டப் படவில்லை. படைகளில் பணிபுரிபவர்களும் ரிசர்வாளர்களும் கொல்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர். மனச்சான்றின்படி எதிர்ப்புத் தெரிவித்த 50 கடற்படையினர் சிறையிடப்பட்டனர்.

மரண தண்டனையை நீக்குவதற்கான முயற்சியில் அமெரிக்க வரலாற்றின் கொல்லாமை வளங்கள் வெளிப் படுகின்றன. காலனி ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலிருந்து மரண தண்டனைக்குரிய குற்றங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வந்துள்ளது. மிச்சிகன் மாநிலத்தில் இராஜ துரோகக் குற்றம் தவிர பிற குற்றங்களுக்கு மரண தண்டனை 1846இல் நீக்கப்பட்டு விட்டது. முழுமை மரண தண்டனை 1852 முதல் ரொடு ஐலண்டிலும் 1853 முதல் விஸ்கான்சிலிலும் நீக்கப்பட்டுவிட்டது. இன்று ஐம்பது அமெரிக்க மாநிலங்களில் 12லும் மாநிலங்களிலும் கொலம்பியா மாவட்டத்திலும் மரண தண்டனை நீக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் எவ்வாறு கூட்டாக சிவில் வாழ்க்கையிலும் போரில் தனி நபர்களாகவும் கொல்ல மறுக்க முடியும் என்பதைக் காட்டுகிறது. பெடரல் அளவில் "குடிமக்களுக்கு மரண தண்டனை விதிப்பது அமெரிக்க அரசியல் சாசனத்தை மீறுவது" என்பதை இது அமெரிக்க உச்சநீதி மன்றம் இன்றும் முடிவாக அறிவிக்க வேண்டியுள்ளது.

அணு ஆயுதமற்ற சுதந்திரச் சமுதாயம் (வாள்களை உழு கருவிகளாக மாற்றும் இயக்கம்), படைபல வன்முறையான வறுமையில்லாத சமூகம் (கத்தோலிக்க தொழிலாளர் இயக்கம்), பெண்களுக்கு எதிரான ஆண் ஆதிக்க வன்முறைப் பண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருதல் (பெண் இயக்கங்கள்) மற்றும் ஆப்பிரிக்க–அமெரிக்கர்கள் மற்றும் அனைத்து இனங்களின் சமத்துவமாக வாழும் சுதந்திர நீதியான சமூகத்தை உருவாக்குதல் (அகிம்சை சமூக மாற்றத்திற்கான மார்ட்டின் லூதர் கிங்கின் இயக்கம்) முதலியவற்றுக்கான போராட்டங்கள் கொல்லாமைக்கான பிற வேர்களாகும். 1936இல் ஆப்பிரிக்க–அமெரிக்கத் தலைவர்கள் காந்தியைச் சந்தித்த பொழுது, நீக்ரோக்களின் ஆன்மீகத்துடன் காந்தியின் அகிம்சைச் செய்தி இயைந்துள்ளது என அவரிடம் கூறப்பட்டது. மகாத்மா காந்தி சொன்னார்: "அகிம்சையின் களங்கப்படாத தூய செய்தி உலகிற்கு நீக்ரோக்கள் வாயிலாக வெளிப்படலாம்." மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங்,

பிற உலக அகிம்சை இயக்கங்கள் ஆகியன ஒன்றொடொன்று உறவு கொண்டு துலங்குகின்றன; பாரம்பரிய மக்கள் மற்றும் போர் எதிர்ப்புக் குடியேற்றக்காரர்களின் வேர்களும் அமெரிக்க அகிம்சையில் உள்ளன. அமெரிக்க அகிம்சையானது உலகின் கொல்லமை வரலாற்றுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைந்துள்ளது.

பெரிதும் வன்முறையைக் கொண்டாடும் அரசியல் மரபு இருந்தாலும் அமெரிக்க சமுதாயத்தின் கொல்லாமை வேர்களை காலனி யுகத்திலிருந்து இன்று வரை ஒடுக்க முடியாத வலுவான "உயிரைப் போற்றும் அறத்தில்" காணலாம். போர்களில் கொல்ல மறுப்பதில், மரண தண்டனையை எதிர்ப்பதில், கருச்சிதைவிற்கான ஆட்சேபனையில், ஆயுதக் கலைப்புக்கான கோரிக்கைகளில், படை மயமாவதற்கும் வன்முறை உலக ஆதிக்க முயற்சிக்குமான எதிர்ப்பில், பொருளாதாரத்தில் அமைப்பியல் மாற்றத்திற்கான அகிம்சைச் செயலில், இன நல்லுறவுகளில், பெண்கள் உரிமைகளில், பண்பாட்டு சமன்பாடுகளில், சமய, கலை மற்றும் இலக்கிய வெளிப்பாடுகளில் கொல்லாமையின் வேர்களைக் காணலாம். வரலாற்று மூலங்கள் நோக்கத்தக்கன. இவை அகிம்சை தேசியமாக மாறலாம் என்கிறார் குயின்பெர் இவான்ஸ் (Gwyn for Evans) "அழகான அமெரிக்கா" (America the Beautiful) என்பது அதன் கீதமாக, "வெற்றி பெறுவோம்" (We Shall Overcome) என்பது அணிவகுப்புப் பாடலாக "அகிம்சை உலகில் அகிம்சை அமெரிக்காவை கடவுள் ஆசிர்வதிக் கட்டும்" ("God bless nonviolent America in a nonviolent world") என்பது அதன் வழிபாடாகட்டும்.

### கொல்லாமை வீரர்கள்

முடிவாகக் கொல்லாமைச் சமுதாயத்தின் வேர்கள் மானிட இனத்தின் வாழ்க்கை வரலாற்றில் உள்ளது. ஆடவரும் மகளிரும், தனித்தோ இணைந்தோ, போற்றிக் கொண்டாடப் பட்டோ அறியப்படாமலோ, கடந்த காலத்திலோ இன்றோ தமது கொல்லாமைப் பற்றுறுதியுடன் சமூக மாற்றத்தை ஆக்கப் பூர்வமாகத் தேடுவது மானிடத்தின் கொல்லாமையின் பொதிந்து கிடக்கும் வளங்களைக் காட்டுகிறது. சிலர் செய்யக் கூடியதை மற்றவர்களாலும் செய்ய முடியும்.

பாரிஸில் உள்ள உலகப் புகழ்பெற்ற நவீனக் கலை அருங்காட்சியகத்தின் நுழைவாயிலில் ரௌல் துபியின்

(Raoul Dufy) பெரிய வட்டவடிவான சுவர் சித்திரம் உள்ளது. அதில் பண்டைய தத்துவ ஞானிகள் முதல் நவீன விஞ்ஞானிகள் மற்றும் கண்டு பிடிப்பாளர்கள் வரை மின்சாரத்தை கண்டுபிடிப்பதற்கும் பயன் படுத்துவதற்கும் செய்துள்ள பங்களிப்பு காட்டப்பட்டுள்ளது. இதைப் போலவே கொல்லாமை அரசியல் அறிவியலைப் படிப்பதற்கு நுழையும் அறிஞர்களை வரவேற்பதற்கு அகிம்சை உணர்வு, சித்தாந்தம், செயல்பாடு ஆகியவற்றுக்கும் உலகளவில் பங்களிப்பு செய்தவர்களைக் கற்பனை செய்ய முடியும்.

ஜோஸப்சன் (Josephson) 1984இல் வெளியிட்ட *Biographical Dictionary of Modern Peace Leaders* 1800க்கும் 1987க்கும் இடைப்பட்ட காலத்தில் 39 நாடுகளில் வாழ்ந்த, அமைதிக்குப் பங்களிப்பு செய்த 717 பேர்களின் வாழ்க்கையை இந்நூல் தருகிறது. 1134 பக்கங்களில் அமைந்த இந்நூல் அகிம்சை உலகைத் தேடுபவர்களுக்கு செயலிலும் வழிமுறையிலும் கல்வியைப் போதிக்கிறது. தற்காலிகமாக ஓரளவு வன்முறையை ஏற்பதிலிருந்து கொல்லாமைக் கோட்பாட்டில் முழுமையான பற்றுறுதி வரை மதிப்பீடுகள் இதில் வேறுபடுகின்றன. இத்தகு தேடல்களை வரலாற்று ரீதியாக, பூகோளவியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாக மற்றும் சமகால வாழ்வு ரீதியாக விரிவுபடுத்த வேண்டும்; அப்பொழுது உலகளாவிய அகிம்சை தீரம் மற்றும் பற்றுறுதிக்குப் பரவசமும் மரபுரிமையும் கிட்டும். கொல்லாமை வாழ்வுகளைக் கண்டுபிடித்தலும் பகிர்தலும் தேவையாகும்.

கொல்லாமை வாழ்வுகள் கால, பண்பாட்டு, இட வரம்பு களுக்கு அப்பால் தாக்கங்களையும் எதிரொலியையும் ஏற்படுத்தும். பண்டைய ஆட்சியாளர்கள் முன் மாதிரிகளை விட்டுச் சென்றுள்ளனர். எகிப்தில் ஷபகா நுபியபான் பாராக் (Nubiaborn Pharooh Shabaka) (760-c695 B.C) மரண தண்டனையை நீக்கினார். இந்தியாவில் புத்தப் பேரரசரான அசோகர் போரையும் உயிர்வாழ்பவற்றைக் கொல்வதையும் வெற்றிகரமான கலிங்கப்போருக்குப் பின் கைவிட்டார். இப்போரில் சுமார் ஒரு லட்சம் பேர்கள் இறந்தனர், ஒன்றரை லட்சம் பேர்கள் வெளியேறினர், ஒன்றுமறியாதவர்கள் கணக்கின்றி துன்புற்றனர். ஆன்மீகத்தலைவர்களான புத்தர், மகாவீரர், இயேசு நாதர், முகம்மது நபி, ஜார்ஜ் பாக்ஸ், குருநானக், பகாயுல்லா மற்றும் இன்ன பிறரின் கொல்லாமை முன் மாதிரிகள் தலைமுறை தலைமுறையாக உலகெங்கும்

ஆக்கப்பூர்வப் பின்பற்றுதலை தோற்றுவிக்கின்றன. கொல்வதிலிருந்து கொல்லாமைக்குத் தனிநபர்கள் மாறும்பொழுது நாடக பாணியிலான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை சமயம் சார்ந்ததாகவோ அல்லது சமயம் சாராததாகவோ இருக்கலாம். படையினர் போர் எதிர்ப்பாளர்களாக ஆகின்றனர்; புரட்சியாளர்கள் கொலை வெறியை கைவிடுகின்றனர்; கட்டாயப்படைப் பணித் திட்டத்தை மனச்சான்றின்படி எதிர்க்கின்றனர்; மானிட நேய அடிப்படையில் நியூசிலாந்து ஆர்சிபால்டு பாக்ஸடர் (Archibald Baxter) சித்திரவதையையும் முதலாம் உலகப் போர்க்களத்தில் கட்டாயப் படைப் பணியையும் எதிர்க்கிறார். பைபிள் படிக்கும் ஆஸ்திரிய விவசாயி பிரன்ஸ் ஜகொர்ஸடட்டர் (Franz Jagerstatter), ஹிட்லருக்கு ஆதரவாக போராட மறுத்து தலை சீவப்படுகிறார். ஹிட்லரின் பேரழிவிலிருந்து யூதர்களைக் காக்க அகிம்சை மீட்பாளர்கள் தம் உயிரைப் பணயம் வைக்கின்றனர். போரிடும் நவீனப் படைத் தொழில் நாட்டுக்கான அறவியல், பொருள் மற்றும் உழைப்பு ஆதரவைத் தனிநபர்கள் திரும்பப் பெறுகின்றனர். பிறர் நேரடியாகப் பேரழிவு ஆயுதங்களை செயலிழக்கச் செய்ய முற்படுகின்றனர்.

ஐந்தடி நான்கு அங்குல சிறிய இந்தியரான மோகன்தாஸ் காந்தியின் தலைமைக்கு ஊர் பேர் தெரியாத லட்சக்கணக்கான மக்கள் பதிலளித்தனர். பண்பாட்டு ரீதியில் வன்முறையான பதான்கள் (Pathans) கான் அப்துல் கபார் கான் காட்டிய அகிம்சை தியாக வழியில் செல்ல முற்பட்டனர். காந்தியக் கல்வியாளர் டாக்டர் ஜி. ராமச்சந்திரன் கூறுவது போல அறியப்பட்ட அகிம்சைத் தலைவர்களைவிட அறியப்படாத அகிம்சை வீரர்களும் வீராங்கனைகளும் மிகவும் முக்கியமானவர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காந்திய முறைகளில் பயிற்சி பெற்ற சிறிய ஆப்பிரிக்க–அமெரிக்கக் கல்லூரி மாணவர் குழுவினர் சிவில் உரிமைகள் இயக்கத்தைத் தொடங்க, மார்ட்டின் லூதர் கிங் அதன் தலைமைக்குத் தள்ளப் படுகிறார். அகிம்சை அமெரிக்கர்களான அடின் பல்லௌ (Adin Ballou) மற்றும் ஹென்றி டேவிட் தோரொ (Henry David Thoreau) ஆகியோர் டால்ஸ்டாயைப் பரவசப்படுத்தினர். டால்ஸ்டாய் காந்தியைப் பரவசப்படுத்தினர். மகாத்மா காந்தி மார்ட்டின் லூதர் கிங்கைப் பரவசப்படுத்தினர். இவர்கள் அனைவரும் ஜெர்மன் பசுமைக் கட்சியின் ஸ்தாபகரான பெட்ரா கெல்லியையும் பிறரையும் பரவசப்படுத்தினர். இவ் அகிம்சைப் பங்களிப்புக்களெல்லாம் உலகளவில் பரவுகின்றன;

பின்பற்றப்படுகின்றன; புதிய ஆக்கங்கள் எழுகின்றன. அறுபது நாடுகளைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட இளைய தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தலைமைப் பயிற்சியில் 1997லும் 1998லும் மகாத்மா காந்தியை மிகவும் போற்றத்தக்க உலகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். 1945க்குப் பின் வீழச்சியுற்ற காலனி முறையின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் கருத்தின் எதிரொலி இது எனலாம்.

உலகம் முழுவதும் அகிம்சைத் தலைவர்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களில் கம்போடியாவின் மகா கோசானந்தா(Maha Ghosananda) கொரியாவின் ஹாம் சுக் ஹான்(Ham Suk Hon), நைஜிரியாவின் கென் சரொ-விவா (Ken saro-wiwa), இலங்கையின் ஏ.டி.அரியரத்னே, தாய்லாந்தின் சுலக் சிவரக்சா(Sulak Sivaraksa), பிரான்சி லான்சொ டெல் வஸ்தா(Lanzo del vasto) மற்றும் ஜெனரல் ஜெக்குய்ஸ் டி பொல்லர்தியர்யி (General Jacques de Bollaridire), இங்கிலாந்தின் ரொனால்டு மல்லொன், இத்தாலியின் அல்டோ கபிடினி(Aldo Captini), இந்தியாவின் என். ராதா கிருஷ்ணன், பிரேசிலின் டாம் ஹெல்டர் கமரா (Dom Helder Camara), அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏ.ஜெ.முஸ்டே(A.J Muste) ஆகியோர் அடங்குவர். காந்தியை கண்டுகொள்ளாது விட்டுவிட்ட வரலாற்றுப் போக்கை மாற்றி நோபல் சமாதானப் பரிசு அகிம்சையில் உயர்ந்த பற்றுறுதி உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. தென்னாப்பிரிக் காவைச் சேர்ந்த அல்பர்ட் ஜே. லுதுலி (Albert J. Luthuli), மற்றும் டெஸ்மாண்டு டுடு, வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்த மைரிடு கொரிகன் மகுர் (Mairead Corrigan Maguire), அர்ஜென்டினாவின் அடால்பொ பெரஸ் எஸ்குயிவெ (Adolfo Perez Esquivel) பர்மாவின் ஆங் சன் சூகீ (Aung San Suukyi), திபெத்தின் தலாய்லாமா முதலியவர்கள் இதில் இடம் பெறுவர்.

சமுதாயத்தின் வன்முறை அம்சம் ஒவ்வொன்றுக்கும் எதிராக மகளிர் தீரத்துடன் முன் வந்து அகிம்சை வழியில் செயல்பட்டுள்ளனர். ஆஸ்திரியாவின் பெர்தா வான் சட்டனர், பாலியின் ஜெடாங் பெகொயிஸ் ஒகா (Gedong Bagols Oka), இந்தியாவின் மேத்தா பட்கர், அமெரிக்காவின் டொரத்தி டெ (Dorothy Day), பார்பாரா டெம்மிங் மற்றும் ஜீன் டுமர் ஆகியோரை இங்கே குறிப்பிடலாம். இரண்டாவது உலகப் போரில் இங்கிலாந்தில் 1704 மகளிர் கட்டாயப் படைச் சேர்ப்புக்கு மனச்சான்றின்படி எதிர்ப்பு தெரிவித்தனர்.

போருக்கு ஆதரவான நேரடியான சண்டை இல்லாத சிவிலியன் பணியை ஏற்கமறுத்த 214 மகளிர் கைதாகினர். மகளிர் கூட்டாக மானிட உரிமைகளுக்கு எதிரான படைபல அத்துமீறல்களை எதிர்த்து வலுவான நிலைகளை மேற்கொண்டுள்ளனர் (போனஸ் அயர்ஸில் பிளாசா டி மயொ மகளிர்). இனப்படுகொலைகளுக்கு செர்பியாவில் கறுப்பாடை உடுத்திப் பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அணு ஆயுதப் போருக்கான தயாரிப்புக்கு பிரிட்டனில் கிரின்ஹாம் காமன் மகளிர் அமைதிக் குழு எதிர்த்து நின்றது. இந்தியாவில் சிப்கோ இயக்கப் பெண்கள் இமயமலைப் பகுதியில் மரங்களைத் தழுவி நின்று அவை வெட்டப் படுவதைத் தடுத்து சுற்றுப் சூழலைக் காக்க முற்பட்டனர். இங்ஙனம் பலவற்றைப் பட்டியலிடலாம். ஜோன் வி. பண்டுரண்ட் (Joan V. Boundrant), எல்லிஸ் பௌல்டிங் (Elise Boulding), மற்றும் பெரெனிஸ் ஏ.கரோல் (Berenice A.Caroll) ஆகிய மகளிர் அறிஞர்கள் அகிம்சை சமூக மாற்றத்திற்கான அறிவை வளர்த்து வருகின்றனர்.

உடன்பணியாற்றும் இணைகள் – அவர்கள் திருமண மானவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் – அகிம்சை வழி மாற்றங்களுக்கான பரஸ்பர உதவியுடன் பணியாற்றுகின்றனர். கஸ்தூரிபா. காந்தி – மகாத்மாகாந்தி, கொரிட்டா ஸ்காட் (Coretta Scott) – மார்ட்டின் லூதர் கிங், டொலொரஸ் ஹுயிர்டா (Dolores Huerta) – சீசர் சாவஸ் (Cesar Chavez), டொரத்தி டே– பீட்டர் மௌரி (Peter Maurin), பிரான்சஸ் மே விதர்ஸ்பூன் (Francis May Witherspoon)–சார்லஸ் ரெகிட் (Charles Recht), எலிசபெத் மக் அலிஸ்டர்(Elizabeth Mc Allister)–பிலிப் பெர்ரிகன்(Philip Berrigan) ஆகியோரை இங்கே குறிப்பிடலாம். 1986 இல் ஜனநாயகத்திற்காக பிலிப்பைன்ஸில் நடைபெற்ற மக்களின் இடையீட்டில் ஆண்–பெண் பாதிரியார்கள், சாதாரண மகளிர்–ஆடவர்கள் முதலியோர் இணைந்து படை வன்முறையையும் எதிர்புரட்சி வன்முறையையும் எதிர்த்து நின்று அகிம்சை வழியில் போராடியவர்களில் மகளிரும்–ஆடவருமாய் இணைந்து செயல்பட்டது மிகுதியாகும். மானிட இனத்தின் அகிம்சை வாழ்க்கை வரலாற்றை உலகளாவிய நிலையில் நோக்கும் பொழுது ஆடவரும் பெண்டிரும் கொலை இல்லாத, அனைவரின் தேவையையும் மதிக்கும் சமுதாயத்தை ஆக்க முடியும் என்று நம்பிக்கை ஏற்படுகிறது.

## கொல்லாமைச் சமுதாயத்திற்கான திறன்கள்

கொல்லாமைச் சமுதாயத்திற்கான சாத்தியம் மானிடரின் அனுபவம் மற்றும் ஆக்கத் திறன்களைச் சார்ந்துள்ளது. மிகப் பெரும்பாலான மானிடர் கொன்றதில்லை; கொல்வதில்லை. நாம் கொல்லக் கூடியவர்களாயினும், நாம் இயல்பிலேயே கொல்ல வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப் படுவதில்லை. நாம் செம்மையாகப் பின்பற்றவில்லையாயினும், உலக சமயங்களும் ஆன்மீக மரபுகளும் "கொல்லாதிருப்பாயாக" "மானிட உயிரைப் போற்றுங்கள்" என்றே போதிக்கின்றன. மிகவும் வன்முறையான சூழலிலும் மானிடர் இப்போதனைகளை முனையில் ஏற்று, முழுமையான முனைப்புடன் செயல்படும் திறன் உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. கொல்லுதல் நிகழும் பொழுது, அவற்றின் காரணங்களைப் புரிந்து கொள்ளவும், அவற்றை எங்ஙனம் நீக்குவது எனக் காணவும், தன்னையும் சமுதாயத்தையும் கொலை வெறியிலிருந்து விடுவிக்கவும் அறிவியல் ஆக்கம் ஒரு பொழுதும் கண்டிராத திறன்களைத் தருகிறது.

கொல்லாமைச் சமுதாயத்தின் மூலமுன்மாதிரிக் கூறுகள் கடந்த கால மற்றும் இன்றைய உலக அனுபவத்தில் உள்ளன. அவை கற்பனையான அனுமானங்களன்று. கொல்லாமைக் கோட்பாடுகளின் மீதமைந்த ஆன்மீக, அரசியல் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகளை மானிட அனுபவத்தில் காணலாம். படைகள் இல்லாத, தூக்குத் தண்டனை இல்லாத மற்றும் பெரும்பாலும் ஆயுதம் இல்லாத சமூகங்கள் உள்ளன. மானிடத்தின் வாழ்வையும் நலத்தையும் அச்சுறுத்தும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள கொல்லாமை நிறுவனங்களும் இயக்கங்களும் உண்டு. சமூகத்தை மாற்றியமைக்கும் நிகழ்கால மற்றும் எதிர்காலச் செயல்களுக்கான அறிவைக் கொல்லாமை வரலாற்று அனுபவங்கள் தருகின்றன. கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் கொல்லாமை வாழ்க்கையாளர் களின் மகத்தான வரலாற்று மரபுரிமை மானிடத்துக்கு உள்ளது. அவர்களின் தீரமும் செயல்களும், கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் வழிகாட்டுவதாகவும் பரவசமூட்டுவதாகவும் உள்ளன.

ஏற்கனவே உள்ள உலகளாவிய மானிட அனுபவத்தின் கூறுகளை ஒன்று சேர்த்து, சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி ஆக்கப்

பூர்வமாகப் புதியவற்றைச் சேர்த்து ஏதாவது மக்கள் பிரிவினர் செயல்பட விரும்பினால் கொல்லாமைச் சமுதாயத்தினைப் போன்றதொரு சமுதாயத்தை நடைமுறையில் உருவாக்குவது நமது வரம்புக்குள்ளேயே உள்ளது. சாத்தியக்கூறைச் சுட்டுவது ஒன்றை அடைந்திடலாம் என உத்தரவாதம் தருவதாகாது. ஆனால் முன்னர் சிந்தித்துக்கூட பார்க்கமுடியாது என்ற பிரச்சினையாக இருந்த “கொல்லாமை உலக மடைமாற்றம் என்பது மானிடராகிய நமக்குச் சாத்தியமே” என்ற நம்பிக்கையை இது வலுப்படுத்துவதாகும்.

அத்தியாயம் – 3

# அரசியல் அறிவியலுக்கான விளைவுகள்

*அகிம்சை என்பது சமயம் சம்பந்தப்பட்ட விசயம் மட்டுமன்று*
*அகிம்சை என்பது சமுதாயம் சம்பந்தப்பட்ட விசயம் மட்டுமன்று*
*அகிம்சை என்பது அதிகாரம் பற்றிய அறிவியலாகும்.*

*ஜி. ராமச்சந்திரன்*

"கொல்லாமைச் சமுதாயத்தை அடையக்கூடிய திறன்கள்" என்பதன் விளைவு அரசியல் அறிவியல் என்றும் கல்வித்துறையின் மீது என்ன? "தப்பிக்க முடியாத கொலைவெறி" என்ற நிலையை விடுத்து "கொல்லாமைக்காகப் பொதிந்துள்ள வளங்கள்" என்ற அடிப்படையை ஏற்கும் பொழுது, எத்தகு அறிவியலை அரசியல் அறிவியல் உருவாக்க முற்படும்? எத்தகு மதிப்பீடுகள் நமது செயலை பரவசப் படுத்தும்? மேலும் வழி நடத்தும். எத்தகு உண்மைகளை நாம் தேடுவோம்? எத்தகு விளக்க மற்றும் முன்கூட்டியே உரைக்கும் கோட்பாடுகளை நாம் ஆராய வேண்டும்? அறிவின் என்ன பயன்களை நாம் வளர்க்க முற்படுவோம்? நமக்கும் பிறருக்கும் எங்ஙனம் கற்பிப்போம்? பயிற்சி பெறுவோம்? எத்தகு நிறுவனங்களை நாம் உருவாக்குவோம்? கொல்லாமை உலகுக்காக 'கொல்லாமைச் சமுதாயத்தை அடைந்திட அறிவைக் கண்டுபிடித்தல், உருவாக்குதல், பகிர்தல், பயன்படுத்துதல் என்ற படிமுறையில் நாம் பிறருடன் எங்ஙனம் ஈடுபடுவோம்?

கொல்லாமைச் சமுதாயத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை கொல்லாமை ஆக்கநிலையை நோக்கிய திட்டமிட்ட, கட்டுப்பாடான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. "அரசியல் அறிவியலின் நடைமுறைச் செயல்பாட்டுக்கு கொல்வது கட்டாயமானது; கொல்லாமை அறிவியல் அதனோடு முரண்பாடானது; ஒவ்வாதது" என்ற மாக்ஸ் வீபரின் கோட்பாட்டை அது கேள்வி கேட்கிறது. முன்னர் சிந்திக்கக்கூட முடியாததாக இருந்ததை மிகவும் குறைந்தபட்சமாகப் பிரச்சினையாக ஆக்கியிருக்கிறது.

## கொல்லாமை அரசியல் பகுப்பாய்வு

கொல்லாமை அரசியல் அறிவியல் இலக்கண வாய்ப்பாடு மாற்றம் கொல்லாமை அரசியல் பகுப்பாய்விற்கு நான்கு

பகுதிகளை ஏற்படுத்தியுள்ளது. கொல்லுதலின் காரணங்களை *நாம் அறிய வேண்டும்; கொல்லாமையின் காரணங்களை* அறிய வேண்டும்; கொல்லுதலிலிருந்து கொல்லாமைக்கான இடைமாறுதலுக்கான காரணங்களை அறிய வேண்டும். கொல்லுவது முற்றிலும் இல்லாத சமூகங்களின் பண்புகளை அறிய வேண்டும்.

மரபான வன்முறையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அறிவியலை விட கொல்லாமை அரசியல் அறிவியலுக்கு கொல்லுதலைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும் என்பது முரண்பாடேயாகும். கொல்லுதலும் அதனுடன் தொடர்புடையவைகளும் இல்லாத நிலைக்கு கொல்லாமையின் இலக்கு பங்களிப்பதால் இந்நிலையாகும். தனிப்பட்டட மற்றும் கூட்டு நோக்கங்களுக்கு கொல்லுதல் தவிர்க்க இயலாததாக ஏற்றுக் கொள்ளப் படுமிடங்களில் தன்னுடை, பிறருடைய மற்றும் பரஸ்பர விளைவுகளில் கொல்லும் போக்கைப் புரிந்து கொள்வதும் நீக்குவதும் அவசரமானதன்று. "நான்/நாங்கள் கொல்லுவோம்" எனக் கொள்வதில் பிரச்சினைகள் இருந்த பொழுதிலும் அதில் ஒருவகையான பாதுகாப்பு உணர்வு உள்ளது. இத்தகு எடுகோள் இல்லாத பொழுது கொல்லுதலின் காரணங்களைப் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முற்படுவது வாழ்வுக்கும் வளத்துக்கும். மிகவும் அவசியமாகும்.

கொல்லுதலுக்கான காரணங்களைப் புரிந்து கொள்வது கொல்லாமை ஆய்வுக்கு மையமாகும். எங்கெல்லாம் கொல்லுதல் நிகழ்கிறதோ – கொலையிலிருந்து இனப்படு கொலைக்கு, அணு ஆயுதப் பேரழிவுக்கு – அங்கெல்லாம் காரண மற்றும் விளைவு படிமுறையை, அவை எவ்வளவு சிக்கலானதாகவோ, பரஸ்பரம் சார்ந்ததாகவோ இருந்தாலும் சரி, புரிந்து கொள்வது அவசியமாகும். ஒவ்வொரு கொல்லுதல் நிகழ்வுக்கும் காரண விளக்கம் தேவை. யார் யாரைக் கொல்கிறார்கள், எப்படி, எங்கே, எப்பொழுது ஏன் மற்றும் என்ன முன்நிகழ்வுகள், சூழ்நிலைகள், தனிப்பட்ட மற்றும் சமூகப் பொருள்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை நாம் அறிய வேண்டும். மேலும் கொல்லுதற்கான காரணங்களின் பாங்குகளைக் கண்டறிய அழுத்தமாக, மிகவும் சுருக்கமாக படிமுறையை விளக்கிட கொல்லுதற்கான காரணங்களின் பங்குகளைக் கண்டறிய வேண்டும்.

அங்ஙனமே கொல்லாமைக்கான காரணங்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மானிடர் ஏன் கொல்லா மலிருக்கின்றனர்? மானிட வாழ்வில் கொல்லாமை என்னும் கருத்து ஏன் எழுந்துள்ளது? கொல்லாமைக் கோட்பாடுகளில் ஏன் மானிடர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்? எள்ளி நகையாடப்படல், ஒதுக்கி வைக்கப்படுதல், நாடு கடத்தப்படல், இழக்கச் செய்தல் சிறையிடப்படல், சித்திரவதை செய்யப்படல், சிதைக்கப்படல், படுகொலை, மரண தண்டனை மற்றும் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படல் முதலிய கொலை அச்சுறுத்தல்கள் ஆகியவற்றுக் கிடையிலும் ஏன் சிலர் வரலாறு எங்கும் கொல்லுதலுக்குப் பதில் வாழ்வின் மேல் உறுதிபட நிற்கின்றனர்? கொல்லாமை இலக்குகளை கொல்லாமை முறையில் அடைய அவர்கள் ஏன் கொள்கைகளை, நடைமுறைச் செயல்பாடுகளை நிறுவனங்களை உருவாக்கியுள்ளனர்?

மக்கள் தனித்தும் கூட்டாகவும் கொல்லுதலிலிருந்து கொல்லாமைக்கும், கொல்லாமையிலிருந்து கொல்லுதலுக்குமான பயணத்தின் காரணங்கள் யாவை? கொல்லுபவர்கள் "மானிட உயிரை எடுப்பதிலிருந்து" அதனை நிராகரிப்பதற்கு மாறுவது ஏன்? படையினர் ஏன் போர் எதிர்ப்பாளராகின்றனர்? புரட்சியாளர்கள் ஏன் கொலை வழியைக் கைவிடுகின்றனர்? கொலைகாரர்கள் கொல்லாமையில் பற்றுறுதி கொள்வது ஏன்? கருத்துக்கள், தனிநபர்கள், தலைவர்கள், நிறுவனங்கள், அமைப்புக்கள், கொள்கைகள், முதலியன ஏன் அகிம்சைக்கு மாறுகின்றன? கொல்லாமையில் பற்றுறுதி கொண்டவர்கள் ஏன் இரத்தம் சிந்தலுக்கு ஆதரவாளர்களாகி, இரத்தம் சிந்தலிலும் பங்கு பெறுகின்றனர்? – சில நாடுகள் மரண தண்டனையை நீக்கி விட்டு அதனை ஏன் மீண்டும் கொண்டுவருகின்றன; போர் எதிர்ப்பாளர் சிலர் குறிப்பிட்ட போர்களைத் தற்காலிகமாக ஆதரிக்கின்றனர். கொல்லாமையை ஆராய்பவர்கள் பின்நோக்கி மாறி அமையாத நேரான முன்னேற்றம் எனக் கொள்வதில்லை. கொல்லாமைக்கு மாறும் நிகழ்வு, அதன் பரிமாணம் ஏற்படுத்தும் ஊசலாட்டத்தின் காரணங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வது கொல்லாமை மாற்றத்தை ஊக்கப்படுத்த அவசியமாகும். தனி நபர்களிலிருந்து, அமைப்புகளின் பகுதிகள் வழியாக முழு சமுதாயத்திற்கும் கவனத்தைத் தர வேண்டும்.

முற்றிலுமாகக் கொல்லுதலிலிருந்து விடுபட்ட சமூகங்களின் பண்புகளைப் புரிந்து கொள்வது கொல்லாமை அரசியல் பகுப்பாய்வின் நான்காவது அவசியமாகும். இத்தகு சமூகங்களிடையே எல்லையற்ற வேறுபாடுகள் உண்டு எனக் கொள்கிறோம். கொல்லாமை அரசியல் பகுப்பாய்வின் அனைத்து அம்சங்களுக்கும் ஆக்கத்தன்மை தேவைப் பட்டாலும் இந்நான்காவது அம்சத்திற்கு அதிகபட்ச ஆக்கத்திறன் தேவை. முதல் மூன்று அம்சங்களுக்கும் வரலாற்று அல்லது சமகால நிலைகளிலிருந்து வரும் கண்டுபிடிப்புக்களின் அங்கீகாரம் தரப்பட வேண்டும். இவற்றிலிருந்து வரும் அறிவுடன் அறவியல் ரீதியாக ஏற்கத்தக்க, சாதிக்கப்படக்கூடிய சாத்தியமுள்ள, தனிநபர், சமூக மற்றும் உலக வாழ்வின் கற்பனை செய்யப்படும் நிலைகளுக்கு ஏற்புடையதாக அமைய வேண்டும். கவிஞர் வால்ட் வித்மன் (Walt Whitman) கூறியது போல, “கடந்து தாவிச் செல்ல; ஆனால் அருகில் கொண்டுவர”, இது நமக்குச் சவால் விடுகிறது.

கொல்லும் பண்புகளால் இதுவரை கட்டுப்படுத்தப் பட்டுள்ள எச்சமூகமும் இதுவரை மானிடருக்குச் சாத்தியமாகும் கொல்லாமைப் பண்புகளின் முழு வீச்சையும் எடுத்துக் காட்டி விடவில்லை எனக் கொள்ளப்படுகிறது. ஆனால் உலகளாவிய வரலாற்று மற்றும் சமகால அனுபவங்களிலிருந்து நிகழத்திக் காட்டப்பட்டுள்ள திறன்களுடன் ஒருதலைப்பட்சமாகச் சேர்த்து எச்சமூகத்திற்கும் கொல்லாமைக்கான புதிய சாத்தியக் கூறுகளை உணரலாம். கொல்லுதல் இல்லாத சமூகங்களின் தேவையான பண்புகள் மற்றும் இன்றைய நிலையிலிருந்து அவற்றை அடைவதற்கான சாத்தியமான படிமுறைகள் ஆகியவற்றை இனங்காண்பதற்கான சித்தாந்தத்தைத் தேடுவதற்கு இங்ஙனம் நேரடி அனுபவத்தால் பெறும் ஆழ்காட்சிகளை விரிவாக்க வேண்டும்.

அறவியலில், “சித்தாந்தங்களை” உருவாக்குவது போற்றப் படுகிறது. இச்சித்தாந்தங்கள் வழி நடைமுறைப் பயன்பாட்டுக்கு பங்களிப்பு நிகழ்கிறது. (சான்று : கணிதம், இயற்பியல், பொருளாதாரம்...) ஆனால் அரசியல் அறிவியல் பொதுவாக புதிய சித்தாந்தங்களை கற்பனை செய்வதற்கு ஆதரவாக இருப்பதில்லை. வன்முறையைப் பொறுத்தவரையில் இது மிகவும் உண்மையாகும். வன்முறையை ஏற்கும் அரசியல் அறிவியல் அகிம்சை ஆக்கத்தினை பலவீனப்படுத்த

முற்படுகிறது. "கற்பனையானது", நடைமுறைக்கு ஒவ்வாத "குறிக்கோள் நிலை சார்ந்தது" "உண்மைநிலைக்கு ஒவ்வாதது" எனத் திரிபாக கொல்லாமையை அரசியல் அறிவியல் தனது பயிற்சியால் தள்ளிவிட்டு விட்டு, கொல்லும் போக்கிற்குள் நித்தியமாக அது தன்னை அடைத்துக் கொள்கிறது. கொல்லாமை ஆக்க நிலை விடுதலைக்கான உறுதியைத் தருகிறது.

கொல்லாமை பகுப்பாய்விலிருந்தான அடிப்படை அறிவு மடைமாற்றச் செயலாகப் பயன்படுத்தப்பட வேண்டும். "கொல்லுதலுக்கான புனலின்" ஐந்து மண்டலங்களுக்கும் மாற்றாக ஆக்கச் செயல்களை இது உருவாக்கிட வேண்டும்.

**கொல்லுதலுக்கான புனல்**




**படம் - 1**

கொலை முதல் வெகுஜன பேரழிவு வரையான இரத்தம் சிந்துதல் நிகழுமிடம் *கொல்லுதல் மண்டலமாகும் (Killing Zone)* நேரடியாகப் பயிற்சியினாலோ அல்லது பார்த்த மாதிரிகளைப் பின்பற்றுவதினாலோ மக்கள் கொல்லக் கற்றுக் கொள்ளும் *சமூகமயமாக்க மண்டலம் (Socialization Zone)* அடுத்துள்ளது. கொல்லுதலைத் தவிர்க்க முடியாததாகவும் சட்டப்பூர்வமானதாகும் ஏற்றுக் கொள்ளும் வகையில் முன்பே தயாரிக்கப்பட்டு விட்ட நிலை *பண்பாட்டு கட்டுப்பாட்டு மண்டலமாகும் (Cultural conditioning Zone)* சமயம், அரசியல் சித்தாந்தங்கள், வெற்றிகளையும் அட்டூழியங்களையும் கொண்டாடல், குடும்ப மரபு, சட்டம், வெகுஜனத் தகவல் தொடர்பு, கலைகள் முதலியன இக்கட்டுப்பாட்டுக்கான வளங்களாகும். சமூக–பொருளாதார உறவுகள், நிறுவனங்கள், பொருள் வளங்கள் முதலியன கொல்வதை முன்கூட்டியே முடிவு செய்வதாகவும் ஆதரிப்பதாகவும் உள்ளன. இது *அமைப்பியல் மேல் வலுவாக்க மண்டலமாகும் (Structural reinforcement Zone)* நரம்பு உயிரியல் இரசாயன திறன் மண்டலம் *(neuro-biochemical capability zone)* உள்ளடக்கிய உடலியல், நரம்பியல், மூளை ஆகியவற்றின் செயல்பாடுகளும்

படிமுறைகளும் மானிடரின் "இரைதேடும்" அல்லது வாழ்வதற்கு கொல்லுதலை நாடும் மற்றும் கொல்லாமை நடத்தைக்குப் பங்களிக்கின்றன.

கொல்லாமைக்கான மடைமாற்றம் என்பது கொல்லுவதற்கான புனலை கொல்லாமை மாற்றுகளுக்காக மடிப்பு நீக்க விசிறியாக மாற்றுவதாகும். இது ஒவ்வொரு மண்டலத்தின் உள்ளேயும், குறுக்கேயும் திட்டமிட்ட முயற்சிகளால் நிகழ்வதாகும். இத்தகு மாற்றங்கள் கொல்லும் மண்டலத்தில் ஆன்மீக மற்றும் கொல்லாமையான உயர் தொழில் நுட்ப இடையீடுகளிலிருந்து, கொல்லாமை சமுதாய மயமாக்கல் மற்றும் பண்பாட்டுக் கட்டுப்பாடுகள் ஊடாக, மாற்றங்கட்கு கொல்லுதல் தேவையில்லாத மற்றும் கொல்லுதலை உற்பத்தி செய்யாத வகையில் சமுதாயப் பொருளாதார நிலைகளை மாற்றி அமைத்தல், கொல்வதற்கான உயிரியல் உந்துதலை மருத்துவ, மருந்தியல், உடலியல் மற்றும் சுய மடைமாற்றத்திற்கான தியான மற்றும் உயிரியல் மறுவிசை முதலியவற்றின் இடையீட்டால் சரிசெய்தல் ஆகியவற்றால் நிகழும்.

**கொல்லாமை மாற்றங்களுக்கான மடிப்பு நீக்க விசிறி**




படம் - 2

**கொல்லாமை மாற்றுக்கள்**

அகிம்சை அரசியல் பகுப்பாய்வின் அளவையியலுக்குத் தேவையான அறிவைத் தேடுவதுடன் மாற்றை உண்டாக்குவதற்கு கொல்வதை நோக்கிக் குவியும் மண்டலங்களில் தனிநபர் மற்றும் சமூக முடிவுகளை தினசரி வாழ்வு முதல் உலக அரசியல் வரை கொல்லாமை படிமுறை பெயர்ச்சி (nonkilling paradigm shift) தேவைப்படுகிறது. இதனை அனுபவ மதிப்பீடு முறையில் வளர்க்கலாம்; அது நடைமுறை அனுபவத்தையும் ஊக்குவிக்கும் தேடலையும் ஒன்று சேர்க்கிறது. படை மானிட

– கணினி மற்றும் 'மென்பொருள் உலக உண்மை' (Virtual reality) இத்தகு ஊக்குதல்களை எதிர்த்து நிற்கும் நிலை முன்னரே வளர்ந்து விட்டது..

இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க செயல் பாடுகளில் (மகாத்மா காந்தி – மார்ட்டின் லூதர் கிங் இயக்கம் போல) எழுந்துள்ள அகிம்சைக் கோட்பாடுகளில் இங்கு நமது கவனத்தைக் கவர்வன வருமாறு :

*சமய அல்லது மானிடநேய மரபுகளிலிருந்து வாழ்வைப் போற்றும் வலுவைப் பெறுங்கள்.*

*உங்களது வாழ்வையும் பிறர் வாழ்வையும் போற்றுங்கள்.*

*அனைவரின் நலனை நாடுங்கள். வன்முறை பிரிக்கிறது; அகிம்சை ஒன்றுபடுத்துகிறது.*

*பிரச்சினைகளில் (பூசல்களில் / சிக்கல்களில்) முதலிலிருந்து முடிவு வரை சமரசங்காண முற்படுங்கள்; அவமானப்படுத்துவது, இழிவுபடுத்துவது, இரையாக்குவது அல்லது அழிப்பதன்று.*

*தேவையில் இருப்போரின் துன்பங்களைப் போக்கும் ஆக்கப் பணியில் சேருங்கள்.*

*ஆக்கப்பூர்வமாக இருங்கள். இன்றைய தொழில்நுட்ப, அமைப்பியல் வன்முறையை அடைய மிகுந்த "ஆக்கப்பணி" தேவைப்பட்டது; கொல்லாமை மடைமாற்றத்திற்கு இன்னும் அதிக ஆக்கப்பணி தேவை.*

*மாற்றத்திற்கு ஒரு பரிசோதனை அணுகல் முறையைக் கையாளுங்கள், கொல்லாமைச் சமூகங்களின் தன்மையிலான தொடர்ச்சிகளைத் தேடுங்கள்; வெற்றி, தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.*

*அறவியல் முன்மாதிரியிலிருந்து பேரளவு அகிம்சை மக்கள் சக்தி வரையான தாக்கத்தை*

*உடைய தனிநபர் நிலையிலான மற்றும் பேரளவிலான சமூகச் செயல் ஆகிய இரண்டையும் மதியுங்கள்;*

*ஆக்கப்பூர்வமான தீரத்துடன் இருங்கள். வன்முறைக்கான ஆதரவைத் திரும்பப் பெறுங்கள்; அகிம்சை மாற்றுக்களை வலுப்படுத்த அர்ப்பணியுங்கள்*

*பூமியின் மீது மென்மையாக நடங்கள் இயற்கை மற்றும் சகோதர மானிடர் மீதான, கொல்லுதலுக்குப் பங்களிப்புச் செய்யும் கோரிக்கைகளை குறையுங்கள்.*

அகிம்சை கண்டுபிடிப்பு மற்றும் செயல் படிமுறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் மேலும் மேலும் ஆற்றல் மிக்க கோட்பாடுகளையும் திறன்களையும் செம்மையாக்கிடப் பங்களிப்புச் செய்திட வேண்டும். குறிப்பிட்ட நிலைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்புடைய உலக வாழ்வை ஆதரிக்கும் கொல்லாமைக்கு அவை உதவிடும்.

கொல்லாமைச் சமுதாயங்களை அடைய முடியும் என்ற சாத்தியத்தை அங்கீகரிப்பது அரசியல் அறிவியலின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் வினாவை எழுப்புகிறது. "வன்முறை தவிர்க்க இயலாதது, சட்டப்பூர்வமானது" என்ற அடிப்படையானது அரசியல் அறிவியலார், பிற சமூக உறுப்பினர்களைப் போல, பின்கண்ட கருத்துக்களை நோக்கிச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

*1. வன்முறைக்கு ஆதரவு (pro-violent) :* கொல்வது தனக்கும் நாகரிகத்திற்கும் நன்மை பயக்கும் என உறுதியாகக் கருதுவது;

*2. வன்முறையை நோக்கி (violence-prone):* இலாபமாக இருக்கும் பொழுது கொல்ல முற்படுவது அல்லது கொல்வதை ஆதரிப்பது;

*3. இருமை நிலை (ambivalent) :* கொல்வது மற்றும் கொல்லாமல் இருத்தல் ஆகிய இரண்டுக்கும் முற்படல் மேலும் அதனை ஆதரித்தல் அல்லது எதிர்த்தல்;

4. *வன்முறையைத் தவிர்த்தல் (violence-avoiding) :* கொல்லாதிருக்கும் மனநிலை அல்லது கொல்லாமையை ஆதரித்தல்; ஆனால் கொல்லுதலுக்குத் தயாரித்தல்;

5. *அகிம்சை (nonviolent):* கொல்லாதிருக்கப் பற்றுறுதி; மேலும் கொல்லுதலுகான சாதகச் சூழலை மாற்றுதல்.

இங்கு கூறப்பட்ட முதல் நான்கும் வன்முறையை அடிப்படையாகக் கொள்ளும் அல்லது ஏற்கும் அரசியல் மற்றும் அரசியல் அறிவியலின் பண்புகளாகும். ஐந்தாவது அம்சம் கொல்லாமை அரசியல் அறிவியலை உண்டாக்கும்படி அழைக்கிறது; அதன் பணி அறிவியலிலும் சமூகத்திலும் அகிம்சையை நோக்கிய நிலை மாற்றத்திற்கு பங்களிப்பு செய்வதாகும்.

நமது கால அரசியல் அறிவியல் அதன் வெளிப்பாட்டிலும் அகநிலையிலும் பெரிதும் "வன்முறையை ஏற்பதாக" உள்ளது என்பதன் பொருள், அனைத்து அரசியல் அறிவியலாரும் தமது வகுப்பறைகளில் மாணவர்கட்கு படையினர் போலக் "கொல்! கொல்!" எனப் பயிற்சி தருகின்றனர் என்பதன்று. உள்நாட்டு மற்றும் சர்வதேசப் போர்களைத் தவிர்க்க ஜனநாயக நிறுவனங்களைப் (அரசியல் கட்சிகள், தேர்தல், சட்டமன்றங்கள், சட்டம் போன்றவை) பதிலிகளாக அரசியல் அறிவியலார் கொடுத்துள்ளது வன்முறையைத் தவிர்ப்பதற்கான பங்களிப்பாகும் என்பதை புறக்கணிக்கக் கூடாது. ஆனால் வன்முறையை ஏற்கும் இயல்புடைய இன்றைய அரசியல் அறிவியல் மற்றும் கொல்லாமை மாற்றுக்களுக்கான சாத்தியம் ஆகியவற்றை அங்கீகரிப்பது அறவியல்–அனுபவ வழி மற்றும் அனுபவ வழி–அறவியல் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். சுதந்திரம், சமத்துவம், நீதி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றுடன் கொல்லாமையையும் வைக்க வேண்டிய தேவையை அது உணர்த்தும். இது அறவரிச்சட்டநேரடி அனுபவம் மற்றும் நேரடி அனுபவம்–அறவரிச்சட்டம் ஆகிய நிலைகளில் அமைய வேண்டும்

## அகிம்சை அறிவியல் புரட்சி

கொல்லாமைச் சமூகங்களை அடையும் சாத்தியத்தை அங்கீகரிப்பதானது அரசியல் அறிவியலில் ஓர் அகிம்சை அறிவியல் புரட்சியைக் குறிக்கிறது. ஒன்றோடொன்று தொடர்புடைய ஏழு உப புரட்சிகள் இதற்குத் தேவைப்படுகிறது.

*1. அறவரிச்சட்ட புரட்சி* ***(normative revolution)-*** கொல்வதை ஏற்பதிலிருந்து அதனை நிராகரித்தல்;

*2. மெய்மை (நிகழ்ச்சிப்) புரட்சி****(factual revolution)-*** கொல்லாமை சமூகமாற்றத்திற்கான காரணிகளை இனம் காணுதல்;

*3. கோட்பாட்டுப் புரட்சி* ***(theoretical revolution)-*** அகிம்சை மாற்றத்திற்கான காரணங்களையும் படிமுறைகளையும் ஆராய்தல்;

*4. கல்வி மற்றும் பயிற்சி புரட்சி* ***(educational and training revolution)-*** கொல்லாமை மடைமாற்றத்திற்கான அறிவு மற்றும் திறன்களைத் தருதல்;

*5. நடைமுறைப் பயன்பாட்டுப் புரட்சி* ***(applied revolution)–*** கொல்லாமை அறிவை நடைமுறைப்படுத்துதல்;

*6. நிறுவனப் புரட்சி* ***(institutional revolution)-*** கொல்லாமை மாற்றத்திற்காக நிறுவனங்களை மாற்றுதலும் புதிய நிறுவனங்களை உருவாக்குதலும்;

*7. வழிமுறைப் புரட்சி* ***(Methodological revolution)-*** கொல்லாமை மடைமாற்றத்துக்கான மிகவும் உகந்த தேடல், பகுப்பாய்வு, செயல் முதலியவற்றை உருவாக்கி ஏற்பதற்கான வழிமுறைகள்.

அறவரிச்சட்டம். அறவரிச்சட்ட பெயர்ச்சியானது (normative shift) கொல்லும் கட்டளையிலிருந்து கொல்லாமைக் கட்டளைக்காகும். அறவியல் மற்றும் நேரடி அனுபவக் கண்டுபிடிப்புகளுடன் மதிப்பீடுகள் சேர்ந்த தாக்கப் படிமுறையின் தொடர் வளர்ச்சியால் இது நிகழலாம் என்பது ஒரு முறையாகும். கொல்வது அறவியல் தேவை என்பதிலிருந்து கொல்வது என்பது கேள்வி கேட்கப்படவேண்டிய தேவை என்பதற்கும் பின் அதிலிருந்து கொல்லாமையை ஆராய்ந்து பார்க்கலாம் என்பதற்கும், பின் அதிலிருந்து கொல்லாமை அறவரிச்சட்ட பற்றுறுதி என்பதற்கும் மாற்றம் தொடராக நிகழவேண்டும். இதற்கு இணையான நேரடி அனுபவத் தொடரானது, "கொல்லாமைச் சமுதாயம் சாத்தியமில்லை என்பதிலிருந்து கொல்லாமைச் சமுதாயம் பிரச்சினைக்குரியது என்பதற்கும்,

பின் அதிலிருந்து கொல்லாமைச் சமுதாயத்தின் பண்புகளை அறிய முற்படுவது என்பதற்கும், பின் அதிலிருந்து கொல்லாமை உலகில் கொல்லாமைச் சமூகங்களை ஆக்கி, காத்தலுக்குரிய அறிவைத் தேடுவதற்கான அறிவியல் பூர்வமான பற்றுறுதி என்பதற்குமாக" அமைந்துள்ளது.

இத்தகு ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவிச் செல்லும் அறிவியல் சவால் மற்றும் நேரடி அனுபவப் பதில் செயல்– மற்றும் நேரடி அனுபவச் சவால் மற்றும் அறவியல் பதில் செயல் --ஆகிய படிமுறைகளால் மாக்ஸ் வீபர் உண்மையெனக் கொள்ளும் அகிம்சைக் கோட்பாடுகளுக்கும் வன்முறை அரசியலுக்கும் இடையிலான துளைக்க முடியாத அரணைத் தாண்டிச் செல்ல முடியும். சான்று மற்றும் அனுமான விதிகள் மீது விட்டுக் கொடுக்கப்பட முடியாத பற்றுறுதி கொண்டிருப்பது போல, விட்டுக் கொடுக்கப்பட முடியாத வகையில் உயிர்களைப் போற்றுதல் என்பதும் நம் காலத்தில் அரசியல் அறிவியலின் அற அடிப்படையாகச் சேர்க்கப்பட வேண்டும்.

## படம் - 3

### கொல்லாமை அறவரிச்சட்ட - நேரடி அனுபவ வாய்ப்பாட்டுப் பெயர்ச்சி படிமுறை

(Process of Normative -Empirical Nonkilling Paradigm Shift)

| அறவரிச்சட்டப் பெயர்ச்சி (Normative shift) | தாக்கப் படிமுறை (Interaction process) | நேரடி அனுபவப்பெயர்ச்சி (Empirical shift) |
|---|---|---|
| கொல்வது தவிர்க்க முடியாதது (Killing is imperative) | ←→ | கொல்லாமை சாத்தியமற்றது (Nonkilling is impossible) |
| ⋮ | | \| |
| கொல்வது கேள்வி கேட்கப்பட வேண்டியது (Killing is Questionable) | ←→ | கொல்லாமை பிரச்சினைக்குரியது (Nonkilling is problematic) |
| ⋮ | | \| |
| கொல்வது ஏற்கப்பட முடியாதது (Killing is unacceptable) | ←→ | கொல்லாமை ஆராயத்தக்கது (Nonkilling is explorable) |
| \| | | \| |
| கொல்லாமை கட்டாயமாகும் (Nonkilling is imperative) | ←→ | கொல்லாமை சாத்தியமாகும் (Nonkilling is possible) |

**மெய்மைப் (நிகழ்ச்சிப்) புரட்சி.** வன்முறையை ஏற்கும் எடுகோள்கள் (assumptions) கண்டு கொள்ளாமல் அல்லது வற்புறுத்தாது விட்டுவிடும் மானிடரின் கொல்லாமைத் திறன்களுக்கான சான்றுகளை மீட்பதும் கண்டுபிடிப்பதும் கொல்லாமைக்கான பெயர்ச்சியின் மெய்மைகளாகும். இத்தகு மெய்மைகள் நரம்பியல் விஞ்ஞானம் முதல் கொல்லாமை உயர் தொழில் நுட்பம் வரை விரிந்துள்ளது. வன்முறையான வரலாற்று, பண்பாட்டு நிலைகளிலும் அகிம்சையின் வெளிப்பாடு சிறப்பான முக்கியத்துவமுடையது. சான்றாக கிரேக்கத்தில் கி.மு. 399இல் ஏதன்ஸ் நகர செனட்டர்கள் ஐநூறு பேர்களில் சுமார் 140 பேர்கள் சாக்ரட்டீஸ் கொல்லப் படுவதற்கு எதிராக வாக்களித்தனர். ஜப்பானில் 794முதல் 1192 வரையான பௌத்த ஹியன் (Heian) காலத்தில் சுமார் 350 ஆண்டுகள் மரண தண்டனை பயன்படுத்தப்பட வில்லை. 1917 செப்டம்பர் 6 ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆறு செனட்டர்களும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ஐம்பது பேர்களும் ஜெர்மனுக்கு எதிராக அமெரிக்கா முதலாம் உலகப் போரில் இறங்குவதற்கு எதிராக வாக்களித்தனர். 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் நாள் ரஷியாவில் குறைந்த பட்சம் இரண்டு பேர்கள், ஒரு வேளை ஐந்து அல்லது ஆறு பேர்கள், போல்ஸ்விக் மத்திய கமிட்டியில் லெனினின் ஆயுதப் புரட்சித் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1945 ஆம் ஆண்டு சூலையில் மான்கட்டன் திட்ட 150 விஞ்ஞானிகளில் பத்தொன்பது பேர்கள் தாங்கள் உருவாக்க உதவிய அணு ஆயுதமானது படைக்குப் பயன்படுத்தப்படுவதை எதிர்த்தனர். 1996இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கொல்லாத ஆயுதங்களைப் பற்றிய ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் உற்பத்தி செய்வதற்கு பாதுகாப்பு மற்றும் பிற அரசுத் துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து "நிர்வகிக்கும் பொறுப்பு" கடற்படைப் பிரிவுக்கு வழங்கப்பட்டது. கொல்லாமை பாதுகாப்புக்கான ஒரு முன்னோடியான சிந்தனைப் பெயர்ச்சி என இதனைக் கருதலாம். ஆனால் இத்தகு கொல்லாத ஆயுதங்கள் இன்று பிற கொல்லும் அழிவுத் தொழில் நுட்பத்திற்கு உதவியாகப் பயன்படுத்தப்படுவதால் அவை கொல்லுதலுக்கே பங்களிப்பு செய்வதாக முடியக்கூடும்.

*கொல்லாமை மெய்மைப் பெயர்ச்சியானது ஒவ்வொரு சமுதாயத்திலும் கடந்த காலத்திலிருந்து மற்றும் இன்றுள்ள கொல்லாமை மணப்பாங்கிற்கான அறிகுறிகளைக் கண்டுபிடிக்க முயல்கிறது.*

**கோட்பாட்டுப் புரட்சி.** தனிநபர் முடிவுகள், சிவில் சமூகத்தின் செயல்பாடுகள், பொதுக் கொள்கைகள் (public policies) ஆகியவற்றுக்குப் பங்களிப்பு செய்யும் கொல்லாமைப் பகுப்பாய்வின் அளவையியலுக்குத் தேவையான அறிவை வளர்க்கும் அறவரிச்சட்ட மற்றும் நேரடி அனுபவக் கோட்பாடுகளை உருவாக்குவது கோட்பாட்டுப் புரட்சியின் விளைவாகும். கொல்லாமை அரசியல் ஆற்றலின் மடைமாற்றம் உள்ளார்ந்த சக்தியைப் பற்றிய அசாதாரணமான ஆழ்ந்த காட்சிக்கு "பண்பு/ ஒழுங்கு முறை, நடைமுறை மற்றும் படிமுறை" ஆகிய மூன்று வளங்களின் இணைவின் அடிப்படையிலான தத்துவரீதியான நுண்ணறிவு உதவுகிறது. தமது "சத்தியாகிரக விஞ்ஞானம்" என்னும் தமது நூலில் மகாத்மா காந்தி வகுத்திருப்பது போலத் தனிநபர் மற்றும் கூட்டுச் செயல்களில் உண்மையைத் (நீதியைத்) தேடுவதில், உயிரை மதிக்கும், ஆன்ம சக்தியின் முக்கியத்துவத்தை மரபாகக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவதுண்டு. இதனை முதலாவதாக வற்புறுத்த வேண்டும். மகாத்மா காந்திக்கு கடவுளின் மீதான உயிர் வாழும் நம்பிக்கை என்பது உண்மை, அன்பு மற்றும் அகிம்சை என வரைவிலக்கணம் தரப்படுகிறது; அது அனைத்துச் சமயங்களையும் உள்ளடக்கும்; அது வெற்றிக் கொள்ளப்பட முடியாத அகிம்சை ஆற்றலுக்கான வளமாகும். அகிம்சை உணர்வும் உண்மையும் மானிட வாழ்வின் அடிப்படைச் சட்டமாகும்; வன்முறை என்பது அதன் மீறலாகும்.

இரண்டாவது, ஜீன் சார்ப் தமது *அகிம்சைச் செயல் அரசியல்* என்னும் நூலில் அகிம்சை அதிகாரக் கோட்பாட்டைத் தந்துள்ளார். அரசியல் அதிகாரத்தின் "கீழ்படிதல்–சார்ந்திருத்தல்" இயல்பை மிகவும் நுட்பமாக அவர் பகுப்பாய்வு செய்து, அகிம்சைப் போராட்டத்திற்கு வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகளையும் அகிம்சை அரசியல் மாற்றத்திற்கான இயக்கநிலை பற்றிய செயல்நிலை பகுப்பாய்வையும் வழங்கியுள்ளார்., ஜீன்சார்ப் அகிம்சை அரசியல் செயல் (போராட்டம்) நடைமுறை ரீதியில் ஆற்றல் மிக்கது; ஆன்மீக, சமய, போர் எதிர்ப்பு கோட்பாடுகள் எதனையும் அது சார்ந்திருப்பதில்லை.

அகிம்சைக் கோட்பாட்டுக் கற்பனைக்கு வலுவேற்றும் மூன்றாவது வளம் ஜான் பர்டனின் (John Burton) வன்முறையின் தோற்றம் பற்றிய தேவை–இல்லாமை (இழப்பு) பகுப்பாய்வு மற்றும் அகிம்சை மாற்றத்தில் பங்கேற்கும்

தேவை–நிறைவு படிமுறையை விதித்தல் ஆகியனவாகும். பர்டனின் கருத்து வருமாறு : கொலை முதல் போர் வரை எல்லாவகையான கொல்லுதல் வன்முறைகளும் மானிடத் தேவைகள் மீறப்படுவதால் நிகழ்கின்றன. இதில் முதல் முக்கியத்துவமானது தனித்துவம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை அங்கீகரிப்பதாகும். மீறுபவர்களுக்கும் மீறுதலுக்கும் உள்ளானவர்களுக்கும் அதே தேவைகள் உள்ளன. மீறப்படும்நிலையில், மதிப்பீடுகளுக்கு வேண்டுதலோ கட்டுப்படுத்தும் நெருக்குவித்தலோ கொலைவெறியைக் கட்டுப்படுத்தாது. எவருடைய தேவைகள் மீறப்பட்டனவோ அவர்கள் தங்கள் நிறைவைத் தேடிச் சிக்கல் தீர்வு படிமுறைகளில் பங்குபெற வசதி இருக்கும் நிலை அகிம்சை உலகில் அகிம்சை சமுதாயங்களை உருவாக்கிட இடம் தரும்.

ஆன்மீக ஆற்றல், நடைமுறையில் செயற்படுத்தும் திறன், மற்றும் பங்கேற்பு சிக்கல் தீர்வு ஆகியன பற்றிய புதிய ஆழ்காட்சிகள் அகிம்சை கோட்பாட்டின் கூறுகளைக் காண உதவுகின்றன அவற்றை வரலாறு, நாடு, வர்க்கம், பொருளாதாரம், நிறுவனம், பால், இனம், சமயம், பண்பாடு, சுற்றுச்சூழல், எதிர்கால எதிர்ப்பார்ப்புகள் மற்றும் வட்டார, உலக நிலைகளின் பிற அம்சங்கள் ஆகியவற்றுடன் குறித்த சூழ்நிலைக்கு ஏற்ப காரணமுறைப்படி பொருத்த முடியும். குறிப்பிட்ட சூழலுக்குப் பொருத்துதல் மற்றும் ஆக்கத் தன்மையை வளர்த்தல் என்ற வகையில் அகிம்சைக் கோட்பாட்டிற்கு ராபர்ட் ஜே. பர்ரொவ்ஸ், பெரிஸிஸ் ஏ. கரொல், ஜொகன் கால்டுங், பிரைன் மார்ட்டின், கதே மக்கின்னஸ் ஆகியோர் பங்களிப்புச் செய்துள்ளனர்.

**நடைமுறைப் பயன்பாட்டுப் புரட்சி.** அறவரிச்சட்டம், மெய்மை மற்றும் கோட்பாட்டுப் பெயர்ச்சிகள் முதலியன கொல்லாமை அரசியல் அறிவியலுக்கு புதிய நடைமுறைப் பயன்பாட்டுப் பற்றுறுதியைத் தந்துள்ளன. கொல்லாமைச் சிந்தனை, தனி நபர்கள், அமைப்புக்கள், இயக்கங்கள், கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றில் புதிய ஆர்வத்தையும் அவற்றுக்கு ஆக்கப் பூர்வமான ஆதரவையும் அறவரிச்சட்டப் பெயர்ச்சி (திறனாய்வின்றி அன்று) வழங்கியுள்ளது. வன்முறை அடக்கு முறை ஆட்சிகளுக்கு எதிராக அகிம்சை வழியிலான மாற்றத்திற்கு உதவுவதற்கு வெளிப்படையான பற்றுறுதிக்கு ஜீன் சார்ப்பின் கோட்பாடு ஆலோசனை தருகிறது. செயலற்ற ஜனநாயக அமைப்புக்கள்

தாக்கம் பெற அல்லது மாற்றம் பெற இதனை விரிவு படுத்தலாம். அரசியல் அறிவியலின் மையமான பயன்பாட்டுப் பங்கு என்பது மானிடத் தேவைகட்கு அகிம்சை வழியில் சமூக, அரசியல் பிரச்சினைகட்குத் தீர்வு காணும் பங்கேற்புப் படிமுறைக்கு உதவுவதாகும் எனப் பர்டனின் கோட்பாடு கூறுகிறது. கொல்வது மற்றும் கொல்ல அச்சுறுத்துவது ஆகியவற்றை உண்டாக்கும் மற்றும் அவற்றின் விளைவான அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு அமைப்பியல் வன்முறை நிலைகளை மாற்றுவதற்கு உதவும் பற்றுறுதியானது அறவியல், வழிமுறைகள், நிறைவற்ற நிலைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றை இணைக்கும் காந்தியக் கோட்பாட்டின் வெளிப்படையான ஆலோசனையாகும். கொல்லாமை ஆன்மீகக் கோட்பாடுகளால் பரவசமுற்ற மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் அகிம்சை அமைப்பியல் மாற்றத்திற்கு ஆழ்ந்து பற்றுறுதியுடன் உள்ளனர்.

கொல்லாமை பகுப்பாய்வின் அளவையியலுக்குத் தேவையான அறிவிலிருந்தும் மற்றும் "கொல்லும் புனலை" "விரிவாக்கும் கொல்லாமை மாற்றுக்களின் விசிறியாக" மாற்றுவதற்கான பணியின் அனுபவத்திலிருந்தும் பயன்பாட்டு கொல்லாமை அரசியல் அறிவியலானது வட்டார மற்றும் உலக மாற்றத்திற்காக உதவிட வேண்டும். தற்கால "ஜனநாயக அரசியல்" (democratic politics) மற்றும் "சுதந்திரச் சந்தைகள்" (Free markets) ஆகியவற்றில் தொடரும் தனிநபராக மற்றும் கூட்டாகக் கொல்லும் நிலையானது மானிடத்தின் நலத்துக்கான பிரச்சினைக்குரிய உத்திரவாதங்களாக உள்ளன. "ஜனநாயகமற்ற அரசியல்" மற்றும் "சுதந்திரமற்ற சந்தை" ஆகியவற்றுடன் இந்நிலைகள் சேர்ந்து பயன்பாட்டுக் கொல்லாமை அரசியல் அறிவியலுக்குச் சவால்களைத் தருகின்றன.

**கல்விப் புரட்சி.** கொல்லாமை அரசியல் அறிவியலை நோக்கிய வளர்ச்சியானது அரசியல் அறிவியலின் முறையான பயிற்சியிலும் சமூகத்தின் பிற உறுப்பினர்களுக்கான கல்விப் பணியிலும் மாற்றங்களை அவசியப்படுத்துகிறது. கொல்லும் மரபையும் மற்றும் அதனுடைய நிலைகளையும், வெளிப் படையாகவோ அல்லது குறிப்பாகவோ ஆராய்வது மற்றும் ஆதரிப்பது என்பதிலிருந்து கொல்லாமை அகிம்சை அரசியல் அறிவியல் மாற்றத்துக்குச் சிறப்பாக பங்களிப்பு செய்திட வேண்டும். கொல்லாமை சமூகங்களுக்கான தலைமை மற்றும்

குடிமையைப் போற்றி வளர்ப்பது வெளிப்படையான குறிக்கோளாக வேண்டும். கொல்லாமை அறிவைக் கண்டுபிடிப்பது, மீண்டும் அடைவது மற்றும் பகிர்ந்து கொள்வது வாயிலாக ஆராய்ச்சி, கல்வி, ஆலோசனை, தலைமை, சிவில் செயல்பாடு, திறனாய்வுச் சிந்தனை ஆகியவற்றுக்கான ஆற்றல்களை வளர்த்துக் கொள்வது என்பது முன் உள்ள சவாலாகும்.

உளவியல் மருத்துவர் மற்றும் ஆன்மீக ஆற்றுப் படுத்துபவரிடம் (spiritual counselor) இருக்க வேண்டிய அசாதாரணமான சுய அறிவானது கொல்லாமை அரசியல் அறிவியல் பயிற்சியாளர்களிடம் தேவை. வன்முறை மற்றும் அகிம்சையை நோக்கிய நமது நம்பிக்கைகள், மனப்போக்குகள் மற்றும் உணர்வுகள் முதலியவற்றின் தோற்றம் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அகிம்சை சமூக மாற்றத்திற்கான முன்தேவை தன்னைப் புரிந்து கொள்வதாகும். மாறுபட்ட ஆன்மீக அணுகல் முறைகளுக்குத் திறந்துள்ள அறிவியல் பூர்வமான தியானப் பயிற்சிகள் ஏற்புடையதாகும். பரஸ்பர நன்மை மற்றும் ஆதரவுக்கான தேவை ஆகியவற்றுக்காகத் தனிப்பட்ட அனுபவர்களையும் தொழில்முறை வளர்ச்சி அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள வாய்ப்புக்கள் வேண்டும். கொல்லாமை அரசியல் அறிவியலார் பிற விசயங்களில் தமக்குள் எவ்வளவு மாறுபட்டிருந்தாலும் வாழ்வு மீதான தமது மகத்தான மரியாதையை வெளியிடுவதில் தனிப்பட்ட முறையிலும் (கொல்லாமை அரசியல் அறிவியலார் என்ற) தமது துறை சார்ந்த வகையிலும் பரஸ்பர ஆதரவுதரும் வாழ்நாள் முன்னேற்றத்தைத் (Life-time advancement) தேட வேண்டும். சமூகத்தின் பிற அனைத்து உறுப்பினர்களின் தேவைகளிலிருந்து இவை மாறுபட்ட வையன்று.

மருத்துவ ஆராய்ச்சியாளர், மருத்துவர், மருத்துவம் கற்பிப்பவர் ஆகியோரிடமிருந்து மற்றும் வாழ்வு–சாவு தொடர்பான பிற துறைகளில் எதிர்பார்க்கப்படுவது போல மிக உயர்வான தகுதி கொல்லாமை அரசியல் அறிஞர்களின் ஆலோசனை மற்றும் அமுல்படுத்தும் பணிப் பாத்திரங்களுக்குத் தேவைப்படுகிறது. மருத்துவத்துறையின் தனிநபர் மற்றும் பொது நல வாழ்வுக்கு பங்களிப்பது போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கொல்லாமை அரசியல் அறிவியலார் பங்களிப்பு உள்ளது. அவை இரண்டும் (மருத்துவமும் அரசியல் அறிவியலும்) வாழ்வு–மரணம்

தொடர்பான இன்றைய புதிய மிகச் சிறந்த அறிவின் அடிப்படையில் நோயை அடையாளம் காணல், சிகிட்சையும் மருந்தும் வழங்குதல் ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்டுள்ளன. அதே வேளையில் சமூகத்தில் ஒவ்வொருவரும் கொல்லாமை உலக மாற்றத்திற்குப் பங்களிப்பு செய்யலாம். அகிம்சைத் தலைமையையும் குடிமையையும் வாழ்நாள் அளவுக்கு விரிவாக்க உதவிடும் சொந்த வளர்ச்சி மற்றும் அறிவையும் திறன்களையும் ஒவ்வொரு சக பங்கேற்பாளரும் பெற்றிட உதவுவது கொல்லாமை அரசியல் அறிவியலின் பணியாகும். எல்லோரும் கற்பிக்கின்றனர். எல்லோரும் கற்கின்றனர்.

கொல்லாமை பகுப்பாய்வின் அறிவுத் தேவைகள், கொல்லும் போக்கை கொல்லாமை மாற்றாக மாற்றுவதற்குரிய நடைமுறைத் திறன்களின் தேவை மற்றும் தனிநபர், சமூகச் செயல்பாடுகளுக்கு வழிகாட்டும் கோட்பாடுகளை செம்மையாக்க வேண்டிய தேவை முதலியவற்றுக்கு வழிகாட்டுவதாக கல்வியும் பாடத்திட்டமும் அமைய வேண்டும். கொல்வதற்கான மானிடரின் திறன்களின் கொடூரத்தை வரலாற்றுப் பூர்வமாகவும் நம் கால அடிப்படையிலும் சான்றுகளுடன் விளக்கும் ஓர் அறிமுக வகுப்பு அல்லது அடிப்படைக் கருத்தரங்கம் வேண்டும். மானிடரிடம் பொதிந்துள்ள (உள்ளார்ந்த) வளங்களை உலகளாவிய சான்றுகளுடன் திறம்பட எடுத்துக்கூறும் கல்வி அனுபவம் இரண்டாவதாக இடம் பெற வேண்டும். தனிநபர் மற்றும் சமூக மாற்றங்களும் ஊசலாட்டங்களும் மூன்றாவதாக அறிமுகப்படுத்தப்படும். நாம் விரும்பும் சமூகத்துக்கான அரசியல் நிறுவனங்களை உருவாக்கிட மானிடக் கண்டுபிடிப்பாற்றல் மற்றும் கொல்லுதலில்லாத சமூகத்தின் பண்புகளைக் கண்டிடவும் அரசியல் அறிவியல் எங்ஙனம் பங்களிப்புச் செய்யும் என்ற சாத்தியம் ஆகியவற்றை நான்காவது கல்வி அனுபவம் பரிசீலனை செய்யும். அடிமட்டம் முதல் உலகளாவிய நிலைவரையான அறிவு மற்றும் தேவைகள், அங்ஙனமே அடிமட்டம்–உலகளாவிய நிலை ஆகியவற்றுக்கு இடையேயான பரஸ்பரத்தாக்கம் முதலியன மேற்கூறிய ஒவ்வொரு அம்சத்திலும் இடம் பெற வேண்டும்.

இத்தகு அடிப்படைகள் மீது கொல்லாமைக் கல்வியின் புதுமைகளைக் கட்ட முடியும். அகிம்சை அரசியல் மாற்று பற்றிய பட்டப்படிப்பின் தாள் ஒன்று பொருள்மிக்க

ஈடுபாட்டையும் ஆக்கமான பகிர்வையும் ஏற்படுத்தியுள்ளது. *இத்தாளினைப் படிப்பவர் ஒவ்வொருவரும் தமது சொந்த* அக்கறையுள்ள வன்முறையின் ஓர் அம்சத்தை எடுத்து, அதனது இயல்பு மற்றும் காரணங்கள், கையாளும் அடிமட்ட நபர்களுடன் நிகழ்வுகள், போக்குகள், காரணங்கள் மற்றும் மாற்றுக்கள் பற்றிக் கலந்தாலோசிக்க வேண்டும்;" மாற்றுக்கள் பற்றித் தாமும் ஆக்கப் பூர்*வமாகச் சிந்திக்க* வேண்டும்; இது தொடர்பான பகுப்பாய்வுகள், பிரச்சினையைத் தீர்க்க ஆலோசனைகள் ஆகியவற்றை ஒருவரொடொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும்; மேலும் சமூக முடிவினை எடுக்கும் குழு படிமுறையின் வழி, ஆலோசனைகள் மீது, ஒரு மனதாக முடிவெடுக்க முற்படல் வேண்டும்.

**வழிமுறைப் புரட்சி.** ஆய்வு, கல்வி, பயன்பாட்டு அரசியல் அறிவியல் மற்றும் நிறுவனத்தை அமைத்தல் ஆகியவற்றில் புதிய முறையைச், சிந்தனையைக், கொல்லாமை மாற்றம் தூண்டுகிறது. இன்றுள்ள ஆய்வு வழிமுறையை கொல்லாமை கண்டுபிடிப்பு மற்றும் பயன்பாட்டுக்கு ஏற்ப மாற்றியமைத்தல், தேவைப்படும் புதிய வழிமுறைகளை வகுத்தல், கொல்லாமை மடை மாற்றப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நரம்பியல் அறிவியல் போன்ற பிறதுறைகளை வழிமுறைகளைப் பயன்படுத்தும்படி ஊக்குவித்தல் முதலிய சவால்கள் உள்ளன. கொல்லும் மண்டலத்தை ஆய்வது மற்றும் தலையிடுவதற்கான புதிய வழிமுறைகளின் தேவை என்னும் சிறப்பான சவால் உள்ளது; அங்ஙனமே கொல்லும் புனலின் பல்வேறு மண்டலங்களுக்குள்ளும் அவற்றின் குவிநிலைகட்கு குறுக்கேயும் தக்க பகுப்பாய்வு தேவைப்படுகிறது.

கொல்லாமை அரசியல் அறிவியல் விரிந்து பரந்து செல்லும் ஆய்வு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. தத்துவ, வரலாற்று, நிறுவன மற்றும் சட்ட ஆய்வுகள் இப்பொழுது இதில் அடங்கும். நேர்காணல், பங்கேற்று கவனிப்பு(participant observation), நிகழ்வு ஆய்வுகள்(case studies), ஒப்பியல் ஆய்வு (comparative studies), உள்ளீடு ஆய்வு (content analysis) பாடத் திறனாய்வு (textual interpretation), விளையாட்டுக் கோட்பாடு (game theory), தேர்ந்தெடுப்பு பகுப்பாய்வு (choice analysis), புள்ளியியல் அனுமானம் (statistical inference), சர்வே ஆய்வு (survey research), சோதனைச் சாலை மற்றும் களப்பரி சோதனை, கணினி வழிமாதிரிகள் தயாரித்தல் (computer

simulation) மற்றும் நோக்கத்துக்குத் தேவையான இவற்றின் பல்வேறு சேர்க்கைகள் முதலிய ஆய்வு வழிமுறைகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன. மரபான சொற்பொழிவுகள், படித்தல் –பார்த்தல், களப்பணி மற்றும் நேரடி அனுபவ வாயிலான கலந்துரையாடல் முதல் சுய வழிகாட்டலின் அடிப்படையிலான கல்வி உலகை கணினியில் தேடல், வரையான பல்வேறு கல்வி முறைகள் உண்டு. அரசியல் சாசனங்களை வரைதல், சிக்கல் தீர்வு, நிறுவன ஆலோசனை, தேர்தல் ஆலோசனை மற்றும் சமூக முடிவெடுத்தல் படிமுறைகளுக்கு நேரடியாகத் தலைவர்– குடிமக்கள் பங்கேற்பு என பலதரப்பட்ட அரசியல் செயல் பாடுகள் உள்ளன. "மானிடநிலையிலிருந்து கொல்லும் போக்கை நீக்குவதற்குப் பழைய, புதிய வழிமுறைகள் எங்ஙனம் மிகச் சிறப்பாக பங்களிக்க முடியும்?" என்பதே இந்த பலதரப் பட்ட அறிவு மற்றும் திறனுக்கான வழிமுறைக் கேள்வியாகும்.

**நிறுவனம் (அமைப்புப்) புரட்சி.** கொல்லாமை என்னும் புதிய வாய்ப்பாட்டை நோக்கிய மற்றும் அரசியல் அறிவியல் எங்ஙனம் அமைந்திட வேண்டும்? அதனது துணை (உப) துறைகள் எவை? மற்றும் பிறதுறைகளுடன் சமூகத்தின் அமைப்புக்களுடனும் அதனது உறவு என்ன? முதலிய கேள்விகள் எழுகின்றன. உலக, தேசிய, வட்டார நிலைகளிலிருந்து இன்றைய அரசியல் அறிவியலின் அமைப்புக்குள் கொல்லாமை என்ற பார்வையில் கேள்விகள் எழுப்புவதை அது தூண்டுகிறது. புதிதாக நிறுவப்படும் அமைப்புகளில் புதிய கொல்லாமை அரசியல் அறிவியல் துறையை அல்லது அகிம்சை சமூகத் தேவைகளுக்குப் பணியாற்ற பல் துறைகள் கடந்த புதிய துறையை அல்லது ஒட்டால் ஏற்படும் புதிய துறையை உருவாக்கும் சாத்தியத்தையும் அது குறிக்கிறது.

1949இல் நிறுவப்பட்ட சர்வதேச அரசியல் அறிவியல் மன்றத்தால் (International Political Science Association - IPSA) உலக அரசியல் அறிவியல் பிரதிநிதித்துவப்படுகிறது. இதில் 42நாடுகளின் அரசியல் அறிவியல் மன்றங்கள் இணைந்துள்ளன; மொத்தம் 35, 689 உறுப்பினர்கள் இதில் உள்ளனர். இதனது செயற்குழு இவற்றை பிரதிநிதித்துவப் படுத்துவதாக உள்ளது. மொத்தம் 18 துறைப் பிரிவுகளும் 38 ஆய்வுக் கமிட்டிகளும் 12 ஆய்வுக் குழுக்களும் இதில் இடம் பெறுகிறது. இத்துடன் தேசிய மன்றங்கள் இல்லாத நாடுகளின்

அரசியல் அறிவியலாளரையும், உலக அரசியல் அறிவியலாரால் கற்பிக்கப்படும் மாணவர்களையும் சேர்க்க வேண்டும்.

இன்றைய அரசியல் அறிவியலின் நிலையை ஆராய சர்வதேச அரசியல் அறிவியல் மன்றத்தால் நிறுவப்பட்ட 42 ஆசிரியர் குழுவானது *அரசியல் அறிவியல் கையேடு* ஒன்றைப் புதிதாக 1996இல் உருவாக்கியுள்ளது. கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளின் பின்னணியில் எட்டு பெரிய உட்பிரிவுகளைப் பற்றி இது ஆராய்கிறது. அரசியல் நிறுவனங்கள், அரசியல் நடத்தை, ஒப்பியல் அரசியல், சர்வதேச உறவுகள், அரசியல் கோட்பாடு, பொது நிர்வாகமும் கொள்கையும், அரசியல் பொருளாதாரம், அரசியல் ஆய்வுமுறை என்பன அதில் குறிப்பிடப் படுகின்றன. "புதிய நூற்றாண்டை நோக்கி அரசியல் அறிவியலை இது தவிர வேறெந்த நூலும் சிறப்பாக எடுத்துச் செல்லாது" என சர்வதேச அரசியல் அறிவியல் மன்றத் தலைவர் இந்நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இத்தகு சாதனைகள் இருந்தாலும் இக்கையேடானது கொல்லாமைத் துறையாக இது மாற வேண்டியதைச் சுட்டுகிறது எனலாம். இதனது பொருளடக்க அட்டவணையில் "வன்முறை" "அகிம்சை" "கொலை" (homicide), "இனப்படு–கொலை" (genocide), "மரணதண்டனை", "படை", "பயங்கரவாதம்" "காவல்துறை" முதலிய சொற்களை இடம் பெறவில்லை. "போர்" என்பது 60 முறையும் "அமைதி" எட்டு முறையும் வருகிறது. பெயர் அட்டவணையில் "ஹிட்லர்", "லெனின்" பெயர்கள் இடம் பெறுகின்றன. ஆனால் "காந்தி" மற்றும் "மார்ட்டின் லூதர் கிங்" பெயர்கள் இடம் பெறவில்லை. ஜனநாயகம், தேசியப் பாதுகாப்பு, படைப்புரட்சித் தவிர்ப்பு ஆகியவற்றுக்கான அகிம்சை அரசியல் போராட்ட கோட்பாடு மற்றும் செயற்பாடு பற்றிய உலக முன்னணி அரசியல் அறிஞர் ஜீன் சார்பின் பெயர் மற்றும் அவரது *அகிம்சை போராட்ட அரசியல்* நூல் ஆகியன இதில் இடம் பெறவில்லை. அகிம்சை சிக்கல் தீர்வுக்குப் பெரும் பங்களிப்பு செய்துள்ள ஜான் பர்டனின் பெயரும் நூலும் இதில் இடம் பெறவில்லை. உலக அமைதி விஞ்ஞானத்திற்கு முன்னோடியாகப் பெரும் பங்களிப்பு செய்துள்ள ஜொகான் கால்டுங்கின் பெயர் மிகவும் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அரசியல் அறிவியல் மன்றத்தினர் மிகவும் பழைய தேசிய உறுப்பான அமெரிக்க அரசியல் விஞ்ஞான மன்றம் சுமார் 13,300 உறுப்பினர்களை உடையது. இது 1903இல் நிறுவப்பட்டது. இது எட்டு பெரிய பிரிவுகளையும் 36 துணைப் பிரிவுகளையும், 31 சிறப்புப் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அமெரிக்க அரசியல் அறிவியலின் எட்டுப் பெரும் பிரிவுகள் வருமாறு : அமெரிக்க அரசாங்கமும் அரசியலும், ஒப்பியல் அரசியல் (comparative politics), சர்வதேச அரசியல் (international politics), ஆய்வு வழி முறை, அரசியல் தத்துவமும் கோட்பாடும், பொதுச் சட்டம் (public law) மற்றும் நீதி மன்றங்கள், பொதுக் கொள்கை (public policy) மற்றும் பொது நிர்வாகம் (public administration). "சிக்கல் படிமுறைகள்" மற்றும் "சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு" பற்றிய சிறப்புப் பிரிவுகள் உள்ள பொழுதிலும் கொல்லாமை அரசியல் ஆய்வு மற்றும் செயல் பற்றிய அளவையியலுக்குத் தேவையான அறிவு மற்றும் சிக்கல் தீர்வு பற்றி வெளிப் படையாகக் கூர்ந்து ஆராயும் நிறுவன அமைப்புகள் இல்லை. "வன்முறை", "அகிம்சை" அல்லது "அமைதி" பற்றிக் கூடத் தனியான சிறப்புப் பிரிவுகள் இல்லை (சர்வதேச அமைதி ஆராய்ச்சி மன்றத்துடன் ஒப்பிடுக) கொல்லும் நெறியியல் வேர் கொண்ட மற்றும் பாதுகாக்கப்படும் ஜனநாயகமே நாகரிகத்தின் முன்னேற்றத்திற்கான மிகச் சிறந்த நம்பிக்கை என்ற பண்பாட்டு எடுகோளே கொல்லாமை நாகரீக மாற்றுக்களைத் தேடுவதற்கு அகத்தடையாக உள்ளது

கொல்லாமையை நோக்கிய மாறுதலானது இன்றைய அரசியல் அறிவியலின் பிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் ஆகியவற்றைக் கேள்வி கேட்பதாக உள்ளது. "கொல்லாமைச் சமூகங்களைப் பற்றியும் அவற்றை அடைவதற்கான கொல்லாமை வழிகளைப் பற்றியும் நீங்கள் என்ன கூற முடியும்?" இதுவரை உள்ள சாதனைகளுடன் புதிய அம்சங்களையும் புகுத்துவதாக இது அமையும். சான்றாக இதனை அமெரிக்காவின் அரசியல் அறிவியலின் மரபான நான்கு பிரிவுகளுக்குள் நவீன மாறுபாடுகளையும் கொண்டு இக்கேள்விகளைக் கேட்டு விளக்கம் பெறுவதைக் காட்டலாம். அவை அரசியல் தத்துவமும் கோட்பாடும், அமெரிக்க அரசாங்கமும் அரசியலும், ஒப்பியல் அரசியல் மற்றும் சர்வதேச அரசியல் என்ற நான்கு பிரிவுகளாகும்.

## அரசியல் தத்துவமும் கோட்பாடும்

அரசியல் தத்துவம் மற்றும் கோட்பாட்டில் கொல்லாமை மாற்றத்தைப் புகுத்துவது என்பதன் பொருள் ஒவ்வொரு பண்பாட்டிலும் அகிம்சை வெளிப்பாடுகளை மீண்டும் காண்பது மற்றும் புதிய கொல்லாமையை ஆக்கப்பூர்வமாகப் புதிதாகப் புகுத்துவது என்பதும் ஆகும். புகழ்பெற்ற கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ போர், மரண தண்டனை, இராணுவப் பண்பாடு ஆகியவற்றை ஏற்றாலும், தமது புகழ்பெற்ற *குடியரசு* என்னும் நூலில் தத்துவ ஞானிகளும் அரசியல் தலைவர்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டியதாக "துன்பம் செய்யாமை" என்ற இலட்சியத்தை வைக்கிறார். இந்த இலட்சியம் புளூடார்க்கின் (Plutarch) சிந்தனையில் வெளியாகியுள்ளது: "கத்தியைப் பயன்படுத்துவது ஒரு நல்ல மருத்துவர் அல்லது ராஜியவாதியின் சிறப்பன்று; ஆனால் இவை இரண்டிலும் கத்தியைப் பயன்படுத்தும் நிலை திறனின்மையையே குறிக்கிறது; மேலும், ராஜியவாதியைப் பொறுத்த வரையில் அது அநீதியையும் கொடுமையையும் குறிக்கிறது. சீன மரபில் மென்சியுஸ் (Mencius) கி.மு. 371–289 கருத்துடன் இதனை ஒப்பு நோக்கலாம்..." வன்முறையைப் பயன்படுத்தி விட்டு நல்லவராக நடிக்க முற்படுபவர் ஒரு கொடுங்கோலர். மானிட இதயம் கொண்டு நல்லதைச் செய்பவர் நல்லரசராவார். "சீன மரபில் போர் மற்றும் அடக்கு முறையை விமர்சிப்பவரும், "உலக அன்புத் தத்துவ ஞானியுமான மோ–தி"(MoTi, கி.மு.468–378) உலகளாவிய மறுகண்டுபிடிப்பை அழைக்கிறார்.

வன்முறையை ஆதரிக்கும் செந்நூல்களைக் கொல்லும் நெறிமுறையைக் கழிக்கும் / நீக்கிவிடும் வகையில் மறுவிமர்சனம் செய்ய முடியும்; அத்துடன் அகிம்சைக்கான ஒளி தருவதுடன் அதனை வளர்ப்பதாகவும் அவற்றை ஆக்க முடியும். இதனை சைவத் சத–அனந்த் (Chaiwat Satha-Anand) மக்கிய வெல்லியின் *இளவரசன் (Prince)* நூலுக்கு மறுவிமர்சனமாக எழுதிய *அகிம்சை இளவரசன் (Nonviolent prince)* நூலில் காணலாம். பர்ரௌவிஸ் (Burrowes) என்பார் கிலௌஸிவிட்ஸ் (Clausewitz) எழுதிய புகழ்பெற்ற *போரில் (On War)* என்னும் நூலிலிருந்து அகிம்சை பாதுகாப்பிற்கான ராஜதந்திரக் கோட்பாடுகளை உருவாக்குகிறார். பகவான் கிருஷ்ணன் அர்ஜீனனுக்கு வழங்கிய அறிவுரை அடங்கிய இந்து சமயத் திருமறையான *பகவத் கீதையிலிருந்து (Bhagavad Gita)* அகிம்சைப் போராட்டத்திற்கான

கோட்பாடுகளை மகாத்மா காந்தி உருவாக்குவதை இது நினைவுபடுத்துகிறது.

வன்முறையை ஏற்கும் பழைய செந்நூல்கள் நிகழ்கால மற்றும் எதிர்கால அகிம்சை ஆக்கத்திறனுக்குச் சவால் விடுகின்றன. இராணுவ ஒழுகலாறுகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியாள்களை பிளேட்டோவின் குடியரசு தருமானால் கொல்லாமைக் கோட்பாடுகளுக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தீரமான தலைவர்களையும், குடிமக்களையும் கொண்ட அகிம்சைக் குடியரசை (nonviolent republic) நாம் உருவாக்கிட வேண்டும். போர் மற்றும் சண்டையிடும் அரசியலுக்கு அரசியல் சாசனங்களை அரிஸ்டாட்டில் விவரிக்க முடியுமானால் கொல்லாமைச் சமூகத்திற்கான அரசியல் சாசனங்களை நாம் இன்று பரிசீலிக்க வேண்டும். வன்முறையை ஏற்கும் ஆதிக்கத்திற்கான திறன்களை மக்கியவெல்லி வகுக்க முடியுமானால் அகிம்சை அரசியல் ஆற்றலுக்கான திறன்களையும் உத்திகளையும், உபாயங்களையும் கண்டிடுவது இன்று சாத்தியமே ஆகும். தனது ஏகபோக வன்முறையால் சமூக அமைதியைக் கட்டாயப் படுத்தும் அசுர நாட்டை ஹாப்ஸ் முன்மொழிவாரானால், கொல்லுதல் வழி இல்லாமல் மானிடத் தேவைகளுக்குப் பரிவுடன் உதவிடும் புதிய ஆட்சி முறைகளை நாம் தேடிட முடியும். கொடுங்கோல் ஆட்சியை மாற்ற வன்முறைப் புரட்சியை லாக் கருதிப்பார்க்கையில், அகிம்சை ஜனநாயக விடுதலைக்கான தந்திரங்களையும் உபாயங்களையும் நாம் இன்று காண முடியும். முடிவாகத் தீர்மானிக்கும் முடிவான வழி என்பது வன்முறையான வர்க்கப் போராட்டமே என மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸ் ஆகியோர் காட்டுவார்களேயானால் பொருளாதார நீதிக்காக காலங்காலமாக இருந்துவரும் ஆர்வங்களை நடைமுறைப் படுத்த அகிம்சைப் போராட்டப் படிமுறையால் முடியும் என்பதை நாம் காட்ட முடியும். மீறுபவர்களுக்கு எதிராகக் கொல்லுதலை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒப்பந்தத்தை ரூஸோ வழுத்திடுவாரேயாகில், மேலும் இன்றைய ஆட்சியாளர்கள் வன்முறையை அடிப்படையாகக் கொண்ட "ஒப்பந்தங்களைப்" பற்றியும் "உடன்படிக்கைகளைப்" பற்றியும் பேசினால், நாம் கொல்லாமைக் குழுமங்களில் நலவாழ்வுக்கு பரஸ்பர பற்றுறுதிகளை இப்பொழுது நாம் தேட முடியும். இமானுவெல் காண்ட் "நிலைத்த அமைதியானது போர் இல்லை என்னும் மறுப்புக் கிடமில்லாத கட்டளையை உறுதிபட பற்றி

நிற்பதிலிருந்து வருகிறது" எனக் கொள்வாரானால், கொல்லாமைக் கட்டளையை உலக உண்மையாக மாற்றுவதற்குத் தேவையான அம்சங்களை நாம் அதில் காண முடியும். வன்முறையான சுதந்திரப் பிரகடனம், வன்முறையை ஆதரிக்கும் அரசியல் சாசனம் ஆகியவற்றை அமெரிக்க அரசியல் மரபு தருமானால், அமெரிக்க சமூக வன்முறையிலிருந்து விடுதலை பெறும் அகிம்சைப் பிரகடனத்தையும் புதிய அகிம்சை அரசியல் சாசனத்தையும் நாம் தருவது இன்று சாத்தியமேயாகும். வன்முறையின் தவிர்க்க இயலாத நிலையை ஏற்பதே அரசியல் என்று மாக்ஸ் வீபர் விதிப்பாரேயானால் வன்முறையிலிருந்து விடுதலையான அரசியல் மற்றும் அரசியல் அறிவியல் என்று நாம் புதிய காட்சியினைத் தரமுடியும்.

கொல்லாமை பெயர்ச்சியானது தத்துவம் மற்றும் கோட்பாட்டியலுக்கு காந்திய அரசியல் சிந்தனையின் ஆழ்ந்த, தீவிரத் திறனாய்வு அறிமுகத்தைக் கோருகிறது. அங்ஙனம் நிகழாது இருப்பது வன்முறையை ஆதரிக்கும் உலகம் காந்தியை நோபல் சமாதானப் பரிசுக்கு அங்கீகரிக்காதது போன்றது தான். இப்பணியைச் செய்வதற்கு பல்வேறு கொள்கைகளையும் துறைகளையும் சேர்ந்த இந்திய விமர்சகர்களின் பங்களிப்பும், இந்தியரல்லாதாரின் பங்களிப்பும் நிறைந்து உள்ளது.

கடந்த காலம் மற்றும் நிகழ்காலத்தில் உலகின் அனைத்துப் பண்பாடுகளிலும் அகிம்சை மாற்றுக்களைப் பற்றிய சிந்தனைகள் கொல்லாமை கோட்பாட்டை ஆக்கப்பூர்வமாக முன்னேற்றியுள்ளது. கி.மு. 550 முதலான ஒரு சர்வேயை அர்தர் மற்றும் லைலா வெயின்பர்க் (Arthur and Lila Weinberg) தந்துள்ளார். இவ்வகையில் பல்சமய வேர்களை T.K.N. உன்னித்தானும் யோகநேந்திர சிங்கும் தந்துள்ளனர். பண்டைக் காலத்திலிருந்து போர் எதிர்ப்பு அமைதி மரபை வில் மொர்ரிசெ (Will Morrisey) தருகிறார். கிரேக்க–ரோமானிய ஐரோப்பிய–அமெரிக்க மரபுகளை அவர் தருகிறார்.

உலகளாவிய அளவில் அகிம்சை அரசியல் சிந்தனைக்கான தேடல்கள் மேற்கொள்ளப்படும் வேளையில், சில வியத்தகு கண்டுபிடிப்புகளை எதிர்பார்க்கலாம். 1987 டிசம்பர் 3ஆம் நாள் கொரிய அரசியல் தத்துவ ஞானி குவாங் ஜங் யொப் (Hwang Jang Yop) பியாங்காங்கில் அளித்த பேட்டியொன்றில் பின்வருமாறு கூறினார். "அன்பு மற்றும்

சமத்துவம் ஆகிய அடிப்படைகளில் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஆர்வங்களையும் இயைபுபடச் செய்வது அரசியலின் பொருளாகும்." ஆனால் சமூகவியலான சொரொக்கின் "அன்பு" மற்றும் "ஆக்கப்பூர்வ பொது நலம்" ஆகியவை பற்றிச் செய்துள்ள மகத்தான ஆய்வுகளை அவர்கள் அறியவில்லை. "உரையாடுவது, முடிவெடுப்பது, சேர்ந்து செயல்படுவது" என்ற அரெண்ட்டின் வற்புறுத்தலையும் பர்டனின் மானிடத் தேவைகள் மீது பொறுப்புணர்வான படிமுறைகள் என்பதையும் இதனுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

புதிய கொல்லாமை அரசியல் தத்துவத்திற்கான விதைகளாக இவை அமையும்.

## ஆட்சி அமைப்பு முறை ஆய்வுகள்

அமெரிக்க அரசாங்கம் மற்றும் அரசியல் போல அரசியல் ரீதியாக கட்டப்பட்டுள்ள சமூகங்களிலும் அவற்றின் உறுப்புக்களிலும், கிராமம் முதல் தேசம் வரையிலும் தேசங்கடந்த நிலைகளிலும் கொல்லாமை பகுப்பாய்வு அளவையியல் வினாக்களை எழுப்புகிறது. மரபின் "எடுகோள் பொறியில்" மாட்டிக் கொண்டதிலிருந்து விடுபட்டுத் தீரமாகக் கேள்விகளைக் கேட்க வேண்டும் என எதிர்காலவியல் நிபுணர் ஹரால்டு லின்ஸ்டோன் (Harold Linstone) கூறுகிறார். தேசப்பற்று என்ற கோட்டைக்குள் அரசியல் கொல்லும் நிலை தன் மீது யாரும் வினாத்தொடுக்காத வகையில் பார்த்துக் கொள்ள முற்படுகிறது. ஆட்சிமுறைக் குள்ளிருந்து கேள்வி கேட்க முடியாது என்றால் வெளியிலிருந்து அரசியல் அறிவியலார் அப்பணியைச் செய்ய வேண்டும்.

கொல்லாமை அணுகல் முறையானது பல வினாக்களுக்கு விடை தரவேண்டியுள்ளது. ஒவ்வொரு அரசியல் சமுதாயத்தின் தோற்றம் மற்றும் அதன் நிலைபெறலுக்கு கொல்லுதல் என்ன பங்களிப்பு செய்துள்ளது என்பதை முதலாவதாக நோக்க வேண்டும். எந்தளவுக்கு ஆட்சியின் சுய சித்திரம் (self-image) அதனது கொல்லாமை வரலாற்றின் மீது அமைந்துள்ளது? எத்தகு கொல்லுதல், அரசு சார்ந்தது மற்றும் அரசு சாராதது, தொடர்கிறது? அதனது எதிர்காலச் சாத்தியங்கள் யாவை? சட்டப்பூர்வ அல்லது சட்டத்துக்கு அப்பாற்பட்ட, அரசுக்கு ஆதரவான அல்லது எதிரான, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் கொல்லுதலில்

பங்கு பெறவும் அதனை ஆதரிக்கவும் குடிமக்கள் எங்ஙனம் சமூக மயமாக்கப் படுகின்றனர்? அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டுக் கருத்துக்கள், நடைமுறைகள் மற்றும் அமைப்புகள் எங்ஙனம் கொல்லலுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. பொருள் அல்லது சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்ற மதிப்பீடுகளைத் தேடுவதற்குரிய ஆட்சியின் ஆற்றலைக் கொல்லல் எங்ஙனம் பாதிக்கிறது?

இரண்டாவது, சமூகத்தின் கொல்லாமைக் கருத்துக்கள், நடைமுறைகள், கொள்கைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வரலாற்று வேர்கள் யாவை? அவற்றின் இன்றைய வெளிப்பாடுகள் என்ன? எதிர்கால வாய்ப்புகள் யாவை? வன்முறை அரசியல் அதிகாரத்திற்கு எதிராக அகிம்சை எதிர்ப்புக்கான சான்றுகள் என்ன? கொல்லாமைச் சமுதாயத்தை அடைவதற்கான ஆக்கமான நிர்மாணச் செயல்களின் சான்றுகள் யாவை?

கொல்வதிலிருந்து கொல்லாமைக்கு முன்னோக்கியும் கொல்லாமையிலிருந்து கொல்வதற்குப் பின்னோக்கியும் செல்வதை ஆராய்வது மூன்றாவது தேவையாகும். இத்தகு மாற்றங்களில் ஈடுபட்டுள்ள குறிப்பிடத்தக்க நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் எவை? படைகளில் பணிபுரிபவர்கள் போர் எதிர்ப்பாளராக ஆனார்களா? கொல்பவர்கள் உயிரைப் போற்றுபவர்களாக மாறினார்களா? வன்முறைப் புரட்சியாளர்கள் அகிம்சை சமூக மாற்றத்தில் பற்றுறுதி கொண்டார்களா? கொல்லுதலை ஆசிர்வதிப்பதை சமயப் பிரமுகர்கள் கைவிட்டார்களா? பண்பாட்டுப் பிரமுகர்கள் வன்முறையை ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் எனப் பெயர்ச்சி அடைந்துள்ளார்களா?

எத்தகு குற்றங்களுக்காக மரண தண்டனை தரப்படுகிறது, நீக்கப்படுகிறது, மீண்டும் விதிக்கப்படுகிறது என்பதில் என்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன? படைகள் கலைக்கப்பட்டனவா? பின்னர் மீண்டும் ஏற்படுத்தப் பட்டனவா? முன்னர் கொடிய விரோதிகளாக இருந்தவர்கள் பின்னர் உண்மையாகவே சமரசம் கண்ட நிகழ்வுகள் உண்டா? அவர்களிடையே மீண்டும் கொல்லும் வெறி தோன்றியதா? வன்முறையை ஆதரிக்கும் பொருளாதாரம் முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ அகிம்சை தனிநபர் மற்றும் சமூகத் தேவைகளுக்குப் பதில் தந்ததா?

நான்காவதாக, எந்த அரசியல், சமயம், பொருளாதாரம் மற்றும் பண்பாடு முதலிய ஆட்சி அமைப்பு முறைக் கூறுகளின் வரலாற்று மற்றும் சமகாலத்து அம்சங்களைச் சேர்த்து அகிம்சை மாற்றப் படிமுறையில் வெளியிடும் போது கொல்லாமைச் சமுதாயம் உருவாவதற்கான நிலைகளை உருவாக்கிட முடியும்? எத்தகு சமயங்கள், சித்தாந்தங்கள் (ideologies), சட்டங்கள், நிறுவனங்கள், கொள்கைகள், சமூக–பொருளாதார அமைப்புகள், கல்வி, தகவல் தொடர்பு, கலைகள், ஆட்சி முறையில் உள் உறவுகள் ஆகியவற்றில் எத்தகு மாற்றங்கள் கொல்லாமைச் சமூகத்தை அந்நிலையில் அடைய உதவும்? சுதந்திரம், சமத்துவம், பொருளாதார நலவாழ்வு, கொல்லுதல் அல்லது கொல்லுதல் அச்சுறுத்தலில்லாத பாதுகாப்பு ஆகிய மதிப்பீடுகளை எத்தகு நிலைகள் வெளிப்படுத்தப்படும்?

## ஒப்பியல் அரசியல்

கொல்லாமையை நோக்கிய பெயர்ச்சியானது அகிம்சை மானிடத் திறன்கள் பற்றிய கேள்விகளை ஒப்பியல் அரசியல் தேடலின் மையமாக்குகிறது. அரசுகளும், குடிமக்களும் கொல்லுவதை, கொல்லும் அச்சுறுத்தலை சமூகங்களுக்குள்ளும் சமூகங்களுக்கிடையிலும் பயன்படுத்துவதுடன் தொடர்புடைய கருத்துக்கள், நிறுவனங்கள், அமைப்புகள், படிமுறைகள் கொள்கைகள் ஆகியவற்றைப் பற்றிய உலகளாவிய ஒப்பீடு எத்தகு ஒளியைத் தரும்? கொல்லாமை பகுப்பாய்வின் அளவையியல் வழிகாட்ட திறம்பட்ட மடை மாற்ற நடைமுறைகளைத் தேட ஒப்பியல் ஆய்வு ஓர் ஆட்சிமுறைக்கு அப்பால் அறிவைத் தேடுகிறது.

கொல்லுவது அல்லது கொல்லாமலிருந்தல் என்ற மனப்பாங்கின் அடிப்படையில் சமூகங்களை ஒப்பிட்டு வரிசைப் படுத்த முடியும். ஜனநாயக நிறுவனங்கள், மானிட உரிமைகள், மகளிர் நிலை, குழந்தைகள் நலவாழ்வு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்ற அடிப்படையில் சமூகங்கள் வரிசைமுறைப் படுத்தப்படுவது போன்றதே இது. கொல்லும் போக்கை அளப்பதற்கு ஆட்சியின் ஏஜெண்டுகளும், பகைவர்களும் கொல்வது, கிரிமினல் கொலைகள் மற்றும் குடிமக்கள் கொலைகள், தற்கொலைகள், நாடுகளுக்கிடையில் பிற சமூக உறுப்பினர்களைக் கொல்லல், கொல்வதற்கான முறையான பயிற்சி, கொல்வதற்கான தொழில் நுட்பத் திறன்கள், கொல்லும்

அரசியல் பொருளாதாரத்தின் பொருள் அளவுகோல்கள் முதலியற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இங்ஙனமே கொல்லாமை பண்புகளுக்கான வரிசை முறைகளையும் தர முடியும். உலக அரசியல் அறிவியல் உலக நாடுகளில் கொல்லுதல், கொல்லாமை ஆகியவற்றில் நாடுகள் பெறும் புள்ளிகளைத் (வரிசை முறையைத்) தொடர்ந்து மதிப்பிட்டு (அளந்து) வழங்கிட வேண்டும். உலக பங்குச் சந்தைகள், விளையாட்டு நிலவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப் படுவதை விட நாடுகளின் கொல்லுதல் மற்றும் கொல்லாமை நிலைகளைத் தொடர்ந்து வரிசைமுறையிட்டு கவனித்து வருவது மிகவும் முக்கியமாகும்.

பல்வேறு ஆட்சிமுறைகளுக்கிடையில், ஒரே ஆட்சிமுறைக்குள் சமூகக் கூறுகளை மிகவும் அதிக ஒற்றுமையானது, மிகவும் ஒற்றுமை குறைந்தது என்ற வகைகளில் ஒப்பிடுவது காரணங்களை, மடைமாற்றங்களைப் புரிந்து கொள்ள உதவும். இவைகளில் சமயங்கள், சித்தாந்தங்கள், கலைகள், கட்சிகள், பாடல்கள், ஒத்த வயதுக் குழுக்கள், கல்வி நிலைகள், வர்க்கங்கள், இனக் குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள், பல்கலைக் கழகங்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியவற்றின் கொல்லும் மற்றும் அகிம்சை மனப்பாங்குகள் அடங்கும்.

சர்வாதிகார ஆட்சிகளுடன் ஒப்பிடுகையில் ஜனநாயக ஆட்சிகளில் போருக்குச் செல்வதும், தனது குடிமக்களையே கொல்வதும் குறைவாக உள்ளன என்ற நம் காலத்து அரசியல் அறிவியலின் முடிவை உறுதி செய்ய கொல்லாமை ஒப்பியல் ஆய்வு தேவை. தாராளமயமான ஜனநாயகங்களுக்குள்ளும் வெளியிலும் கொல்வது தொடர்கிறது என்பதை அவை அமைப்பில் ஜனாதிபதி முறை அல்லது நாடாளுமன்ற முறையுடன் வன்முறை கலாச்சாரங்களின் வெளிப்பாடு இருப்பது கொல்லாமை அமைப்பு மற்றும் பண்பாட்டு மாற்றத்துக்கு ஒப்பியல் ஆய்வுகளின் முக்கியத்துவத்தைக் காட்டும். இந்நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் அருகருகே அமைந்த இரு மெக்சிகோ கிராமங்களைப் பற்றிய ஒப்பியல் ஆய்வு ஒன்றைக் காட்டினோம். அவ்விரு கிராமங்களும் சமூகப் பொருளாதாரக் காரணிகளால் ஏறக்குறைய ஒன்றாக இருந்தாலும் ஒன்று வன்முறை மிக்கதாகவும் மற்றது வன்முறை குறைவானதாகவும் இருந்தது. அவ்விரு கிராமங்கட்கு இடையில் பண்பாட்டு சுய

படிமங்களில் பெரும் மாறுபாடுகள் இருந்தன. வன்முறையான கிராமத்தில் தங்களை வன்முறையாளராக நோக்கி அதனை ஏற்கும் போக்கு இருந்தது. வன்முறை குறைவான கிராமத்தில் தம்மை அமைதியானவர்களாகக் கருதி, அதில் அவர்கள் பெருமை கொள்ளும் நிலை இருந்தது.

ஒன்று வன்முறையான மற்றது வன்முறை குறைந்த இரு இந்தோனேசியக் கிராமங்கள் ஒப்பிடப்பட்டன. வன்முறை அதிகமாக இருந்த கிராமத்தில் குழந்தைகள் வன்முறையான விளையாட்டுகளிலும் மானிடர் மற்றும் மிருகங்கள் சண்டையிடுவதில் அதிக ஆர்வம் காட்டினர். வன்முறை குறைந்த இன்னொரு கிராமத்தில் குழந்தைகள் மனநிறைவு தரும் போட்டியற்ற விளையாட்டுக்களிலும் பெரியவர்களிடமும் மிருகங்களிடமும் காணப்பட்ட அமைதியான நடத்தை முறைகளில் பரவசம் அடைந்தவர்களாகவும் காணப்பட்டனர். பாக்சிங், குத்துச்சண்டை, ஹாக்கி, அமெரிக்கக் கால்பந்து போன்ற போட்டியான விளையாட்டுக்கள் வன்முறைப் பண்பாட்டு அம்சங்களை ஊக்குவிக்கின்றன என்ற ஒளியை இத்தகு ஆய்வுகள் காட்டுகின்றன.

### சர்வதேச (பன்னாட்டு) அரசியல்

கொல்லாமையை நோக்கி பெயர்ச்சி முழுமையைப் பற்றியும் தனிநபரைப் பற்றியுமான அக்கறையை மிகுவிக்கின்றது. சர்வதேச (பன்னாட்டு) அரசியல், பன்னாட்டு உறவுகள், உலக அரசியல் என அழைக்கப்படும் இத்துறை பேரளவையும் சிற்றளவையும் (macroscopic and microscopic) இணைக்கிறது. இடைநிலை நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. அரசு *மற்றும்* அரசு சாரா உலக ஆட்சி முறையின் கூறுகள், அவற்றிடையேயான உறவுகளின் அமைப்புகள், பூசல் தீர்வு படிமுறைகள் முதலிய அனைத்தும் முழுமையாக நோக்கப்படுகிறது. *அப்படியாயின்* வரலாறு அற்று அல்லது சூழல் இன்றி இருத்தல் என்பதன்று. வரலாறு மானிடத்தினுடையதாகும். உலக மற்றும் வட்டார நிலைகளின் பரஸ்பர சார்பு, தாக்க விளைவு சூழல் ஆகும்.

கொல்லாமை உலகச் சமூகத்தை நம்மால் அடைய முடியும் என்ற நம்பிக்கை, பிறப்பு முதல் இறப்பு வரையான பூமியில் ஒவ்வொரு தனிநபரின் நலவாழ்வுக்கும் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோருகிறது. புதிய தலைமுறை வந்து, கலந்து செல்கின்றது. கொல்லாமை அரசியல்

பகுப்பாய்வின் அடிப்படை அலகு தனிநபராகும். நிறுவனங்கள், அமைப்புகள் (structures) மற்றும் படிமுறைகள் என்பன தனிநபர் நடத்தையின் கூட்டாகும். உலக அரசியல் என்பது உலகத் தனிநபர்களின் அரசியலாகும். கொல்லாமை உலக சமுதாயம் என்பது கொல்லாத தனிநபர்களைப் பொறுத்துள்ளது. யாரொருவரும் கொல்வதில்லை அல்லது, கொல்லப் படுவதில்லை என்றால் அனைத்து மானிடரின் நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

கொல்லாமை பகுப்பாய்வு அளவையியலை உலக மானிடம் முழுவதிற்குமாக பயன்படுத்த வேண்டியதன் தேவையை இது குறிக்கிறது. வன்முறையைப் பொறுத்தளவில் அரசு வன்முறை, அரசுக்கு எதிரான வன்முறை, போர் ஆகிய எல்லாவகையான கொல்லுதலையும்– சமூகங்கட்கு உள்ளேயும் இடையேயும் நிகழும் வன்முறையை அவற்றை உலகளாவிய கூட்டுத் தொகையாக காரணமுறைப்படி விளக்கவும் அரசியல் அறிவியல் தனது ஆய்வு மரபை விரிவுபடுத்த வேண்டும். அகிம்சையைப் பொறுத்தளவில் கொல்லாமை சக்திகளை அனைத்து அரசியல் அலகுகட்கு உள்ளேயும் இடையேயும் உலக அளவில் இனங்காண வேண்டும். அகிம்சை மடைமாற்றம் என்பது கொல்லும் மற்றும் கொல்லாமை சக்திகளுக்கிடையே சமூகங்களுக்கு உள்ளேயும் இடையேயும் பரஸ்பரத் தாக்கப் படிமுறைகளை உலகளவில் பொதுவான இயங்கு தொகுதிகள் (General systems context) என்ற நிலையில் புரிந்து கொள்வதாகும்.

நடைமுறையான, சாத்தியமான, விரும்பத்தக்க கொல்லாமை உலகச் சமூகத்தின் அம்சங்களை நன்கு முழுமையாகப் புரிந்து கொள்ள கடந்த கால மற்றும் இன்றைய சமூக வெளிப்பாடுகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டும். இங்கு ஒரு கொல்லாமை முழுமைக்குள் எல்லையற்ற மாறுபாடுகள் உண்டு என்பதை கோட்பாட்டு ரீதியான எடுகோளாகக் கொள்ள வேண்டும். தனிநபர்களின் வன்முறை மற்றும் அகிம்சை மனப்பாங்குகள் அவர்களது அகிம்சைக்கான மடைமாற்ற இயக்கம், வாழ்நாள் முழுவதுமான ஆக்கப்பூர்வ தனிநபர் அகிம்சையின் உள்ளார்ந்த வளங்களின் வெளிப்பாடுகளை ஆதரிக்கும் சமூகச் சூழல்களின் பண்புகள் ஆகியவற்றைத் தனிநபர் நிலையில் புரிந்து கொள்ள வேண்டும்.

கொல்லும் புனலை கொல்லாமை மாற்று விசிறியாக மாற்றுவதற்கு தேவையான பயன்பாட்டு நிலை ஆற்றுப்படுத்தும் பயிற்சியானது அழுத்தும் கொல்லும் நடைமுறைகளைத் தாண்டிச் செல்லும் முழுமையான கொல்லும் மண்டலங்களின் இடையீடு. கொல்லாமை வழி பிரச்சினைகளைத் தேடுவதாகும். தீர்வுக்கான உலகளாவிய சமூகமய மாக்கலுக்கும் தலைமை மற்றும் குடிமை பயிற்சிக்கும் பங்களிப்பதே இதன் பொருளாகும். அகிம்சை மாற்றத்திற்கான உலக பண்பாட்டு பங்களிப்புகளை அடையாளங்கண்டு ஆதரிக்க வேண்டுமென்பது அதன் பொருளாகும். கொல்லுதலை ஆதரிக்கும் அரசியலில் இராணுவ, பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு அமைப்புகளைப் புரிந்து கொண்டு அகிம்சையான உலகளாவிய மாற்றத்துக்கு உதவிட வேண்டும்.

## கொல்லாமை அரசியல் அறிவியல்

கொல்வதிலிருந்து விடுபட்ட சமூகங்களை உருவாக்குவது மானிடருக்குச் சாத்தியம் என்ற எடுகோளிலிருந்து அரசியல் அறிவியலின் அனைத்துப் பிரிவுகள், துணைப் பிரிவுகள் மற்றும் அம்சங்கள் ஆகியவற்றை நோக்கிய கேள்விகள் எழுகின்றன. அரசியல் அறிவியல் மதிப்பீடுகளிலிருந்து விடுபட்டு இருக்க முடியாது என்றால் கொல்லாமை என்பது இத்துறையின் ஏற்கத்தக்க மதிப்பீடாக இருக்க முடியுமா? கொல்லாமை அரசியல் அதிகாரக் கோட்பாடும் நடைமுறைப் பயன்பாடும் வன்முறை கருத்துருவாக்கங்களையும் வெளிப்பாடுகளையும் வெற்றி கரமாக முயன்று, மடை மாற்ற முடியுமா? வன்முறையான தேசியப் பாதுகாப்பிலிருந்து அகிம்சையான தேசிய மற்றும் உலக பாதுகாப்பிற்கு மாறிட முடியுமா? வன்முறையான அரசியல் பொருளாதாரங்களிலிருந்து அகிம்சையான உலக அரசியல் பொருளாதாரத்திற்கு மாற முடியுமா? கொல்லாமைக் கோட்பாடு மற்றும் அதன் நடைமுறைப் பயன்பாடு பெண்ணியம், இனம், வர்க்கம், மொழி மற்றும் சமய ஆகிய அணுகல் முறைகளிலிருந்து பங்களிப்புச் செய்ய முடியுமா? சமூக வன்முறை, அகிம்சையில் பொதிந்துள்ள உள்ஆற்றல்கள், மடைமாற்றப் படிமுறைகள், நிலைத்த மேலும் ஆக்கப்பூர்வமான மாறுபட்ட அகிம்சை வெளிப்பாடுகளை வெளிக்காட்டவும் மேற்பார்க்கவும் எவ்வழிமுறைகள்மிகவும் ஏற்புடையன?

இக்கேள்விகள் கேட்கப்படும் ஒவ்வொரு பிரிவிலும் அரசியல் அறிவியலின் பங்களிப்பு இல்லை எனக் கூறுவதாகாது. கொல்லாமை உலகில் கொல்லாமை சமூகங்களை அடையும் சாத்தியத்தை அது தீவிரமாக எடுக்குமானால், அரசியல் அறிவியல் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைப் பற்றிய சிந்தனைக்கான அழைப்பாகும். இத்தகு சாத்தியத்தை ஏற்பது அகிம்சை உலக சிக்கல் தீர்வில் அரசியல் அறிவியல் தீவிரமாக இறங்குவதாகும்.

அத்தியாயம் – 4

# சிக்கல் தீர்வு விளைவுகள்

*இந்தப் பேரழிவை (சத்துப்பற்றாக்குறையாலும் பொருளாதார இடர்பாட்டாலும் இலட்சக்கணக்கானோர் இறப்பது) நிராகரித்து மற்றும் எதிர்த்துப் போராடும் அனைவரும் இந்த துயரங்களுக்கான காரணம் அரசியல் என்ற ஒரு மனதான முடிவைக் கொண்டுள்ளனர்.*

*நோபல்பரிசு பெற்ற 53 அறிஞர்களின் பேரரறிக்கை – 1981*

**கொல்லாமை அரசியல் அறிவியலின் சிக்கல் தீர்வு விளைவுகள் என்ன?**

உலக வாழ்வில் கொல்லும் நிலையை முடிவுக்குக் கொண்டு வருவது மொத்தமான இலக்காகும். ஒவ்வொரு மானிடரும் கொலைக்குப் பலியாகக்கூடியவர் அல்லது கொல்லக்கூடியவர் என்ற சாத்தியம் இருப்பதால், அவரது வாழ்நாள் முழுவதும் அவரது நலவாழ்வுக்கு சிறப்பான அக்கறை காட்ட வேண்டிய தேவையுள்ளது. இன்னொருபுறம், ஒருவரின் ஆன்மீக, பால், வயது, இனம், வர்க்கம், தொழில், தேசம், அரசியல் அடையாளம் ஆகியவற்றை அங்கீகரித்தும் ஆனாலும் அவற்றையும் தாண்டிச் சென்றும் சிக்கல் தீர்வில் ஈடுபட வேண்டும். அகிம்சை "பன்மியப் பற்றுறுதி"(multiple loyalties) கடந்து நிற்கும் அர்ப்பணிப்புடன் சேர்ந்து அனைவரின் தேவைகளையும் உணர்ந்து, கொல்லும் அச்சுறுத்தலோ அல்லது கொல்லுதலோயின்றி சிக்கல் தீர்வுப் படிமுறை நிகழ உதவிட வேண்டும்.

கொல்லாமை அகிம்சை அரசியலானது கொல்லுதலுக்கான காரணிகளைக் குறைப்பதற்கும் அகிம்சையை வளப்படுத்தும் காரணிகளை வலுவாக்குவதற்கும் ஒரே நேரத்தில் உதவிட வேண்டும். குவியும் கொல்லும் புனல் (படம்1) மற்றும் கொல்லாமை மாற்று விசிறியின் (படம்2) ஐந்து மண்டலங்களுக்குள்ளும், அவற்றுக்குக் குறுக்கேயும் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அது முயல்கிறது. இதனது பொருள் அரசியல் அறிவியலானது நேரடியாக சிக்கல் தீர்வுக்கான பொறுப்புக்களை முழுவதுமாக ஏற்பது என்பதாகும்; அத்துடன் பிறரது இத்தகு முயற்சிகளையும் மறைமுகமாக ஆதரிப்பதாகும். தனிப்பட்ட

மற்றும் பொதுச் சிக்கல் தீர்வுச் செயல்பாட்டிற்கு உதவும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கு வழி செய்வதையும் இது குறிக்கும். தேவை நிறைவு படிமுறை– களுக்குத் தனிப்பட்ட மற்றும் சமூக முடிவுகள் எடுக்கப் பங்கு பெறும் அனைவரையும் ஊக்குவதும் இதன் பொருளாகும்.

சிக்கல் தீர்வு பாத்திரத்தை கொல்லாமை அரசியல் அறிவியல் ஏற்பது என்பது நிறைவான பேரறிவும் சர்வ வல்லமையும் பெற்றுள்ள நிலை என்பதாகாது. ஆனால் சமூக வாழ்வின் அனைத்து ஆன்மீக, உடல், பொருள், பண்பாட்டு நிலைகளிலும் நலம் பெறுவதற்குச் சாத்தியமான ஏற்புடைமையை இது கட்டுகிறது. இது சர்வாதிகாரமான தலையீடு எனப் பொருள்படாது. ஆனால் அரசியல் பிரமுகர்கள், நிறுவனங்கள், அரசாங்கங்கள் மற்றும் மக்கள் ஆகியோரின் உலக வாழ்வு முதல் பொருளாதார வளம் ஊடாக, மிக உயர்வான மானிட விருப்பங்களை நிறைவேற்றுவது வரையான மிகப்பெரும் சமூக விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களைச் செய்ததை அல்லது செய்யாததை இது அடையாளம் காட்டும். கொல்லாமைச் சமூகங்களின் பணிகளில் ஈடுபட விழையும் அரசியல் அறிவியல் தனது சாத்தியமான, பொதிந்துள்ள வரம்புகளுக்குள் தமது அக்கறையையும் பங்களிப்பையும் மருத்துவ மற்றும் பொது சுகாதாரத்துறையை விட அதிகமாகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை.

விரும்புவதற்கும் நிகழ்வதற்கும் உள்ள இயைபின்மையை பிரச்சினை (சிக்கல்) எனலாம். ஒவ்வொரு சிக்கலும் பல உள் சிக்கல்கள் (complex) மிகுந்த உபசிக்கல்களாக முடிவற்று உள்ளன. *அறவசிச் சட்டம் (Normative - எப்படி இருக்க வேண்டும்)* *அனுபவநிலை (empirical – இருப்பது)* மற்றும் *சாத்திய நிலை* (potential - என்னவாக இருக்க முடியும்). ஒவ்வொரு சிக்கலிலும் மேலும் இயக்க நிலை பன்முகத்தன்மைகள், பரஸ்பரச் சார்பான பின் விமர்சன படிமுறைகள் மற்றும் இறந்த கால, நிகழ்கால, எதிர்காலக் கூறுகள் ஆகியன இடம் பெறுகின்றன. ஆனால் பிரச்சினைகள் எவ்வளவு சிரமமானதாகவும் சிக்கலானதாகவும் இருந்தாலும் – அறவியல் ரீதியாக, தத்துவவியல் ரீதியாக, அனுபவ ரீதியாக– கொல்லாமை அரசியல் அறிவியலானது மானிடத்தின் வாழ்வையும் நலத்தையும் அச்சுறுத்தும் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிப்படையாக முயல்வதில்

தயக்கம் காட்டுவதில்லை. நடத்தையியல் வன்முறையை (behavioural violence) முடிவுக்கு கொண்டு வரவும், அமைப்பியல் வன்முறை (structural violence) நிலைகளை மாற்றவும் அவை இரண்டின் பின்னிய செயல் விளைவுகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் கொல்லாமை அரசியல் அறிவியல் முயற்சிகளில் ஈடுபடும். கொல்லுதலுக்கு ஆதரவை நீக்கவும் கொல்லாமைப் பணிக்கான நிறுவனங்களுக்கு உதவிடவும், கொல்லாமைக்கான புதிய கொள்கைகளையும் நிறுவனங்களையும் உருவாக்கிடவும் அது முற்படுகிறது.

பயன்நிலை அறிவியல் மற்றும் பயன்நிலை மானிடத் துறைகளின் சிக்கல் தீர்வுப் பாத்திரத்தை அரசியல் அறிவியல் ஏற்கும் பொழுது சிக்கலுக்கான விடைகளை முன்கூட்டியே அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அறிவியல் பூர்வமானது அன்று. நோய்கள் குணப்படுத்த முடியாது எனக் கருதுவதும், என்ன நோய் என அறியப் படுவதற்கு முன்பே அதைக் குணப்படுத்தும் முறைகள் தெரிந்திட வேண்டும் எனக் கருதுவதும் அடிப்படை மருத்துவ அறிவியலின் முன்னேற்றத்தைத் தடுப்பதாகும். அடிப்படையில் அரசியல் அறிவியலும் வாழ்வு மற்றும் சாவு பற்றியதேயாகும்; எனவே அதுவும் வேறு விதமாக இருக்க வேண்டியது இல்லை.

வன்முறையை ஏற்கும் அரசியலும் அரசியல் அறிவியலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு கொல்லாமை அரசியல் அறிவியல் உடனடியான தீர்வுகளைத் தரும் என எதிர்பார்ப்பது பகுத்தறிவானதன்று. வன்முறையை வன்முறையால் ஒடுக்க மிக அதிகமான அறிவியல், மானிட மற்றும் பொருள் வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. போர் மற்றும் இனப்படுகொலை முதல் கொலை வரையான நம்பமுடியாத இரத்தம் சிந்தல்களும் உலகக் கொல்லும் போக்கை நிறுத்துவதில் வெற்றி பெறவில்லை. அணு ஆயுத நாடுகளின் தலைநகர்களிலும் இதே நிலை தான். கொல்வதற்கு ஏராளமான ஆக்கத்திறன் பயன்படுத்தப்படுகிறது: செயல்படும் கொல்லாமை மாற்றுக்கு அதனைவிட ஆக்கத்திறன அதிகம் தேவை.

மானிடக் கொல்லுதல் யுகத்தை முடிவுக்குக் கொண்டு வருவது அரசியல் அறிவியலின் பணி மட்டுமன்று. எல்லா அறிவியல் மற்றும் கலைத் துறைகளும், தொழில்களும் மற்றும் ஒவ்வொருவரும் இதில் பங்கேற்க வேண்டும். ஆனால்

அரசியல் அறிவியல் இதில் முன் முயற்சிகளை எடுக்கலாம்; பிறரின் முன் முயற்சிகளை ஆதரிக்கலாம். கொல்லாமை உலகிற்கு பணி செய்ய கொல்லாமை அரசியல் அறிவியலை உருவாக்கும் சாத்தியத்தை நிராகரிக்க முற்படும் பிரச்சினைகளை முதலில் சமாளிக்க வேண்டும். பொதுப் படையான மூன்று பிரச்சினைகள் உள்ளன. "ஹிட்லரும் பேரழிவும்", புரட்சிகரமான அமைப்பியல் மாற்றம் மற்றும் தனிநபர் முதல் தேசிய நாடு வரை பாதுகாப்பு என்பன அவையாகும்.

## கொல்லாமை, ஹிட்லர் மற்றும் பேரழிவு

'ஹிட்லரும் பேரழிவும்' என்னும் சான்று காட்டுவது போல – ஆனால் அதோடு நின்று விடுவதன்று – 'அரசியல் தலைமையும் கொல்லுதலும்' என்ற பிரச்சினையை நேரடியாக எதிர்கொண்டு, அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல் பிரச்சினை தீர்க்கும் முயற்சிகளுக்கு தொடர்ந்து உள்ளாக்க வேண்டும். அதிர்ச்சி தரும் சான்றுகளான இனப்படுகொலை வன்முறை, வர்க்கங்களையே பூண்டோடு அழித்து விடல்; சிவில் பேரளவு படுகொலைகள் முதலியன கொல்லாமை அறிவியலின் ஆக்கத்திறனை முடக்கிவிடக்கூடாது. இனப் பேரழிவுச் சர்வாதிகாரி, வர்க்கத்தையே பூண்டோடு அழிக்கும் புரட்சியாளர், நாடுகளையும் நகரங்களையும் அழித்திடும் "நேர்மையாளர்" ஆகியோரின் வன்முறை ஆற்றலைவிட அதிகக் கொல்லும் ஆற்றலுக்கு வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தயாராவதே அரசியல் அறிவியல் என்ற நித்தியமான விதிக்குள் அது தள்ளப்பட்டு விடும்.

அரசியல் தலைமை ஆய்வு (political leadership studies) என்ற பின்தங்கிய துறையில் பல்துறைப் பணியை (interdisciplinary work) தீவிரப்படுத்துவது ஒரு நடைமுறை ரீதியான தொடக்கமாகும். கொல்லும் நடத்தையியல் போக்கு மற்றும் இயக்கவியல் மாறும் பதிலிகளை (variables) அடையாளங் கண்டு அவற்றை அகிம்சை தலைமை மற்றும் அதனை பின்பற்றுவதற்குச் சாதகமான மாற்றங்களை உண்டாக்குவது இதன் பொருளாகும். திட்டமிட்ட கொல்லாமை மடைமாற்ற இடையீட்டுக்காக முன்னரே அடையாளம் காணப் பட்டுவிட்ட பதிலிகள் வருமாறு : வன்முறைக்கு இலக்காகும் தலைமை பற்றிய கருத்துருவாக்கங்கள், ஆளுமைக்கான முன் தேவைகள், பாத்திர ஆற்றல்கள்(role powers), நிறுவன

ஆதரவுகள் (organisational supports), பணி எதிர்பார்ப்புகள் (task expectations), மதிப்பீட்டு முகப்புகள்(value saliencies), தொழில் நுட்பத் திறன்கள் மற்றும் கொல்லுதலுக்கான பொருளாதார சமூக, பண்பாட்டு வலுவாக்கங்கள்.

இருபதாம் நூற்றாண்டு அனுபவம் சில விலகுதல்களைக் குறிப்பிடுகின்றது. கொல்லும் போக்குடைய தலைவர்களையும் கொல்லும் போக்குடைய பின்பற்றுபவர் களையும் தடுத்து நிறுத்த ஏதோ ஒரு கட்டத்தில் மானிடர்கள் கொல்ல மறுப்பதும் கொல்லும் அமைப்புக்களுடன் ஒத்துழைக்க மறுப்பதும் அவசியமாகும். இல்லையெனில் பழிவாங்க முற்படும் தோற்றோர் மற்றும் வெறி மிக்க வென்றோரிடையேயான கொல்லும் வட்டம் தொடரும். இது எளிதானதாகத் தோன்றலாம். ஆனால் பின்னோக்கிப் பார்க்கையில் இருபதாம் நூற்றாண்டு வெறியாட்டங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் போரை ஒழிக்க முற்பட்ட அமைதி ஆதரவாளர்களின் நிலை முற்றிலும் சரி எனக் காட்டுகிறது. முதல் உலகப் போரிலிருந்து பனிப்போர், பின்னர் அதற்குப் பிந்திய நிலை ஆகியவற்றுக்கிடையில் கொலை வெறியாட்டங்களின் தெளிவான தொடர்பு உள்ளது. பழி வாங்கும் பகைமைகளை, அவை சமீப காலத்தது ஆயினும் ஆகுக அல்லது பழங்காலத்ததாக ஆயினும் ஆகுக, அவை வெறித் தனங்களாக வெடிப்பதற்கு முன் அடையாளங்கண்டு தடுக்க அரசியல் அறிவியல் பங்களித்திட வேண்டும். எதிரிகளைப் பழிவாங்கும் பேரழிவைக் கொண்டாடும் தலைவர்களையும் பின்பற்றுபவர்களையும் வளராமல் நிறுத்துவதற்காக அரசியல் அறிவியல் தன்னைக் கொல்லாமையைத் தடுப்பதற்கும், பழிவாங்கும் போக்கை சமரசம் காண்பதற்கும், கொல்லாமை வாழ்வுக்கான ஆக்கநிலைகளை உருவாக்குவதற்கும் முயன்றிட வேண்டும்.

ஹிட்லர்கள், ஸ்டாலின்கள், மாவோக்கள், இடி அமின்கள், போல்பாட்டுகள், அணுகுண்டுகளை வீசும் ட்ருமன்கள் கூட, தோன்றும் சாத்தியத்தை நிறுத்திட கொல்லாமை பிரச்சினைத் தீர்வு அரசியல் தலைவர்களையும் கொல்லக் கட்டளையிடும் கொலைஞர்களையும் வேறுபடுத்திட வேண்டும். வெறி கொண்ட, வன்முறைக்கு ஆளாகும் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கான ஆதரவைத் திரும்பப் பெற வேண்டும்; கொல்லும் விருப்பத்தையும், பிறரைக் கொல்ல ஆணையிடும்

தலைவர்களையும் நீக்கிவிட வேண்டும்; கீழ்ப்படியும் மற்றும் கொல்லும் ஆயுதங்களை அதிகரித்துச் செல்லும் தொழில் ரீதியான கொல்லும் அமைப்புக்களை தலைவர்களுக்குத் தரக்கூடாது; கொல்லும் போக்குக்கு இணங்கும் நிலையிலுள்ள நிறுவனங்களுக்கு சமய, வணிக, தொழிலாளர், அறிவியல் மற்றும் கலை ஆதரவினைத் திரும்பப் பெறவேண்டும்; கொல்லாமை மாற்றில் பற்றுறுதியை ஏற்படுத்திட வேண்டும்; அரசியல் தலைவர்கள் மற்றும் குடிமக்களின் அடிப்படைப் பணியாக தேவைக்கு ஏற்ற சிக்கல் தீர்வுப் பணி உயர்த்தப்பட வேண்டும். தேசப் பெருமை மற்றும் அடையாளத்தின் அடிப்படைக் கூறாக கொல்லாமை மதிப்பீட்டின் மீது பற்றுறுதி கொள்வதை உறுதி செய்திட வேண்டும். எந்த மானிடக் குழுவையும் மானிட நிலையில் தாழ்ந்தவராகவும் அவர்களை ஒழித்து விட வேண்டுமளவிற்குத் தீயவர்களாக நியாயப் படுத்துவதையும் மறுத்திட வேண்டும்; பரஸ்பர நலத்துக்காக குழுக்களிடையே பொது உரையாடலைத் தேட வேண்டும்; வன்முறையால் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறைவைத் தேட முற்படுவதற்குக் காரணமான சமூக–பொருளாதார அமைப்புக்களை மாற்றிடவேண்டும். கொல்லும் பொருளாதாரத்தை மானிடரின் வாழ்வை வளமாக்கும் தேவைப் பூர்த்திக்கு பணிமாற்றிடுவதாக மாற்றிட வேண்டும்; மேலும் அறிவியல் மற்றும் கலைகள் வழிக் கொல்லாமைப் பண்பாட்டை உருவாக்கிட ஆதரவளிப்போம்.

ஹிட்லர் போன்ற கொலைஞர்களுக்கு எதிராக கொல்லும் மண்டலத்தில் இடையீடுகள் செய்வது பயன்பாட்டு கொல்லாமை அறிவியல் ஆக்கத்திறனுக்கு மிகவும் பெரிய சவாலாகும். தொழில் நுட்பத்தில் புத்தாக்க வளர்ச்சியின் முன் ஒரு பொழுதுமில்லாத ஆற்றலும் சாத்தியமும் உள்ள இக்காலத்தில் அவைகள் சிந்தித்துப் பார்க்க முடியாதவைகள் அன்று. சிக்கல் தீர்வு நிலைகளில் கருத வேண்டிய மற்றும் பரிசோதிக்க வேண்டிய நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும் : சிற்றளவில் மற்றும் பேரளவில் தலைவர் மற்றும் பின்பற்றுபவர்களை இடம் பெயர்த்தல் ஆன்மீக – உளவியல் கொல்லாமைத் திறன்கள் –அகத்தடைகள்; கொல்லுதலுக்கு உலகளாவிய கண்டனம், அதற்கான ஆதரவை விலக்குதல், அதனை எதிர்த்தல்; விரைவான பேரளவு இடம் பெயரலுக்கு ஏற்பாடு; கொல்லும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை விரைந்து செயலிழக்கச் செய்வதற்கு நிலம், நீர் மற்றும் ஆகாயத்தில் மிக நவீனமான தொழில்

நுட்பங்களைப் பயன்படுத்தல் முதலியன. கொல்லுதலுக்கான வளங்கள் என அடையாளம் காணப்பட்டவைகளைத் தடுப்பதற்காக அவசரகால இடையீட்டு நெருக்குதல்களில் – நேரடி மற்றும் பன்முனை வழிகள், எதிர்மறை மற்றும் உடன்பாட்டு நிலை முதலியன – கவனம் செலுத்த வேண்டும்.

ஹிட்லர் போன்ற பேரதிர்ச்சியான நிகழ்வுகளுக்குப் பிறகு மிஞ்சிப் பிழைப்பவர்களிடம் – கொல்பவர்கள், பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் இவர்களின் உறவினர்கள் – மடை மாற்றி கொல்லாமை மானிடத்திறனை வளர்த்திட வேண்டியுள்ளது. இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்குப் பொறுப்பேற்கும் படிமுறைகளை உருவாக்கல், மீட்டளிப்பு, சமரசங்காணல், கொல்லாமை உலகில் கொல்லாமைச் சமுதாயங்களை அடைவதற்காகத் தடுப்பு மற்றும் அமைப்பியல் மாற்றங்கள் நிகழ மிகவும் முக்கியமாக உதவுதல் முதலியவற்றில் அரசியல் அறிவியல் ஈடுபடவேண்டும். ஆன்மீக, அறிவியல் மற்றும் மரபு ஆகிய ஒவ்வொரு மூலத்திலிருந்தும் வளங்களைப் பெற்றுக் கொல்லாமையை எதிர்கால பண்பாட்டுச் சமன்பாடு மற்றும் மக்கள் சமூகங்களின் பெருமை ஆகியவற்றின் இதயமாகக் கொண்டாட வேண்டும். இத்தகு கொடுமைகள் இனி ஒரு பொழுதும் நிகழாது என்ற நடைமுறை சாத்தியமான பற்றுறுதியைப் பெற வேண்டும்.

இனப்படுகொலை முதல் போர் வரையான வெகு ஜனக் கொலை யுகத்தை முடிவுக்குத் கொண்டு வர, கொல்லாமை அரசியல் அறிவியல மூன்று பயன்பாட்டு அறிவியல் பணிகளைச் செய்ய வேண்டும் : முன்கூட்டியே தடுப்பு, இடையீடு, அதிர்ச்சிக்குப் பிந்திய கொல்லாமை மடைமாற்றம். இத்தகு படுகொலைகளை கொல்லாமைக் கோட்பாடுகளில் நீக்கமுடியாது என்ற மரபான எடுகோளால் உண்டாக்கப்படும் தடையிலிருந்து தன்னை அரசியல் அறிவியல் விடுவித்துக் கொண்டு ஆக்கப் பணி செய்ய வேண்டும்.

## கொல்லாமையும் வன்முறைப் புரட்சியும்

பிரச்சினை தீர்வு முயற்சிகளில் ஈடுபடும் பொழுது சந்திக்க வேண்டிய இரண்டாவது பெரிய பிரச்சினை வன்முறைப் புரட்சி மற்றும் எதிர்ப்புரட்சியாகும். இராணுவப் புரட்சிகள், எதிர் புரட்சிகள், பயங்கரவாதம், எதிர் பயங்கரவாதம், கொரில்லாப் போர், பெரிய அளவிலான உள்நாட்டுப் போர்கள் முதலியன இதனுடன் தொடர்புடையனவாகும். இத்தகு

புரட்சிகளையும் அவற்றை அடக்குவதையும் வன்முறையை ஏற்கும் தெளிவற்ற நிலையுடன் மரபான அரசியல் அறிவியல் அணுகுகிறது. கெட்ட ஆட்சிகளுக்கு எதிரான வன்முறை, ஆனால் நல்ல ஆட்சிகளுக்கு எதிரான வன்முறை அன்று, போற்றத்தக்கது. கெட்ட புரட்சிகளுக்கு எதிரான, ஆனால் நல்ல புரட்சிகளுக்கு எதிரானதன்று, எதிர் வன்முறை ஏற்கத் தக்கது. இவை இரண்டிலும் அரசியல் மாற்றத்தை அடைய அல்லது அதனை எதிர்க்க வன்முறையானது ஒரு தவிர்க்க இயலாத மற்றும் பல வேளைகளில் பாராட்டுதற்குரிய உண்மையாக அரசியல் வாழ்வில் உள்ளது. சில அமெரிக்க அறிஞர்கள் மத்தியில் உள்ள வழக்கமான வாதம் என்னவென்றால் பொருளாதாரத்தில் மேலே உள்ளவர்கள் தமது சொத்தையும் அதிகாரத்தையும் அமைதியாகத் தாமே கை விடமாட்டார்கள்; எனவே புரட்சி வன்முறை நியாயமானதே என்பதாகும். பிறர் தனிப்பட்ட சொத்துரிமைச் சுரண்டலை மாற்ற முற்படும் புரட்சியாளருக்கு எதிரான எதிர் வன்முறையை ஆதரிப்பர். அமெரிக்க தேர்தல் ஜனநாயகத்திற்கு இடையிலும், ஒருவர் புரட்சிகரமான கொல்லுதலுக்குத் தயாராக இருக்க வேண்டுமென்ற கருத்துத் தொடர்கிறது; நாட்டுக்கு எதிராகச் சுதந்திரத்தைக் காக்க குடிமக்கள் துப்பாக்கிகளை வைத்துக் கொள்ள வேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர்.

அடக்குமுறையான ஆட்சிகளை அகற்றுவது மற்றும் தாங்க முடியாத சமூகப் பொருளாதார அமைப்பியல் வன்முறையை மாற்றுவது ஆகியவற்றுக்கு அகிம்சை புரட்சி மாற்றுக்களை அடையாளங்கண்டு உதவிட கொல்லாமை அரசியல் அறிவியல் முற்பட வேண்டும். புரட்சி என்பது வன்முறையாகவே இருக்க வேண்டும் என்ற எடுகோளுக்கு சவால் விட வேண்டும்; மேலும் திறம்பட்ட அகிம்சை மாற்றுக்கள் பற்றிய அறிவை — கோட்பாடுகள், உத்திகள், செயல் திட்டங்கள், நிறுவன முறைகள் மற்றும் அமல்படுத்தும் திறன்கள்—தர வேண்டும்.

பனிப்போர் காலத்தின் பிற்பகுதியில் அகிம்சைப் புரட்சியின் சாத்தியம் பற்றி உலகின் மூன்று செல்வாக்கான வன்முறை புரட்சி மரபிலிருந்து அரசியல் கோட்பாட்டாளர்கள் ஆதரவு தந்துள்ளனர் : அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் யூனியன் மற்றும் சீனா. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1973இல் ஜீன் சார்ப் அகிம்சை புரட்சிக் கோட்பாடு மற்றும்

நடைமுறை பற்றிய புகழ்பெற்ற கருத்துருவாக்கத்தை வழங்கினார். அவர் அரசியல் அதிகாரத்தின் மூலங்கள் பற்றித் திறம்பட விளக்கி, பரந்துபட்ட வரலாற்று ஆதாரங்களைத் தந்து, அகிம்சைப் போராட்டத்தின் இயக்கத்தையும் மிகவும் திறம்பட விளக்கியுள்ளார். 198 அகிம்சை போராட்ட உத்திகளை அகிம்சைக் கண்டனமும் இணக்குவித்தலும் (nonviolent protest and persuasion) சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஒத்துழையாமை மற்றும் நேரடி அகிம்சை இடையீடு(direct nonviolent intervention) என்னும் ஐந்து பிரிவுகளாகப் பகுத்து விளக்கியுள்ளார். "மாற்றுதல்(conversion), இடந்தரல் (accomodation), நெருக்குவித்தல் (coercion) ஆகிய படிமுறைகளில் அகிம்சைப் போராட்டம் பலன் தருகிறது என அவர் விளக்குகிறார். பின்னர் இத்துடன் "சிதைந்து (உடைந்து)போதல்" (disintegration) என்பதையும் சோவியத் அனுபவத்திலிருந்து சேர்க்கிறார். சோவியத் யூனியனில் E.G. பிலிமாக் மற்றும் Y.F. கர்யகின் (E.G. Plimak and Y.F. Karyakin 1979) ஆகிய இருவரும் புரட்சி என்பதை அரசாங்க அதிகாரம் ஒரு வர்க்கத்திலிருந்து பிறிதொன்றுக்குக் கைமாறுவது என்றும், அது ஏராளமான மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாறுதலை உண்டாக்குகிறது என்றும் வரைவிலக்கணம் தருகின்றார். பின்னர் மார்க்சிய லெனிச கோட்பாட்டின் அடிப்படையில் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலனியாதிக்க நீக்கமும் ஜனநாயக அனுபவமும் அமைதியான சோசலிச புரட்சிகளைச் சாத்தியமாக்கின. அமைதியான சோசலிசப் புரட்சியை "ஆயுதம் ஏந்தாத போராட்டம்; உள்நாட்டு சண்டையன்று; ஆயுதம் ஏந்திய எதிர்ப்புரட்சி இடையீடன்று" என அவர்கள் வரையறுக்கின்றனர். புதிய வரலாற்றுச் சூழல்களில் அமைதிவழி புரட்சிக்கான முயற்சிகளை இதில் ஏற்பட்ட கடந்த காலத் தோல்விகள் தடுக்கக்கூடாது என அவர்கள் வாதிடுகின்றனர். அமைதி வழிப் புரட்சிக்கான வளர்ச்சி... எவ்வித விருப்பு வெறுப்பின்றி புறவயமாக உறுதிபட அதன் ஒவ்வொரு அம்சமும் ஆராயப்பட வேண்டும் என அவர்கள் வற்புறுத்துகின்றனர். ஸெங் யி–பிங் (Zhang Yi-Ping) என்னும் சீன அரசியல் அறிஞர் மார்க்சிய கோட்பாடு மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்கக் கண்டங்களில் நடைபெற்றுள்ள அகிம்சை வழி தேசிய விடுதலை இயக்கங்களைக் கருத்தில் கொண்டு – குறிப்பாக இந்தியாவில் காந்தி வெகுஜனங்களைத் திரட்டிய திறன்களையும் கருத்தில் கொண்டு – பின்வருமாறு

வாதிடுகிறார். "காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாது ஒரு தரப்பாகவே வன்முறைப் புரட்சியை வற்புறுத்துவதும் அகிம்சைப் புரட்சியை ஒதுக்கிட முயல்வதும் கோட்பாடு ரீதியில் தவறு மற்றும் நடைமுறை ரீதியில் தீமை பயப்பதாகும்."

சிக்கலான உலகளாவிய புரட்சி மற்றும் எதிர்புரட்சி இரத்தம் சிந்தல் நடந்த காலகட்டத்தில், மூன்று வன்முறை மரபுகளிலிருந்து எழுந்தள்ள ஆய்வுகள்–அவை ஒன்றையொன்று அறியாது தனித்து எழுந்துள்ளன– அகிம்சைப் புரட்சியின் கோட்பாடு மற்றும் நடைமுறையை உருவாக்கும் அறிவியல் ரீதியான பணியினை வகுத்துள்ளன. இம்மூன்றின் இடையேயும் காணப்படும் பொதுவான பண்பு இந்தியாவில் அரசியல் விடுதலை மட்டுமின்றி சமூகப் பொருளாதார, பண்பாட்டு மாறுதலைக் கோரிய காந்தியின் அகிம்சை இயக்கத்தை அவைகள் சுட்டுவதாகும்.

இதுவரை அகிம்சைப் புரட்சி பற்றிய கோட்பாடுகள், அவை "முதலாளித்துவ" அல்லது "சோசலிச" நிலையிலிருந்து உருவானவைகளாயினும் சரி, பெரிதும் அவை ஒடுக்கப் பட்டவர்களின் கண்ணோட்டத்தில் எழுந்தன. மேல் மட்டத்திலிருந்து அகிம்சை எதிர்ச்செயல் பற்றிய கோட்பாடுகள் – வன்முறை அடக்குமுறைக்கு மாற்றாக அகிம்சைப் புரட்சிச் செயல் கோட்பாடு – ஒப்புநோக்குகையில் உருவாகவில்லை. ஜீன் சார்ப்பின் பகுத்தாய்வின் மறுதலையை இது குறிக்கிறது. மானிட உரிமைகள் மற்றும் பொருளாதார நீதிக்காக அகிம்சை முறையில் தமது கோரிக்கைகளை ஏழைகள், நிலமற்றோர், ஒடுக்கப்பட்டோர் *மற்றும்* சிறுபான்மையினர் அல்லது பெரும் பான்மையினர் வலியுறுத்தும் பொழுது சொத்துடைய வசதியானவர், இன ரீதியாக ஆதிக்கம் செலுத்துவோர், அரசியல் தலைவர்கள், காவல்துறை, இராணுவம் முதலியோர் தத்துவத்தையும் தீரத்தையும் பெற்றுள்ளனரா ? அகிம்சை வழியில் அதனைச் சந்திக்க இரத்தம் சிந்தாமல், "மாற்றுதல், இடந்தரல் மற்றும் நெருக்கி இணக்குவித்தல்" ஆகியவற்றைத் தேடி வசதிபடைத்தோர் மற்றும் முன்னேறியவர் முன்னேறிட முடியுமா ?

முன்னாள் ஒடுக்குநர் / வசதிபடைத்தவர் மற்றும் ஒடுக்கப் பட்டவர் / வசதியற்றவர்களிடமே பரஸ்பரம் நிறைவு தரும் உறவுகளை உருவாக்கிடும் சமூக மாற்றத்தைக் கொண்டு வரும் "அகிம்சைப் போராட்டம்" அல்லது "அகிம்சை வர்க்கப்

போராட்டப்" பயன்பாட்டுக் கோட்பாடு சாத்தியமேயாகும். மானிட இயற்கையில் தோற்றுவிக்கப்படக்கூடிய அகிம்சை அம்சங்களிலிருந்தும் வன்முறைக்கு ஆதரவான மேல்தளத்தினர் மற்றும் வன்முறையான அவர்களது எதிரிகள் ஆகியோர் அமைதியான மாற்றத்தை விரும்புபவர் மீது காட்டும் அடக்குமுறை, பகைமை ஆகியவற்றிலிருந்தும் இதனை அனுமானிக்கலாம். அகிம்சைச் செயலை ஆதரிப்பவர்களை, அவர்களது கருத்துக்கள் கொல்லத் தயாராக இருக்கும் தமது ஆதரவுத் தளத்தைப் பலவீனப்படுத்தும் என்ற அடிப்படையில் வன்முறையாளர் ஒடுக்க முற்படுகின்றனர். சான்றாகப் பனிப்போர் காலத்தில் மோதிக்கொண்டிருந்த அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனின் மேல்தளத்தினரும் ஊடகங்களும் போர் எதிர்ப்பு அமைதிக் குரல்களை விரைந்து அடக்க அல்லது ஒடுக்க முற்பட்டனர்; கொல்லாமைக் கருத்துக்கள் தமது சொந்த படைமய நிலைக்கான ஆதரவைக் குறைத்துவிடும் என்ற அச்சத்தின் விளைவு இது. இதே போலவே ஆயுதம் ஏந்திய எதிர்ப்பு இயக்கங்களும் அகிம்சைப் புரட்சியை ஆராய்வதை எதிர்த்தன; ஏனெனில் ஒடுக்கப்பட்ட மக்கள் கொல்லாமை மாற்றுக்களை வரவேற்பர் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். ஒடுக்குவோர் மற்றும் ஒடுக்கப்பட்டோரிடையே கொல்லாமைக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஆதரவு இருக்குமானால் கொல்லாமை வர்க்கப் போராட்டம் பற்றிச் சிந்திக்க முடியும். சிக்கல் தீர்வுக்கான கொல்லாமை புரட்சிகர படிமுறைகளை வளப்படுத்தி ஊக்குவிப்பது அரசியல் அறிவியலின் பயன்பாட்டுப் பணி என்பது இதன் பொருளாகும். சமூக மாற்றத்திற்கான அகிம்சைப் போராட்டத்தில் எதிர்த்தரப்புடன் ஒவ்வொரு கட்டத்திலும் "சமரசங்காணல்" என்ற முடிவான இலக்கை வலியுறுத்துவது திறம்பட்டது என்பதைக் காட்டுவது மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூதர் கிங்கின் பண்பாக இருந்தது; இது ஒரு நடைமுறை மாறுபாடாகும். "அடக்கு முறையிலிருந்து சுதந்திரம்" அல்லது அதனது மறுதலையை, "நாட்டைப் பெரிதாக்கியுள்ள குடிமக்களிடையே பொதுவான ஆதரவு இருக்குமானால்" இரத்தம் சிந்தாமலேயே சாதிக்க முடியும் என மக்கியவெல்லி குறிப்பிடுகிறார்.

### கொல்லாமையும் பாதுகாப்பும்

கொல்லும் வெறிக்கு எதிராகத் தனிநபர், வட்டார தேச மற்றும் சர்வதேச நிலைகளில் பொருத்தமான பாதுகாப்பு

மாற்றுக்களைத் தருதல் என்னும் பிரச்சினையை கொல்லாமை அரசியல் அறிவியல் தீர்க்க வேண்டும். மரபான பாதுகாப்புக் கொள்கையானது கொல்லும் அச்சுறுத்தலிலிருந்தே முடிவாக வருகிறது. : "நான்/நாங்கள் உன்னை/உங்களைக் கொன்று விடுவோம் என்பதை நான்/ நாங்கள் உனக்கு/உங்களுக்கு முழுமையாக புரிய வைக்க விரும்புகிறோம்." ஆனால் கொல்லாமை பாதுகாப்பு(Nonkilling Security) என்பது இதற்கு முரண்பட்ட கோட்பாட்டிலிருந்து தொடங்குகிறது : "நான்/நாங்கள் உன்னை/ உங்களைக் கொல்ல மாட்டோம் என்பதை முழுமையாக உனக்கு/உங்களுக்கப் புரிய வைக்க விரும்புகிறோம். அங்ஙனமே நீ/நீங்களும் என்னை/எங்களைக் கொல்ல மாட்டீர்கள் என்பதை முழுமையாக எனக்கு/ எங்களுக்குப் புரியவைக்க வேண்டும்." சுருங்கக் கூறின், "நாம் கொல்லமாட்டோம் என்பதை ஒவ்வொருவருக்கும் முழுமையாகப் புரிய வைக்க வேண்டும்." யாரோ ஒருவர் அவர்களைக் கொல்ல உறுதிபூண்டிருந்தால், யாரும் பாதுகாப்பாக இருக்க முடியாது. கொல்லும் கூர்மதியானது, எல்லா வகையான பாதுகாப்புக்களையும் கேடயங்கள், காப்புக்கவசங்கள், அகழிகள், சுவர்கள், கோட்டைகள் முதல் அணு ஆயுதப் பாதுகாப்பு இருப்பிடங்கள் வரை அனைத்தையும் வெற்றி கொள்கிறது. கொல்லும் தாக்குதலானது கொல்லும் தற்காப்பின் ஒவ்வொரு வடிவத்தையும் வெற்றி கொள்கிறது : அம்புகள் ஈட்டிகளையும், யந்திரத் துப்பாக்கிகள் சாதாரண துப்பாக்கிகளையும், பீரங்கிப் படைகள் காலாட் படைகளையும், டாங்குகள் குதிரைப் படைகளையும், ராக்கெட்டுகள் டாங்குகளையும், நீர்மூழ்கிக் கப்பல்கள் போர்க் கப்பல்களையும், ஏவுகணைகள் ஏறக்குறைய பிற அனைத்தையும் அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் எல்லாவற்றையும் வெற்றி கொள்கின்றன. ஆயுதங்கள் நிறைந்த ஆயுத மாளிகையில் வாழ்வது பாதுகாப்பாகாது : ஊடுருபவர் கவசங்களைத் துளைத்துச் செல்லும் ஏவுகணைகள், இன்னும் வலுவான ஆயுதங்கள் மற்றும் இன்னும் அதிகமான சண்டையிடும் திறன்கள் – அல்லது காற்று, உணவு, நீர் விநியோகத்தை விஷமாக்கல் முதலியன நிகழலாம். கொல்லாமல் இருக்கும் உறுதியே நிச்சயமான ஒரே பாதுகாப்பாகும்.

கொல்லாமைப் பாதுகாப்புக்கு அரசியல் அறிவியல் மாறும் நிலையில் அதன் பங்கானது கொல்லும் அச்சுறுத்தல் மற்றும் பயன்படுத்துதலுக்கு நம்பத்தக்க மாற்றுக்கான

கோட்பாட்டையும் அதன் பயன்பாட்டையும் வளர்க்க வேண்டும்; எதிரிகளாகும் வாய்ப்புடையவர்களிடம் கொல்லும் விருப்பத்தைத் தடுத்து கொல்லாமை விருப்பமாக மாற்றிடுவதும் இதில் அடங்கும். மரபான அரசியல் அறிவியலில் இது குறிப்பிடத்தக்க அம்சமாக இல்லையெனினும், இது தொடர்பாக வளர்ந்து வரும் அனுபவங்களும் அறிவும் (நூல்களும்) தொடங்கி வளர்வதற்குரிய அடித்தளத்தைத் தருகின்றன. நாஜிக்களின் இனப்படு கொலைக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு, டொனிலோ டொல்சியின் மபியா குற்றவியலுக்கு எதிரான குழும எதிர்ப்பு, ஆயுதம் ஏந்தாத மானிட உரிமைப் பாதுகாவலர்கள், படைப்புரட்சிக்கு அகிம்சை எதிர்ப்புகள், அகிம்சை தேசிய, சிவிலியன், சமூகப் பாதுகாப்பு, மரபான படைகளின் கொல்லாமைப் பயன்பாடுகள், மாற்று அகிம்சைப் படை மற்றும் கொல்லாமை ஆயுதங்களின் வளர்ச்சி ஆகியன புதிய தேடல்களில் அடங்கும்.

மரபான படைகளுக்கு மிகை நிரப்பாக (complement) பல அரசாங்கங்கள் கொல்லாமை மக்கள் பாதுகாப்பு சாத்திய ஆய்வுகளைச் செய்து வருகின்றன. சுவிடன், நார்வே, டென்மார்க், நெதர்லாந்து, பிரான்ஸ், லட்வியா, லித்துவேனியா, எஸ்தோனியா, ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் இவற்றில் அடங்கும். தாய்லாந்தின் புதிய அரசியல் சாசனத்தின் (1997) 65வது ஷரத்தில் எதிர்கால படைப்புரட்சிக்கு எதிராக அகிம்சை வழி எதிர்ப்புத் தெரிவிப்பதை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. "அரசியல் சாசனத்தில் வகுக்கப்படாத வழிகளில் நிர்வாக அதிகாரத்தைப் பெற முயலும் எம்முயற்சியையும் அமைதி வழியில் எதிர்க்க மக்களுக்கு உரிமை உண்டு."

காவல்துறை மற்றும் படைகளுக்கான கொல்லாமை ஆயுதங்கள் குறித்த ஆய்வை அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1965இல் தொடங்கியது; இது 1990களில் விரைவுபடுத்தப்பட்டது. லேசர், ஒளி, ஒலி, மின்காந்த அதிர்வு, இரசாயன, உயிரியல் மற்றும் டஜன் கணக்கிலான ஆயுதங்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட தொழில் நுட்பங்கள் ஆராயப் பட்டுள்ளன. இவற்றில் சில காவல் துறையிலும் வெளிநாட்டு படைச் செயல்பாடுகளிலும் ஏற்கனவே பயன்படுத்தபட்டுள்ளன. சமூக பாதுகாப்பு பற்றிய அரசாங்கங்களின் ஆர்வம் போல கொல்லாமை ஆயுதங்களும் மரபான கொல்லும் திறன்களின் மிகைநிரப்பாகவே கருதப்படுகின்றன. வன்முறைப் பாதுகாப்பில்

மரபான நிபுணர்கள் கொல்லாமை மாற்றத்தைத் தீவிரமாக எடுத்துக் கொண்டிருப்பது அரசியல் அறிவியலார் இதனை இன்னும் எவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொண்டு வளர்ந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்தும். மாறுதலுக்கான பிரச்சினைகளைத் தீர்த்து முற்றிலும் கொல்லாமை பாதுகாப்பு நிலையை உருவாக்க வேண்டுமென்பதே சவாலாகும். மிகவும் ஆபத்தான சிக்கல்களை தடுப்பதற்கான கார்னிஜிஇ கமிசன் (Carnegie Commission on Preventing Deadly Conflict 1997) தனது இறுதி அறிக்கையில் "அபாயகரமான சிக்கல்களின் வேர்களாக உள்ள காரணங்களை சரிசெய்வதற்கான உத்திகளாக அமைப்பியல் ரீதியான "வரும் முன் காத்தல்" உத்திகளுக்கு அழைப்பு விடப்படுகிறது;" "வரும் முன் தடுக்கும் பண்பாட்டை உருவாக்கும்படியும்" இவ் அறிக்கை கோருகிறது. கொல்லாமைப் பாதுகாப்பை நோக்கிய முன்னேற்றத்திற்கான மேலும் அடையாளம் இதுவாகும். கொல்லாமைத் தனிநபர்கள் மற்றும் உலகப் பாதுகாப்பை நோக்கி மேலும் சாத்தியமான அடிகள் எடுத்து வைப்பதை இது கோருகிறது. உலகளாவிய அமைதிப்படை(Global Nonviolent Peace Force) ஒன்றினை உருவாக்கிடுவதற்கான ஆலோசனை இவ்வகையில் மற்றொரு சான்றாகும்.

அகிம்சைச் சமுதாயங்களை அடைவதற்கான தவிர்க்க முடியாத தடைகள் என இதுவரை கருதப்பட்ட சிக்கல்களுக்கு கொல்லாமை அரசியல் அறிவியல் விடைகளைக் காண வேண்டும். வெறியான நேரடி வன்முறையால் பேரழிவு என்ற வெளிப்படையான அச்சுறுத்தலை வெல்வது மிகவும் முக்கியமான விசயமாகும். முதலாவதாக, உயிர் வாழ்தல் இல்லையெனில் வேறு எப்பிரச்சினையையும் தீர்க்க முடியாது. இரண்டாவதாக, தொடர்ந்து வன்முறையில் பற்றுறுதியுடன் இருப்பது அமைப்பியல் மற்றும் சுற்றுச்சூழல் வன்முறைகளுக்கு இடமளிக்கிறது; அவ்வன்முறைகள் தனிநபர், சமூகம், உலகம் ஆகியவற்றின் நலவாழ்வை அச்சுறுத்தும்.

சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஓர் அணுகல் முறையாகக் கொல்லாமையை வலியுறுத்துவது பின்கண்ட வினாக்களை எழுப்புகின்றன. உளவியல் ரீதியான தாக்குதல், சித்திரவதை, இனவெறி, பால்வெறி, பொருளாதாரச் சுரண்டல், சர்வாதிகாரம் முதலியன நேரடி வன்முறையை விட அதிகமான துன்பங்களையும் மரணங்களையும் விளைவிக்கும் பொழுது

ஏன் கொல்லாமையையே அதிகமாகக் கவனிக்க வேண்டும்? இத்தகு கேள்வியில் உட்பொருள் கொல்லுவதற்கான சுதந்திரத்தை நாம் வைத்துக் கொண்டாலே நாம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதாகும். கொல்வதற்கான விருப்பம், திறன் மற்றும் பண்பாடு என்பது கொல்லும் சமூகப் பொருளாதார அமைப்பியல் ஏற்றத் தாழ்வுகளுக்கும், கொல்லுவது தவிர அனைத்துத் துயரங்களையும் இழைக்கும் உளவியல் தாக்குதலுக்கும் மிகவும் முக்கியமான அடிநாதமான காரணமாகிறது என்பது ஒரு விடையாகும். தவறாகப் பயன்படுத்துதல், சித்திரவதை, இனவெறி, மகளிரை ஒடுக்குதல், பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் சர்வாதிகார ஆட்சி முதலியன எங்ஙனம் தொடர்கின்றன? சாவு பற்றிய அச்சம் மற்றும் அச்சுறுத்தல் மீது அவை அமைந்திருக்கவில்லையா? கொலை முதல் போர் வரையான கொல்லுதலை மானிட அனுபவத்திலிருந்து நீக்குவது, மானிடத்தை எதிர் நோக்கும் பிற பிரச்சினைகளை – ஆன்மீக ரீதியாக, உளவியல் ரீதியாக, பொருள் ரீதியாக , ஜனநாயக ரீதியாக, சுற்றுச்சூழல் ரீதியாக – கணிசமாகத் தீர்ப்பதற்குப் பங்களிக்கும்.

கொல்லாமைக்கான பற்றுறுதி என்பது அந்தந்த காலத்தில் மானிட வாழ்வையும் நலத்தையும் அச்சுறுத்தும் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலில் அரசியல் அறிவியல் ஈடுபட வேண்டும் என்பதாகும். மகாத்மா காந்தி கிராம மக்களிடம் தமது இடது கையின் விரல்களைக் காட்டி உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஐந்து; அவை தீண்டாதார் என ஒதுக்கப்பட்டவருக்குச் சமத்துவம், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் மூலம் பொருளாதார விடுதலை, குடி மற்றும் போதைப் பொருட்களிலிருந்து விடுதலை, இந்து–முஸ்லீம் நட்புறவு மற்றும் மகளிர் சமத்துவம் எனக் கூறி தனது மணிக்கட்டு அகிம்சை எனக் காட்டுவார். இதைப் போல நாமும் உலகளாவிய முக்கியத்துவமான ஐந்து பிரச்சினைகளைச் சிந்திப்போம் : தொடரும் கொலையும் ஆயுதக் கலைப்பின் தேவையும், வறுமையின் பேரழிவும் பொருளாதார சமத்துவத்தின் தேவையும், மானிட கௌரவத்தை மீறலும் மற்றும் மானிட உரிமைகளைப் பரஸ்பரம் மதித்தலும், சுற்றுச் சூழல் சீரழிவும் பூமியின் வாழ்வுக்கு ஆதரவும் மற்றும் பிரச்சினையைத் தீர்க்கும் ஒத்துழைப்பைப் பாழ்படுத்தும் பிற பிரிக்கும் நிலைகளை நிராகரித்தலும்.

இந்த ஐந்து பிரச்சினைகளும் தனிநபர், குடும்பம், குழுமம், தேசம் மற்றும் முழுமையான மானிடம் ஆகிய அனைத்து நிலைகளுக்கும் பொதுவானதாகும். நம் அனைவருக்கும் கொல்லப்படுவதிலிருந்து பொருளாதார இழப்பிலிருந்து, கௌரவம் மறுக்கப்படுவதிலிருந்து, விஷமாக்கப்படும் சுற்றுச் சூழலிருந்து மற்றும் இப்பிரச்சினைகள் மற்றும் பிற பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைக்காமல் இருப்பதிலிருந்து விடுதலை வேண்டும். இப்பிரச்சினைகள் பரஸ்பரம் தொடர்புடையவை. கொல்லுதலே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய முடிவான வழி எனத் தொடர்ந்து அதனைச் சார்ந்திருந்து வந்துள்ளது. நோயை இன்னும் கிளறி விட்டுள்ளது. கொல்வதினால், கொல்வதற்கு ஆயுதங்களைப் பெருக்குவதால், எதிராகக் கொல்ல அச்சுறுத்தல்களை உருவாக்குவதால் நாம் பாதுகாப்பைத் தேடுகிறோம். கொல்வதற்கு ஆயுதங்களைப் பெருக்குவது பொருளாதார இழப்பிற்கு வழிவகுத்து அமைப்பியல் ஏற்றத் தாழ்வை மேலும் வலுப்படுத்துகிறது. அகம்பாவத்துடன் கொல்லல் மற்றும் மானிட உரிமைகளை மறுத்தல் முதலியன நீண்டகாலமாகப் புகைந்து கொண்டிருக்கும் எதிர்த் தாக்குதலுக்கு இட்டுச் செல்கின்றன. கொல்லும் ஆயுதத் தொழில் மயமாதல் சுற்றுச்சூழலை நாசம் செய்கிறது; மேலும் பகை முகாம்கட்கு இடையில் அச்சந்தரும் வகையில் பிளவுகள் மிகுந்து அனைவருக்கும் நலன் தரும் வகையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒத்துழைப்பு வளர்வதையும் பாதிக்கிறது.

கொல்லாமை பிரச்சினைத் தீர்வு என்பது கொல்லுதலின் எதிர்மறை மட்டுமன்று; ஆனால் அது தேவைப் பூர்த்தி மாறுதலுக்கான ஆக்கப்பூர்வச் செயல் பாடாகும். போர் மற்றும் ஆயுதங்களைக் கைவிடுவது, வறுமையைப் போக்குவது, மானிடக் கடமை மற்றும் உரிமைகளின் அகிம்சை வெளிப்பாடு, சுற்றுச்சூழலைக் காப்பதற்கான செயல்பாடுகள் மற்றும் மானிடத் தேவைகட்கு ஏற்பச் செயல்பட்டுத் தனிநபர்களிடமும் மானிடஇனம் முழுமையும் புதைந்து கிடக்கும் அளவற்ற ஆக்கத் திறன்களை வெளிப்படுத்தும் சிக்கல் தீர்வு படிமுறைகட்கு பங்களிப்பு செய்தல் ஆகியவற்றில் முழுமையாக உறுதியுடன் ஈடுபடல் என்பது இதன் பொருளாகும்.

இத்தகைய நிகழ்ச்சி நிரலானது மிகவும் இலட்சியப் பூர்வக் கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் நடைமுறை

*அனுபவம்* பெற்ற அரசியல், படை, பொருளாதார, *அறிவியல்*, பண்பாட்டு, சிவில் சமூகத் தலைவர்கள் சிலரால் இது செயல்படுத்தப்பட்டுள்ளது. இது பண்டைய மானிட அக்கறையை புதிய உலகளாவிய காலத்தில் எதிரொலிப்பதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் சார்பிலோ அல்லது அதனுடன் தொடர்புடைய அமைப்புகளின் சார்பிலோ நடைபெறும் சிக்கல் தீர்வுக்கான முக்கிய மகாநாடுகள் அனைத்தும் தேவையான மாற்றங்களை கொண்டுவர "அரசியல் விருப்பதை" உருவாக்குமாறு உலக மக்களைக் கேட்டு வருகின்றன என்பதை அரசியல் அறிவியலார் நோக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியமாகும். அரசாங்கங்கட்கு மட்டுமல்லாமல் ஒத்துழைப்புச் சிக்கல் தீர்வுக்கான வளங்கள் உள்ள அனைவருக்கும் – கட்சிகள், அரசு சாரா நிறுவனங்கள், கார்ப்பரேசன்கள், யூனியன்கள், பல்கலைக்கழகங்கள், ஊடகங்கள், *சமயங்கள்* மற்றும் கலைகள் முதலியவற்றுக்கு– அவை இவ்வேண்டுதலைச் செய்து வருகின்றன. வாழ்வை அச்சுறுத்தும் உலகப் பிரச்சினைகளின் அடர்த்தி மிகுந்திட மற்றும் இன்று செயல்படத் தவறுவதன் விளைவாக எதிர் காலத்தில் நிகழப்போகும் பேரழிவு பற்றிய விழிப்புணர்வு வளர்ந்திட ஓர் அவசர உணர்வு இன்று வளர்ந்து வருகிறது. ஆயுதப் பெருக்கம்; விரைந்து பெருகும் மக்கள் தொகையும் பொறுமையின் பொருளியல் மற்றும் உளவியல் எல்லைகளை உடைத்திடும் நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலுமான விரியும் பொருளாதார ஏற்றத்தாழ்வும்; இயற்கையை தொழில் மற்றும் விவசாயத்திற்காக *வரம்*பற்றுச் சுரண்டுதலால் ஏற்படும் வாழ்வு அச்சுறுத்தல்கள்; மற்றும் மகளிர், பாரம்பரிய மக்கள் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினர் மற்றும் பழமை பண்பாட்டுச் சமன்பாடுகள் உடையவர்கள் ஆகியோரின் உயரிய வாழ்வு நிலையை அடைவதற்கான சமத்துவப் பங்கேற்பைக் கௌரவிக்காத நிலை முதலியன இதில் அடங்கும். உலக நிலையைப் பற்றி நன்கறிந்தவர்கள்–ஒரு குறிப்பிட்ட நாடு என்ற நிலையில் உலகைப் பார்ப்பதிலிருந்து மாறுபட்டு நோக்கும் யுனஸ்கோவின் பொது இயக்குநர் போன்றோர்–"வழக்கம் போலச் எச்செயலும் இல்லை" என்ற அவசர யுகம் இது என்கின்றனர். அரசியல் அறிவியலுக்கு இது அவசரம் குறைவானதா?

## கொல்லாமையும் ஆயுதக்கலைப்பும்

தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளோ அல்லது அவற்றுக்காக எழுந்துள்ள அகிம்சை இயக்கங்களோ அரசியல் அறிவியலின் கண்டுபிடிப்புகளன்று. அவை நம் காலத்து வாழ்வால் அறிவியலால் முன்வைக்கப்படுகின்றன. அரசியல் அறிவியல் அவற்றைத் தீர்க்கப் பற்றுறுதி கொள்ள வேண்டும். 1978 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் ஆயுதக் கலைப்பு சிறப்பு மாநாட்டின் *இறுதி அறிக்கை* பிரச்சினைத் தீர்வுச் செயலுக்கான தெளிவான சவாலாக உள்ளது. "திறம்பட்ட சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழான பொதுவான மற்றும் முழுமையான ஆயுதக்கலைப்பை அது கோருகிறது. அப்பொழுதைய உறுப்பினர்களான 159 நாடுகளில் ஒரு நாடு தவிர (அல்பேனியா வாக்களிக்கவில்லை) அனைத்து நாடுகளும் ஒருமனதாக பின்வருமாறு அறிவித்தன: அனைத்து அணு ஆயுதங்களையும், அனைத்து இரசாயன, உயிரியல் ஆயுதங்களையும் மற்றும் பிற பேரழிவு ஆயுதங்களையும் விட்டுவிட வேண்டும்; அந்நிய நாட்டுத் தளங்களிலிருந்து படைகளைத் திரும்பப் பெறல், வரையறைக்குட்பட்ட பிரதேசப் பாதுகாப்பு என்னும் நோக்கத்திற்கு மட்டும் ஆயுதப் படைகளைக் குறைத்தல், மரபான ஆயுதங்களைக் குறைத்தல் மற்றும் "மிகுதியும் வீணாகும்" (Colossal Waste) ஏராளமான உலக இராணுவச் செலவுகளைக் குறைத்து பொருள் மற்றும் மானிட வளங்களை ஏழை நாடுகளின் வளர்ச்சிக்குச் செலவளித்தல் முதலியவற்றைக் கோருகிறது. மேலும் இது தொடர்பான பிற ஆலோசனைகளும் உண்டு. மேலும் வன்முறையான நாடுகள் அகிம்சை மாற்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதை அரசியல் அறிவியல் மாணவர்கள் அறியாமலிருப்பது துரதிருஷ்டமாகும்.

ஆயுதமில்லாத சமூகங்களை நோக்கிய பரிணாம வளர்ச்சிக்கு உறுதியளிக்கும் அரசாங்க மற்றும் சிவில் பரிணாம முயற்சிகளுக்கு ஆதரவளிக்காமல் கொல்லாமை அரசியல் அறிவியல் ஒதுங்கி இருக்க முடியாது. கைத்துப்பாக்கிகள், தாக்கும் ஆயுதங்கள், கன்னி வெடிகள், மற்றும் ஆயுத வியாபாரத்துக்கு தடையான இயக்கங்கள், கிராமங்களிலும் நகரங்களிலும் ஆயுதமில்லா மண்டலங்கள் அமைப்பதற்கான முயற்சிகள் மற்றும் உலகில் அணு ஆயுதமில்லா மண்டலங்களை உருவாக்கும் முயற்சிகள் ஆகியன இவற்றில் அடங்கும்.

## கொல்லாமையும் பொருளாதார வறுமையும்

தவிர்க்கப்படக்கூடிய பொருளாதார வறுமையால் ஏற்படும் உலகளாவிய "பேரழிவினைத்" தடுக்க இரசாயனம் முதல் பௌதீகம் வரையிலான பல்வேறு துறைகளில் நோபல் பரிசு பெற்ற 53 பேர்கள் பிரச்சினையைத் தீர்க்க ஒரு "பிரகடனத்தை" வெளியிட்டுள்ளனர். அவர்கள் கூறுகிறார்கள்: "இந்தப் பேரழிவை நிராகரிக்கும் மற்றும் எதிர்த்துப் போராடும் அனைவரும் இந்த துயரத்துக்கான காரணம் அரசியலே என்பதில் ஒன்றுபடுகின்றனர்".

*குடிமக்களும் அரசியல்வாதிகளும் முறையே தமது நிலைகளில், தேர்தல்களில், நாடாளுமன்றங்களில், அரசாங்கங்களில், சர்வதேச நிலைகளில் சத்துப் பற்றாக்குறை மற்றும் வளர்ச்சியின்மையிலிருந்து கோடான கோடி மக்களைக் காக்கவும் பசியால் ஒவ்வொரு தலைமுறையிலும் கோடானகோடிப் பேர்கள் மடிவதைத் தடுக்கவும் வழிவகுக்கும் புதிய சட்டங்கள், புதிய பட்ஜெட்டுகள், புதிய திட்டங்கள் மற்றும் புதிய நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு வாக்களிக்க வேண்டும்.*

"வாழ்பவரைக் காக்க, கொல்லாதிருக்க, ஒழித்துக் கட்டாமல் இருக்கத் தேவையானது–செயல்படாதிருப்பது அல்லது செயல்படத் தவறுவது மட்டுமன்று, கண்டு கொள்ளாமல் இருப்பதன்று–அகிம்சைப் பொருளாதார புரட்சி (nonviolent economic revolution) மாற்றமாகும்" என அவர்கள் கூறுகின்றனர்.

*இவ்வுலகில் மிகவும் வலுவானவர்கள் அதிகமான பொறுப்பை ஏற்க வேண்டும் என்றாலும் அவர்கள் தனியாக இல்லை. வேறுவழியற்று நிர்கதியாக இருப்பவர்கள் தங்கள் தலையெழுத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டால், அடிப்படை மானிட உரிமை தவிர (அதில் அடிப்படையானது வாழ்வதற்கான உரிமையாகும்) பிற சட்டங்களுக்குக் கீழ்ப்படிய அவர்கள் மறுத்தால் மற்றும் மெலிந்தோர் தங்களைத் தாங்களே ஒன்றுதிரட்டி அமைப்பாக்கிக் கொண்டு மகாத்மா காந்தி பயன்படுத்திக் காட்டிய ஆற்றல் மிக்க ஆயுதமான அகிம்சைப் போராட்டத்தை ஏற்ற மற்றும் குறிப்பிட்ட நோக்கங்கட்கு பயன்படுத்தினால் இத்தகு பேரழிவுகட்கு முடிவு கட்டமுடியும்.*

அவர்கள் முடிவாகக் கூறுகிறார்கள்: "இதுதான் செயல்படுவதற்குரிய நேரம்; இதுதான் ஆக்குவதற்குரிய நேரம் பிறருக்கு வாழ்வு தரும் வழியில் நாம் வாழ்வதற்குரிய நேரம் இதுதான்".

ஏற்றத்தாழ்வு, மக்கட்தொகைப் பெருக்கம் மற்றும் படைமயமாக்கல் (militarization) ஆகிய மூன்றும் ஒன்றொடொன்று சேர்ந்து செயல்பட்டு, பொருளாதாரக் கொலை(economic lethality), வன்முறை மற்றும் சுற்றுச் சூழல் சீரழிவு ஆகியவற்றைத் தூண்டி விடுகின்றன. 1999 இல் உலக வங்கி உலகில் 150 கோடி மக்கள் மிகுந்த வறுமை நிலையில் இருப்பதாக மதிப்பிட்டுள்ளது. இவர்களது வருவாய் நாளொன்றுக்கு ஒரு டாலருக்கும் குறைவாகும். சுமார் 300 கோடி மக்கள் இரண்டு டாலருக்கும் குறைவாகவே நாளொன்றுக்கு ஊதியம் பெறுகின்றனர். 1980களுக்கும் பிந்திய காலத்தில் மிகுந்த வறுமையில் வாடுபவர் தொகை இந்தியாவில் முப்பது கோடியிலிருந்து 34 கோடியாக உயர்ந்துள்ளது எனவும் உலக வங்கி கூறுகிறது. இதே வேளையில் வருவாய்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளது. 1997 ஜுன் மாதத்தில் ஐ.நா. பல்கலைக்கழக சர்வதேச தலைமை அகாதமியின் 160 இளைய தலைவர்களுக்கான முதலாவது நிகழ்ச்சியில் பேசுகையில் உலக வங்கி தாரிக் ஹுஸைன்(Tariq Husain) பின்வருமாறு கூறினார்:

*"உலகம் 1990 களில்... 1980 களில் ... இருந்ததைவிட ஏற்றத்தாழ்வு மிக்கதாக ஆகியுள்ளது. உலகின் 20 சதவிகித மிகவும் ஏழைகளின் மொத்த வருவாய் உலக மொத்த வருவாயில் 2-3 சதவிகிதத்திலிருந்து 1.4 சதவிகிதமாகக் கடந்த 30 ஆண்டுகளில் குறைந்துள்ளது. ஆனால் அதிக செல்வந்தர்களின் மொத்த வருவாய் உலக மொத்த வருவாயில் 70 சதவிதமாக இருந்தது 85 சதவிகிதமாகக் கூடியுள்ளது. இவ்வாறாக பணக்காரர்-ஏழை வருவாய் விகிதாச்சார இடைவெளி 30:1 என்பதிலிருந்து 61:1 என இருமடங்காகி உள்ளது. உலகில் 360 பில்லியனர்களின் மொத்த வருட வருவாய் உலக மக்கள் தொகையில் 45 சதவிகிதத்தைக் கொண்டுள்ள நாடுகளின் வருவாயை விடக் கூடுதலாகும்."*

உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் டி.வொல்பென்சொனும் (James D.Wolfenshon) மகாத்மா காந்தியும் "ஏற்றத்தாழ்வு வன்முறைக்கு வழிவகுக்கிறது" என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். உலக வங்கித் தலைவர் கூறுகிறார், "ஏற்றத் தாழ்வு ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுச்செல்கிறது. வறுமை போரை உண்டாக்குகிறது." மகாத்மா காந்தி எச்சரிக்கிறார். "செல்வர்களுக்கும் கோடானகோடி பட்டினியால் வாடும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி தொடரும் வரை அகிம்சை அரசாங்க முறை தெளிவாகச் சாத்திய மற்றதாகும்... செல்வந்தர்கள் தங்களது செல்வத்தையும் அதிகாரத்தையும் பொதுநலனுக்காக விட்டுக்கொடுக்கவும் பகிர்ந்து கொள்ளவும் முன்வராவிட்டால் இரத்தம் சிந்தும் புரட்சி ஒருநாள் ஏற்படவே செய்யும்." உலக வங்கித் தலைவர் மற்றும் மகாத்மாவின் ஆழ்ந்த கருத்துக்களை ஏற்று ஓர் அமெரிக்க அமைதிப் பணியாளரான பெட்சி துரென் (Betsy Duren) தமது வாரிசுச் சொத்துக்களைத் தானமளித்து விட்டுக் கூறினார். "செல்வத்தை மறுவிநியோகம் செய்வதே நாம் நிலைத்த அமைதியைப் பெறுவதற்கான ஒரே வழியாகும். தங்களிடம் நியாயமாக இருக்க வேண்டியதைவிட அதிகமான பங்கு செல்வத்தை வலுக்கட்டாயமாக வைத்துக்கொள்ள முயலுபவர்களாலேயே வறுமை, போர், துன்பங்கள் முதலியன உண்டாகின்றன. 2300 ஆண்டுகட்கு முன்னர் ஏற்றத்தாழ்வுக்கும் கொல்லுதலுக்கும் உள்ள தொடர்பு பற்றி அரிஸ்டாட்டில் செய்த பகுப்பாய்வையே இம்மூவரும் எதிரொலிக்கின்றனர்."

*தனிநபர்களாயினும் சரி அல்லது அரசாங்கத்தின் உறுப்புகளாயினும் சரி அல்லது இனங்களாயினும் சரி- அவர்கள் பெரிதாயினும் அல்லது சிறியதாயினும்-யார் அதிகாரத்தைக் கையாளுகிறார்களோ அவர்களே புரட்சிக்கு வழிவகுக்கும் சிரமங்களுக்குக் காரணமாவர். பிறருக்கு அவர்களது அதிகாரம் பற்றிய பொறாமையால் இங்ஙனம் நிகழலாம். அவர்கள் உயர்வாகி, பிறருடன் சமநிலையில் இல்லாதபொழுது இது நிகழலாம்.*

1950இல் 250 கோடியாக இருந்த மக்கள் தொகை 2000 இல் 610 கோடியாகிவிட்டது. இது 2050 இல் 870 கோடி ஆகும் என மதிப்பிடப்படுகிறது. 2050 இல் மிக அதிக மக்கள் தொகையுள்ள நாடுகளாக இந்திய (152.9 கோடி), சீனா

(147.8 கோடி), அமெரிக்க ஐக்கிய நாடுகள் (34.8 கோடி), பாகிஸ்தன் (34.5 கோடி), இந்தோனேசியா (32.1 கோடி) ஆகியன இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. லெஸ்டர் ஆர் பிரௌனும் (Lester R. Brown) அவரது சகாக்களும் உலக கண்காணிப்பு நிறுவனத்தில் (World watch Institute) பகுப்பாய்வு செய்திருப்பது போல வருடந்தோறும் 8 கோடி மக்கள் அதிகமாவது பூமியின் உயிர் வளத்தைத் தாங்கும் சக்தியைப் பெரிதும் பாதிக்கும் நிலைமை உருவாக்கும். நீர் விநியோகம், உணவு உற்பத்தி, ஆற்றல், விவசாய நிலங்கள், காடுகள், உயிரியல் பன்மிய வளங்கள், பருவநிலை மாற்றம், நோய், நகரமயமாக்கம், வீட்டுவசதி, கல்வி, வேலைவாய்ப்பு, நாடுகளுக்குள்ளும் மற்றும் நாடுகளுக்கு இடையிலுமான பூசல்கள் போன்ற 19 துறைகள் பெரிதும் பாதிக்கப்படும்.

போர், இனக்கொலை, சிசுக்கொலை, கருச்சிதைவு மற்றும் பஞ்சம், கொள்ளை நோய்கள் முதலிய கொல்லல் முறைகளால் மக்கள் தொகையைக் குறைக்கும் மரபான முறைகள் விரும்பத்தக்கனவன்று. அகிம்சை மாற்றங்களைக் கண்டு செயல்படுத்துவதே, ஆதரிப்பதே கொல்லாமை அரசியல் அறிவியலுக்கான சவாலாகும். பொருளாதார பிரச்சினைத் தீர்வில் மானிட வாழ்வின் தரத்துக்கும் அதனுடைய வாழ்வை ஆதரிக்கும் சுற்றுச் சூழலுக்கும், மரியாதை தந்து அதனை அரசியல் கோட்பாடு மற்றும் செயல்பாட்டிற்கு மையமாக்க வேண்டும்.

உலகின் சில புகழ்பெற்ற படைத்தலைவர்கள், தொழில்ரீதியான கொலைஞர்கள், பொருளாதார படைமய நீக்கத்தின் தேவையைப் பற்றிய கூர்ந்த பார்வையைத் தந்துள்ளனர். இரண்டாவது உலகப்போரில் அமெரிக்கப் படைத்தளபதிகள் ஒருவராக விளங்கிய டுவிக்ட் டி.ஐசன்ஹோவர் அந்நாட்டின் ஜனாதிபதியாக ஆனார். கொல்லும் பற்றுறுதிக்கும் பொருளாதார அமைப்பியல் வன்முறைக்கும் இடையேயான நெருங்கிய உறவை அவரைப் போல போர் எதிர்ப்பு அமைதியாளர்களும் சிறப்பாக விளக்கவில்லை.

*முடிவாக ஆராயுமிடத்து செய்யப்படும் ஒவ்வொரு ஆயுதமும், மிதக்கவிடப்படும் ஒவ்வொரு போர்க் கப்பலும், ஏவப்படும் ஒவ்வொரு ராக்கெட்டும் உணவின்றி பட்டினியாக இருக்கும் மற்றும் ஆடையின்றி*

*குளிரில் நடுங்குபவரிடமிருந்து திருடப்பட்டதாகும். ஆயுதங்களில் இருக்கும் இவ்வுலகம் பணத்தைத் தனியே செலவழிப்பது இல்லை. தொழிலாளரின் வியர்வையை, அறிவியலாரின் மேதமையை, குழந்தைகளின் நம்பிக்கையை அது செலவழிக்கிறது... எந்த உண்மையான பொருளில் நோக்கினாலும், இது ஒரு வாழ்க்கை முறையே அன்று; மானிடம் ஓர் இரும்புச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறது.*

அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1940க்கும் 1996க்கும் இடையில் அணு ஆயுதங்களுக்காக 5.821 டிரில்லியன் டாலர்களைச் செலவழித்துள்ளது. இரும்புச் சிலுவையில் மானிடம் தொடங்குவதற்கான ஒரு காரணம் இதுவாகும். உலகளாவிய படைச்செலவுகளுக்காக 1990 களில் சராசரி ஆண்டுக்கு 500 பில்லியன் டாலர் செலவழிக்கப்பட்டது மிகப்பெரும் வீணடிப்பாகும். கொல்லாமை அரசியல் அறிவியல் என்பது உலகளாவிய படைமயமாக்கத்தால் ஏற்படும் பொருளாதார வறுமையை நிராகரிப்பதாகும். வறுமைப் பேரழிவைத் தடுக்க, மானிடத்தை "இரும்புச் சிலுவை" (Cross of iron) யிலிருந்து மீட்க அது ஆக்கப்பூர்வமான செயல்களை ஏற்க வேண்டும்.

## கொல்லாமை, மானிட உரிமை மற்றும் பொறுப்புணர்வு

சிக்கல் தீர்வுச் செயல்பாட்டில் 1948இல் உருவான அனைத்துலக மானிட உரிமை சாசனமும் அதனை நிறைவேற்றுவதற்காக பின்னர் உருவான சிவில், அரசியல், சமூக மற்றும் பொருளாதார-ஒப்பந்தங்கள் முதலியனவும் முக்கியமான வளர்ச்சி நிலைகளாகும். இவ் அடிப்படை சாசனம் ஒவ்வொரு அரசியல் அறிவியலாருக்கும் உலக குடிமக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

உலகளாவிய பொதுமைத்தன்மை மற்றும் பண்பாட்டு அம்சங்கள் ஆகிய இரண்டுக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகளுக்கிடையில் மானிட உரிமை வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. அதனை வலியுறுத்தவும் காக்கவும் அகிம்சை வழியில் செல்ல அரசியல் அறிவியல் பற்றுறுதி கொண்டுள்ளது. கொல்லப்படாமல் இருக்கும் உரிமையையும் கொல்லாமல் இருக்கும் பொறுப்புணர்வையும் உலகளாவிய அளவில் இலக்காகக் கொள்வதும் அதனைச் செயல் படுத்துவதும் அதனால் வற்புறுத்தப்படுகிறது. இதற்கான ஒரு

வழி அனைத்துலக மானிட உரிமை சாசனத்திலும் நடைமுறைச் செயல்பாட்டிலும் பின்வரும் ஷரத்தைச் சேர்ப்பதாகும்.

*ஷரத்து 3(2) ஒவ்வொருவரும் கொல்லப்படாமல் இருக்க உரிமையும், பிறரைக் கொல்லாமல் இருக்க பொறுப்புணர்வும் வேண்டும்.*

ஒவ்வொரு நிலையிலும் மானிட உரிமையைக் காக்கவும் வளர்க்கவும் முற்படும் தனிநபர்களையும் அமைப்புக்களையும் ஆதரிக்கும் வகையில் ஆய்வு, பயிற்சி, ஆலோசனை மற்றும் செயல்பாட்டுக்கு கொல்லாமை அரசியல் அறிவியல் தனது வளங்களைப் பயன்படுத்த வேண்டுவது அவசியமாகும். சான்றாக 1995 இல் பிகிங்கில் நடைபெற்ற உலக மகளிர் மாநாடு மகளிர்க்கு எதிரான அனைத்து வகையான வன்முறையையும் கண்டிப்பாக நிறுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றை வழங்கியுள்ளது.

முழுமையான அரசியல் அறிவியலாரின் செயல்பாட்டுக்கான இன்னொரு சவால் அகிம்சைவழி பாதுகாப்பதற்கான அனைத்துலக மன்னிப்பு மன்றமாகும். அனைத்துலக மானிட உரிமைப் பிரகடனக் கோட்பாடுகளை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. "யாரும் சித்திரவதை, கொடுமையான, மானிடமற்ற, இழிவான நடத்தை அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்படக் கூடாது." (ஷரத்து 5) "விசாரணையின்றி தன்னிச்சையாக யாரையும் கைது செய்வதோ, சிறையிடுவதோ, நாடுகடத்துவதோ கூடாது." (ஷரத்து– 9) "ஒவ்வொருவருக்கும் அபிப்பிராயம் வைத்திருக்க, வெளியிட உரிமை உண்டு; இடையீடு இல்லாமல் அபிப்பிராயம் வைத்திருக்கவும் எல்லைகளின்றி ஊடகங்கள் வழி தகவல்களையும் கருத்துக்களையும் தேடவும், பெறவும், வெளியிடவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. (ஷரத்து 18) உலகளவில் மரண தண்டனையை ஒழிப்பது, சித்திரவதையை நீக்குவது, அனைவர்க்கும் நியாயமான விசாரணை, மற்றும் வன்முறையை ஆதரிக்காத, வன்முறையில் ஈடுபடாத மனச்சான்றின்படியாக நடக்கும் அனைத்துக் கைதிகளையும் விடுவிப்பது முதலான அனைத்துலக மன்னிப்பு மன்றத்தின் நோக்கமாகும். அனைத்து வகையான அகிம்சை அரசியல் செயல்பாட்டு வடிவங்களையும் அதன் வழிமுறையாகக் கொண்டுள்ளது.

கொல்லாமை அரசியல் அறிவியலின் உதவியைப் பெற வேண்டிய பிற மானிட உரிமை அமைப்புக்களில் பிரதிநிதித்துவப்படாத நாடுகள், மக்களின் நிறுவனமாகும் (UNPO). இது 1991இல் தொடங்கப்பட்டது. ஐந்து கண்டங்களிலுமுள்ள ஐம்பதுக்கும் அதிகமான பாரம்பரிய மக்களின் கூட்டு மானிட உரிமைக்கான அங்கீகாரத்துக்கு அது முயல்கிறது. இவ் அமைப்பின் உறுப்பினர்கள் "அகிம்மையை வளர்த்தல் மற்றும் பயங்கரவாதத்தை ஒரு கொள்கையாகப் பயன்படுத்துதலை நிராகரிக்கும்" இதன் சாசன அம்சங்களில் பற்றுறுதி கொள்கின்றனர். "வன்முறையைப் பயன்படுத்துவதை குறைத்துக்கொள்ள தெளிவான, திட்டமிட்ட கொள்கைகளைக் கையாளும்படி அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்புகளையும் அவற்றின் தலைவர்களையும் இவ்வமைப்பு கோருகிறது. அவை பின் கண்டவற்றை உள்ளடக்க வேண்டும்":

> எல்லா மக்களின் மற்றும் சிறுபான்மையினரின் – அவர்களது அளவு, பண்பாடு மற்றும் சமயத்தை நோக்காது–சம உரிமைகளை அங்கீகரித்தலும் மதித்தலும்; பிரதிநிதித்துவப் படுத்தப்படாத மக்கள் மற்றும் சிறுபான்மையினர் மீது எவ்வித முகாந்திரமுமின்றி வன்முறையைப் பயன்படுத்துவதையும் மற்றும் அவர்களது மானிட உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதையும் கண்டிப்பதும், வெளிப்படையாகப் பேசுவதும்; அமைதியான ஜனநாயகமாக வழிகளில் தமது நோக்கங்களை அடையப் பாடுபடும் இயக்கங்கள் அல்லது அரசாங்கங்களின் சட்டப்பூர்வத் தன்மையை அங்கீகரித்தல்; இத்தகு இயக்கங்கள் மற்றும் அரசாங்கங்களுடன் திறந்த, உண்மையான உரையாடலில் ஈடுபடுவதும் அவைகள் அகிம்சையுடன் வழியில் இருப்பதைப் போற்றுதல்; மாநில அரசுகளுக்கும் நாடுகளுக்கு இடையிலும் மக்களுக்கும் சிறுபான்மையினர்களுக்கும் இடையிலும் நிகழும் பூசல்களை அமைதி வழியில் தீர்க்க ஊக்கப்படுத்துதல் மற்றும் தீவிரமாக உதவுதல்.

மேலும் இவ்வமைப்பானது (UNPO) "மக்களது வாழ்வு சார்ந்திருக்கும் வளங்களை வன்முறையாகச் சுரண்டுவதை முடிவுக்குக் கொண்டு வரும்படியும் மற்றும் பொறுப்பற்ற ஆயுத வணிகம் மற்றும் ஊடகங்கள் மற்றும் தங்களது உற்பத்தி –

விற்பனைப் பொருட்கள் வாயிலாக வன்முறையை வர்த்தமயமாக்குவது ஆகியவற்றை விட்டு விடுமாறு கார்ப்பரேசன்களையும் நிதிநிறுவனங்களையும்" கேட்கிறது. இனப்படுகொலை, மானிடப் படுகொலை, சுற்றுச்சூழல் சீரழிப்பு ஆகியவற்றால் துன்பப்படும் மக்கள் கொல்லாமை அரசியலில் பற்றுறுதி கொள்வது கொல்லாமை அரசியல் அறிவியலுக்கு ஆதரவான தெளிவான சவாலாகும். உலகின் பாரம்பரிய மக்கள் மற்றும் சிறுபான்மையினரின் அதிகமான எண்ணிக்கையையும் சமன்பாட்டு அடையாளங்களுக்கான தேவைகளையும் நோக்கும் பொழுது பிரதிநிதித்துவப் படுத்தப்படாத நாடுகள் மற்றும் மக்கள்கள் அமைப்பின் (UNPO) உறுப்பினர் எண்ணிக்கை ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை விட விரைவில் கூடலாம்.

## கொல்லாமையும் சுற்றுச்சூழல் வாழ்வும் வளமும்

கொல்லாமை அரசியல் அறிவியல் என்பது சுற்றுச்சூழல் அழிப்பிலிருந்து மானிடத்தை விடுவிப்பதற்கு உதவுவதுமாகும். நாம் சுற்றுச்சூழலை நாசம் செய்கிறோம்; சுற்றுச்சூழல் நம்மை நாசம் செய்கிறது. கொல்லாமைச் சமூகத்திற்கு நாசம் விளைவிக்காத சுற்றுச்சூழல் தேவைப் படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியானது பூமியின் உயிர் மண்டலத்தின் உயிர்களை வாழ்விக்கும் சக்தியை மானிடர் அழிக்கும் ஆபத்துடன் முடிகிறது. படைமய தொழில் மயமாதலும் போர்களினால் பூமித்தாய் தாக்கப்படுவதாலும் சுற்றுச்சூழல் நாசமடைகிறது. 1982 அக்டோபர் 28ஆம் நாள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 111 நாடுகள் நிறைவேற்றிய இயற்கை உலக சாசனம் பின்வரும் ஷரத்தைக் கொண்டுள்ளது: "போர் மற்றும் பகை நடவடிக்கைகளிலிருந்து இயற்கை சீரழிவதைப் பாதுகாக்க வேண்டும்." (ஷரத்து 1 பகுதி 5) வியட்நாம் போரில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வியட்நாம் காடுகளை இரசாயனங்களால் நாசம் செய்தது, குவைத் போரில் பெட்ரோலிய எண்ணெய் வயல்களை ஈராக் எரித்தது முதலியவற்றை இங்கு சுட்டிக் காட்டலாம். பர்ரி கொம்மொனர் (Baurry Commoner) கூறும் சவாலை கொல்லாமை அரசியல் அறிவியல் எதிர்கொள்கிறது: "பூமியுடன் அமைதியைக் காண வேண்டுமாயின், அதில் வாழும் மக்களிடம் அமைதியைக் காண வேண்டும்."

ஐ. நா. சபை "சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி" பற்றி ரியோடி ஜெனிராவில் 1992 இல் பெரிய மாநாடு ஒன்றை நடத்தியது. பல உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டின் பொதுச் செயலர் மௌரிஸ் எப்.ஸ்டிராங் (Maurice F. Strong) கூறுவது நோக்கத்தக்கது: "உலகை பாதுகாப்பான, தொடர்ந்து வாழக்கூடிய மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை நோக்கிச் செலுத்திட சுற்றுச்சூழல் புரட்சி தேவை". "நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியை அழிக்கக் கூடியது போர்", "சமாதானம், வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முதலியன ஒன்றையொன்று சார்ந்தும் பிரிக்கப்பட முடியாததாகவும் உள்ளன". இக்கோட்பாடுகளின் அடிப்படையில் பிரச்சினைத் தீர்வுச் செயல்பாட்டில் இறங்குமாறு நாடுகள், அரசாங்கங்கள், குடிமக்கள், மகளிர், இளைஞர் மற்றும் பாரம்பரிய மக்கள் வேண்டப்பட்டனர். இவற்றோடு படைகள், படைத் தொழில்கள், கார்ப்பரேசன்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் அரசியல் அறிவியலார் ஆகியோரையும் சேர்க்க வேண்டும்.

வாழ்வுக்கும் வளத்துக்குமான பிற அச்சுறுத்தல்கள் போல, சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் சிக்கலானவை, பல்துறை சார்ந்தவை மற்றும் உலகளாவியன. பொதுக்கொள்கை (Public policy) களை உருவாக்கிடவும் செயல்படுத்திடவும் உதவும் அரசியல் அறிவியல் வளங்கள் கொல்லாமை நோக்கில் அமைந்திட வேண்டும். சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களில் நன்கு புரிந்து கொள்ளப்பட்டவை எவை? அவசரமான எத்தகு செயல்கள் தேவைப்படுகின்றன? எப்பிரச்சினைகட்கு அவசரமான ஆய்வுகள் வேண்டும்? அவற்றை எங்ஙனம் அவசரமானவைகள் என வரிசைப்படுத்துவது? சமூகமாக கூடி முடிவு செய்வதற்கு அறிவியல் அறிவை எங்ஙனம் சிறப்பாக அறிமுகப்படுத்துவது? இத்தகு பிரச்சினைகட்கு விடைதரும் ஓர் அறிவியல் மாதிரி படிமத்தை சுவிடிஷ் ராயல் அறிவியல் அகாடமி உருவாக்கியுள்ளது.

அகிம்சை வழி சுற்றுச்சூழல் பிரச்சினையைத் தீர்க்க முற்படும் தனி நபர்கள், அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் ஆகியவற்றுக்கு ஆதரவாக கொல்லாமை அரசியல் அறிவியல் செயல்பட வேண்டும். இந்தியாவில் கிராம மகளிரின் மரங்களைக் காக்கும் சிப்கோ இயக்கம் (Chipko movement) முதல் நேரடிச் செயல் பாடுகள் மூலம் பொது மற்றும் தனிப்பட்ட கொள்கைகளை மாற்ற முற்படும் பசுமைஅமைதி (Greenpeace)

மற்றும் சுற்றுச்சூழல் இயக்கமாகவும் (environmental movement) அரசியல் கட்சியாகவும் உள்ள ஜெர்மானிய பசுமைக்கட்சி வரை பலதரப்பட்ட அகிம்சை வழியிலான சுற்றுச்சூழல் இயக்கங்கள் இன்று செயல்பட்டு விடுகின்றன.

ஜெர்மானிய பசுமைக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவரான பெட்ரா கெல்லி இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய பிரச்சினை தீர்வுப் பட்டியலொன்றைக் கொல்லாமை அரசியல் அறிவியலுக்குத் தருகிறார். ஆயுதக் களைப்பு முதல் பொருளாதாரம் மற்றும் மானிட உரிமை ஊடாக பூமியைக் காப்பதற்கு "உலகளாவிய ஒத்துழைப்பு வரை அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்க்கச் செயல்படும்படி அவர் அழைக்கிறார். உலகளாவிய சுற்றுச் சூழல் பண்பாட்டுப் பொறுப்புணர்வுக்கு அவர் அழைப்பு விடுகிறார். நாடுகளிடையே பரஸ்பரம் கட்டுப்படுத்தும் சுற்றுச்சூழல் உறவுகளை ஏற்படுத்தும்படியும் அவர் கோருகிறார். டால்ஸ்டாய், காந்தி, கான் அப்துல் கபார் கான் மற்றும் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் வரிசையில் பெட்ரா கெல்லியையும் வைக்க வேண்டும்; இருபதாம் நூற்றாண்டிற்கும் அதற்கு அப்பாலும் அகிம்சை வழி உலக மாற்றத்திற்கு அவர்கள் அனைவரும் பங்களிப்புச் செய்துள்ளனர்."

## கொல்லாமையும் சிக்கல் தீர்வு ஒத்துழைப்பும்

தனிநபர் முதல் உலகச் சமூகம் வரை அமைதி வழியில் சிக்கல்களைத் தீர்க்கும் படிமுறைக்கு உதவுவது ஓர் அடிப்படையான பணியாகும். பாதுகாப்பு, பொருளாதார நலவாழ்வு, மானிட உரிமைகட்கு மதிப்பு, சுற்றுச்சூழல் வளம் மற்றும் வாழ்வுக்குமான பிற அடிப்படையான நிலைகள் ஆகியவற்றை அடைய யாருடைய உதவி தேவைப்படுகிறதோ அவர்களின் வாழ்வைப் போற்றும் ஒத்துழைப்பின்றி சாதிக்க முடியாது. அரசியல் அறிவியல் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கும் என்பதல்ல இதன் பொருள்; பிரச்சினைகளைத் தீர்க்கும், ஒத்துழைக்கும் படிமுறைக்கு உதவ அது பொறுப்பு ஏற்கிறது என்பதே இதன் பொருளாகும். அது சர்வாதிகாரமன்று; அரசிலிக் (anarchists) கோட்பாட்டாளர் களும் தமது உரிமைகளை பிற அரசிலிக் கோட்பாட்டாளர்கள் ஏற்கும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளிப்படையான அல்லது மறைந்துள்ள வன்முறையே முடிவு செய்யும் என ஆதிக்கத்திற்கு பூசல் மற்றும் போட்டி ஆகிய

அடிப்படைகளைக் கொண்டுள்ள அரசியலை மாற்ற வேண்டும் என்பதைக் கொல்லாமை அணுகல் முறை கோருகிறது. கொல்லாமை அரசியலானது வாழ்வைப் போற்றும் பரஸ்பர மரியாதையுடன் கூடிய பிரச்சினை தீர்வு ஒத்துழைப்பு வட்டங்கள் நித்திய விரிவாகும். வன்முறையானது ஆதிக்கம் செலுத்துகிறது; பிரிக்கிறது. ஆனால் அகிம்சை ஒத்துழைக்கிறது ஒன்றுபடுத்துகிறது (இணைக்கிறது). ஆடவர் மற்றும் மகளிர், சமயங்கள், நாகரீகங்கள், சாதிகள், இனங்கள், வர்க்கங்கள், குழுமங்கள், மாநிலங்கள், நாடுகள், தேசங்கடந்த அமைப்புகள் மற்றும் உலக இயக்கங்கள் ஆகிய அனைத்தும் இணைந்து செயல்படுவதைக் கொல்லாமை அரசியல் தேடுகிறது. அனைவரின் நலனுக்காக, கொல்லாமல், அல்லது கொல்லும் அச்சுறுத்தலின்றி பிரச்சினைகளைத் தீர்ப்பது அதன் நோக்கமாகும். சிக்கல்களுக்கு இருதரப்புகளும் "வெற்றி–வெற்றி" என்னும் வகையில் விடை காண உரையாடல் வழிமூலம் முற்படும் சிக்கல் தீர்வு கோட்பாடு மற்றும் செயல்முறைக்கான பலதுறை மற்றும் தொழில் ரீதியான ஆதரவு பெரு வளங்களைத் தருகிறது.

வளர் உயர் ஆய்வின் அடிப்படையில் கொல்லாமை அரசியல் அறிவியல் வன்முறையான அரசுகளையும் சிவில் சமூகங்களையும் கொல்லாமை சமூகங்களாக மாற உதவுகின்றன. சில நவீன அரசியல் முறைகளில் வெளிப்படும் ஜனநாயக முன்னேற்றத்தின் வரலாற்று வளர்ச்சியை அது அங்கீகரிக்கிறது. ஆனால் சுதந்திர அரசியலும் சுதந்திர சந்தைகள் மட்டும் தீர்க்க முடியாத செயல்முறை மற்றும் அமைப்பியல் வன்முறையின் பிரச்சினைகளுக்குத் தேர்வினைத் தேடுகிறது. கொல்லாமை அரசியல் பின்கண்டவற்றை அங்கீகரிக்கிறது. தன்னிச்சையான அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் அங்கீகரிக்கப்படும் சாசனத்தின் மதிப்பு; குடிமக்களின் உரிமைகளைப் பாதிக்கும் உரிமை மசோதாக்களுக்கான முன்னேற்பாடு; பிரிக்கப்பட்ட நிர்வாகம், சட்டமன்றம் மற்றும் நீதிமன்ற ஆணையுரிமையைக் கட்டுப்படுத்தும் மற்றும் சமன்படுத்தும் நிறுவனத் தடைகளின் பயன்பாடு; சிவில் போர்களுக்கு மாற்றாக தேர்தல் கட்சிப் போட்டியை பதிலீடு செய்தல்; தொழில் ரீதியான பணித்துறைப் பணிகள்; சமய சுதந்திரம்; ஊடகங்கள் மற்றும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம்; மற்றும் வாக்குரிமைப் பங்கேற்பை விரிவாக்கி அனைவரும் பங்கேற்க வழி செய்தல் முதலியன

அவை. வன்முறையான படைகள் மற்றும் காவல்துறைக்கு மாற்றினை அது ஏற்று அதனைத் தேட முற்படுகிறது.

மிகவும் முன்னேறிய ஜனநாயக நாடுகளில் கூட அமைப்பின் செயலின்மையின் விளைவாக மானிடரது தேவைகட்கு பதிலிறுக்கத் தவறுவதால் ஏற்படும் நேரடி மற்றும் அமைப்பியல் வன்முறையைக் கொல்லாமை அணுகல் கவனிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சான்றாகக் கொண்டு இன்றைக்கு அக்கறையான சில விசயங்களை இங்கே சுட்டிக் காட்டலாம் : வீட்டிலும் பள்ளியிலும் வன்முறையும் கொலையும்; வன்முறை கோஷ்டிகள், போதைப்பொருட்கள் மற்றும் தற்கொலைகளால் எதிரொலிக்கப்படும் இளையோரின் மன முறிவுப் பரவலாக அரசியல் ரீதியாக தனிமையாக்கப்படல்; அரசியல் மற்றும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மை, இது குறைவான வாக்குப் பதிவு மூலம் ஓரளவு வெளிப்படுகிறது; ஆக்கப் பூர்வமற்ற இராணுவச் செலவால் ஏராளமான வளங்கள் வீணடிக்கப்படல்; குறைந்தபட்சம் இருபது சதவிகித மக்கள் பற்றாக்குறையால் தொடர்ந்து துன்புறுகின்றனர். போதிய சத்துணவு, ஆரோக்கியம், வீடு மற்றும் கல்வி இன்மையும் குடும்பச் சிதைவும்; ஆயுதமேந்திய கொள்ளையர், வெளுப்புக் குற்றங்கள், பால் மற்றும் இனப்பாகுபாடுகள்; மற்றொரு இருபது சதவிகிதத்தினர் மிகவும் பெரும் செல்வந்தர்கள் செல்வத்தில் பெருக்கம் மற்றும் தமதருகே உள்ள வர்க்கத்தினருடன் சேர்ந்து அதிகக் காவலர் (போலிஸ்), சிறைகள், கடும் தண்டனைகள், மற்றும் படைகள் வழி பாதுகாப்பை நாடல், இவை அனைத்தும் வன்முறைப் பண்பாட்டுக் காட்சிகளை உடையவை.

நவீன ஜனநாயக அரசும் சிவில் சமூகமும் இல்லாத நாடுகளில் இன்னும் அதிக வலுவான மற்றும் பல்வேறு வடிவங்களிலான வன்முறைகள் மிகுந்துள்ளன; அங்கெல்லாம் வரம்பற்றக் கொல்லும் யதேச்சதிகார ஆட்சியும் பொருளாதார பற்றாக்குறையும் விவரிக்க இயலாத நேரடி மற்றும் அமைப்பியல் வன்முறைக்கு தாண்டவமாட வழிவகுக்கிறது. ஒட்டுமொத்தமாக மரண தண்டனைகளை நிறைவேற்றல், சித்திரவதை, படுகொலைகள்,இனப்படுகொலைகள், ஆயுத முனையில் அச்சுறுத்தல், ஆயுதப்புரட்சி, மற்றும் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பொருளாதாரப் பற்றாக்குறையால் பொதுமக்கள் பேரழிவு முதலிய அளவு கோல்கள் முக்கியமானவைகளாகும்.

நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளில் வன்முறையை ஏற்கும் எடுகோள்களிலிருந்து விடுபட்டு, சிக்கல் தீர்வுக்கான பணியினை ஏற்கும் கொல்லாமை அரசியல் அறிவியலானது ஏறக்குறைய ஜனநாயக வழிப்பட்ட சமூகங்களுக்குள்ளும் இடையிலும் மானிடத் தேவைகளுக்கு உதவிடும் செம்மையான படிமுறைகளுக்கு பங்களிப்புச் செய்திட வேண்டும். அறிவியல் மற்றும் மானிட ஆக்கத்தன்மைக்கான சவால் மகத்தானதாகும். எனினும் இப்பொழுது கூட ஆக்கப் பூர்வ படிமுறை மாற்றத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியும் என்பது தெளிவாகும். வெளிப்படையாக கொல்லாமை மதிப்பீடுகளை அறிமுகப்படுத்துதல், கொல்லாமை மானிடத் திறன்கள் பற்றிய புதிய தகவல்களுக்கான இடத்தைத் தருதல், ஜனநாயகத் தலைமை மற்றும் குடியுரிமைக்கு புதிய கொல்லாமைத் திறன்களைப் போற்றி வளர்த்திடல், கொள்கை உருவாக்கத்தில் பங்குபெற வசதி செய்தல் மற்றும் கொல்லாமை சிக்கல் தீர்வுக்கு புதிய நிறுவனங்களை வளர்த்தல் முதலியவற்றில் அப்பங்களிப்பு இருக்கலாம். இத்தகு மாற்றங்கட்கு உதவிட அரசியல் அறிவியல், கொல்லாமைக்கான தனது பற்றுறுதி சமுதாய தொண்டிற்கான தனது புதிய தொடக்கம் என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். சந்திக்காத மானிடத் தேவைகளுக்கு – தனிநபர் மற்றும் குடும்பம் முதல் உலக அரசியல் வரை – நிறுவன ரீதியான பொறுப்பேற்க வேண்டும்.

அத்தியாயம் – 5

# நிறுவன விளைவுகள்

*நாம் அவசியமான நிறுவனங்கள் எனச் சொல்பவைகள் பெரிதும் நாம் பழக்கப்பட்டுவிட்ட நிறுவனங்களாக உள்ளன என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை... சமூக சாசனங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு சமூகங்களில் வாழும் மக்கள் கற்பனை செய்வதை விட சாத்தியங்களுக்கான களங்கள் பெரிதும் விரிவாக உள்ளன.*

*அலெக்சிஸ் தெ டொகுவிலே*

*பூமியில் வாழ்வை அச்சுறுத்தும் பிரச்சினைகள்*
*கூட்டு முயற்சியால் உருவானவை*
*அவை நம்மைக் கூட்டாகப் பாதிக்கின்றன. அவற்றை*
*மாற்ற நாம் கூட்டாக வேலை செய்ய வேண்டும்.*

*பெட்ரா கே. கெல்லி*

## கொல்லாமை மானிட இயல்பு

அரசியல் அறிவியலின் கொல்லாமை அறவியல் – அனுபவ மாற்றத்தின் நிறுவன விளைவுகள் என்ன? அதனை நடைமுறைப்படுத்துபவருக்கு, அத்துறையின் கட்டமைப்புக்கு, அத்துறை பிற துறைகளுடன் கொண்டுள்ள உறவுக்கு மற்றும் அடிமட்டக் குழுமம் முதல் மானிட இனம் முழுமையுமாக கொல்லாமைச் சமூகங்களை உண்டாக்க தேவைப்படும் மாறுபட்ட நிறுவனங்களுக்கு விளைவுகள் என்ன? மானிடத் தேவைகள் மற்றும் விருப்பங்களின் விளைவாக எழும் நோக்குடைய சமூக உறவுகளின் வடிவமைதிகள் நிறுவனங்களாகக் கொள்ளப்படுகின்றன.

மானிட நாகரீக வரலாற்றின் பெரும்பகுதி நிறுவன புதுமைகள் கண்ட வரலாறாகும். பற்றுறுதிகளிலிருந்து (விசுவாசங்கள்) கோவில்கள், யூத வழிபாட்டிடங்கள், தேவலாயங்கள் மற்றும் மசூதிகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட குழுமங்கள் எழுகின்றன. அரசியல் பங்கேற்புத் தேவைகளிலிருந்து அரசியல் கட்சிகள், தேர்தல் மற்றும் நாடாளுமன்றங்கள் உருவாகின்றன. சமூகத்தைக் கட்டுப் படுத்துவதற்கான தேவைகளிலிருந்து காவல்துறை, நீதிமன்றங்கள் மற்றும் சிறைகள் வருகின்றன. போரிடும்

நோக்கங்களிலிருந்து நிலம், நீர் மற்றும் ஆகாயத்தில் சண்டையிடுவதற்கான தொழில்நுட்ப சக்திகள் உண்டாகின்றன. படைகளுக்கு ஆதரவு தரவும் அரசு நோக்கங்களுக்கு வரிவசூலிக்கவும் ஆளும் பணித்துறை தோன்றுகிறது. ஓர் அணுகுண்டை உற்பத்தி செய்ய அமெரிக்கா தனது தேசிய வளங்களையெல்லாம் திரட்டி மான்ஹட்டன் திட்டத்தை (Manhattan project) ஏற்படுத்தியது. அறியப்படாத உலகங்களை ஆராய்வதற்கு ஆன்ம, அறிவியல், தொழில் நுட்பம், திறன்கள் மற்றும் வளங்கள் ஆகியவற்றைத் திரட்டி 15ஆம் நூற்றாண்டில் பிரின்ஸ் ஹென்றி என்னும் கடற்பயணி கிளம்பினார்; சந்திரனில் மானிடரை இறக்க இருபதாம் நூற்றாண்டில் அப்பலோ திட்டம் (Apollo project) உருவாயிற்று.

கொல்லாமை உலக சமுதாயத்துக்கு மாற அரசியல் அறிவியல் எந்த வகையான நிறுவன மாற்றங்கட்கு உதவிட வேண்டும்? இன்றைய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் எங்ஙனம் உலகளாவிய அளவில் பரவியுள்ளதோ அங்ஙனமே உலக வாழ்வில் கொல்லாமை நிலைகளை உருவாக்கிட நிறுவன மாற்றங்கள் விரிந்து பரவ வேண்டியுள்ளது. பங்கு பெறும் ஜனநாயகம், பால், இன, வர்க்க மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய அரசியல் அறிவியலின் சிறப்புத்துறைகளைத் தாண்டிச் செல்லும் அக்கறைகள் ஆகியவற்றைப் போன்று பழைய அமைப்புகளிலேயே கொல்லாமைப் பார்வை உள்ளடக்கப் படலாம் அல்லது இணைக்கப்படலாம். அல்லது பழைய அமைப்புகள் மாற்றி அமைக்கப்பட வழிவகுக்கலாம் அல்லது இணையான மாற்று அமைப்புக்கள் நிறுவப்படலாம், அல்லது முற்றிலும் புதிய அல்லது ஒட்டு நிறுவனங்கள் உண்டாக்கப் படலாம்; கொல்லாமை மாற்றத்தை முழு வலிமையொடு தேட எல்லா வளங்களையும் ஒன்று சேர்த்து இது உருவாக வேண்டும்.

கொல்லாமைச் சமூகங்களை உறுதியாக அடைந்திட பின்கண்டவைகள் தேவைப்படுகின்றன; கொல்லாமை அறிவியல் மற்றும் மானிட கண்டுபிடிப்புக்கு அர்ப்பணிக்கப் பட்ட நிறுவனங்களும், அகிம்சைக்கான கல்வி மற்றும் பயிற்சியும், வாழ்வை வளமாக்க சிக்கல் தீர்வு முதல் கொல்லாமைப் பாதுகாப்பு மற்றும் சமூகத்தில் எல்லா துறைகளிலும் கொல்லாமை நலவாழ்விற்கான பணிகள் உருவாக்குதல் வரை இதில் அடங்கும்.

ஜனநாயகங்களை ஜனநாயகவாதிகள் உருவாக்குகிறார்கள். அவர்கள் அவற்றைப் புரிந்தவர்களாகவும், அவற்றை எங்ஙனம் வேலை செய்யச் செய்ய வேண்டுமென்பதைப் புரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அங்ஙனமே கொல்லாமைச் சமூகங்களும் நிறுவனங்களும்; கொல்லாமை நபர்களால் உருவாக்கப்படுகின்றன. அதுபோலத் தான் கொல்லாமை அரசியல் அறிவியலும். கொல்லாமை விழிப்புணர்விற்குப் பலவழிகள் உள்ளன; எல்லோருக்கும் ஒரே வழியையே விதித்திட முடியாது. பிறப்பு, பற்றுறுதி, அறிவு, அதிர்ச்சி அனுபவம், கருணை, இலாபக் கணக்கு ஆய்வு, பாவிப்பு (simulation) மற்றும் தியானம் முதலிய அனைத்து வழிகளும் அகிம்சைக் கண்டுபிடிப்புக்கும் செயலுக்கும் உரியதாகும். கொல்லாமை பற்றுறுதிக்கான மானிடத் திறன்கள் பற்றிய ஏராளமான வரலாற்று மற்றும் சமகாலச் சான்றுகள் நமது சொந்த மடைமாற்றத் திறன்கள் குறித்து நம்மை ஊக்குவிக்க வேண்டும்.

## அரசியல் அறிவியலின் கொல்லாமைத் துறை

அரசியல் அறிவியலின் ஒவ்வொரு சிறப்புப் பிரிவிலும், துறையிலும் மற்றும் சங்கங்களிலும் கொல்லாமை உணர்வைப் புகுத்துவது தேவையாகும்; இப்பொழுது உள்ளவைகளை மாற்றி அமைக்க ஒரு முன்னோடியாக ஒரு கொல்லாமைத் துறையைப் பற்றிய காட்சியை உருவாக்கிடலாம். உதயமாகும் புதிய பல்கலைக்கழகங்களில் புதிய துறைகளை நிறுவலாம்.

கொல்லுவது, கொல்லும் அச்சுறுத்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உலக வாழ்விலுள்ள கொல்லும் அம்சங்கள் ஆகியவற்றை நீக்குவதே இந்தத் துறையின் பொதுவான நோக்கமாகும். வன்முறையை அடிப்படையாகக் கொண்ட தாரளமய ஜனநாயகம், அறிவியல் சோசிசலிசம் மற்றும் யதேச்சதிகார ஆட்சி ஆகியவற்றிலிருந்து இத்துறை கொல்லாமைப் பண்பால் மாறுபடுகிறது. கொல்லாமைத் துறை மதிப்பீடு பாரம் ஏற்றப்பட்ட துறையன்று; அது மாற்று மதிப்பீட்டை உடைய துறையாகும்.

தொடக்க நிலைப் படிப்பிலிருந்து டாக்டர் பட்டம் வரை படிக்கும் இன்றைய படிமுறையில் கொல்லாமைத் துறையானது கொல்லாமைச் சமுதாயங்களை அடைவதற்கும் அவற்றைத் தொடர்வதற்கும் தேவையான பண்புகளையும் திறன்களையும் வளர்க்க வெளிப்படையாக முற்படும். நான்கு திறன்கள்

அடிப்படையானவை – ஆய்வுக்கு, கல்வி மற்றும் பயிற்சிக்கு, செயல்பாட்டிற்கு மற்றும் தகவல் தொடர்பு ஊடகங்கள் வழியும் அன்றாட வாழ்விலும் வெளியிடுவதற்கு திறனாய்வுச் சிந்தனை என்பன அவை.

புதிதாகத் தொடங்கும் மாணவர்கள் மானிட வரலாற்றின் கொல்லும் மரபால் வலுவாக எதிர் கொள்ளப் படுவர்; தொழில் ரீதியான அரசியல் அறிவியலார்கள் என்ற முறையில் அல்லது குடிமக்கள் / தொண்டர்கள் / தலைவர்கள் என்ற முறையில் மானிடரின் கொல்லும் நிலையை நீக்கச் செயல்படும்படி அழைக்கப்படுகிறோம். மானிடரின் ஆக்கத் திறன்கள், அரசியலில் புதுமை காண்பதற்கான திறன்கள், சமுதாய வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மானிடரின் கௌரவத்தை வளர்க்க அமைதியாகச் செயல்படும் திறன்கள் முதலியவற்றைப் புரிந்து கொள்ள அவர்கள் வலுப் பெறுகின்றனர்.

அடுத்தபடி நமது காலத்தின் பெரிய சவால்களை பரிசீலிப்பதாகும் – சிக்கல் தீர்வு (வன்முறை, பொருளாதாரம், மானிட உரிமைகள், சுற்றுச்சூழல், ஒத்துழைப்பு) செயல் பாடுகள்; சமகால அரசியல் நிறுவனங்களும் சிக்கல் தீர்வு படிமுறைகளும் (அடிமட்ட, தேசிய, சர்வதேசிய, உலக); மற்றும் கொல்லாமை எதிர்காலத்தை அடைவதற்கான இன்றைய முடிவுக்கு பங்களிப்பு செய்யும் கொல்லாமைப் பகுப்பாய்வும் செயல் கோட்பாடுகளும் தொடர்பான மிகவும் சமீபத்திய அறிவும் அ[illegible]ற்றில் அடங்கும்.

ஆர்வங்களையும் திறன்களையும் இணைக்கும் வகையில் பிரச்சினை தீர்வு மற்றும் குழுமத் தொண்டு புரியும் மாற்றுக்களைத் தேடுவது மாணவர்கட்கு அளிக்கும் அடுத்ததொரு வாய்ப்பாக அமையும். இதற்கு ஆய்வுத் திறன்கள் அறிமுகம், கல்வி மற்றும் பயிற்சி, தலைவர்– குடிமக்கள் செயல், திறனாய்வு அரசியல் மதிப்பீடு முதலியன தேவைப்படும். பன்மிய ஆர்வங்கள் மற்றும் தகுதிகள் (competencies) ஆகியவற்றுக்கான சாத்தியங்களை இது மறுப்பதாகாது. நான்கு நிலைச் செயல்பாடுகளும் அகிம்சை சமுதாய மாற்றம் ஏற்படும் வகையில் உயர்வாகப் பின்பற்றப்பட வேண்டும். பரஸ்பரம் ஆதரிக்கும் தகுதிகளை அங்கீகரிப்பதும் அவற்றுக்கிடையே ஒத்துழைப்பை – கிராமக் கைத்தொழிலாளர் அல்லது விளையாட்டுக் குழுக்களுக்கிடையில் உள்ள ஒத்துழைப்பை – வளர்ப்பதும் அவசியமாகும்.

இத்தயாரிப்புடன் அடுத்தபடி தனிப்பட்ட அல்லது குழுத் திட்டங்களில் இறங்குவதாகும். நேரடி வன்முறை, அமைப்பியல் வன்முறை, மானிட உரிமைகள் மீறல், சுற்றுச்சூழல் சீர்கேடு, மற்றும் சிக்கல் தீர்வு ஒத்துழைப்பைத் தடை செய்யும் வன்முறை நிரம்பிய பகைமை ஆகியவற்றுக்கு மாற்றுக்களை உருவாக்க ஏற்புடைய திறன்கள் பற்றிய ஆய்வு, கல்வி, செயல் மற்றும் திறனாய்வுச் சிந்தனையில் இறங்குவதாகும் இது. இச் செயல்திட்டங்களை வட்டார, தேசிய, சர்வதேசிய நிலைகளுக்குப் பயன்படுத்திட வேண்டும். இத்தகு செயல்திட்டங்களின் முடிவுகள் பட்டம் பெறுவதற்கான ஆய்வேடுகளாக அமைய வேண்டும். அகிம்சைத் துறையின் சேமிப்புகளாக அவை ஆகும். உலகம் முழுவதும் அவை கணினியில் கிடைக்க வேண்டும். தனிநபர் மற்றும் சமூக முடிவெடுத்தல்களுக்கு அவை உதவிட வேண்டும்.

பட்டதாரிகள் பொதுப்பணிகளிலும் சிவில் சமூகங்களிலும் புதுமையான பணிகளில் இறங்கிட வேண்டும். முதுகலை, ஆய்வுப் பட்டங்களுக்கு கொல்லாமை அரசியல் அறிவியலில் இப்பொழுதுள்ள பிரிவுகளிலும் புதிதாக உருவாக்கப்படும் பிரிவுகளிலும் சேரலாம். பிற துறைகளிலும், பணிகளிலும் இவற்றைக் கொண்டு செல்லலாம்.

கொல்லாமைத்துறை என்பது தொண்டு மற்றும் ஏற்புடைய செயல் தொடர்பானது. ஆரம்ப நிலை முதல் டாக்டர் பட்டம் வரை அறிவையும் திறன்களையும் அது தொடர்ந்து கூட்டுகிறது. குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் தேவைகட்கு ஆசிரியர்களும் பட்ட மாணவர்களும் பொதுவான ஆர்வத்துடன் மாறுபட்ட நிலைகளிலிருந்து புதுமையாக்கமாக ஒன்று கூடுகின்றனர். புதிய அறிவைக் காணுதல், கல்வியிலும் பயிற்சியிலும் அதன் பயன் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதன் நடைமுறைப் பயன்பாடு ஆகிய இவற்றுக்கிடையில் பரஸ்பரம் ஆதரிக்கும் உறவுகளை வளப் படுத்த இத்துறை வெளிப்படையாக முயலும். கொல்லாமைச் சமூகத்தின் இதயமான சமத்துவத்தின் அடிப்படையான ஆண்–பெண் பங்காளிகளாகச் செயல்படும் பண்பாட்டைப் போற்றுவோம். மதிப்போம். ஆய்வுக்கான புதிய தேவைகளை இனங்காண்பது மற்றும் எதிர்பாராத பிரச்சினைகளை எதிர்கொண்டு செயல்பட மாணவர்கட்கு தகுந்த முன்னேற்பாடு ஆகியவற்றுக்கு முன்கூட்டியே ஏற்பாடும், தொடர்பின் ஊட்டமும் தேவை. அனுபவம் வாய்ந்த குழுத்

தலைவர்களும் உடன்பணியாற்றும் பிற துறை அறிஞர்களும் சிலவேளைகளில் ஒன்று சேர்ந்து ஒருமித்த கூட்டு முயற்சி உருவாகிட உதவிடலாம். கொல்லாமை அறிவும் திறன்களும் உலகளாவியவை; கொல்லாமைத் துறையானது நேரடிப் பங்கேற்பாலும், கணினி உதவியாலும் மற்றும் பிற தகவல் தொடர்பு முறைகளாலும் திறன்களை பாதிக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ள அடிமட்டக் குழுமம் ஒரு செயல்பாட்டு அமைப்பாக உள்ளது.

## பல்கலைக்கழக சாந்திசேனை (அமைதி அணி)

கொல்லாமைச் சமூகங்களுக்கு மாறுவதற்கு அகிம்சை மாணவர் குழுமத் தொண்டு அணி தேவை. இன்று பல உலகக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் வழங்கப்படும் படைப்பயிற்சிக்கு மாற்றாக இது அமையும். அரசியல் அறிவியல் துறை இதன் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம். ஆனால் இதன் உறுப்பினர்கள் பல துறைகளிலிருந்து வரலாம். சாந்திசேனை – அது எங்ஙனம் பெயரிடப்பட்டாலும் சரி – அது ஒரு கட்டுப்பாடான, தனித்து இனங்காணக்கூடிய ஓர் அணியாகும். அதன் உறுப்பினர்கள் அகிம்சை சிக்கல் தீர்வு மற்றும் சமரசம் காணல், குழும பாதுகாப்பு மற்றும் சிவிலியன் தற்காப்பு, உயிர் காக்கும் ஓரளவு மருத்துவ உதவி, விபத்து நிவாரணம் மற்றும் குழுத் தேவைகட்கான ஆக்கப் பணி ஆகியவற்றில் பயிற்சி பெற்றவர்களாவர். இதில் பங்கு பெறுவது மாணவரின் கல்விக்கு மிகை நிரப்பாகவும் இணையாகவும் அமைந்து தலைமைக்கான பண்புகளையும் திறன்களையும் வளர்க்கும். அனைத்துச் சமயங்களின் வாழ்வைப் போற்றும் பரவசம், இசை மற்றும் கலைகளின் எழுச்சியுறச் செய்யும் உணர்வு, விளையாட்டுக்களின் உயிர்சத்து மற்றும் பிறருக்கான உண்மையான தொண்டு தரும் நிறைவு முதலிய வளங்களை அது கொண்டுள்ளது. சிக்கல் நிகழும் காலங்களில் வளாகத்திற்குள்ளும் வெளியிலும் பணியாற்ற சாந்தி சேனையை அழைத்திடலாம்; அது பிற சமூக நிறுவனங்கட்கும் தலைமைத் திறன்களை வழங்கிடலாம். படைப்பணிப் பயிற்சிக்கு ஒதுக்குவது போலக் குறைவின்றி இதற்கும் நிதியும் பிற ஆதரவுகளும் வழங்கிட வேண்டும். பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் படிப்புக்கு முந்திய நிலையிலும் சாந்தி சேனைப் பயிற்சியை அறிமுகப்படுத்தலாம். பேராசிரியர் என்.இராதா கிருஷ்ணன் சாந்தி சேனையை உருவாக்கி நடத்துவதில் மதிப்பு வாய்ந்த

நடைமுறை அனுபவத்தை காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகப் பணி வாயிலாகத் தருகிறார். 1930–47 ஆண்டுகளின் பொழுது வடமேற்கு இந்தியாவில் 80,000 பேர்களடங்கிய வலுவான அகிம்சை முஸ்லிம் படையை (குதாய் கித்மத்கார்) உருவாக்கிய பயிற்சிக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் இதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே மார்ட்டின் லூதர் கிங் அகிம்சை சமூக மாற்றத்திற்காக நடத்திய இயக்கத்தையும் பிற அகிம்சை பயிற்சி அனுபவங்களையும் சேர்க்க வேண்டும்.

## கொல்லாமைப் பல்கலைக்கழகங்கள்

அகிம்சை சமுதாயங்களுக்கான மாற்றமானது எந்த ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறை (discipline) அல்லது பல்கலைக்கழகத் துறையின் ஆற்றல்களுக்கு அப்பால் அதிகமான அறிவையும் திறன்களையும் கோருகிறது. இவ்வாறாக அரசியல் அறிவியல் கொல்லாமைக்கு மாறிட அனைத்து சமூக அறிவியல்கள், இயற்கை அறிவியல்கள், மானிடத்துறைகள் மற்றும் பிற துறைகளின் மொத்தமான பங்களிப்பைக் கோருகிறது. அடிமட்ட, தேச, சர்வதேச, உலக நிலைகளில் குழுமங்களின் வாழ்வுக்கான கொல்லாமைப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட முழு பல்கலைக் கழகங்கள் தேவைப்படுகின்றன.

போரில் மிக அதிகமான கொல்லுதலுக்காக பல்கலைக் கழகங்களின் ஒட்டு மொத்தமான அறிவு மற்றும் மானிட வளங்களை ஒன்று திரட்டிப் பயன்படுத்த முடியும் என்பது காட்டப் பட்டுள்ளது. 1942 ஜூன் 18 அன்று ஹார்வர்டு பல்கலைக் கழகத் தலைவர் ஜேம்ஸ் பி.கோனண்ட் (James B.Conant) பின்வருமாறு அறிவித்தார். “அச்சுநாடுகள் நிபந்தனையின்றி சரணடைவதை விரைவுபடுத்த, நாம் இப்பொழுது இந்த பழைய அறிஞர்களின் பழைய சமூகத்தை அர்ப்பணிக்கிறோம். “ஹார்வர்டு கோனண்டின் படையானது; போரில் சண்டையிட பற்றுறுதி கொண்டது அந்நிறுவனத்தின் வாழ்வை திருத்தியமைத்தது. இளைய ஹார்வர்டு பௌதீக மாணவர்கள் நியூமெக்சிக்கோ லாஸ் அலமொஸில் அதிகபட்ச இரகசிய பல்துறை அணுகுண்டு திட்டத்தில் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். நடந்த பழையதை ஒருவர் நினைவு கூறுகிறார். அது ஓர் அறிவியல் கனவு உலகம்... திறந்த சமூகத்தின் மிகச்சிறந்த மனங்கள் எவ்வித வயது,

கல்வித்தகுதி அல்லது பழைய சாதனை என்ற கணக்கின்றி சுதந்திரமாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

பழைய, புதிய பல்கலைக்கழகங்கள் மானிடத்தின் வாழ்வையும் நலத்தையும் அச்சுறுத்தும் போர்களையும் எல்லா வகையான கொல்லுதல்களையும் நீக்கிடத் தீவிரமாகச் செயல் படலாம் அல்லவா? "அமைதி இயலை" பல்கலைக் கழகங்கள் படிப்புக்கள், திட்டங்கள் அல்லது துறைகளாக அறிமுகப்படுத்தத் தயங்குவது அல்லது "அறவியல்"/ "மதிப்பீடுகள்" பற்றிய பல்கலைக்கழக அளவிலான பல மில்லியன் டாலர் அறக்கட்டளைகளில் அகிம்சையை மையக்கருவாக ஆக்கத் தயங்குவது முதலியன உயர்கல்வியில் கொல்லாமையின் எதிர்கால முன்னேற்றத்தை அளக்கும் கருவிகளாகும்.

## கொல்லாமை அரசியல் கட்சிகள்

அனைவரின் நலனுக்காக சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் படிமுறைகளில் தேவை அடிப்படையில் பங்கேற்கும் கொல்லாமை அரசியல் கட்சிகளின் பணியினை கொல்லாமை அரசியல் அறிவியல் கோருகிறது. இத்தகு அரசியல் கட்சிகட்கு *அகிம்சை சர்வோதயக் கட்சி* எனப் பெயரிடலாம். ("சர்வோதயம்" என்பது அனைவரின் நலனாகும்), குறிப்பிட்ட சமூகப் பண்பாட்டு நிலைகளில் இத்தகு கட்சிகள் ஆக்கப் பூர்வமாகக் கருத்து, பெயர், அமைப்பு மற்றும் செயல்களால் எழுகின்றன.

அடிமட்டத்திலும் உலக அளவிலும் கொல்லாமைச் சமூகங்களை அடைவதற்குப் பங்களிப்பது கொல்லாமை அரசியல் கட்சிகளின் நோக்கங்களாகும். அவை கடந்த கால அரசியல் கட்சிகளிலிருந்து மாறுபடுகின்றன. அவை வர்க்க அடிப்படையானவை அன்று; அனைவரின் நலன்களின் கூட்டு மொத்தத்தை வெளியிட அவை முயல்கின்றன; கொல்லும் நிலையும் அதனுடன் தொடர்புடைய அம்சங்களும் இன்மையாலும் மற்றும் கொல்லாமை நிலைகளான சுதந்திரம், நீதி மற்றும் பொருள்வளம் உள்ளமையாலும் இது ஒவ்வொருவருக்கும் நன்மை பயப்பதாக அமையும். கொல்லாமைக் கோட்பாட்டிற்காக போட்டியிட்டு வேலை செய்யும் பல கட்சிகளை எதிர்பார்க்கலாம்.

தேர்தல் போட்டி, பொதுக் கொள்கை ஆக்கம் (Public policy - making) மற்றும் பிற செயல்பாடுகளில் ஆக்கப்

பூர்வமாகக் கொல்லாமை அரசியல் கட்சிகள் பங்கு பெறும் என எதிர்பார்க்கலாம். ஆனால் இது நேரடி அரசியலில் பங்கேற்க வேண்டாம் என்ற காந்திய நிலைபாட்டிலிருந்து மாறுபட்டதாகும். 1947 டிசம்பரில் நடைபெற்ற நிர்மாணப்பணி ஊழியர்களுக்குக் காந்தி வழங்கிய கடைசி அறிவுரை, "அரசியல் தவிர்க்க இயலாதவாறு கெடுப்பதால், அரசியலிருந்து விலகி இருக்குமாறு" அவர்களைக் கேட்டுக் கொண்டதாகும். மாறாக, சிவில் சமூகத்தில் மிக அதிகமான தேவைகள் உள்ள மக்களிடையே அகிம்சை சமுதாயத்திற்கான ஊழியர்கள் பணியாற்ற வேண்டும்; அதன் வழியாக அரசியல்வாதிகளையும் கொள்கைகளையும் தாக்கம் பெறச் செய்ய வேண்டும். தர்க்க ரீதியாக இதன் பொருள் பிறரை ஊழலாக அனுமதிப்பது என்பதாகும்; அத்தகையோரே பல பில்லியன் வரிவசூல், கோடிக்கணக்கான மக்கள் மற்றும் அவர்களை சமூக வாழ்வின் ஒவ்வொரு விசயத்தையும் போர், பாதுகாப்பு, உணவு, உடை, குடியிருப்பு, உடல்நலம், கல்வி, பொருளாதாரம், பண்பாடு, சுற்றுச்சூழல் உள்ளிட்ட ஒவ்வொரு அம்சத்தையும் – பாதிக்கும் விசயத்தை முடிவு செய்வர்; அதே வேளையில் அகிம்சைச் செயல்புரிவோரும் அவரைச் சார்ந்தவர்களும் ஊழல்வாதிகளையும் அவரைச் சார்ந்தவர்களையும் மாற்றவும் அவர்களை நன்மை செய்யும்படி செய்யவும் முயல்வர். அரசியலில் நேரடியாகக் கலந்து கொள்ளாத நிலையோடு பங்கேற்பு நிலையையும் காந்தி முன்கூட்டியே கணித்திருந்தார். "ஆனால் ஒரு காலகட்டம் வரலாம், அப்பொழுது மக்கள் நம்மை, வேறு ஒருவரையுமன்று, அதிகாரத்தைச் செலுத்துமாறு அழைக்கலாம். அந்த வினாவை அப்பொழுது பரிசீலனை செய்யலாம்."

கொல்லாமைச் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அமைப்புக்கள் கொல்லாமை அரசியல் கட்சிகளாகும். அவை தோன்றுவதற்கான சாதகமான நிலைகள் பெரிதும் மாறுபடலாம். எந்தவிடத்திலும் அரசியல் கட்சிகள், தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புக்கள் ஆகியன, சமூக ரீதியாக ஏற்கப்பட்ட இடங்களிலும்கூட, எளிமையானதன்று. அனைவரின் நலனுக்கான தேவைகளுக்கு உதவும் படிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்குப் பங்களிப்பு செய்ய கொல்லாமை அரசியல் கட்சிகள் நீண்ட தியாகமான போராட்டங்களில் பங்கேற்க வேண்டியிருக்கும். திறம்பட்ட சிக்கல் தீர்வுக்காக புதிய அறிவு, புதிய திறன்கள், அமைப்புக்களின் புதிய வடிவங்கள் மற்றும் புதிய

கொள்கைகளை ஒன்று திரட்டும் சவாலை இன்று சந்திக்கும் சில சச்சரவுகள் விளக்கும். அவற்றில் கருச்சிதைவு மரண தண்டனை, படைக்குக் கட்டாய ஆள்சேர்ப்பு, போர், ஆயுதப் புரட்சி, பயங்கரவாதம், இனப்படுகொலை, கிரிமினல் செயல், சமூக வன்முறை, பண்பாட்டு வன்முறை, ஆயுதக்கலைப்பு மற்றும் பொருளதார படைமயத்தைக் கைவிடல் முதலியன அடங்கும். எவ்வாறாயினும் ஆக்கத்தன்மை, தீரம், உலக ஒருமைப்பாடு, சமூகக் கற்றல் படிமுறைகள் ஆகியவற்றால் முன்னேற்றம் காண முடியும்.

## அகிம்சை பொதுப்பணித்துறை

ஆட்சியின் எல்லா நிலைகளிலும் கேபினட் பொறுப்புக்களை உடைய அகிம்சை பொதுப் பணித்துறை தேவைப்படுகிறது. கொல்லாமை அரசியல் அறிவியல் பகுப்பாய்வின் தொடர்ச்சியாக குழுநிலைகளை மேற்பார்வை யிடுவது, கொல்வதைத் தடுப்பதற்கும் கொல்லுதலுக்குப் பிந்திய மடைமாற்ற மறுசீரமைப்புக்கும் உதவுவது, மற்றும் கொல்ாமை குழும நலவாழ்விற்கு வழிவகுத்திடும் பொதுக் கொள்கைகளுக்கு ஆலோசனை தருவது ஆகியன நிகழ வேண்டும். வன்முறை நிலைகளானது குழும வாழ்வின் தரத்தைப் பெரிதும் பாதிப்பதால் பொதுப்பணி முயற்சியானது குப்பைகளை அகற்றுதல் மற்றும் குடிநீர் விநியோகம் போன்ற பணிகளுக்குக் குறைவானதன்று.

அனைத்து பொது மற்றும் தனிப்பட்ட வளங்களிலிருந்து வன்முறை பற்றிய புள்ளி விவரங்களையும் வன்முறையை நீக்குவதற்கான செயல்களைப் பற்றிய பரிந்துரைகளையும் அகிம்சைத் துறை திரட்டும். அது அவ்வப்பொழுது நடப்பு நிலை பற்றிய அறிக்கையுடன் அரசு முடிவுகள் எடுப்பவருக்கும் சிவில் சமூகத்திற்கும் பரிந்துரைக்கும் வகையில் கொல்லாமைக் கொள்கைகளையும் வழங்கும்; அது தனித்து நிற்கும் தணிக்கைப் பிரிவு போலச் செயல்படும். முழுமையான மேற்பார்வை நோக்கு பின்வரும் துறைகளுக்குத் தேவையாகும். கொலை மற்றும் தற்கொலை, குடும்ப வன்முறை (குழந்தைகள், மகளிர், முதியோர், துணைவருக்கு எதிரான வன்முறை), பள்ளி வன்முறை, பணியிட வன்முறை, கிரிமினல் மற்றும் கோஷ்டி வன்முறை, காவல்துறை வன்முறை, சிறை வன்முறை, ஊடக வன்முறை,(media violence) விளையாட்டு வன்முறை, பொருளாதார வன்முறை, படை – துணைப்படை–கொரில்லா

வன்முறை மற்றும் கொல்பவர், அவரது உறவினர்கள், கொலையுண்டவரின் உறவினர்கள், சமூக விழிப்புணர்வு ஆகியவற்றின் மீது ஏற்படும் கொல்லுதலுக்குப் பிந்திய அதிர்ச்சி இறுக்கத்தின் விளைவு முதலியன அத்துறைகளாகும். அகிம்சை மாற்றத் திறன்களின் வலுக்களையும் பலவீனங்களையும் இவ்வறிக்கைகள் வலியுறுத்துவதுடன் இன்னும் திறம்பட்ட சிக்கல் தீர்வுச் செயல்களுக்கு பரிந்துரைகள் செய்திட வேண்டும். பங்குச் சந்தை நிலவரங்கள், விளையாட்டு நிலவரங்கள் மற்றும் வானிலை அறிக்கை போல முன்னேற்ற அறிக்கைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளையும் ஊசலாட்டங்களையும் குறிப்பிட வேண்டும்.

## கொல்லாமை பொது பாதுகாப்பு அமைப்புகள்

பாதுகாப்புக்கும், மானிட நேயப் பணிகளுக்கும் நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் செயல்படும் காவல்துறை மற்றும் இராணுவம் போல கொல்லாமை பொது பாதுகாப்பு படைகள் கொல்லாமைச் சமூக மாறுதல்களுக்குத் தேவையாகும். வருமுன் தடுத்தல், நெருக்கடிகளைக் கையாளும் திறம், சீர்செய்யும் செயல்கள் ஆகியவற்றில் இத்தகு படைகளுக்குப் பயிற்சி தேவை. தற்பொழுதுள்ள படை மற்றும் காவல்துறை அகாடமிகளை மாற்றியமைத்து அல்லது புதிய அகிம்சை அகடாமிகளை துவக்கி இதற்கான தலைமையைப் பெறலாம்; இங்கு அனைவருக்கும் ஒருங்கிணைந்த பயிற்சியும் குறிப்பிட்ட பணிகளுக்கான சிறப்புப் பயிற்சியும் பெறலாம். பல்கலைக்கழக சாந்திசேனைகள் தலைமைக்கான மற்றொரு வளமாகலாம்.

இன்று சில படை மற்றும் காவல் துறை நிறுவனங்களில் வன்முறை தடுப்பு, இலேசான ஆயுதங்கள் ஏந்த அமைதி காக்கும் பணியில் ஈடுபடல் மற்றும் மானிட நேய நிவாரணப் பணிகள், கொல்லாத ஆயுதங்களின் பயன் பற்றிய ஆய்வு மற்றும் சிக்கல் தீர்வுக்கான அகிம்சை வழிமுறைகளில் பயிற்சிக்கு வரவேற்பு முதலிய போக்குகள் இன்று காணப்படுவதைக் கொண்டு அகிம்சை பொது பாதுகாப்புப் படைகளை வளர்க்கும் சாத்தியத்தை எளிமையாக கைவிட்டுவிடக் கூடாது.

அடிமட்ட, தேசிய மற்றும் சர்வதேசிய அளவில் அனைத்து மக்களும் ஈடுபடுவதை அகிம்சை பொதுப் பாதுகாப்புக் கோரும். அகிம்சை படிப்பு வட்டங்களையும் குடியிருப்புக்கள், பள்ளிகள், வழிபாட்டு ஸ்தலங்கள், தொழில் புரியுமிடங்கள் ஆகிய்யவைகளில் சிவிக் சாந்தி சேனை மையங்களையும் அமைத்தல் மற்றும் கணினி வாயிலாக இணைக்கப்படும் கொல்லாமை பொதுபாதுகாப்புக் குழுமங்களை அமைத்தல் ஆகியவற்றால் இதற்கு உதவிடலாம். அடிமட்ட குடிமக்கள் அமைப்புக்கான பல்வேறு முன்மாதிரிகள் பல துறைகளில் உள்ளன.

அகிம்சைப் பாதுகாப்பு என்பது அகிம்சைப் பொது பாதுகாப்புக் கவுன்சில்கள் மற்றும் அகிம்சை புலனாய்வு அமைப்புக்கள் – அவை தேசிய மற்றும் தேசம் கடந்த நிலைகளிலும் தூத்ரகங்களில் அகிம்சைப் பண்பாட்டு மையங்களாகவும் அமையலாம் – ஆகியனவற்றையும் குறிக்கும். வன்முறைக்குரியதான தேச அரசுகள் மற்றும் அவற்றின் கொல்லும் கூட்டாளிகட்கு கொள்கை மாற்றுகளைத் தர அகிம்சைப் பொது பாதுகாப்பு கவுன்சில்கள் தேவை. கொல்லும் அடையாளங்களில் குறைவாக உள்ள நாடுகளைக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை அளவில் உலக அகிம்சைப் பாதுகாப்புக் கவுன்சிலை உருவாக்கிடலாம். அணு ஆயுதங்கள் இன்மை, படைகள் இன்மை, மரண தண்டனை இன்மை, கொலை விகிதாச்சாரம் குறைவாக இருத்தல், ஆயுத வணிகம் இன்மை முதலியன கொல்லாமைக்கான (கொல்லுதல் குறைவதற்கான) அடையாளங்கள் (அளவைகள்) ஆகும். ஊடகங்களின் துப்பறியும் (ஆராயும்) பிரிவுகள், குடிமக்களை எச்சரிக்கும் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு சேர்ந்து பணியாற்றும் அகிம்சை துப்பறியும் (ஆராயும்–உளவறியும்) பிரிவுகள் தேவை. இது கொல்லுதலின் அனைத்து வடிவங்களையும், கொல்லுதல் அச்சுறுத்தல்களையும் வெளியிடுவதுடன் அவற்றை மாற்றுவதற்கான பொது மற்றும் தனிப்பட்ட செயல்பாடுகளுக்கான திறன்களையும் இனங்காண வேண்டும். ராஜதந்திர அமைப்புக்களில் மரபான படை அமைப்புக்கள் அல்லது பொருளாதார உறவுக்கு பொறுப்பான அதிகாரிகள் இருப்பது போல அகிம்சையில் சிறப்பான தேர்ச்சி உடையவர்களும் இருக்க வேண்டும். இங்ஙனம் ராஜதந்திர அமைப்புக்களுடன் இணைக்கப்படும் அகிம்சை பண்பாட்டு அமைப்புகள், கண்டுபிடிப்புக்களுக்கான பாலங்களையும், பரஸ்பரக் கற்றல் மற்றும் உள்நாட்டிலும் உறவு நாடுகளிலும்

அகிம்சை நலவாழ்விற்கான அனைத்து வளங்களுக்குள் உறவுகளையும் அமைத்திட வேண்டும். உலகளாவிய கணினித் தகவல் தொடர்பு அமைப்புகள் உலகக் குடிமக்களின் பொதுப் பாதுகாப்புத் தகவல்களைப் பரிமாறுவதுடன் மரபான அரசுகள், கார்ப்பரேட் அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களைச் சார்ந்திராத வகையில் செயல்பட முடியும்.

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் பொதுப் பணிகளில் கொல்லாமைத் திறன்களை அமுல்படுத்தக் கோரும் அழைப்பானது அகிம்சைப் பயிற்சிக்கான ஏற்புடைய நிறுவனங்களை அவசியமாக்குகின்றன. இராணுவக் கல்லூரிகள், தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகங்கள், படைப் பயிற்சி அகாடமிகள், காவல்துறை அகாடமிகள், பொது நிர்வாகப் பள்ளிகள் மற்றும் சிவில் சமூகத்தில் வன்முறையை ஏற்கும் தொழில் ரீதியான பயிற்சி அமைப்புக்கள் ஆகியவற்றின் துணை உறுப்பாக, பின்னர் அவற்றுக்கு மாற்றாக அகிம்சைப் பயிற்சி நிறுவனங்கள் தேவை.

## கொல்லாமை சிவில் சமூக நிறுவனங்கள்

கொல்லாமைச் சமூகத்தின் தோற்றம், அதனைக் காத்தல் மற்றும் ஆக்கத்திற்கான சிவில் சமூக வாய்ப்புக்கள் எல்லையற்று உள்ளன. கொல்லாமைப் போக்குடைய பல்வேறு அமைப்புக்கள் ஏற்கனவே தோன்றிவிட்டன; வேறு சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புக்களைச் கருதிப் பார்க்கலாம்.

**கொல்லாமை ஆன்மீகக் கவுன்சில்கள்.** ஒவ்வொரு மட்டத்திலும் அல்லது சமூகத்தின் ஒவ்வொரு அலைவட்ட முகப்பிலும் ஆன்மீகக் கவுன்சில்கள் தேவைப்படுகின்றன. பிறப்பு முதல் மரணம் வரையான அனைத்து விசயங்களிலும் வாழ்வுக்கு எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி மதிப்புக் கொடுக்க இது முற்படும். இத்தகு சர்வ சமய கவுன்சில்களில் பல்வேறு சமய மற்றும் மானிட நேய விற்பன்னர்கள் இருப்பர். அவர்கள் தத்தம் மரபுகளிலிருந்து திரமாக ஆற்றல்மிக்க கொல்லாமை உண்மைகளை அந்தந்த சூழலுக்கு ஏற்ப எடுத்துரைப்பர். மரபாக வன்முறைக்குச் சமாதானம் சொல்ல முற்படும் சமய மற்றும் பிற உலகியல் கோட்பாடுகளுக்கு மாறாக மானிட நிலையில் அடிமட்டம், தேசியம் மற்றும் உலக அளவில் கொல்லும் தன்மையை நீக்கிட எல்லா விதமான பொது மற்றும்

தனியார் முயற்சிகட்கு இது பரவச ஆதரவு தரும். கொல்லாமைக்குப் பரவசம் தரும் ஒவ்வொரு வளத்தையும் எடுத்துக் கொண்டு கொல்ாமை ஆன்மீகக் கவுன்சில் மானிடத்தின் கொல்லாமை விழிப்புணர்வை வலுப் படுத்தி, ஒவ்வொரு தனிநபரிடமும் சமூக அமைப்புக்களிடமும் உள்ள கொல்லாமைத் திறன்களைத் தூண்டி பெரும் பங்களிப்பு செய்ய முடியும்.

**கொல்லாமை ஆலோசனைக் குழு.** உலக வளங்களிலிருந்து எடுத்துக் கொண்டு சமூகங்களுக்குள்ளும் அவைகட்கு இடையிலும் சிக்கல் தீர்வுக்கான மாற்றுக்களை இனங்காணவேண்டிய கொல்லாமை ஆலோசனை வழிகாட்டும் குழுக்கள் தேவைப்படுகின்றன. குறிப்பிட்ட செயல்பாட்டுக்குத் தேவையான ஆன்மீக, அறிவியல், திறன் அமைப்பு மற்றும் பிற வளங்களை ஒன்று சேர்த்து, இத்தகு குழுக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ–இரத்தம் சிந்துதலை முன்கூட்டியே தடுக்க, தொடரும் கொல்லுதலை நிறுத்த, நிலைத்த சமரசம் காணுதலையும் மறுநிர்மாணத்தையும் சாத்தியமாக்கும் நிலையை உருவாக்கிட உதவிடத் தயாராக இருக்கும். இத்தகு அகிம்சை ஆலோசனைக் குழுக்கள் கொல்லும் இயங்கும் அல்லது பொருளாதாரத்தடை இணக்குவிக்கும் வலிமை ஆகிய அச்சுறுத்தல்களின் ஆதரவுடன் இயங்கும் மரபான சிக்கல்தீர்வு பேச்சு வார்த்தைக்கு வழிவகுத்து உடன்பாடு காண முற்படுபவர் களிலிருந்து மாறுபட்டதாகும். அகிம்சை ஆலோசனைக் குழுக்கள் கொல்லாமைக்கு எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி அர்ப்பணிக்கப்பட்டதாகும்; அவை வன்முறை அரசுகள் மற்றும் கொல்லும் வெறுப்பாளர்களிடமிருந்து முற்றிலும் விலகி இருப்பதாகும்; பன்மிய அகிம்சைத் திறன்களை உடையதாகும். இத்தகு ஆலோசனைகள் வழங்கும் நிறுவனங்கள் தனிப்பட்ட நிதி ஆதாரங்களால் இயங்கும்; அவை தமது அனுபவங்களைக் கூட்டி தமது திறம்பட்ட செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும். குவேக்கர்களின் சிக்கல் தீர்வு மற்றும் மானிட நேயப் பணிகள், அது போன்ற சமய மற்றும் மானிட நேய நிவாரணப் பணி ஏஜன்சிகள் முதலியன இவ்வகையில் முன்னோடியான முன்மாதிரிகளாகும்.

**சிக்கல் தீர்வு தேசம் கடந்த கூட்டிணைவு.** "மேலிருந்து கீழ்" செயல்படும் கொல்லாமை அரசியல் நிறுவனங்களுக்கு (சான்று அரசியல் கட்சிகள், பொதுப்பணித் துறைகள் மற்றும்

பொது பாதுகாப்பு அமைப்புகள்) மிகை நிரப்பாக "கீழிலிருந்து மேல்" செயல்படும் ஆற்றல் வாய்ந்த கொல்லாமை மாற்றத்திற்கான படைகள்(forces) தேவை. பிரதிநிதித்துவப்படாத தேசங்கள் மற்றும் மக்களின் நிறுவனம் (UNPO) ஒரு சான்றாகும். இது த்னிச் சமன்பாடுகள் உள்ள, அகிம்சைச் செயலுக்கு அர்ப்பணித்துள்ள மக்கள் தொகுதிகளின் கூட்டிணைவாகும். இது ஐக்கிய நாடுகள் சபையையும், அரசாங்கங்களையும் மற்றும் பிற நிறுவனங் களையும் அவர்களில் கூட்டு மானிட உரிமைகள் பற்றிய தாக்கத்தை ஏற்படுத்தும் அனைத்துலக மன்னிப்பு மன்றம் (Amnesty International), பசுமை அமைதி (GreenPeace) மற்றும் சமரசம் காண்பதற்கான சர்வதேச அன்பர் குழுமம் (International Fellowship of Reconciliation) முதலியன பிற சான்றுகளாகும். உலகநிலையில் கொல்லுவதை நீக்குதல் என்பதைத் தவிர, கொல்லாமைக் கூட்டிணைவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எடுக்கும் பிற கருத்து நிலைகளை அக்கூட்டிணைவு ஆதரிக்க வேண்டியதில்லை. கொல்லாமை புனல் மண்டலங்களின் உள்ளும் அவற்றுக்கு இடையிலும் மற்றும் வன்முறை, பொருளாதாரம், மானிட உரிமை, சுற்றுச்சூழல், கூட்டுறவு ஆகியவற்றில் முக்கியமான சிக்கல் தீர்வுக்கான களங்களிலும் இந்தக் கூட்டிணைவு வளர்க்கப்பட வேண்டும். முடிவாக கொல்லாமை உலகுக்காக உலகக் குடிமக்களின் வலுவான கூட்டிணைவு உருவாகிட வேண்டும். அது அனைவரின் நலனுக்கான ஆண்-பெண்களின் பங்காளிக் கூட்டுறவாக இருக்கும்.

**கொல்லாமைப் பயிற்சி மையங்கள்.** வன்முறையின் படர்ந்து பரவும் அச்சுறுத்தல் மற்றும் ஆக்கப்பூர்வமான அகிம்சை மாற்றுக்கள் வளர்ச்சியடைதல் ஆகியன பற்றிய விழிப்புணர்வானது சிக்கல்தீர்வு மற்றும் அகிம்சை சமுதாய மாற்றம் ஆகியவற்றுக்கு அகிம்சைத் தலைமைக்கான திறன்களில் பயிற்சிக்குரிய தேவை அதிகரித்து வருகிறது. மார்ட்டின் லூதர் கிங்கிய, காந்திய, பௌத்த, கிறித்தவ மற்ற மானிட நேய மரபுகளிலிருந்து திறம்பட பயிற்சியாளர்களுக்கும் பெரிய தேவை இருக்கிறது. ஒவ்வொரு சமூகம் பிரச்சினைகள் மீதான குடிமக்கள் இயக்கம் முதல் பள்ளிகள், தொழில் நிகழுமிடங்கள், காவல்துறை மற்றும் சிறைச்சாலைகள் வரை தேவைகள் பலதரப்பட்டனவாக உள்ளன. பிற திறன்களைப் போல அகிம்சை குடிமக்கள் பயிற்சிக்கும் தொழில் ரீதியான

பயிற்சியாளர்களை உருவாக்கித் தகுதிச் சான்றிதழ் வழங்கிடவும் சிவில் சமூக நிறுவனங்கள் தேவைப்படுகின்றன.

**கொல்லாமைத் தலைமை ஆய்வு மற்றும் மறுவலுவாக்க மையங்கள்.** அகிம்சை நிறுவனங்கள் மற்றும் இயக்கங்களின் தலைவர்கள் மறுவலுவாக்கம் (revitalization) ஆழ்ந்த சிந்தனை, எழுதுதல் மற்றும் அனுபவங்களைப் பகிர்தல் ஆகியவற்றுக்குக் குறிப்பிட்ட காலங்களுக்குச் செல்வதற்கு நிறுவனங்கள் தேவைப் படுகின்றன. அகிம்சை மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு வாழ்வை அச்சுறுத்தும் மற்றும் இறுக்கம் நிறைந்த பணிகளில் ஈடுபடும் தலைவர்கள் சிறைச்சாலை மற்றும் மருத்துவமனைகளில் இருப்பதே அவர்களுக்கு ஒரே இடைவெளியாக உள்ளது. ஒரு தன்னார்வ அகிம்சைச் செயல்பாட்டு மாற்றுத் தேவைப்படுகிறது. சித்திரவதைகளுக்கு உள்ளாகும் தலைவர்களுக்கு சித்திர வதைக்கு ஆளானவர்கட்கான மறுநிர்மாண மையத்துடன் ஒத்துழைப்பு அவசியமாகும். உலகம் முழுவதும் பரவி அமைந்துள்ள அகிம்சை தலைமை மையங்கள் ஆன்மீக மற்றும் உடலியல் மறுவலுவாக்கம், சுய சரிதை, ஆழ்சிந்தனை, வாழ்க்கை வரலாற்று ஆய்வு, உரையாடல்கள், பல்வேறு நாடுகளில் கொல்லாமைக் கோட்பாடுகட்கு அர்ப்பணம் செய்து பணிபுரிபவரின் அனுபவங்கள் மற்றும் அடுத்து முன்னோக்கி எடுத்து வைக்க வேண்டிய அடிகளைப் பற்றிய தொலை உணர்வுச் சிந்தனை ஆகியவற்றுக்கு வாய்ப்புத்தர வேண்டும். இத்தகு மையங்கள் தனிப்பட்ட நிதி ஆதாரங்களைப் பெற்றுள்ள சுதந்திரமான மையங்களாக இருக்கலாம் அல்லது கொல்லாமை சமூக மாற்றத்தில் பற்றுறுதிகொண்ட அமைப்புக்களால் நடத்தப்படும் நிறுவனங்களாக இருக்கலாம்.

**கலைகளில் கொல்லாமை ஆக்க மையங்கள்.** கலைகளுக்குள்ளும் கலைகளுக்கு இடையிலும் கொல்லாமை ஆக்கநிலைமை ஊக்குவிக்க நிறுவனங்கள் தேவை. சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற ரொமாந்து ரொலண்டு(Romain Rolland) டால்ஸ்டாயை மேற்கோள் காட்டிக் கூறுகிறார்: "கலையே வன்முறையை அடக்க வேண்டும் கலையே அதனைச் செய்ய முடியும்" ஷெல்லியின் (Shelly) கவிதைகளில் அகிம்சையைப் பற்றி ஆய்ந்த ஆர்ட் யங்(Art Young) எழுதுகிறார்: "அகிம்சை என்பது அரசியல் சிந்தனையை

விட அதிகமானதாகும்; அது கவிதை மற்றும் வாழ்வின் உள்ளீடாகும்". இராணுவத்தில் ஊக்கத்தை ஊக்கிடுவதில் படைகீதம் முக்கியமான இடம் பெறுவதை நினைவூட்டுவதாக மார்ட்டின் லூதர் கிங் மரபு பின்வருமாறு கூறுகிறது: "பாடல் ஒன்று இல்லை என்றால் இயக்கம் என்று ஒன்று இல்லை".

மானிட கொல்லுதல் சவாலுக்கு மாற்றாக மடைமாற்றக் கொல்லாமை ஆக்க நிலையைக் கொண்டாடக் கலைஞர்களை – ஓவியர், கவிஞர், எழுத்தாளர் ஆகியோரை ... ஒன்று திரட்டுவது ஒரு முன் மாதிரியாகும். இலக்கியம், கவிதை, ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம், திரைப்படம், தொலைக்காட்சி, புகைப்படம், கட்டிடக்கலை, உடை வடிவமைப்பு, வெகுஜன ஊடகங்களின் வணிகக் கலைகள் ஆகிய கலைகளிடம் கொல்லாமை ஆக்கத்திறனை கொண்டு செல்ல வேண்டும். சான்றாக மரபான கொலை (Conventional murder) மர்மக் கதைகட்கு மாற்றாக கொலைகளும் தற்கொலைகளும் நடப்பதற்கு முன்பே அவற்றைத் திறம்படத் தடுக்க முற்படும் கொல்லாமைத் துப்பறியும் நிகழ்வுகளை ஆக்கலாம். கலைகளிடையே கொல்லாமை ஆக்கத்தன்மை பாய்ந்தோட மானிட உணர்வையும் கற்பனையையும் உயிர்த்துடிப்பையும் உயர்த்தி வரவிருக்கும் மடைமாற்றப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

பல்வேறு நோபல் பரிசுகள் போல கலைகளுக்கான கொல்லாமைப் பங்களிப்புகளுக்கு, உலக அங்கீகாரத்துக்காக, பரிசுகளை நிறுவிட வேண்டும்.

**கொல்லாமை ஆய்வு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு நிறுவனம்.** சர்வதேச பாதுப்புக் கொள்கைகள் முதல் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வாழ்வு தொடர்பான விசயங்கள் வரை அரசாங்கங்கட்கும் பொதுமக்களுக்கும் ஆலோசனை கூற தனிப்பட்ட அமைப்புகள் இருப்பது போல, சமூகத்தின் முடிவுகள் எடுக்கும் நிலைக்கு உதவிடும் வகையில் செய்திகளையும் ஆய்வுகளையும் தந்திட கொல்லாமை கொள்கை அமைப்புக்கள் தேவையாகும். வன்முறை, பொருளாதாரம், மானிட உரிமை, சுற்றுச்சூழல் மற்றும் கூட்டுறவு ஆகிய துறைகளில் கொல்லாமை அரசியல் அறிவியலின் சிக்கல் தீர்வு பற்றுறுதியை அவை மேம்படுத்த முடியும். கொல்லாமை ஆன்மீகக் குழுக்கள், கட்சிகள், பொது பாதுகாப்பு அமைப்புகள், ஆலோசனைக் குழுக்கள் மற்றும்

சிவில் சமூக நிறுவனங்களின் முயற்சிகளை ஆதரிப்பதுடன் தனிநபர்கட்குத் (குடிமக்கட்கு)த் தேவையான தகவல்களையும் அவற்றால் தர முடியும்.

**கொல்லாமை ஊடகமும் தகவல் தொடர்பும்.** தனிநபர்களுக்கும் பொதுக்கொள்கை முடிவுகள் எடுத்ததற்கும் தகவல் (செய்தி) மற்றும் விளக்கம் வாயிலாக உதவிட கொல்லாமைத் தகவல் தொடர்பு ஊடகம் தேவை. கொல்லும் மானிடத் திறன்களை கண்டு கொள்ளாது விடுகின்ற ஊடகம் என்பது இதன் பொருளன்று; ஆனால் கொல்வது தவிர்க்க இயலாதது. பெரும்பாலும் போற்றத்தததக்கது மற்றும் பொழுது போக்கானது என்ற மரபான ஊடகக் கொள்கைகட்கு அப்பால் அது செல்லும். கொல்லாமை ஊடகங்கள் மாற்றக் காலத்தில் கொல்லாமை அரசியல் பகுப்பாய்வின் திறனாய்வை ஆழ்ந்து சிந்தித்திடும். அதாவது வன்முறையின் உண்மைகளைத் தீவிரமாக ஆராயும்; அகிம்சை உண்மைகளை விழிப்புணர்விற்குக் கொணடுவரும்; மடைமாற்ற படிமுறை களையும், வெற்றி மற்றும் பின்னடைவுகளையும் அது வெளியிடும்; எல்லா கலைகள், அறிவியல்கள், மானிடத் துறைகள், தொழில்கள் மற்றும் அன்றாட வாழ்வின் பணிகள் ஆகியவற்றில் ஆக்கப்பூர்வ கொல்லாமை ஆர்வங்களுக்குக் குரல் கொடுத்தல்; தொடரும் கொல்லும் இடுகோளுக்குச் சவால்விடத் தவறும் மற்றும் வன்முறை எதிர்மறை அணுகல் முறையில் மனம் சிறைப்படுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிக்கும் ஊடகங்களின் மதிப்பீட்டுப் போக்கைவிட இது அதிகமானதன்று. பத்திரிகைகள், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் உலகளாவிய கணினி தகவல் தொடர் இணைப்புக்கள் ஆகியவற்றில் ஊடக மாற்றுக்கள் தேவை. கொல்லாமை அரசியல் அறிவியல் விளக்கம் மற்றும் பகுப்பாய்வுக்கான வளமாக இருக்க முடியும்.

**கொல்லாமை நினைவுச் சின்னங்கள்.** கொல்லாமை நாகரிகத்தின் பாரம்பரியத்தை மீண்டும் பெறவும் கொண்டாடவும் தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் (அமைப்புக்கள்), பெயர் தெரியாத சாதனையாளர்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றை ஒவ்வொரு சமூகத்திலும் போற்றுதலுக்குரியதாக ஆக்கப்பட வேண்டும். கொல்ல மறுத்தவர்களையும் கொல்லாமை உலக நாகரீகத்திற்கான நீண்ட பயணத்திற்கு பங்களித்தவர்களையும் போற்றிட

வேண்டும். இப்பூமியை மாசுபடுத்தி வெற்றி பெற்ற மற்றும் தோற்ற கொலையாளர்களின் சிலைகளையும் நினைவிடங்களையும் அகற்றிவிட வேண்டும் என்பதன்று; கொல்லுதலின் வரலாற்று உண்மைகளை அவை உணர்த்தி நிற்கும். மானிட வாழ்வுக்கு இன்று அதிகமாகக் கட்டாயத் தேவையாகி வரும் அகிம்சை மாற்றுக்களை எடுத்துரைத்துச் செயல்படுத்தியவர்கள் எப்பொழுதும் இருந்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த கொல்லாமை நினைவுச் சின்னங்கள் தேவைப்படுகின்றன. கொல்லாமைச் சமயப் பிரமுகர்கள், வன்முறை ஆதிக்க சக்திக்கு முன் உண்மையைப் பேசி உயிர்ப்பலியான தியாகிகள், போர் எதிர்ப்பாளர்கள், மனச்சான்றின்படி படைப்பணியை மறுத்தவர்கள், மரண தண்டனை எதிர்ப்பாளர்கள், அமைதிக் கவிஞர்கள், சிறைச் சாலை, சித்திரவதை, மரணம் ஆகியவற்றையும் எதிர்நோக்கி அநீதியை வன்முறையின்றி எதிர்த்த "பாடப்படாத" மகளிரும் ஆடவரும் ஆகியோர் போற்றப்பட வேண்டியவர்களில் அடங்குவர்.

**கொல்லாமை அமைதி மண்டலங்கள்.** கிராம மற்றும் நகர குழுமங்கள் வழியான அமைப்புக்கள் முதல் தேசிய மற்றும் சர்வதேசிய ஒப்பந்தங்கள் வரையான மாறுபட்ட கொல்லாமை அமைதி மண்டலங்கள் சிவில் சமூக நிறுவனங்களின் விளைவாகும், சமய அமைதிப் பூங்காக்கள், ஆயுதமேந்திய புரட்சி மற்றும் எதிர் புரட்சியாளர்களால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் அறிவிக்கும் அமைதி மண்டலங்கள், விரிவாக்கப் படும் போர் நிறுத்த எல்லைகள், ஆயுதமற்ற சமூகங்களுக்கான இயக்கங்கள், குற்றவியல் மற்றும் கோஷ்டி வன்முறையாளர் களிடமிருந்து குடியிருப்புப் பகுதிகளை மீட்பதற்கான குடிமக்களின் முயற்சிகள் மற்றும் அணு ஆயுத மற்ற மண்டலங்களை உருவாக்குவதற்கான சர்வதேச முயற்சிகள் ஆகியன முன்னோடி முயற்சிகளாகும். இத்தகு மாறுபட்ட அமைதி மண்டலங்களில் பரஸ்பர ஆதரவு மற்றும் பரவலுக்கு ஆதரவாகும் கொல்லாமை நிறுவனங்களை இனங்காண்பதும், அவைகட்கு இடையில் இணைப்புகளை ஏற்படுத்துவதும், அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும்.

**கொல்லாமைப் பொருளாதார தொழில் முயற்சிகள்.** போர் மற்றும் வன்முறைப் பண்பாடுகளுக்கான முயற்சிகள் சிலருக்கு இலாபகரமாக உள்ளன எனக் கூறப்படுகிறது;

ஆனால் பலருக்கு அது சொல்ல முடியாத விலையாக உள்ளது; நலவாழ்வு கொல்லாமை முயற்சிகள் அனைவருக்கும் இலாபகரமாக இருக்க வேண்டும். கொல்லாமைக் கண்ணோட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் அகிம்சை பொருட்கள், பண்பாட்டுப் பொருட்கள், பணிகள், பொழுதுபோக்குகள் மற்றும் பொழுது போக்கு மாற்றுக்கள் பற்றிய கண்ணோட்டம் என்ற வகையில் நோக்குகையில் கொல்லாமை தொழில் முனைவோருக்கு எல்லையற்ற வாய்ப்புக்கள் உள்ளன. மாற்றுக்கள் கண்டறிவதற்கான ஒரு முறை வன்முறைக்கும் பயன்படும் தொழில்களுக்கு எதிர்தொழில்களை இனங்காணத் தொடங்குவதாகும். போர் பொம்மைகட்கு மாற்று அமைதி பொம்மைகள், கொல்லும் வீடியோ விளையாட்டுக்களுக்கு மாற்று ஆர்வத்தைத் தூண்டும் அகிம்சைக் கூர்மதி, ஆயுதத் தொழில்களுக்கு மாற்று ஆயுதக்கலைப்புத் தொழில், வன்முறை பொழுதுபோக்கு ஊடகங்களுக்கு மாற்று கொல்லாமை ஆக்கக் கலைகள் மற்றும் வாழ்வை நாசமாக்கும் பணிக்குப் பதில் வாழ்வை வளமாக்கித் தரம் உயர்த்தும் பணி முதலியனவாகும். படைமயமாக்கல் நீக்கப்படும் காலங்களில் அதனைத் தொடர்ந்து நிகழும் அகிம்சைப் பொருளாதார மாற்று பற்றிய அனுபவங்கள் உண்டு. ஆனால் எளிய இத்தகு பொருளாதார மாற்று நிகழ்வுகளுக்கு அப்பால் உலக நிலையில் கொல்லாமைச் சமூகங்கங்களாக மக்கள் மாற்றமடைவதற்கு உண்மையில் தேவையானவைகள் மற்றும் அதற்குப் பயன்படும் "பணிகளை" உருவாக்கிட வேண்டும்.

**உலக அகிம்சைக்கான மையம்.** கொல்லாமை உலகம் பற்றிய காட்சியானது முழுமையான (பூரணத்துவ) அணுகல் முறையிலிருந்து மாற்றத்தை சாத்தியமாக்கும் நிறுவனங்களைக் கோருகிறது. இத்தகு நிறுவனங்கள் உலக ஆன்மீக மற்றும் பண்பாட்டு மரபுகளின் கொல்லாமைக் குழுமங்களில் வலுவாக வேர்கொண்டிருக்க வேண்டும். மானிட இனம் கொல்லுவது மற்றும் அதன் விளைவுகளிலிருந்து அகிம்சை விடுதலை வழிகளைக் கண்டிட, உதவிட உலக அறிவியல், திறன்கள், கலைகள் மற்றும் நிறுவன வளங்களைத் தூண்டும் கிரியா ஊக்கிகளாக(catalysis) அது அமைய வேண்டும். நவீனக் கணினி சொல்லகராதியில் கூறுவதனால் இத்தகு மையங்கள் கொல்லாமை "மென்பொருட்களுக்கான" ஆக்கநிலை கிரியா ஊக்கிகளாக இருக்க வேண்டும்; அது அரசுப் பணிகள் மற்றும்

சிவில் சமூக நிறுவனங்களின் பணிகள் என்னும் "வன்பொருள்" வாயிலாக மானிடத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். இவை திறம்பட அமைய வன்முறையான அரசாங்கத்திடமிருந்து அதிகபட்சம் சுதந்திரமாக இருக்க வேண்டும்; தனியார் நலன்களை மட்டுமே நோக்குபவர்களின் கட்டுப்பாட்டிலிருந்தும் அது விலகி இருக்க வேண்டும். அவை தொலை நோக்குக் காட்சி உடைய அன்பர்கள், வெகுஜன உறுப்பினர் சந்தா மற்றும் பிற வழிகளால் நிதி ஆதாரங்களைப் பெற வேண்டும்.

உலக அகிம்சை மையமானது தனது இலக்காக பின்வருவனவற்றில் அதிகபட்ச மானிட ஆக்கத்திறனை கண்டுபிடித்து, ஊக்கிவிட வேண்டும்; ஆன்மீக மற்றும் தத்துவ மரபுகளில் அகிம்சை; உயிர்–நரம்பியல் அறிவியலும் அகிம்சையும்; பால் உறவுகளும் (gender relations) அகிம்சையும்; பொருளாதாரமும் அகிம்சையும்; தகவல் தொடர்பும் அகிம்சையும்; அறிவியல், தொழில் நுட்பமும் அகிம்சையும்; அகிம்சையும் சுற்றுச்சூழலும்; வாழ்க்கைத் தொழில்களும் அகிம்சையும்; கல்வியும் அகிம்சையும்; அகிம்சையும் கலைகளும்; அகிம்சையும் விளையாட்டுக்களும்; அகிம்சை மாற்றத்தில் காவல் துறை மற்றும் படைகளின் பங்கு; அகிம்சைத் தலைமை மற்றும் அகிம்சை மானிட எதிர்காலங்கள்.

அகிம்சை உலகப் பண்பாட்டு வளங்களை ஒவ்வொரு நாடு மற்றும் வட்டாரத்தில் அடிமட்டத்தை மையமாகக் கொண்டு தொகுப்பது ஒரு முக்கியமான வரலாற்றுப் பணியாகும். கொல்லாமை அகிம்சை மரபுகள், அவற்றின் இன்றைய வெளிப்பாடுகள் மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் ஆகியவற்றைத் தேடுவது அவசியமாகிறது. உலகளவில் ஒருங்கு திரட்டப்படும் இத்தகு கண்டுபிடிப்புக்கள் கொல்லாமை மானிடத் திறன்கள் பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதலை மானிடத்திற்குத் தரும்; அதிலிருந்து எதிர்கால முன்னேற்றங்களை அளக்க முடியும்.

அகிம்சை உலக மையமானது உலகநிலை பற்றிய அறை (global situation room) ஒன்றைப் பெற்றிருக்கும்; இன்றைய தொடரும் கொல்லும் உண்மைகள், கொல்லுதல் அச்சுறுத்தல்கள் மற்றும் அவற்றின் விளைவான இழப்புக்கள்

முதலியவற்றை மானிடத்திடம் உள்ள மடைமாற்ற கொல்லாமை வளங்களுடன் பொருத்திப் பார்க்க வேண்டும். கொல்லுதலைத் தொடர்ந்து எதிர்கொண்டு இத்தகு மையங்கள் அறிவில் ஏற்பட்டுவரும் ஆக்கப்பூர்வ வளர்ச்சிகளை எடுத்துக் கொண்டு, மானிட வாழ்வு மற்றும் நலத்தைத் தேடும் அனைவரும் ஆன்மீக, அறிவியல், திறன், கலை மற்றும் அமைப்பு வளங்களை ஒருங்கு கூட்ட உதவிட வேண்டும்.

## தேவைப்படும் அகிம்சை அமைப்புகள்

கொல்லாமைச் சமுதாயங்களை அடைந்திடும் (உணர்ந்திடும்) பணிகளில் பற்றுறுதி கொண்ட அரசியல் அறிவியலானது கல்வி மற்றும் புதுமைச் செயல்பாட்டிற்கு, ஏற்புடைய நிறுவனங்கள் வழிச் செயல்படுவதைத் தன்னிலிருந்து தொடங்கிட வேண்டும். வாழ்க்கையைப் போற்றும் ஆன்மீகச் சார்புக்கு நிறுவனங்கள்தேவை. இங்ஙனமே கண்டுபிடிப்பு, ஒருமைப்பாடு மற்றும் அறிவைப் பகிர்தல், பொதுக் கொள்கைகள் பற்றிய முடிவுகள் எடுத்தல், கொல்லாமை, பொதுப் பாதுகாப்பு, பொருளாதார நல வாழ்வு மற்றும் கலைகளிலும் வாழ்க்கைத் தொழில்களிலும் வாழ்வைப் போற்றுதல் ஆகியவற்றுக்கும் நிறுவனங்கள் தேவை.

மாற்றத்திற்கான அழைப்பானது ஒருங்கிணைக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான உலக அகிம்சை மையங்களை அவசிய மாக்குகிறது. அனைவரின் கொல்லாமைத் தேவைகளைப் புரிந்து கொள்ளும் மற்றும் சாத்தியமாக்கும் பொறுப்புடைமைப் பற்றுறுதி இவற்றுக்கு அவசியமாகும். கொல்லாமை அமைப்புக்களின் வலுவானது பரஸ்பரம் ஆதரிக்கும் தனிநபர்களிடமிருந்து வருகிறது. ஒவ்வொரு அரசியல் அறிவியலாரும், ஒவ்வொரு நபரும் கொல்லாமை உலகைச் சாத்தியமாக்கும் உலக அகிம்சை மையமாகலாம்.

அத்தியாயம் – 6

# கொல்லாமை உலக அரசியல் அறிவியல்

*நாம் ஒரு புதிய யுகத்தில் இருக்கிறோம். பழைய விதிமுறைகளும் தீர்வுகளும் இன்று போதுமானதன்று. நாம் புதிய சிந்தனைகளையும் புதிய கருத்துக்களையும் புதிய கருத்துருவாக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும்...பழமையின் இறுகலான குறுகிய பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டும்.*

*ஜெனரல் டக்லஸ் மக் ஆர்தர்*

*வன்முறைச் சங்கிலியையும் வரலாற்றின் அழிவையும் வெட்டிவிடுவதற்கான போதுமான அறிவும் மற்றும் உத்தியும் கூட யாருக்காவது இருக்க வேண்டும்.*

*மார்ட்டின் லூதர் கிங்*

*எல்லா வரலாற்று அனுபவங்களும் இவ்வுண்மையை உறுதி செய்கின்றன-சாத்தியமற்றதை அடைய மானிடர் மீண்டும் மீண்டும் முயன்றிராவிட்டால், அவர்களால் சாத்தியமானதை அடைந்திருக்க முடியாது.*

*மாக்ஸ் வீபர்*

*நேற்று சாத்தியமாகாதது இன்று சாத்தியமாகும் நிகழ்வுகளாவதை நாம் தினமும் காண்கிறோம்.*

*மகாத்மா காந்தி*

### *கொல்லுதலிலிருந்து விடுதலையை நோக்கி*

மானிடக் கொல்லுதலை ஒரு பிரச்சினையாகக் கருதி அதனைத் தீர்க்க முயல வேண்டிய காலம் வந்து விட்டது; அதனை என்றென்றும் சுமக்கப்பட வேண்டிய நிலையாகக் கொண்டு அடிமைத்தனத்தை ஏற்க முடியாது. ஒருவரை ஒருவர், கூட்டங் கூட்டமாக மற்றும் பலரை யந்திரங்களால் வேண்டுமென்றே கொல்லும் நிலையானது மானிட சுய அழிவிற்கான நோயாகும் நிலைக்குப் போய்விட்டது. விடுவிக்கும், பாதுகாக்கும் மற்றும் வளப்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்ட கொல்லுதலானது அதற்கு மாறாக பாதுகாப்பற்ற நிலை, வறுமை, மானிட மற்றும் பூமியின்

வாழ்வுக்கான சவாலாக ஆகிவிட்டது. "பாதுகாப்பு என்னும் நோயால்" மானிடம் துன்புறுவதாக கிரக் கொன்ஸ்டாக் (Craig Constock) கூறுகிறார்; "பாதுகாப்பதற்கு எனக் கூறப்பட்டது சுய அழிவுக்கான வளமாக ஆகிவிட்டது." பாதுகாப்புக்கான துப்பாக்கிகள் வீடுகளில் குடும்ப உறுப்பினர்களைக் கொல்கிறது; மெய்க்காவலர்கள் தங்கள் நாடுகளின் தலைவர்களையே கொல்கின்றனர்; இராணுவம் அத்து மீறுகிறது. தமது மக்களையே வறுமைப்படுத்துகிறது; கண்டு பிடித்தவர்களையும் உடைமை கொண்டிருப்பவர்களையும் அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதங்கள் பரவுகின்றன. நமக்குள்ளும் நமது சமூகங்களிலும் வன்முறையிலிருந்து விடுதலைக்கான கொல்லாமைப் பிரகடனம் ஒன்று தேவைப்படுகிறது.

நவீன காலத்தில் மானிட ஆசைகளை வன்முறையால் நிறைவேற்ற முற்பட்டது கணக்கிடமுடியாத இரத்தம் சிந்தல், பொருள் இழப்பு, தலைமுறைகட்கு அப்பால் வரும் பேரதிர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற பிரஞ்சுப் புரட்சியின் வாசகங்களில் மானிடத்தின் நம்பிக்கைகள் இருநூற்றாண்டுகளாக, பகட்டாக வரையப்பட்டன. சுதந்திரத்துக்காக கொல்வது என்பது அமெரிக்காப் புரட்சியின் பங்களிப்பாகும். சமத்துவத்துக்காக கொல்வது என்பது ரஷியா மற்றும் சீனாவின் புரட்சிகளின் பங்களிப்புகளாகும். இரு நூற்றாண்டுகளாக போர், புரட்சி மற்றும் எதிர்புரட்சி ஆகியவற்றின் மரபானது அமைதிக்காகக் கொல்வதாகும். சுதந்திரம் சமத்துவம் மற்றும் அமைதியின் சகோதரியான சகோதரத்துவம் ஆகியவற்றை கொல்லுதல் மரபை முற்றிலுமாக அடியோடு ஒழிக்காமல் அடையமுடியாத என்ற பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நல்லதுக்கும் கெட்டதுக்கும் தியாகம் எனப் படுகொலை செய்யப்பட்டு குவிந்துள்ள மலைகள் நாம் இப்பாடத்தைப் படித்துக் கொள்ளும்படி கதறுகின்றன.

"கொல்லுவது தவிர்க்க முடியாதது மற்றும் அது மானிட நலனுக்கு நல்லது என்னும் வளர்ந்து வரும் உலக அரசியலில் அறிவியல் கல்வித் துறையின் எடுகோளை இது சவால் விடுவதாகவும் மாற்றுவதாகவும் அமைந்துள்ளது. மிகவும் சக்தி வாய்ந்த பண்டைய ஞானம் மற்றும் நம் கால அரசியல் நம்பிக்கையை இது கேள்வி கேட்பதாகவும் தள்ளி

விடுவதாகவும் உள்ளது. மருத்துவ வரலாற்றில் "போற்றப்படவேண்டிய சீழ்" (laudable pus) என்ற கோட்பாடு தூக்கி வீசப்பட்டது போன்ற ஒப்புமையை இங்கு காணலாம். ஏறக்குறைய 17 நூற்றாண்டுகள் கிரேக்க மருத்துவ ஆசான் கலென் (Galen-B.C. 130-200) கற்பித்த "புண்கள் மீது ஏற்படும் சீழ் என்பது காயம் ஆறி நலம் விளைவதற்கான இயற்கையின் வழி" என்ற கோட்பாடு ஆட்சி செலுத்தியது. 1867 இல் லிஸ்டர் (Lister) என்னும் அறிஞர் இதனை எதிர்த்தார். "அறுவை சிகிட்சையில் நச்சூட்டும் (அழுகச் செய்யும்) நுண்மத் தடைக் கோட்பாடு" (On the Antiseptic Principle in the practice of Surgery) ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். இது எதிர்ப்புகள் எதிர்ப்புமின்றி நச்சூட்டும் நுண்மத்தடையைப் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது. கொல்வது அரசியலுக்கு இயல்பானது மற்றும் செயல் ரீதியில் நலம் விளைவிக்கக் கூடியது என்ற நம்பிக்கையானது அரசியல் அறிவியலின் "போற்றத்தக்க சீழ்" கோட்பாடாகும்.

குடும்ப வாழ்விலிருந்து உலகப்போர் வரை அரசியல் அதிகாரத்தை அதனது பல்வேறுபட்ட வெளிப்பாடுகளில் ஆராய்வதற்குத் தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள அரசியல் அறிவியல் அறிஞர்கள் கொல்லும் எடுகோளைத் தீவிரமாக எதிர்க்க வில்லை என்றால் பின்னர் அரசியல் தலைவர்கள் மற்றும் குடிமக்களிடம் நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? எனினும் வரலாறு முழுவதுமாக, நமது காலத்தில் அதிகரித்துச் செல்வதுபோல, அரசியல் அறிவியலின் உதவியின்றியே தலைவர்களும் குடிமக்களும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் அமைதியைக் கொல்லாமை முறைகளில் அடைவதற்கு ஐயத்துக்கிடமற்று முயன்று வந்துள்ளனர். கட்டாயப் படைச் சேர்க்கையை எதிர்த்து டௌகொபொர்ஸ்லில் (Doukhobors) போர் எதிர்ப்பு ரஷிய விவசாயிகள் 7000 பேர்கள் ஆயுதங்களை எரித்தது ஒரு சான்றாகும். கொல்லுதலை ஏற்கும் அரசியல் அறிவியலுக்கும் கொல்லுதலை நிராகரிக்கும் முன்னோடியான அரசியலுக்கும் திட்டவட்டமான இடைவெளி உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் லியோ டால்ஸ்டாய், மகாத்மா காந்தி, அப்துல் கபார் கான், மார்ட்டின் லூதர் கிங் மற்றும் பெட்ரா கெல்லி ஆகியோரின் பங்களிப்புக்கள் தீரத்துடன் தலாய் லாமா, ஆங் சன் சூ கியி மற்றும் டெஸ்மாண்டு, டுடு போன்றவர்களால் முன்கொண்டு செல்லப்படுகிறது; இத்துடன் பாடப்படாத ஆண், பெண் அகிம்சைச் சாதனையாளர்கள்

பரவசமும் ஆதரவும் தந்து எதிர்காலத்தில் ஆற்றல்மிக்க கொல்லாமை அரசியலுக்கான முன்னோடிகளாகின்றனர்.

தனிநபர் மற்றும் வெகுஜன இயக்கங்களின் கொல்லாமைத் தியாக வெற்றிகளுக்குப்பின்–வன்முறையை ஏற்கும் நடப்பு நிலையில் ஒட்டிக் கொண்டிருந்தவர்கள்– அரசியல் அறிவியலார் தாமதமாக –சர்வாதிகார ஆட்சியில் நன்மை பெறுபவர்கள் அந்த ஆட்சி பாதிக்கப்பட்டவர்களின் ஆர்ப்பாட்டங்களால் தூக்கி வீசி எறியப்படும் வரை அதில் எச்சரிக்கையாக ஒட்டிக் கொண்டிருப்பது போல– அவர்களைப் பின்பற்றத் தொடங்குவார்களா? கொல்லாமை ஜனநாயக வெற்றிகளைக் கொண்டாட அரசியல் அறிவியலார் பின்னர் சேருவார்களா? அல்லது மருத்துவ அறிவியல் போல கொல்லும் நோயை இனங்கண்டு, அதனைச் சிகிட்சை செய்யும் முறைகளை ஆராய்ந்து கண்டு, கொல்லாமை உலக வாழ்வுக்கு முயல்பவர்களுடன் அரசியல் அறிவியலார் பகிர்ந்து கொள்வார்களா?

## கொல்லாமைத் திறன்கள் பற்றிய ஆய்வு முடிவு

உலக கொல்லாமைச் சமுதாயம் சாத்தியம்; மேலும் அரசியல் அறிவியல் கல்வித்துறையில் மாற்றங்களும் அதனது சமூகப் பங்களிப்பும் அதனை நிறைவேற்ற உதவ முடியும் என்பதே இங்கு தரப்படும் ஆய்வு முடிவாகும். கொல்லாமைச் சமூகங்களை அடைவது குறைந்த பட்சம் ஏழு அடிப்படைகளைச் சார்ந்துள்ளது. பெரும்பாலான மானிடர் கொல்வது இல்லை. மானிடத்தின் ஆன்மீக மரபில் ஆற்றல்மிக்க கொல்லாமை வளங்கள் புதைந்துள்ளன. மானிடரின் கொல்லாமைத் தகுதிகளை (திறன்களை) அறிவியல் சுட்டுகிறது; முன் உரைக்கிறது. மரண தண்டனையை நீக்குதல், மனச்சான்றின்படி படைப்பணியை எதிர்ப்பதை அங்கீகரித்தல் ஆகிய கொல்லாமைக்கு மாறும் பொதுக் கொள்கைகளை வன்முறை உருவாக்கிய நாடுகளும் ஏற்றுள்ளன. கொல்லாமைக் கோட்பாடுகளின் அடிப்படையிலான பல்வேறு சமூக நிறுவனங்கள் இன்று உள்ளன; இவைகள் இணைந்து கொல்லாமைச் சமூகத்திற்கான செயல்நிலைச் சம மாற்றினை இப்பொழுதுத் தருகின்றன. அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கான வெகுஜன அகிம்சைப் போராட்டங்கள் கொல்லும் புரட்சிக்கான அதிகரிக்கும் ஆற்றல்மிக்க மாற்றினைச் சுட்டிக் காட்டுகின்றன. உலகம்

முழுவதும் பல்வேறு வரலாற்று மரபுகளில் கொல்லாமையின் வேர்களுக்கான பரவசங்களையும் அனுபவங்களையும் காண முடியும். கொல்லாமை மாறுதலுக்கான ஒளியானது முடிவாகக் கொல்லாமைத் தனிநபர்களின் – ஆடவர் மற்றும் மகளிர், அறிந்து போற்றப்பட்டோர் மற்றும் அறியாதே மறைந்தோர் ஆகியோரின் – தீரமான சாதனைகளின் சாட்சியத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

## அரசியல் அறிவியலுக்கான விளைவுகள்

மானிடர் உயிரியல் ரீதியாகவும், கட்டுப்படுத்தப் படுவதாலும் கொல்லவும் கொல்லாமலும் இருக்கக்கூடிய திறனுடையவர்கள் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான மானிடர் கொல்லாதவர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. கொல்லாமைச் சமூகங்களுக்கான முந்தியமாதிரி (Prototype) உறுப்புக்களாக் அமையக்கூடிய, கொல்லாமை கோட்பாடுகளின் அடிப்படையிலான, பல்வேறு சமூக நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. மேலும் இன்றைய மற்றும் எதிர்பார்க்கப்படும் அறிவியல் முன்னேற்றங்கள் கொல்லும் காரணிகளை நீக்கவும் கொல்லாமைக் காரணிகளை வலுப்படுத்தவும் மற்றும் கொல்லாமைச் சமூகத்தை உருவாக்கவும் உதவும் என நம்பப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், கொல்லுதலைத் த்விர்க்க இயலாது என்ற அடிப்படையில் அரசியல் அறிவியல் கல்வித் துறையையும் அதன் சமூகப் பங்கினையும் அமைப்பது பிரச்சினைக்குரியதாகும். எனவே கொல்லும் எடுகோளையும் அதன் விளைவுகளையும் கேள்வி கேட்பது அவசியமாகும். அரசியல் அறிவியல் பிற துறைகள் மற்றும் வாழ்க்கைத் தொழில்களுடன் சேர்ந்து கடந்த கால அகிம்சை அனுபவங்களைத் திரும்பப் பெற வேண்டும்; நிகழ்கால அகிம்சைச் சாத்தியங்களை அங்கீகரிக்க வேண்டும்; அகிம்சையில் பொதிந்துள்ள வளங்களை எதிர்காலத்தில் வெளிப்படுத்திட வேண்டும்; இந்த அறிவை கொல்லாமை சமூக மாற்ற ஆய்வு, கற்பித்தல் மற்றும் பொதுப் பணிகள் வழி வளர்த்து மேனிலைப்படுத்த வேண்டும்.

கொல்லாமை மாற்றத்திற்கு எந்த அடிப்படை அம்சங்களை சேர்க்க வேண்டும் என்பது தெளிவானதாகும். எல்லாச் சமயங்கள் மற்றும் தத்துவங்களிலிருந்து பெறப்படும் கொல்லாமை *பற்றுறுதி* (Spirit-$S_1$); எல்லா கலைகள்,

அறிவியல்கள், தொழில்கள் ஆகியன கொல்லும் மற்றும் கொல்லாமைக்கான காரணங்கள் மீது தொடர்பு கொண்டுள்ளமை பற்றிய அறிவு (Science-$S_2$); மடை மாற்றச் செயலில் ஆன்ம மற்றும் அறிவியலை வெளியிடும் தனிநபர் மற்றும் *குழுத்திறன்கள்*(Skills-$S_3$); இசையும் கலைகளும் தரும் பரவசம் கொல்லாமை அரசியல் அறிவியல் மற்றும் நடைமுறைச் செயலை தூரமானதாகவோ அல்லது இறந்துபட்டதாகவோ ஆக்காது, ஆனால் ஆற்றல் வாய்ந்த கொண்டாட்டமாக ஆக்குவது (Song-$S_4$); இந்நான்கு மூலங்களை (elements) இணைத்து, வளர்த்து, பெரிதாக்கி திறம்பட்ட செயலாக்க, ஜனநாயகத் *தலைமை* (Leadership-L) குடிமைத்திறம் (Citizen Competence-C), நிறைவேற்றும் *அமைப்புகள்* (Institutions-I), ஆதரவாகும் *வளங்கள்* (Resources-R) ஆகியன தேவை

இந்த மூலங்களின் சேர்க்கையை பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

$S^4$ x LCIR = கொல்லாமை உலக மாற்றம்

பற்றுறுதி(Spirit), *அறிவியல்* (Science), *திறன்கள்* (Skils), பாடல் (Song) ஆகியன ஆக்கப்பூர்வமாகவும் தேவைக்கு ஏற்ற பதில் என்ற படிமுறையாலும் சேர்ந்திட ஜனநாயகத் தலைமை, குடிமை வலுவாக்கம், நிறுவன வெளிப்பாடுகளால் உரமேற்றப்படல், வளங்கள் உறுதிபட கிடைத்தல் முதலியன கொல்லாமை உலகை அடைய பங்களிப்பு செய்யும்.

## கோட்பாடும் ஆய்வும்

கொலை முதல் இனப்படுகொலை மற்றும் நகரங்களும் வாழ்வே அழிந்துபடும் சாத்தியமுள்ள அணு ஆயுதப் பேரழிவு வரை நிகழக்கூடிய ஆற்றல்கள் குவிதலைத் தவிர்ப்பதற்குத் தேவையான அறிவைத் தரும் அரசியல் பகுப்பாய்வுக்கான அரசியல் அறிவியல் ஆய்வு தேவை என மானிடக் கொல்லும் பயங்கரம் அழைக்கும். வன்முறையை ஏற்கும் விளிம்பு நிலையிலிருந்து கொல்லுதலானது பகுப்பாய்வு மற்றும் பிரச்சினை தீர்க்கும் மையத்துக்கு விழிப்புணர்வானது அரசியல் அறிவியலில் செல்ல வேண்டும். இதன் பொருள் கொல்லுதலின் காரணங்களைப் புரிந்து கொள்ள தீவிரமான ஒருங்கிணைந்த முயற்சி தேவை; அங்ஙனமே கொல்லாமையின் காரணங்களையும் புரிந்து கொள்ளத் தீவிர முயற்சி தேவை; கொல்லுதலிலிருந்து கொல்லாமைக்கு மாறுதலின்

காரணங்களையும் இதற்கான மாறுதலையையும் மற்றும் முற்றிலும் கொல்லாமை இல்லாத சமூகங்களின் பண்புகளையும் புரிந்து கொள்ளத் தீவிர முயற்சி தேவை. கொல்லாமை மாற்றுக்களை இனங்காணவும் மற்றும் மடைமாற்றச் செயல்களைப் புரிந்திடவும் இத்தகு அறிவு தேவை.

**கல்வியும் பயிற்சியும்**

இத்தகு அறிவுத் தேடலையும் மடைமாற்றச் செயல்களையும் முன் கொண்டு செல்ல அரசியல் அறிவியலாருக்கு புதிய கல்வியும் பயிற்சியும் தேவை. பாடத்திட்ட அமைப்பு, அரசியல் அறிவியல் துறைகளை அமைப்பது, பிற துறைகளுடன் உறவு கொள்வது, சமூகத்தில் அரசியல் அறிவியலின் ஆய்வு கல்வி-செயல் பங்களிப்பு ஆகிய அனைத்திற்கும் இவை தேவை.

கொல்லாமை சிக்கல் தீர்வுக்கான ஆக்கத் தன்மைகளையும் திறன்களையும் போற்றி வளர்ப்பது அரசியல் அறிவியல் கல்வி மற்றும் பயிற்சியின் ஒட்டு மொத்த நோக்கமாகிறது. இதற்கான சில வழிகாட்டு நெறிகள் பின்வருமாறு: ஆக்கப்பூர்வமான வாழ்வுகள் மற்றும் நிறுவனங்களை பரிசீலிப்பது, தனிநபர் ஆர்வங்கள் மற்றும் திறன்களை ஆராய முற்படுவதற்கு உதவுவது; கூடிச்செல்லும் அறிவையும் திறன் வளர்ச்சியையும் தேடுவது; சுயமாகத் தேர்ந்தெடுத்த பூசல் தீர்வுத் திட்டங்களில் ஈடுபடுவது; இணையான நிர்மாணக் குழுமச் செயல்களைத் தருவது; கொல்லாமை அரசியல் அறிவியலின் வாழ்க்கைப் பணிகளை ஆதரிப்பது.

கொல்லுதலின் திகிலூட்டும் பயங்கர வரலாற்றை முனைப்பாக அறிமுகப்படுத்திவிட்டு, கொல்லாமை ஆக்க நிலையின் பாரம்பரியத்தை பரவசமாகத் தர வேண்டும்; கொல்லாமை அரசியல் பகுப்பாய்வைத் தர்க்கரீதியாக பகுத்தறிவுப் பூர்வமாக அடுத்துத் தர வேண்டும்; திறம்பட்ட பிரச்சினைத் தீர்வுக்கான கோட்பாடுகளையும் படிமுறைகளையும் கண்டுபிடிக்கும் சவாலான பணியில் இறங்கிட வேண்டும். கொல்லுதல், கொல்லாமை, மடைமாற்றம், கொல்லாமை சமூகத்தின் சாத்தியமான பண்பு நலன்கள் ஆகியவற்றைப் பங்கேற்பாளர் பரிசீலிக்க வேண்டும். இக்கண்ணோட்டத்தி லிருந்து அரசியல் நிறுவனங்கள் மற்றும் படிமுறைகளின் வரலாற்று வளர்ச்சியை அடிமட்ட நிலையிலிருந்து உலக அளவு

வரை பரிசீலிக்க வேண்டும். கொலை, பேரழிவு, இனப்படுகொலை, மற்றும் ஆயுதப் பெருக்கம், பொருளாதார வன்முறை, மானிட உரிமை மீறல், வன்கொடுமைகள், சுற்றுச் சூழலை நாசம் செய்தல் மற்றும் அழிவுக்கு வழிவகுக்கும் பிரித்தாளும் நிலை முதலிய சவால்கள் சிக்கல் தீர்வுக்கு விடப்படுகின்றன. சிக்கல் தீர்வு வழிமுறைகளின் திறன்களை வளர்த்திட சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன; ஆய்வு, கற்பித்தல், செயல்பாடு மற்றும் திறனாய்வான தகவல் தொடர்பு ஆகியன முக்கியம். இந்த அடிப்படைகளில் பிரச்சினைகளைத் தீர்க்கவும் திறன்களை வளர்க்கவும் தனிநபர் மற்றும் குழு செயல்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. தொடர்ந்து கொண்டு செல்லப்படுகின்றன. ஓர் இணையான பல்கலைக்கழக அமைதிக் குழுக்கள் (சாந்தி சேனை) குழுமப் பணிக்கான மாற்றுத் தலைமைப் பயிற்சியை வழங்குகிறது.

தேசம் கடந்த தனியார் மற்றும் பொதுத்துறைகளில் ஆராய்ச்சியாளர், கல்வியாளர், தலைவர்கள், தகவல் தொடர்பாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய இப்பட்டதாரிகள் தொடங்குகின்றனர். ஆக்கமான பிரச்சினை தீர்வுக்கான சமூகத் தேவைகளுக்கு அவர்கள் பதில் தருகிறார்கள். வன்முறைத் தடுப்பு மற்றும் அகிம்சை சமூக மாற்றம் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் அதிகரிக்கும் திறன்களை இன்று பூர்த்தி செய்ய பட்டமேற்படிப்புப் பயிற்சியானது அரசியல், அரசாங்கம் மற்றும் சிவில் சமூகப் பணிகளுக்கான மேல்நிலைப் பயிற்சியாகும். பட்டப்படிப்பில் உள்ளது போல முதுகலைப் படிப்பிலும் சிக்கல் தீர்வுச் செயற்பாடுகள் உண்டு. வன்முறை, பொருளாதாரம், மானிட உரிமை, சுற்றுச்சூழல், கூட்டுறவு மற்றும் இன்ன பிறவற்றில் ஆய்வு, கல்வி, மற்றும் செயல் ஆகியவற்றை வளர்ப்பதற்காக செயல் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பட்டமேற்படிப்பு மற்றும் டாக்டர் பட்ட ஆய்வாளர்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து வழிகாட்டிகளாக, உருவாக்குபவர்களாக, உடன் கற்பவர்களாக பட்டப்படிப்பு ஆய்வு மற்றும் செயல்திட்டங்களுக்கு உதவிட வேண்டும்.

கொல்லாமை அரசியல் அறிவியலானது டாக்டர் பட்டப் பயிற்சியில் மிக உயரிய நிலையை முன்வைக்க வேண்டும். தாமே ஆக்கப்படைப்பாளராகி பிறரிடம் ஆக்கத் திறன்களை வளர்ப்பவர்களாக ஆய்வாளர்கள் ஆக வேண்டும். எல்லோரும் எல்லாத் திறன்களிலும் மிகச்சிறப்பான உயர் தேர்ச்சி பெற முடியாதிருக்கலாம்; ஆனால் எல்லோரும் தேவையான

பணிகளைப் புரிந்து பகிர்ந்து கொண்டு, மிக அதிகபட்ச அளவிலான திறனுடன் (competence) ஆக்கப் பங்களிப்புக்கள் செய்ய முற்பட வேண்டும்; கல்வி உலகத்திற்கு உள்ளே அல்லது வெளியே பிறரது சிக்கல் தீர்வு பங்களிப்புக்களை எங்ஙனம் ஆதரிப்பது என்பதைக் கற்க வேண்டும்.

கொல்லாமை அரசியல் அறிவியலின் அடிப்படைகள் பற்றிய ஆழ்ந்த படிப்பு, அடிமட்ட மற்றும் உலக சிக்கல் தீர்வுத் தேவைகள் பற்றிப் புரிந்து கொள்ளல், கொல்லாமை அறிஞர் தலைமைக்கான திறன்களைத் தயாரித்தல், தரம் மற்றும் அளவு ஆய்வுமுறைகளைப் புரிந்து கொள்ளல் (இதில் மொழிகளும் உண்டு), கையில் உள்ள பணிகளுக்கான ஆய்வு வழிமுறைகளில் உயர்திறன் பெறுதல், மேல்நிலைத் திட்டங்களில் ஈடுபடல் ஆகியன தேவையாகும். சிக்கல் தீர்வுக்காக கல்வி, பயிற்சி, அமைப்பு, படிமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்த இன்றுள்ள அறிவை நன்கு பயன்படுத்துதலும் புதிய அறிவைக் காணுவதும் அவசியமாகும்.

கொல்லாமை அறிஞர் தலைமையானது தேவையான சமூகப் பாத்திரங்களின் மிக உயரிய செயல்பாட்டுக்குத் தயாரிப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும். கொல்லுவது மற்றும் கொல்லாமையை நோக்கிய நம்பிக்கைகள் மற்றும் மனப்போக்குகள் ஆகியவற்றின் தோற்றம் பற்றிய சுயசரிதை ரீதியிலான ஆழ்சிந்தனைக்கு வாய்ப்புக்கள் அடிப்படையாகும். மாணவரின் ஆக்கத் தன்மையைத் தூண்டும் தயாரிப்பு தேவையாகும். கொல்லாமைத் துறையின் தலைமை பிற துறையினரிடமும் ஆக்கத்தை உருவாக்கிட வழிவகுத்திட வேண்டும்; பல்துறை ஒத்துழைப்பு வளர வேண்டும்; நாட்டிலும் சிவில் சமூகத்திலும் மாற்றத்திற்கு ஆலோசனை வழங்கிட வேண்டும்; திறனாய்வு ஆக்க ஊடகத் தகவல் தொடர்புக்கு வழிவகுத்திட வேண்டும்; நேரடி அகிம்சைப் பணித் தலைமைக்கு உதவிட வேண்டும்.

கொல்லாமைச் சமூகத்தின் அடிப்படையான பண்புகளை கொல்லாமை அரசியல் அறிவியல் துறை தனது சொந்த சமூக உறவுகளில் பரிசோதனையாக வெளியிட்டு முன்னேற்றம் காண வேண்டும். இதன் பொருள் எக்கோஷ்டியையும் சேராது வாழ்வுக்கான பல்சமய ஆன்மீக மற்றும் மானிட நேய மரியாதையை உறுதிப்படுத்துவது என்பதாகும். அனைவரின் நலனுக்கான பொறுப்புணர்வை

வளர்ப்பது, முடிவுகளை எடுப்பதில் தேவை அடிப்படையிலான பங்கேற்பு படிமுறை, வேறுபாடுகளையும் அனைவரின் கௌரவத்தையும் போற்றுவது, ஆண்–பெண் மற்றும் அனைத்துத் தரப்பினரும் தலைமைப் பொறுப்பிலும் சேர்ந்து செயல்படுவது, புரிந்து கொள்ள முடியாததாகத் தோன்றும் சிக்கல்களில் அகிம்சை சிக்கல் தீர்வு ஆலோசனைகளைக் கேட்கத் தயாராக இருப்பது, பிற துறைகள் மற்றும் தொழில்களின் பங்களிப்புக்கு திறந்த மனதாக இருப்பது, அறிவியல் பிரச்சினைகளைத் தீர்க்க புத்தாக்கக் குழுக்களை உருவாக்க ஊக்கப்படுத்துவது, மற்றும் கொல்லாமை உலகச் சமூகமானது தனிநபர்கள் மற்றும் குழுமத்தில் வேர் கொண்டுள்ளது என்பதை இனங்காண்பது ஆகியன முக்கியமாகும்.

ஆய்வு, கல்வி, தலைமை, தகவல் தொடர்பு மற்றும் பிற சமூகத் துறைகளில் பணியாற்றச் செல்லும் பட்டதாரிகளுடன் நீண்டகால பரஸ்பர ஆற்றுப்படுத்தும் உறவுகளை (counselling relationship) ஏற்படுத்திட வேண்டும். ஆய்வுத் தேவைகளை இனங்காண்பதற்கும், தேவையான திறன்களில் தயாராவதை மேம்படுத்தவும் மற்றும் கொல்லாமை மடைமாற்றத்திற்கான தடைகளை வெற்றி கொள்ள ஆக்கத்தை எழுப்பிடவும் அவர்களது அனுபவம் பெரிதும் உதவும். கொல்லாமை அரசியல் அறிவியலின் சவாலை ஏற்பவர்கள், பிற விசயங்களில் எவ்வளவு வேறுபட்டிருந்தாலும், தொடர்ச்சியான பரஸ்பர உதவிகளில் ஒன்றுபடலாம்.

### சிக்கல்-தீர்வு

சிக்கல் தீர்வுப் பணியில் அடிப்படை மற்றும் பயன்பாட்டு அறிவியல் ஒன்று சேர்வதைக் கொல்லாமை அரசியல் அறிவியல் கோருகிறது. சிக்கலான சமூக மாற்றச் சூழல்களுக்குத் தக்கவாறு வரையறுக்கப்பட, அதற்கு ஏற்பச் சிக்கல்கள் மாறுபடும். ஐந்து பிரச்சினைகள் உலகளாவிய அளவில் மிகவும் முக்கியமானவைகளாகும். வன்முறையும் ஆயுதப் பெருக்கமும், பொருளாதாரப் பேரழிவு (holocaust), மானிட உரிமை மீறல், வெறியாட்டங்கள், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் சிக்கல் தீர்வு ஒத்துழைப்பின் தோல்வி என்பன அவை. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொல்வதற்குத் தயாராக இருப்பதுடன் இவை தொடர்புடையதாகும். ''நீதியின்றி அமைதி இல்லை'' என்ற இன்றைய கோஷத்தின்

பொருள் அநீதியான நிலைகளை ஆட்சேபிக்க அல்லது மாற்ற வன்முறையும் போரும் தொடரும் அல்லது அவசியம் என்ற பொருளிலேயே ஆகும். ஆனால் அகிம்சைக் கண்ணோட்டத்தில் "கொல்லாமையின்றி நீதி இல்லை" என்றாகும். ஏனெனில் கொல்வதும், கொல்வதற்கான அச்சுறுத்தலும் அநீதியை உருவாக்குவதிலும் அதனைக் காத்தலிலும் பெரும் பங்கு வகிக்கிறது. மகளிரை ஏற்றத்தாழ்வாக நடத்துவது, சான்றாக, பெட்ராகெல்லி கூறுகிறார்: பால் அடிப்படையிலான அநீதியான அதிகாரப் பகிர்வு, வளங்கள் மற்றும் கடமைகள் பண்டைய மரபுகளால் சட்டப்பூர்வமாக்கப்பட்டு, சட்டங்களில் எழுதப்பட்டு, தேவைப்படும் பொழுது ஆடவர் வன்முறையால் திணிக்கப்படுகின்றன.

பிரச்சினை (சிக்கல்) தீர்வில் ஈடுபடுவதானது கொல்லாமை அரசியல் அறிவியல் எங்கும் நிறைந்துள்ளது அல்லது அதுவே எல்லாச் சிக்கல்களுக்குமான தீர்வுக்குரிய வளம் என்பதன்று. ஆனால் கொல்லாமை அரசியல் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைச் செயல்களிலிருந்து பெறப்படும் அறிவினை, அனைவரின் தேவைகட்குப் பொறுப்பான சமூக முடிவெடுக்கும் படிமுறைகளை மேம்படுத்த பயன்படுத்த முடியும். வன்முறை அடிப்படையிலான ஜனநாயக மரபுகட்கு அப்பால் மேம்பட்ட வளர்ச்சிக்கு அகிம்சைப் பங்களிப்பை அது உறுதி செய்கிறது.

**நிறுவனங்கள்**

கொல்லாமை அரசியல் அறிவியலின் நோக்கங்களான அறிவுத் தேடல், கல்வி–பயிற்சி மற்றும் சிக்கல் தீர்வு ஆகியவற்றை நிறைவேற்ற உரிய நிறுவனங்கள் தேவை. புதிய மற்றும் மாற்றியமைக்கப்பட்ட அரசியல் அறிவியல் துறைகள், புதிய முழுமையான பல்கலைக்கழகங்கள் (திறன்களை உள்ளடக்கும் அல்லது புதிய நிறுவனங்களிலிருந்து சேர்க்கும் உலகத் தகவல் தொடர்பு அமைப்புக்கள்) முதல் இராணுவமற்ற சாந்திசேனைப் பயிற்சி அணிகள், கொல்லாமை பொதுக் கொள்கை நிறுவனங்கள், கொல்லாமை பாதுகாப்புப் படைகள், கொல்லாமை அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் கொல்லாமை நிறுவனப் புத்தாக்கங்கள் வரை இவை மாறுபட்டவைகளாக இருக்கலாம். இத்தகு நிறுவனங்களை உருவாக்குவதும் அவற்றில் பணிபுரிவதும், அங்ஙனமே இன்றுள்ள நிறுவனங்களிலுள்ள அடிமட்டம் முதல்

உலக வாழ்வு வரையான கொல்லும் நிலையை மாற்றியமைத்தலும், கொல்லாமை அரசியல் அறிவியலைப் படிக்கும், பயன்படுத்தும் அனைவருக்கும் ஆக்கமான தொழில்களைத் தருவதும் முக்கியமாகும்.

## இடையூறுகளும் பரவசங்களும்

கொல்லாமை உலகச் சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் பணியை எடுத்துக் கொள்ளும் சவாலை இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் அறிவியல் ஏற்க வேண்டியுள்ளது. இது விரும்பத்தக்கது மட்டுமன்று; ஆனால் கட்டாயமானதுமாகும். இதனை மதிப்பீடுகளுக்கு "வளைதல்" என்றோ, "உண்மையான" அறிவியல் நடுநிலை என்றோ கூறி அரசியல் அறிவியலார் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. அப்படியாயின், அரசியல் அறிவியலார் தாம் வாழும் உலகம் சுதந்திரமானதா அல்லது சுதந்திரமற்றதா, நீதியானதா அல்லது அநீதியானதா, செல்வமிக்கதா அல்லது வறுமையானதா, அமைதியாக உள்ளதா அல்லது போரில் ஈடுபட்டுள்ளதா, வெற்றி பெறுகிறதா அல்லது தோல்வியடைகிறதா என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றே பொருளாகும். அரசியல் அறிவியலாருக்கு மதிப்பீடுகளில் எத்தகு ஆர்வமும் இல்லை எனத் தம் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் மகிழ்ச்சி அடைவர்; எனவே அவர்களின் ஆய்வு, கற்பித்தல் மற்றும் பொதுத் தொண்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் ஒன்றுக்குப் பதில் மற்றதை மதிப்பீடுகளின் அடிப்படையில் தேர்ந்து எடுத்தல் என்ற நிலை இல்லை. அத்தகு அரசியல் அறிவியலாருக்கு ஹிட்லரின் பேரழிவுக்கும், மகாத்மா காந்தியின் சத்தியாகிரகத்துக்கும் இடையில் தேர்ந்தெடுப்பதற்கானது ஒன்றுமில்லை.

சுதந்திரம், சமத்துவம் அல்லது பாதுகாப்பு முதலான மதிப்பீடுகள் கொல்லாமையை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற அடிப்படையில் கொல்லாமை அரசியல் அறிவியலை உருவாக்குவதை அரசியல் அறிவியலார் தவிர்க்க முடியாது. கொல்லாமை குறைந்த பட்சமாக இவற்றுடன் சம மதிப்பு உடையது; ஏனெனில் அரசியல் அறிவியலிலும் அரசியல் வாழ்விலும் கொல்லாமை அறத்துக்கான வலுவான பற்றுறுதி இல்லாது நிலையில் இம்மதிப்பீடுகள் அனைத்தும் அச்சுறுத்தப்படும் ஒரு நிலையை மானிடம் இன்று அடைந்துள்ளது. பொருள் முதல் வாதமும் (materialism)

அறவியலும் (morality) ஒரே முடிவுக்கு வந்துள்ளன. சுதந்திரமாக, சமமாக மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கு நாம் கொல்ல வேண்டும் என பழைய மரபானது நமக்குக் கற்பித்திருக்குமாயின் நாம் கொல்வதை நிறுத்தவில்லையாகில் சுதந்திரமும் சமத்துவமும் ஆபத்துக்கு உள்ளாவதுடன் நமது வாழ்வே– தனிநபர், சமூக மற்றும் சுற்றுச் சூழல் வாழ்வே– பேராபத்தில் உள்ளது என்பதை நிகழ்காலமானது நமக்குக் கற்பிக்கிறது. இன்று அறிவியலும் அரசியல் செயல்படும் சமூகம் மற்றும் இயற்கையின் வாழ்வை ஆதரிக்கும் சக்திகளுடன் கூட்டு சேர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. இது நல்லொழுக்கமும் நல்ல நடைமுறைச் செயலுமாகும்; அத்துடன் இது இக்கால கட்டத்தின் நல்ல அரசியல் அறிவியலின் கட்டாயத் தேவையுமாகும்.

கொல்லுதல் தொடர்வதால் கிடைக்கும் ஒருமைச் சமன்பாடுகள் (identities) மற்றும் எதிர்நோக்கப்படும் இலாபங்கள் ஆகியவற்றைப் பெறும் சிந்தனை மற்றும் செயல் சக்திகளிடமிருந்து மாற்ற படிமுறைக்கு எதிர்ப்பு வரும் என எதிர்பார்க்கலாம். அவர்களில் அரசுகளின் வன்முறைப் படைகள் (மற்றும் இவை போன்றவை) கொல்லும் வெறுப்பாளர்கள் (பகைவர்கள்), மற்றும் கொல்லும் பண்பாட்டால் அரசியல், பொருளாதார மற்றும் உளவியல் இலாபம் அடைபவர்கள் ஆகியோர் அடங்குவர். இதில் போர் மற்றும் புரட்சிகளின் முதுவர்கள் (அனுபவம் மிக்க ஓய்வு பெற்றவர்கள்) சிலர் – அனைவரும் அல்லர்– அவர்களது வழித்தோன்றல்கள் மற்றும் பிறர் அடங்குவர்; சரியான (தர்மமான/ நீதியான) கொல்லுதல் என்று சமூக அங்கீகாரம் பெற்றுக் கொண்டாடப்படும் கொல்லுதலிலிருந்து பெறப்படும் ஒருமைச் சமன்பாடு மற்றும் பெருமையை இவர்கள் பெறுகிறார்கள். தியாகிகளின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்துவதன் மூலம், நாம் இறந்த "எதிரிகளிடம்" பரிவு கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகிறோம்; அவர்களை அரசியல் தோல்விகளின் "பலிகடாக்களாக" பார்க்கத் தவறுகிறோம்; இத்தகு கொல்லுதல்கள் தவறு, அவை மீண்டும் ஒரு பொழுதும் நிகழக் கூடாது எனப் பற்றுறுதி கொள்வதற்கு மாறாக இத்தகு "தியாகங்களுக்காக" என்றும் தயாரிப்புடன் இருக்கும்படி "வீரமொழிகள்" பேசுகிறோம்.

கொல்லாமை அரசியல் அறிவியலுக்கு மாறுவதற்கான பரவசம் தரும் வளங்களில் உலகப் புகழ்பெற்ற சில

**படைத்தலைவர்களின்; அனுபவமிக்க எச்சரிப்புக்கள் உண்டு. 1955இல் தமது பேருரையில் ஜெனரல் மக் ஆர்தர் "போரை அழிக்க வேண்டியது கட்டாயத் தேவை; அது அறிவியல் யதார்த்தம்" (scientific realism) எனக் கூறுவதை நோக்கலாம்.**

> *போரை நீக்குவதுதான் மானிடத்தின் கனவாக நூற்றாண்டுகளாக இருந்தபொழுதிலும், அந்த முடிவை நோக்கிய எந்த ஆலோசனையும் சாத்தியமற்றது மற்றும் கற்பனையானது என விரைந்து நிராகரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஓயாது குற்றம் காணும் வெறுப்பாளரும், ஒவ்வொரு தோல்வி மனப்பான்மையுள்ள எதிலும் தீயதைக் காண்பவரும், ஒவ்வொரு வெறி விளையாட்டாளரும், ஒவ்வொரு முரட்டுத் தனமானவரும் அதனது சாத்தியத்தைத் தள்ளி விடுகின்றனர். வெகுஜனப் பேரழிவை அறிவியல் சாத்தியமான ஒன்றாக ஆக்குவதற்கு முற்பட்ட நிலை இது. அப்பொழுது வாதம் ஆன்மீகம் மற்றும் அறவியல் அடிப்படைகளில் இருந்தது; அது ஏற்கப்பட வில்லை. ஆனால் இன்றைய அணு ஆயுதங்கள் மற்றும் பேரழிவிற்கான சாத்தியங்கள் ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சி இப்பிரச்சினையை அறவியல் மற்றும் ஆன்மீக அடிப்படைகளிலிருந்து மாற்றி அறிவியல் யதார்த்தமாக்கியுள்ளது. அது இப்பொழுது அறவியில் பிரச்சினையன்று. தத்துவ ஞானிகளும் சமயத் தலைவர்களும் மட்டும் அறிந்து ஆராய்ந்து தீர்ப்பதற்கு.... உயிர் பணயம் வைக்கப்பட்டுள்ள வெகுஜனங்கள் முடிவு எடுக்க வேண்டியுள்ளது... தலைவர்கள் பின்தங்கி இருப்பவர்கள் ... நாகரிகத்தின் அடுத்த பெரிய முன்னேற்றம் போர் நீக்கப்படும் வரை நிகழாது என்ற உண்மையை அப்பட்டமாக அரசியல்வாதிகள் கூறுவதில்லை.... இந்த அனைவரின் விருப்பத்தை - அது அனைவரின் தேவையாகவும் விரைந்து மாறிவருகிறது-ஆட்சியிலுள்ள மகத்தான நபர் ஒருவர் போதுமான் கற்பனையுடன், நடைமுறைப்படுத்த என்று வருவார்? நாம் ஒரு புதிய யுகத்தில் இருக்கிறோம். பழைய வழிமுறைகளும் தீர்வுகளும் இன்று போதுமானதன்று. நமக்கு புதிய சிந்தனைகளும், கருத்துக்களும், கோட்பாடுகளும் வேண்டும்... பழமை (கடந்த காலம்) என்னும் கூட்டிலிருந்து நாம் வெளியே வர வேண்டும்.*

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியான இரண்டாம் உலகப்போரின் புகழ்பெற்ற தளபதி ஜெனரல் டி. ஐசன்ஹோவர் பிரஞ்சுப் புரட்சியின் புகழ்பெற்ற வாசகங்களை அகிம்சைமயமாக்கியுள்ளார். சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் மீதான வன்முறை படைமயமாக்கத்தின் கெடுதியான விளைவுகளைச் சுட்டுகிறார்.

**சுதந்திரம் :** படை ஆயுதத் தொழில் அமைப்புக்கள் அரசாங்கக் கவுன்சில்களில், தேடியோ தேடாமலோ, அதிகப்படியான செல்வாக்குப் பெறுவது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். நமது சுதந்திரத்தையோ ஜனநாயகப் படிமுறையையோ இவற்றின் கூட்டு வலு பார்திக்கும்படி விட்டுவிடக்கூடாது. எதையும் நாம் எச்சரிக்கையின்றி சுலபமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

**பொருளாதார சமத்துவம் :** செய்யப்படும் ஒவ்வொரு துப்பாக்கியும், மிதக்கவிடப்படும் ஒவ்வொரு போர்க்கப்பலும், செலுத்தப்படும் ஒவ்வொரு ராக்கெட்டும், முடிவாக நோக்கும் பொழுது, பசியால் வாடுபவர்களின் உணவிலிருந்தும், குளிரில் துன்புறுபவர்களின் உடைகளிலிருந்தும் திருடப்பட்டனவாகும்.

**சகோதரத்துவம் :** உண்மையில் இன்று மக்கள் அதிகமாக அமைதியை விரும்புகிறார்கள் என நான் நினைக்கிறேன். அவர்களது வழியிலிருந்து அரசாங்கங்கள் ஒரு நாள் விலகி நிற்பது நல்லது; அவர்கள் அமைதியை அடையட்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அணு ஆயுதப் போர் படைகளின் ஓய்வு பெற்ற தளபதி ஜெனரல் ஜார்ஜ் லீ 1996 டிசம்பர் 4 ஆம் நாள் வாஷிங்டனில் பேசுகையில் எல்லா அணு ஆயுதங்களையும் முழுமையாக–குறைப்பது மட்டுமல்ல– விட்டுவிடும்படி கூறினார். முதலில் கண்டுபிடித்து முதலில் பயன்படுத்திய நாடு என்ற முறையில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதனை ஒழிப்பதற்கு வழிகாட்டிட வேண்டும். இல்லையென்றால், பிற நாடுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுப்பதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அறவியல் ஆணையுரிமை இல்லை என்று அவர் எச்சரிக்கிறார்."அணு ஆயுதங்கள் இயல்பிலேயே ஆபத்தானவை; மிகுந்த செலவுபிடிக்கக்கூடியவை, இராணுவ ரீதியாகத் திறம்பட்டவையன்று; மேலும் அறரீதியாக அதற்குச் சமாதானம் சொல்ல முடியாது". "வாள்களை உழுகருவிகளாக

மாற்றும் (Swords into Plowshares)" அமெரிக்க ஆன்மீக இயக்கத்தினர் போன்றவர்கள் நீண்டகாலமாகக் கொண்டிருந்த முடிவுக்கு இந்த ஜெனரல் வருகிறார்; இவ்வியக்கத்தினர் அணுஆயுதங்களுக்கு எதிராகப் பெடரல் சிறைகளுக்குச் சென்றதையும் குறிப்பிட வேண்டும். அணு ஆயுத நீக்கத்துக்கான அதே வாதங்களை பிற கொலைக் கருவிகட்கு எதிராகவும் வைக்க முடியும்.

இத்தகு ஜெனரல்களும், கொல்லுதலில் நிபுணர்களும் தமது தொழில் மற்றும் அதனது சமூகத்துடனான உறவு பற்றிய தொடரும் எடுகோள்கள் குறித்து இத்தகு ஆழ்ந்த, மகத்தான கேள்விகளைக் கேட்க முடியுமானால் அரசியல் அறிஞர்கள் தமது துறையின் வன்முறையை ஏற்கும் அடிப்படைகளையும் சமூகப் பாத்திரங்களையும் கேள்விகள் கேட்டுக் கொல்லாமை சமூகங்களை உலகளவில் அடைய முயல்வார்களா?

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசியல் அறிவியல் துறைகளை உருவாக்கியவர்கள், கொல்லாமை உந்துதல்கள் அரசியல் அறிவியல் துறைக்கு அளித்த பங்களிப்பை அறியாதவர்களேயாவர். 1863 இல் அமெரிக்க யூனியன் இளைய படையாளர் ஒருவர் போர்க்களத்தில் எடுத்த உறுதிமொழியில் இதன் தோற்றம் உள்ளது. மேற்கு டென்னசியில் கான்பெடரேட் படையினருடன் பகல் முழுவதும் நடந்து இரத்தம் சிந்தும் போரின் பின் ஜான் டபிள்யூ. பர்கெஸ் (John W. Burgess) ஒரு உறுதிமொழியை எடுத்தார்.

> *பெருமழை கொட்டிக் கொண்டிருந்தது; இருள் மயமாக வானத்தில் மின்னல்கள் பளிச்சிட்டன; போர்க்கள ஓசைபோல இடிகளின் ஒலி வானம் வரை சென்றது; இத்துடன் காயம்பட்ட, மரணத்தருவாயில் இருந்த விலங்குகளின் ஓலம்; காயம்பட்ட மற்றும் மரணம் தழுவிக் கொண்டிருந்த மானிடரின் அவலக் குரல்; என்னைப் போன்ற உணர்வு மிக்க, இளையவரான ஒருவருக்கு அது வார்த்தையால் விவரிக்க முடியாத கொடுமையான, சகிக்க முடியாத இரவாகும். அது இன்று வரை நினைவில் அங்ஙனமே உள்ளது. எனினும் அந்த அச்சுறுத்தும் அனுபவத்துக்கிடையில், என்னுடைய வாழ்க்கைப் பணிக்கான முதல் கருத்து உதயமாயிற்று. நான் கண்களைக் கசக்கி, இருளைத் துளைத்து நோக்கி, முன்னோக்கி வரும்.*

*எதிரிப்படையின் ஒலியைக் கேட்டு எனக்குள் நான் முணுமுணுத்துக் கொண்டேன். "கடவுளால் அவரது சாயலில் பகுத்தறிவுடன் படைக்கப்பட்ட மானிடரால் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளை பகுத்திறவின் துணை கொண்டு, அழிவுதரும் வன்முறையின்றி, தீர்க்க முடியாதா? இந்த அழிவுப் போரிலிருந்து உயிருடன் இறை அருளால் நான் வெளியேறுவேன் என்றால், நான் எனது வாழ்வை பகுத்தறிவின் படி வாழ்வதற்கும் இரத்தம் சிந்தல் மற்றும் அழிவின்றி விட்டுக் கொடுத்து சமரசம் காணல் மூலம் தீர்ப்பேன் என நான் ஒரு உறுதி எடுத்தேன்."*

தனது உறுதி மொழிக்கு ஏற்ப இப்போர் முடிந்ததும் பர்கெஸ் பட்டப்படிப்புக்குச் சென்றார். பின் 1880இல் கொலம்பியா கல்லூரியில் அரசியல் அறிவியல் துறையை நிறுவினார்.

பேராசிரியர் பர்கெஸின் அனுபவங்கள் கொல்லாமை அரசியல் அறிவியலுக்குப் பங்களிப்போர் எதிர்பார்க்க வேண்டிய தடைகளை உணர்த்துகின்றன. இத்தடைகள் சிறிதானது முதல் மிகவும் கடுமையானது வரை எனப் பல வகைப்பட்டதாக இருக்கும்; அவற்றை வெற்றி கொள்ள தீரமும் உலக ஒத்துழைப்பும் தேவை. ஜெர்மானியர்களைத் தமது சகோதரராகக் கருதிய பர்கெஸ் அமெரிக்கா முதலாம் உலகப் போரில் இறங்குவதை ஆட்சேபித்தார். அவரைப் பொறுத்த வரையில் அமெரிக்கா போரில் இறங்கிய ஆகஸ்டு 6, 1917 "ஒரு கடுமையான அடி விழுந்தது... எனது வாழ்வின் பணி சிதைக்கப்பட்டு என்னைச் சுற்றி மீட்டுருவாக்கும் செய்ய முடியாத வகையில் நொறுங்கிச் சிதறின". ஜெர்மன் எதிர்ப்பு தேசபக்திப் போருக்கிடையில், அவர் வருந்திக் கூறினார்: "அமைதியாளராகவும் பகுத்தறிவாளராகவும் இன்று இருப்பது, உலக மக்களால் துரோகி என்றும் கோழை என்றும் கருதப்படுகிறது." காலங்காலமாக அமைதி ஆக்கம் செய்பவர்கள் போல பேராசிரியர் பர்கெஸ் துன்பப்பட்டார்; வெறுப்பாளர்களின் (பகைவர்களின்) குறை நிறைகளைக் காண்பதால், அவர்களது வாழ்வுங்கூட பணயம் வைக்கப்படுகிறது. வாழ்வைப் போற்றும் மகத்தான ஆன்மீக மற்றும் மானிடநேய மரபுகளால் பரவசப்படுத்தப்பட்ட மகாத்மா காந்தியின் அழைப்பான "உண்மையாக, மென்மையாக, அச்சமின்றி" இருக்கும் படியான அழைப்பு கொல்லாமை

அரசியலுக்கு மட்டுமல்ல, கொல்லாமை அரசியல் அறிவியலுக்கும் வழிகாட்டுவதாகும். இதற்குத் தீரம் தேவை. உலகளாவிய இரத்தம் சிந்துதலுக்கிடையில், அரசியல் அறிவியலார் வாழ்வை மதிக்கும் கோட்பாடுகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். 1992இல் மெக்சிக்கோவில் சியபஸ் (Chiapas) பகுதியில் ஆயுதமேந்திய ஸபஸ்டிஸ்டா (Zapastista) புரட்சியாளர்கள் மற்றும் ஆளும் அடக்கு முறையாளரின் அட்டூழியங்களுக்கு இடையில் பீஸ் சிவில் சமூகத்தினர் (பெரும்பாலும் விவசாயிகள்) அகிம்சை வழியில் நீதிக்கு முயன்றனர். அவர்கள் சொன்னார்கள். "எங்களது வழி மாறுபட்டது. நாங்கள் கடவுளின் வாழ்க்கையை நம்புகிறோம். எங்களுக்கும் பைபிளை படிப்பது எப்படி என்று தெரியும். நமது பகைவரை நாம் நேசிக்க வேண்டும். எங்களால் கொல்ல முடியாது; எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் ஏழை விவசாயிகள், சகோதர சகோதரிகள், நாங்கள் சாக அஞ்சவில்லை. நாங்கள் சாகத் தயாராக உள்ளோம், ஆனால் கொல்ல விரும்பவில்லை"

கொல்லாமைக்கான கோட்பாட்டு ரீதியான பற்றுறுதி ஏன் எப்பொழுதும் அடிமட்டத்திலிருந்து – ஆங்கிலப் பேரரசின் ஆட்சியில் அடிமைப் பட்டிருந்த இந்தியர், இன அடுக்குமுறைக்கு ஆட்பட்டிருந்தது ஆப்பிரிக்க–அமெரிக்கர் (கறுப்பு/நீக்ரோ மக்கள்) அல்லது ஏழை மெக்சிகோ விவசாயிகள் மேலே வர வேண்டும்? ஏன் மேலிருந்து கீழே – அடிமட்ட, தேசிய சர்வதேசிய சான்றோர்கள் மற்றும் அரசியல் அறிவியலார் உள்ளிட்டவர் வரக்கூடாது?

கொல்லாமைத் திறன்கள் பற்றிய ஆய்வுகள் கொல்லாமை உலக மடைமாற்றத்தை மானிடர் கொண்டு வருவர் என நம்புவதற்கான அடித்தளங்கள் உள்ளன என்பதைக் காட்டுகின்றன. கொல்லாமை சமூகத்திற்கான அடிப்படையான அம்சங்கள் அனைத்தும் மானிட அனுபவத்தில் எங்கோ நிருபிக்கப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு, வளர்த்து, அடிமட்ட மற்றும் உலகத் தேவைகளுக்கும் மற்றும் நிலைகளுக்கும் ஏற்ப ஆக்கப்பூர்வமாக மாற்றி ஏற்றிட வேண்டியதே எஞ்சியுள்ளது. கடந்தகால மற்றும் இன்றைய இரத்தம் சிந்தல்களின் விழிப்புணர்வு ஓர் திகிலூட்டும் ஆக்கப்பூர்வமான கொல்லாமை உந்துதலாகவும் சமூகமயமாக்கமாகவும் பயன்பட முடியும். மானிடத்தின் கொலை வெறித் தவறுகளை நாம் திரும்பச் செய்யக் கூடாது.

கொல்வது தொடர்வதையும் கொல்வதற்கு மாறிவிடுவதையும் சாத்தியப்படாத வகையில் நாம் நிலைகளை உருவாக்கிட வேண்டும்.

குவேடார் நாட்டில் வௌரனி மக்களிடம் 1958க்குப் பின்னர் 30 ஆண்டுகளில் சுமார் 90 சதவிகிதம் கொலையின் அளவு குறைந்துள்ள குறிப்பிடத்தக்க நிகழ்வை மானிடவியல் நிபுணர்கள் கிளைடன் மற்றும் கரொல் ரொபர்செக் (Clayton and Carole Robarchek) ஆகியோர் அறிவித்துள்ளனர். இது கொல்லாமை மாற்றம் விரைவாக நிகழும் சாத்தியத்தைக் காட்டுகிறது. வௌரனி மக்களின் மரணங்களில் 60 சதவிகிதம் கொலையால் நிகழ்ந்துள்ளது. மானிடவியல் அறிந்த அதிகபட்ச கொலைச் சமூகமாக இது கருதப்பட்டது. ஒரு லட்சம் பேர்களுக்கு 1000 என்ற விகிதத்தில் கொலை அளவு அங்கு இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு லட்சம் பேர்களுக்கு பத்து என்ற விகிதத்தில் கொலை அளவு உள்ளது என்பதை இங்கு சுட்ட வேண்டும். ஆனால் முப்பதாண்டுகளில் வௌரனியின் கொலை விகிதம் ஒரு லட்சத்துக்கு அறுபதாகக் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் இரு கிறித்தவ பெண் இறைப்பணியாளர்களின் தீரமான முயற்சிகளாகும். அவர்களில் ஒருவர் விதவை; அவரது கணவர் வௌரனி மக்களால் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் கொல்லப்பட்டார். இன்னொருவர் அங்ஙனமே கொலையுண்டவரின் சகோதரியாவார். அவர்கள் வௌரனி மகளிரின் ஆதரவைப் பெற்று அவர்களுடன் இணைந்து மாற்று கொல்லாமை மதிப்பீடுகளை அம்மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். புதிய நோக்குடைய தகவல்களை அம்மக்கள் பெறலானார்கள். “வெளியில் உள்ளவர் மானிட மாமிசம் உண்ணும் காட்டு மிராண்டிகள் அன்று”; பௌரனி பெண்களே வெளியில் சென்று இதனை நேரடியாகக் கண்டு வந்து கூறினர். முடிவற்ற பழிவாங்கும், அச்சந்தரும் கொலைகளின் தொடர் வட்டங்களால் குடும்பங்களே நாசமாவதை வௌரனி மக்களே உணர ஆரம்பித்து அதற்கு முடிவுகட்ட முற்பட்டனர். தேவாலயங்கள் உருவாக்கப்பட்டு அங்கு கொல்லாமைக்கான பிரார்த்தனைப் பூர்வ பற்றுறுதிகள் மேற்கொள்ளப்பட்டன. காவல்துறை மற்றும் பிற நெருக்குதல் உத்திகளும் சமூக பொருளாதார முன் மாற்றங்களுமின்றி இது சாதிக்கப்பட்டது. புதிய கொல்லாமை ஆன்மீகப் பற்றுறுதியால் மற்றும் புதிய தகவல்களின் வரவால், அமைப்பியல் மாற்றங்கள் நிகழத்

தொடங்கின. கிறித்தவரல்லாத வெளரனி குழுக்களும் மாறத் தொடங்கின.

மதிப்பீடுகளிலும், செயல்களிலும், அமைப்புக்களிலும் இக் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இன்னும் முழுமை அடையவில்லை யென்றாலும் இது மானிட நடத்தை பற்றிய முக்கியமான கோட்பாட்டு ரீதியான எடுகோள்களை உறுதி செய்கின்றன என அவ்விரு மானிடவியல் அறிஞர்களும் கூறுகிறார்கள்.

*மக்களை சுதந்திரச் செயலற்ற இயந்திரமாக, சுற்றுச்சூழல், உயிரியல் அல்லது சமூக பண்பாட்டு அம்சங்களால் செயலுக்குத் தள்ளப்படுபவர்களாகக் கருத முடியாது. ஆனால் மானிடர் தாமாக முடிவுகள் எடுக்கும் திறன் உள்ளவர்; அவர்களுக்கு பல வாய்ப்புக்களும் கட்டுப்பாடுகளும் உண்டு; பண்பாட்டால் வரையறுக்கப்படும் இலக்குகள் மற்றும் யதார்த்தங்கள் என்ற வரம்புகளுக்குள் இது நிகழ வேண்டும்; மானிடர் தொடர்ந்து அவைகளை ஆக்கியும் மறு நிர்மாணம் செய்தும் வருகின்றனர்.*

கொல்லாமை அரசியல் அறிவியல் கண்ணோட்டத்தில் நோக்குகையில் வெளரனி பரிசோதனையானது மாற்றத்துக்கான ஆக்கப்பூர்வ தலைமைக்குரிய சாத்தியங்களைச் சுட்டுகிறது. வெளரனி மக்கள் செய்தது போல அரசியல் அறிவியலானது தொழில் ரீதியிலும், சமூகத்திற்கான சேவையாகவும் செய்ய முடியும். வெளரனி மக்களோ, உலகமோ இன்னும் கொல்வதிலிருந்து விடுபட்டு விடாததால், செய்ய வேண்டிய பணி மிகுதியாக உள்ளது. வெளியிலிருந்து வரும் வளங்களைத் தாக்குதல்கள், கொல்லாமை ஆன்மீகத் தாக்கத்தைப் பெறாத வெளரனியின் அயலவர்களின் திடீர் தாக்குதல்கள் முதலிய இரத்தம் சிந்தல்கள் மீண்டும் நிகழ வழி வகுத்துள்ளன. கொல்லாமை நிலப்பகுதிகள் ("தீவுகள்"/மண்டலங்கள்) சாத்தியமே என்ற பொழுதிலும், மேலும் அவை உலக மாற்றத்துக்கு அவசியமே என்ற பொழுதிலும் அகிம்சை உணர்வும் நடைமுறைச் செயல்பாடும் எங்கும் நிலைபெற வேண்டும்.

**உலகத் தேவை**

கொல்லாமை அரசியல் அறிவியல் உலகளாவியதாக

இருக்க வேண்டும். கண்டுபிடிப்பு, ஆக்க நிலை, பன்மியம் மற்றும் திறம்பட்ட தன்மை ஆகியவற்றில் உலகளாவிய நிலை; உணர்வு, அறிவியல், திறன்கள், பாடல், நிறுவன (அமைப்பு) வெளிப்பாடுகள் மற்றும் வளங்களுக்கான உறுதிப்பாடு ஆகியவற்றில் உலகளாவிய நிலை; ஆக்கத் தலைமையைப் போற்றுதல் மற்றும் புது முயற்சிகளை மேற்கொள்வதற்கும் அதனை ஆதரிப்பதற்கும் வாழ்வைப் போற்றுவதற்கும் உலகளாவிய நிலை; மானிடத் தேவைகட்கு ஏற்ப பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கருணையான பற்றுறுதியில் உலகளாவிய நிலை; எங்கும் கொல்லுதலை முடிவுக்குக் கொண்டு வரல் அல்லது யாரும் எங்கும் பத்திரமாக இருக்க முடியாது என்ற உறுதியில் உலகளாவிய நிலை; எந்த ஒரு துறை, தொழில் அல்லது சமூகம் மட்டும் தேவையான அனைத்து ஞானத்தையும், திறன்களையும் மற்றும் வளங்களையும் கொண்டிருக்காததால் உலகளாவிய பங்கேற்பு; அடிமட்ட நலவாழ்வில் பற்றுறுதி என்பதில் உலகளாவிய நிலை. ஏனெனில் உலக (அண்டத்தின்) விடுதலையின் வித்துக்கள் பிண்டத்தில் உள்ளன; தன்னுடைய மற்றும் பிற சமூகங்களின் மக்களின் கொல்லாமை நல வாழ்வின் வேற்றுமைகளைப் போற்றுதலும் பல பரிமாண விசுவாசங்களும் உலகளாவிய நிலையாகும். சுதந்திரம், சகோதரத்துவம், வளம் மற்றும் அமைதியை, முழுமையை உணர்வதற்குத் தடையாக உள்ள கொல்லுதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஆய்வு, கல்வி மற்றும் செயல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களிடையே பரஸ்பர ஆதரவு தருவதில் உலளாவிய நிலை; சந்திரனிலிருந்து நமது பூமியாகிய வீட்டை நோக்குவதில், கோடான கோடி உயிர்களில் நாம் ஒரு சிறு துளி என்ற விழிப்புணர்வு – ஆயினும் கொல்லாமை உலகுக்குப் பங்களிக்கும் வல்லமை மிக்க குறிப்பிடத்தக்க நபர்கள் நாம் ஒவ்வொருவரும் என்ற உலகளாவிய நிலை.

கொல்லும் நிலைக்கு உலக வாழ்வில் முற்றுப்புள்ளி வைக்கும் இலட்சியமானது வன்முறையை ஏற்கும் அரசியல் அறிவியலிலிருந்து அன்பு, நலவாழ்வு, புதைந்துள்ள ஆக்க சாத்தியங்களின் சுதந்திர வெளிப்பாடு ஆகிய மானிட தேவைகளுக்கு உதவிடும் கொல்லாமை அறிவியலுக்கு மாறுவதைக் கோருகிறது.

கொல்லாமைச் சமூகம் சாத்தியமா?
கொல்லாமை அரசியல் அறிவியல் சாத்தியமா?
ஆம்!.

# BIBLIOGRAPHY


ACKERKNECHT, ERWIN H. 1982. *A Short History of Medicine*. Baltimore: Johns Hopkins University Press.

ACKERMAN, Peter and DUVALL, Jack. 2000. *A Force More Powerful: A Century of Nonviolent Conflict.* New York: St. Martin's Press.

___ and KRUEGLER, C. 1994. *Strategic Nonviolent Conflict.* Westport, Conn.: Praeger.

ADAMS, DAVID *et. al.* 1989. Statement on violence *Journal of Peace Research.* 26: 120-21.

___ 1997. War is not in our biology: a decade of the Seville statement on violence. In Grisolia et al. 1997: 251-56.

ALMOND, GABRIEL A. 1996. Political science: the history of the discipline. In Goodin and Klingemann 1996: 50-96.

ALPEROVITZ, GAR. 1995. *The Decision to Use the Atomic Bomb.* New York: Alfred A. Knopf.

AMATO, JOSEPH A. 1979. Danilo Dolci: a nonviolent reformer in Sicily. In Bruyn and Rayman 1979: 135-60.

AMNESTY INTERNATIONAL. 2000. *The Death Penalty,* ACT 50/05/00, April 2000.

ANDERSON, RICHARD C. 1994. *Peace Was In Their Hearts: Conscientious Objectors in World War II.* Watsonville, Calif: Correlan Publications.

AQUINO, CORAZON C. 1997. Seeds of nonviolence, harvestof peace: The Philippine revolution of 1986. In Grisolia *etal.* 1997- 227-34.

ARENDT, HANNAH. 1970. *On Violence.* New York: Harcourt, Brace & World.

___ 1982. *Lectures on Kant's Political Philosophy.* Chicago: University of Chicago Press.

ARISTOTLE. 1962. *The Politics,* trans. T.A. Sinclair. Harmondsworth: Penguin.

ASHE, GEOFFREY. 1969. *Gandhi.* New York: Stein and Day

AUNG SAN SUU KYI. 1998. *The Voice of Hope.* New York: Seven Stories Press.

BAHA'U'LLAH. 1983. *Gleanings from the Writings of Baha'u'lldh.* Wilmette, 111.: Baha'i Publishing Trust.

BANERJEE, MUKULIKA. 2000. *The Pathan Unarmed,* Karachi & New Delhi: Oxford University Press.

BARBEY, CHRISTOPHE. 2001. *La non-militarisation et Les pays sans armee:* une realite! Flendruz

BAXTER, ARCHIBALD. 2000. *We Will Not Cease.* Baker, Ore.: The Eddie Tern Press.

BEBBER, CHARLES C. 1994. Increases in U.S. violent crime during the 1980s following four American military actions. *Journal of Interpersonal Violence* 9(1): 109-16.

BEER, MICHAEL. 1994. Annotated bibliography of nonviolent action training. *International Journal of Nonviolence,* 2:72-99.

BEISNER, ROBERT L. 1968. *Twelve Against Empire: The Anti-Imperialists, 1898-1900.* New York: McGraw-Hill.

BENDANA, ALEJANDRO. 1998. "From Guevara to Gandhi." Managua, Nicaragua: Centro de Estudios Inter nationales.

BENNETT, LERONE JR. 1993. *Before the Mayflower: AHistory of Black America.* New York: Penguin Books.

